

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

திருவள்ளுவராண்டு 2051

மலர் - 13 இதழ் - 2-3 - மே - ஜுன் 2021

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கிருஷ்ணமூர்த்தி*

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

## உள்ளே...


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்........ 04

அறிவியலில் தத்துவத்தைப் பிரித்து மருத்துவத்தைக் கண்ட ஹிப்பாக்ரடீஸ்
டாக்டர் சு.நரேந்திரன்........ 09

கி.ரா. எனும் நாட்டார் மரபின் கதைசொல்லி
இரா. காமராசு........ 13

கி.ரா. ஒரு சகாப்தம்
முனைவர் நா.சுலோசனா........ 19

கி.ரா. எனும் கரிசல் இலக்கிய நெசவாளி
முனைவர் மு. ஏழுமலை........ 23

அடர்த்தியும் ஆழமும் கொண்ட சிறுகதைத் தொகுப்பு
பொன்னீலன்........ 27

கீழை மார்க்சியத்தை முன்வைத்த அறிஞர் எஸ்.என். நாகராசன்
கண. குறிஞ்சி........ 29

ஏர் ஆயுதக்கடவுள்
அ.கா.பெருமாள்........ 31

ஒளிமயமான புதுச்சேரியில் தமிழர்களின் வாழ்க்கை
சி.ஆர்.ரவீந்திரன்........ 37

இராசராச சோழன் ஆட்சி பொற்காலமா? கற்காலமா?
உதயை மு.வீரையன்........ 40

வள்ளலாரின் பயணம்: தொன்மத்திலிருந்து எதார்த்தத்திற்கு...
வீ.அரசு........ 43

ஒரு பழைய நாவலும் ஒரு புதிய நாவலும்
பாவண்ணன்........ 50

'தொடரும்' இயக்கத் தோழர் சந்திரகாந்தன்
கிருங்கை சேதுபதி........ 54

தனித்தன்மைகளைத் தாங்கியிருந்த தா.பா.
மே.து.ராசுகுமார்........ 58

வற்றாத நினைவுகளின் நடைவழியில்...
கமலாலயன்........ 63

இன்று நமக்கு என்ன தேவை?
க.பழனித்துரை........ 67

காந்தி - லெனின்
ஆர். பட்டாபிராமன்........ 72

பெண்களுக்கான குரல்
அம்பிகா குமரன்........ 78

நாம் நினைத்துக்கொண்டு இருப்பதை விட இந்தப் பூவுலகு...
ச.சுபாஷ் சந்திரபோஸ்........ 80

# படித்துப் பாருங்களேன்...

**ஆ.சிவசுப்பிரமணியன்**

# பேரரசை உலுக்கிய வழக்கு

**The Case that Shook the Empire One man's Fight for the Truth about the Jallianwala Bagh Massacre.**

*Raghu Palat and PusKa palat (2019)*
*BLOOMSBURY.New Delhi.London,New York.Sydney.*

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

ஓட்வியர் தொடுத்த வழக்கில் அவன் முன்வைத்த, மன்னிப்புக் கேட்டல், புத்தகத்தின் விற்பனைனயை நிறுத்திவைத்தல், அவன் குறிப்பிடும் அறச்செயல்களுக்கு ஆயிரம் பவுண்ட் பணத்தை நன்கொடையாக வழங்கல் என்ற மூன்றையும் நிறைவேற்றுவது, மிக எளிதான செயல்கள்தாம். இவற்றை மேற்கொண்டால் சங்கரன் நாயரது நேரமும் பணமும் மிச்சமாகும்.அத்துடன் வழக்கு



நடத்துவதால் ஏற்படும் மன உளைச்சலில் இருந்து விடுபடலாம். ஆனால் வழக்கை எதிர்கொள்வதில் இருந்து பின்வாங்க நாயர் விரும்பவில்லை.

வழக்கை எதிர்கொள்ளாமல் பின்வாங்கினால் வைசிராயின் நிர்வாகக் குழுவில் இருந்து அவர் விலகியது பொருளற்றதாகிவிடும். ஏனெனில் ஜாலியன் வாலாபாக் நிகழ்வுகள் கொடூரமானவை என்று நம்பியதாலேயே அவர் பதவி விலகினார். எனவே நீதிமன்ற வழக்கின் வாயிலாக ஓட்வியர் விடுத்த எச்சரிக்கைக்குப் பணிந்துபோக அவர் விரும்பவில்லை.


ஆங்கிலேயன் என்ற அடிப்படையில் தனக்கு ஆதரவாக இருக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படை-யிலேயே இங்கிலாந்தின் கிங்ஸ் பெஞ்ச் நீதிமன்றத்தை ஓட்வியர் நாடியிருந்தான்.

நாயரின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்தியாவிலேயே அவர் தரப்புச் சாட்சிகளை விசாரித்து அவர்கள் அளித்த சாட்சியங்களைப் பதிவு செய்து அனுப்ப நீதிமன்றம் அனுமதி வழங்கியது. ஓட்வியரைப் பொறுத்த அளவில் அவன் தரப்பு சாட்சிகள் இந்தியாவில் பணிபுரிந்து இங்கிலாந்துக்குத் திரும்பிய உயர் அதிகாரவர்க்கத்தினராய் இருந்தனர். எனவே இவர்கள் இங்கிலாந்திலேயே சாட்சியம் அளிக்கலாம். இவர்களில், இந்தியாவின் வைசிராயாக இருந்த செம்ஸ்போர்டு, சர் மன்றோ, லாகூரில் உயர் இராணுவ அதிகாரியாகப் பணிபுரிந்த மேஜர் ஜெனரல் வில்லியம் பினோன், ஆகிய வெள்ளையர்கள் அடங்குவர். அத்துடன் தன் தரப்பில் பத்து இந்தியர்களையும் சாட்சிகளாகக் குறிப்பிட்டிருந்தான். இவர்கள் பெருநிலக்கிழார்கள், ஜாலியன்வாலாபாக்கில் அரசு ஏவிய வன்முறையால் பாதிக்கப்படாதவர்கள், ஆங்கில ஆட்சியில் ஆதாயம் பெற்று அதற்கு நன்றி பாராட்டுபவர்கள்.

நாயர் தரப்பில் ஆங்கில அரசின் அதிகாரிகள் சிலர் உட்பட பதினைந்து வழக்கறிஞர்களும் பதினொன்று மருத்துவர்களும் மூன்று கல்வியாளர்களும் வணிகர்கள் சிலரும் சாடசியளித்தனர்.

1923இல் பஞ்சாபின் மூத்த துணை நீதிபதி இரு தரப்பினரின் சாட்சியங்களையும் பதிவு செய்பவராக நியமிக்கப்பட்டார். ஓட்வியரும், நாயரும் தத்தம் தரப்பிறகு வழக்கறிஞர்களை நியமித்தனர். நாயரும் வழக்கறிஞராகப் பங்கேற்றார். இரு தரப்பினருக்கும் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியங்களும், குறுக்குவிசாரணயில் கூறியனவும் கேள்விபதில் வடிவில் ஆங்கிலத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் சாடசிகளின் கையெழுத்தும் பெறப்பட்டன.


இந்தியாவில் சாட்சிகளின் பதிவு நடந்து முடிந்ததும் வழக்கு விசாரணை இங்கிலாந்தில் தொடங்கியது. முன்னணி வழக்கறிஞர்களான ஆங்கிலேயர்கள் இருவரைத் தன் சார்பில் வாதாட ஓட்வியர் நியமித்திருந்தான். குறுக்குவிசாரணையில் திறமைவாய்ந்தவர் என்று பெயர் பெற்றிருந்த சர் பேட்ரிக் ஹேஸ்டிங்ஸ் என்ற ஆங்கிலேய வழக்கறிஞரைத் தனது வழக்கறிஞராக நியமிக்க நாயர் எண்ணியிருந்தார். ஆனால் ஓட்வியர் தொடுத்த வழக்கு விசாரணைக்கு வரும் முன்னர் இங்கிலாந்தின் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்ததும் அட்டார்னி ஜெனரல் பதவியில் அவர் நியமிக்கப்பட்டார். இதனால் நாயர் சார்பில் அவரால் வாதாட முடியாது போயிற்று. எனவே சர் ஜான் சைமன் என்ற



**சங்கரன் நாயர்**

புகழ்பெற்ற வழக்கறிஞரைத் தன் சார்பில் வாதாட நாயர் நியமித்தார்.

வழக்கறிஞர் ஜான் சைமன், வழக்கு தொடர்பான ஆவணங்களைப் பரிசீலித்தபோது இவ் வழக்கானது ஓட்வியரை மதிப்பிழக்கச் செய்யும் என்பதைக் கண்டறிந்தார். பஞ்சாபில் நடந்தது என்ன என்பது இங்கிலாந்தில் வெளிப்படும்போது ஒரு வகையான சலசலப்பை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார். பாரிஸ் நகரில் இருந்தவாறு வழக்குவிசாரணைக்கு முதல் நாளன்று தன்னால் அவ்வழக்கை நடத்த முடியாதென்று நாயருக்குத் தந்தி அனுப்பினார்.




இத்தகைய இக்கட்டான நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய சர் வால்ட்டர் என்பவரை தமது வழக்கறிஞராக நாயர் அமர்த்திக் கொண்டார். ஆனால் வழக்கை நடத்துவதற்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளுவதற்குப் போதுமான காலம் அவருக்குக் கிட்டவில்லை.

இதற்குப் பதிலாக தேர்ந்த வழக்கறிஞரான நாயரே தமக்காக வாதாடியிருக்கலாம் என்ற கருத்தை முன்வைக்கும் நூலாசிரியர்கள் அவ்வாறு அவர் செய்யாமைக்கான காரணங்களையும் குறிப்பிட்டுள்ளார்கள்..வழக்கின் விசாரணை இங்கிலாந்தில் நடப்பதால் நீதிபதியின் தீர்ப்புக்குத் துணைபுரியும் அவையத்தார் (Jury) ஆங்கிலேயர்களாகவே இருப்பார்கள்.மேலும் இந்தியர்களைவிடத் தாங்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்ற மன உணர்வு ஆங்கிலயர்களிடம் மேலோங்கி-யிருந்தது. எனவே மிகவும் அரிதாகவே இந்தியர்களிடம் நியாயமாக நடந்து கொள்வர்.ஒரு கூலியைக் கொன்ற ஆங்கிலேயனையும் தன் ஊதியத்தைக் கேட்ட வண்ணாரைக் கொன்ற ஆங்கிலேயனையும் அவையத்தார் விடுதலை செய்துள்ளார்கள். இவ் வழக்கிலோ ஓர் ஆங்கிலேயன் அடாவடிச் செயல்கள் செய்ததாக ஆங்கில நீமன்றத்தில் ஓர் இந்தியன் குற்றம் சாட்டுகிறான். இதை அவன் முன்மொழிவதை விட ஓர் ஆங்கில வழக்கறிஞன் குறிப்பிடுவது அவையத்தாரை எரிச்சலடையச் செய்யாதிருக்கலாம்.

**வழக்கு விசாரணை**

*1924* ஏப்ரல் *24* ஆவது நாளன்று வழக்கின் விசாரணை தொடங்கியது. நீதிபதியான ஹென்றி மக்கார்த்தி தன்முனைப்புள்ள நீதிபதி. பஞ்சாபில் நிகழ்ந்த அரசு வன்முறை குறித்த சில முடிவுகளுடனேயே அவர் வந்திருந்தார். அவரது முடிவுகள் ஓட்வியரின் கருத்துடன் ஒத்துப் போவதாகவே இருந்தன. அவையத்தாராகப் பன்னிருவர் இருந்தனர். இவரகளில் ஆடவர்கள் ஒன்பது பேர். பெண்கள் மூவர். மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த இலர்களுக்கு இந்தியா, இந்தியர்கள் குறித்தும் எதுவும் தெரியாது. இவை எல்லாம் ஓட்வியருக்குத் துணை நின்றன.

நீதிமன்றத்தில் தாம் அளித்திருந்த விண்ணப்பத்தை நியாயப்படுத்தும் முகமாகத் தாம் எழுதிய நூலானது பொது நலம் சார்ந்த ஒன்றிற்காக நியாயமாகவும் நல்லெண்ணத்துடனும் எழுதப்பட்ட விமர்சனங்களை உள்ளடக்கியது என்று நாயர் குறிப்பிட்டார். அத்துடன் அப்பாவிப் பொதுமக்கள் மீது *1919* மே *19* ஆவது நாளன்று ஜாலியன் வாலாபாக்கில் துப்பாக்கிச் சூட்டை டயர் நிகழ்த்தினான் என்றும் அப்போது பஞ் சாபின் லெப்டன்ன்ட் கவர்னர் ஜெனரலாய் இருந்த ஓட்வியர் இந்தக் கொடுரச்செயலுக்குப் பொறுப்பாளி என்ற கருத்தையும் முன் வைத்தார்.

இதனையடுத்து அவையத்தாரின் பதவியேற்பு நிகழ்ந்தது. பின்னர் அவர்களை நோக்கி ஓட்வியரின் வழக்கறிஞர் எர்னஸ்ட் பி.சார்லஸ் இரண்டரை மணிநேரம் உரையாற்றினார், பஞ்சாபில் கலகம் ஒன்று நிகழாமல் தடுத்து நிறுத்தியதாகவும் பிரிட்டிஷ் பேரரசின் இராணுவத்திற்காக உலகப்போரின்போது பணம், ஆட்கள், உணவு ஆகியனவற்றைத் திரட்டியதாகவும் ஓட்வியரை அவர் புகழ்ந்தார். ஓட்வியரின் செயல்கள் பேரரசைக் காப்பாற்றியதாகவும் ஆனால் தற்போது அட்டூழியங்கள் செய்தவராக இகழப்படுவதாகவும் எனவே தன் நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ள நீதிமன்றத்தை நாடியுள்ளதாகவும் நாயரைப் பாரத்தவாறு கூறினார். மேலும் ஜாலியன்வாலாபாக்கில் பொதுக் கூட்டம் நிகழவில்லை என்றும் கொலையும், சதிச்செயலும் நிகழ்ந்ததாகவும் இதை அறிந்த ஜெனரல் டயர் தன் கடமையை ஆற்றியதாகவும் கூறினார். ஆங்கிலேய அதிகாரிகளின் நடவடிக்கைகள் ஆங்கிலப் பேரரசைக் காப்பாற்றும் நோக்கிலேயே நிகழ்ந்ததாகவும் கூறியதுடன் இந்தியர்களை கலகக்காகர்களாகவும் தீவீரவாதிகளாகவும் ஆட்சிக்கெதிரான சதிகாரர்களாகவும் சித்தரித்தான். இது ஆங்கிலேயர்களான அவையத்தாரின் அனுதாப

உணர்வை, ஓட்வியரின் பக்கம் திருப்பும் முயற்சியின் வெளிப்பாடுதான்.

இவரையடுத்து நாயரின் வழக்கறிஞர் உரையாற்றினார். நாயர் எழுதிய நூலில் இடம் பெற்றுள்ள விமர்சனங்களின் உண்மைத் தனமையை ஆராய்வது இந்த அவதூறு வழக்கின் நோக்கமல்ல என்று கூறிவிட்டு வழக்கு விசாரணையின் போது ஜாலியன்வாலாபாக்கில் நிகழ்ந்த அட்டூழியங்களுக்கு ஓட்வியர் காரணமாக இருந்தார் என்பதை உறுதிப்படுத்துவதாகக் கூறினார்.

வழக்கமான நடைமுறைப்படி இருதரப்பு வழக்கறிஞர்களின் உரை முடிந்த பின்னர் வழக்கை எதிர்கொள்பவரின்(குற்றம் சாட்டப்பட்டவரின்)முதல் சாட்சியை விசாரிக்க வேண்டும். ஆனால் இங்கு இது நிகழவில்லை. மாறாக நாயரின் வழக்கறிஞரை நோக்கி ஜெனரல் டயர் செய்தது சரியானதா அல்லது தவறானதா எனபதை உறுதிசெய்யும் நோக்கம் உள்ளதா? என்று நீதிபதி வினவினார். அத்தகைய நோக்கம் எதுவும் இல்லையென்று நாயரின் வழக்கறிஞர் விடையிறுத்தார். அப்போது அவையத்தாரை நோக்கி, இந்தியாவில் பிரிட்டிசாரின் நலனைப் பாதுகாக்க எடுக்கும் கட்டாயத்திற்கு ஒருவன் ஆளாகும்போது, அவனது செயல்பாடாடனது பிற்காலத்தில் வெறுக்கத்தக்கதாகக் கருதப்படும் என்று நீதிபதி குறிப்பிட்டார். இவ்வாறு கூறியதன் மூலம் நாயரின் வழக்கறிஞர் என்ன உண்மையைக் கூறப்போகிறார் என்பதை அறிய முயன்றார்.

1919 ஏப்ரல் 13இல் அமிர்தசரசில் நிகழ்ந்தது அட்டூழியம்தான் என்றும் ஓட்வியருக்கு இதில் பங்குண்டு என்றும் நாயரின் வழக்கறிஞர் விடையளித்தார்.

டயரின் நடவடிக்கைகள் பஞ்சாபைக் காப்பாற்று வதற்காகவா என்று நீதிபதி கேட்டபோது அது அவசியப்படவில்லை என்று நாயரின் வழக்கறிஞர் விடையிறுத்தார். வழக்கின் மையப்புள்ளியான ஓட்வியருக்கும் பஞ்சாபில் நிகழ்ந்த அட்டூழியங் களுக்கும் இடையிலான உறவு குறித்த வழக்கை டயரை நோக்கித் திருப்புவதாக நீதிபதியின் கூற்று அமைந்தது. தமக்கு ஒரு வாய்ப்பளிக்கும்படியும் அமிரதசரசில், நிகழ்ந்தவை அட்டூழியங்கள்தான் என்பதை உறுதிப்படுத்துவதாகவும் நாயரின் வழக்கறிஞர் கூறினார்.

நீதிபதி மக்கார்தியின் இச் சொல்லாடல்கள் நாயருக்கு வியப்பையளித்தன. அவரும் நீதிபதியாகப் பணியாற்றியவர் என்ற நிலையில் இவ்வழக்கில் மக்கார்த்தியின் பங்களிப்பு என்பது ஒரு நியாயமான விசாரணையை நடத்துவதுதானே ஒழிய அவையத்தாரின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதல்ல என்பதை அவர் அறிந்திருந்தார். இருப்பினும் வழக்கு விசாரணையின் முதல் நாளன்றே தமது அழுத்தமான கருத்துக்களை நீதிபதி வெளிப்படுத்த ஆரம்பித்துவிட்டார்.

இத்தொடக்க நிகழ்வுகளையடுத்து வழக்கு விசாரணை தொடங்கியது. முதல் சாட்சியாக ஓட்வியர் விசாரிக்கப்பட்டார். ஆறு நாட்கள் வரை இவரது சாட்சியம் தொடர்ந்தது.குறுக்கு விசாரணையின் போது அவர் பதட்டமடைந்தது தெரிந்தது. கலைந்து போகும் வாயப்பை அளிக்காமல் ஜாலியன்வாலாபாக் திடலில் கூடியிருந்த மக்களின் மீது தொடர்ச்சியாகச் சுட்டதையும், காயமடைந்த வர்களைக் குறித்துக் கவலைப்படாது அங்கேயே விட்டுவிட்டுச் சென்றதையும் ஹண்டர் விசாரணை ஆணையத்தில் டயர் ஒப்புக்கொண்டிருந்தான். இதைச் சுட்டிக்காட்டிய போது டயரின் செயல்பாடுகளை ஓட்வியர் நியாயப்படுத்த விரும்பவில்லை. இவ் விசாரணையில் ஓட்வியர் திணறிப்போன நிலையில் நீதிபதி அவரது துணைக்கு வந்ததையும் நூலாசிரியர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

டயரின் சாட்சியம் தன் தரப்பை வலுவிழக்கச் செய்யும் என்பதால் சாட்சியமளிக்க அவரை ஓட்வியர் அழைக்கவில்லை. உடல் நலம் குன்றியிருந்த டயரை



ஓட்வியர்

மரணத்தின் எல்லையில் இருப்பவராக ஓட்வியரின் வழக்கறிஞர் சித்தரித்து அவரை நீதிமன்றத்திற்கு அழைப்பதைத் தவிர்த்துவிட்டார். (இவ் வழக்கு முடிந்து மூன்றாண்டுகளுக்குப் பின்னரே டயரின் மரணம் நிகழ்ந்தது).

ஓட்வியர் தரப்பின் முதல் சாட்சியாக இந்தியாவில் வைசிராயாகப் பணியாற்றிய செம்ஸ்போர்டு விசாரிக்கப்பட்டார். வைசிராய் என்ற நிலையில் தொடக்கத்தில் ஓட்வியர், டயர் என்ற் இருவரது செயல்களையும் ஆதரித்தவர். ஹண்டர் விசாரணை ஆணையத்தில் இவரது நிலைபாடு மாறியது. இராணுவச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டபோது நிகழ்ந்த அட்டூழியங்கள் ஓட்வியரின் அனுமதியுடனேயே நிகழ்ந்துள்ளன என்றும் தரையில் ஊர்ந்து செல்லவேண்டுமென்று இடப்பட்ட உத்தரவு தமக்கு அதிரச்சியை ஏற்படுத்தியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். மொத்தத்தில் வைசிராயின் சாட்சியமானது பஞ் சாப் நிகழ்வுகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதாகவும் ஓட்வியரைச் சிக்கவைப்பதாகவும் அமைந்தது.

வைசிராயை அடுத்து உயர் இராணுவ அதிகாரி, லாகூர் பிரிவின் ஆணையர் எனப் பலரும் ஓட்வியர் தரப்பில் சாட்சியம் அளித்தனர். ஓட்வியரும் நீதிபதியும் விரும்பியதற்கேற்ப இவர்களின் சாட்சியம் பஞ்சாபில் நடந்த அட்டூழியங்களை நியாயப்படுத்தும் தன்மையிலேயே அமைந்திருந்தது. இறுதியாக நாயர் தம். தரப்பை நிறுவும் வகையில் சாட்சியமளித்தார்

ஓட்வியரைப் போன்று அவர் பதட்ட மடையவில்லை.. குறுக்கு விசாரணையிலும் அவர் அமைதியாகவே விடையளித்தார். ஓட்வியரின் மீது தமக்கு எவ்விதக் காழ்ப்புணர்ச்சியும் கிடையாது என்பதையும் தெரிவித்தார். அப்பாவி ஆண்களையும் பெண்கள் குழந்தைகளையும் குண்டுகள் எறிந்து கொலை செய்வதென்பதை நியாயப்படுத்தமுடியாது என்ற தம் அறம்சார்ந்த நிலையில் உறுதியுடன் நின்றார். நடந்த அட்டூழியங்கள் குறித்து ஓட்வியர் அறிந்திருந்தார் என்றும் அவரது வேண்டுகோளின் அடிப்படையிலேயே இராணுவச் சட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டது என்றும் அவருடன் இராணுவம் எப்போதும் கலந்தாலோசித்தது என்றும் நாயர் குறிப்பிட்டார்.

ஓட்வியரின் வழக்கறிஞர் போன்று நீதிபதி இவரிடம் குறுக்குக் கேள்விகள் கேட்டார்... நாயர் தரப்பிலான சான்றுகளையும் சாட்சியங்களையும் பொருட்படுத்தாது, டயரின் செயல்பாடுகள் ஆங்கிலப் பேரரசைக் காப்பாற்றும் நோக்கிலேயே நிகழ்ந்தன என்ற முடிவுக்கு அவர் வந்திருந்தார். அட்டூழியங்கள் என்ற சொல்லாட்சியையே அவர் வெறுத்தார். டயர் மேற்கொண்ட செயல்கள் சரி என்றால் ஓட்வியரைக் குறித்த எதிர்மறையான கருத்துக்கள் அலரது நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பவை என்பது அவரது கருத்தாக அமைந்திருந்தது.

சாட்சியம் கூறல் அவற்றின் மீதான வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணை என்பனவற்றைக் கடந்து அவையத்தாரின் தீர்பபை அறியவேண்டிய கட்டத்தை வழக்கு எட்டியது. ஹண்டர் விசாரணை ஆணையம் வெளிப்படுத்திய செய்திகளையோ, இந்திய அரசு அல்லது இங்கிலாந்தில் இருந்த இந்தியாவுக்கான செயலளர் வெளியிட்ட அரசு அறிக்கைகளையோ கண்டு கொள்ள வேண்டாம் என்று அவையத்தாரிடம் நீதிபதி குறிப்பிட்டார். பஞ்சாப் நிகழ்வுகளில் ஓட்வியருக்கு நேரடியான பங்கு இருந்ததா என்பதை மட்டும் முடிவு செய்யும்படியும் அவர்களிடம் கூறினார். அத்துடன் பின்வரும் இரண்டு வினாக்களுக்கு விடை காணும்படிக் கூறினார்:

1. அமிர்தசரசில் ஜெனரல் டயரின் செயல்பாடுகளை அட்டூழியங்கள் எனவாமா
2. அட்டூழியங்கள் எனில் பஞ்சாபின் லெப்டிடனண்ட் கவர்னர் என்ற முறையில் ஓட்வியர் இதற்குப் பொறுப்பு என்று கூறலாமா


இவ்விரு வினாக்களில் முதலாவது வினா இவ்வழக்குடன் தொடர்புடையதல்ல. ஹண்டர் விசாரணை ஆணையம் சில உண்மைகளைக் கண்டறிந்தது. இவை இங்கிலாந்தின் அமைச்சரவையாலும் இந்தியாவுக்கான செயலாளராலும் விரிவாக ஆராயப்பட்டன. ஓட்வியர் தொடுத்த வழக்கில் அவருக்கு எதிராக சாட்சியம் அளித்தவர்களின் சாட்சியம் இதனுடன் ஒத்துப் போனது. ஆனால் இவ்வாறு ஒத்துப் போவதை ஆராயாதவாறு இரண்டாவது வினா தடுத்தது. ஆயத்தாரின் தீர்ப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை நீதிபதி முடிவுசெய்துவிட்டார்.

நீதிபதியின் உரை முடிந்ததும் இரு தரப்பு வழக்கறிஞர்களும் கூடி ஆயத்தார் முன்பாக வைக்கவேண்டியதாகப் பின்வரும் மூன்று வினாக்களை உருவாக்கினர்.

1) சாட்சியத்தில் முன்வைக்கப்பட்ட பல்வேறு செய்திகளும் மனுதாரரின் (ஓட்வியரின்) புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் தன்மையனவா..?
2) அவை உண்மைத் தன்மை கொண்டவையா?
3) அவை நியாயத் தன்மை கொண்டவையா ?

ஏறத்தாள மூன்றுமணி நேரம் கலந்தாலோசித்த. பின்னர் அவையத்தார் நீதிபதியின் முன்பு வந்தனர். அவர்கள் எடுத்த முடிவு குறித்து நீதிபதி வினவியபொது அவையத்தாரின் தலைவராக இருந்தவர் இன்னும் எந்த முடிவுக்கும் வரவில்லை என்று விடையளித்தார்.

தொடரும்



# அறிவியலில் தத்துவத்தைப் பிரித்து மருத்துவத்தைக் கண்ட ஹிப்பாக்ரடீஸ்

டாக்டர் சு.நரேந்திரன்

மனித சிந்தனையானது அறிவியலைப் பற்றி எண்ணிய உச்சக்கட்டம்தான் ஹிப்பாக்ரடீஸ் வாழ்ந்த காலம். அப்பொழுதுதான் இவரால் மருத்துவம் என்ற சொல்லே புத்துயிர் பெற்றது. அது ஒரு தனிக்கலை. அறிவியல் மற்றும் தொழில் எனத் தனித்து வளரத் தொடங்கிய பொற்காலம் (கி.மு.460-377).

கி.மு.4000 முதல் 2000 வரை எகிப்திய மருத்துவமே கிரேக்கத்தில் இருந்தது. நோயிலிருந்து குணம் பெற பாம்பு வழிபாடு நடைபெற்றது. எஸ்கலாபியஸ் என்னும் தெய்வமே நோயாளிகளைக் குணப்படுத்தும் என்று நம்பினர். கோயில்கள் கட்டப் பட்டன. கோயில்களே முதல் மருத்துவப் பள்ளிகளாயின. நோயுற்றவர்களுக்கு மருத்துவமாக குளியல், மசாஜ், எனிமா முதலியவை செய்யப்பட்டன. நோயாளிகளுக்கு உணவும் வழங்கப்பட்டது. நோயாளிகள் இரவில் பாடு கிடப்பர். இரவில் கனவு வரும்; அதனடிப்படையில் மருத்துவர் மருத்துவம் செய்வார். இப்படி ஒரு மருத்துவமுறை வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது.

ஹிப்பாக்ரடீஸ் தோன்றிய கி.மு.5ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் கிரேக்க மருத்துவம் சமயப் பிடியிலிருந்து விடுபட்டு அறிவியல் பாதையில் செல்லத் தொடங்கியது. நோய்கள் கடவுள் செயலால் வருவதல்ல என்றும் இயற்கை நிகழ்வுகளே என்றும் உணரப்பட்டது.

மருத்துவத்தையும் தத்துவத்தையும் பிரித்துக் காட்டிய முதல் சிந்தனையாளர் ஹிப்பாக்ரடீஸ். இவர் வாழ்ந்த காலத்தில் மருத்துவம் புரிந்தவர்கள் அனைவரும் தத்துவஞானிகளாகவே இருந்ததனால் மருத்துவத்தைவிடத் தத்துவத்தில் கவனம் செலுத்தி மருத்துவத்தையும் தத்துவத்தையும் பின்னிப் பிணைத்தே வளர்த்து வந்தனர். பண்டைய கிரேக்கரிடையே தொழில்முறைப் பயிற்சி ஊதியமற்று வாழ்ந்து மெய் விளக்கியலாளர் என்று கூறப்பட்டவர்களும்

மருத்துவர்களாவர். ஆனால் இவர்களின் பேச்சும் இயற்கையைப் பற்றி எழுதிய எழுத்தும் ஒரு தொழில் முறையாக இருந்ததுவேயல்லாமல் அது மருத்துவத்தைச் சார்ந்ததாகாது, என்று ஹிப்பாக்ரடீஸ் கருதினார். இக்கருத்து அக்காலத்தில் மருத்துவம் வளர்ந்த நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

கிரேக்கம் மாயம், மந்திரம், பில்லி, சூனியம், ஆவிகளின் செயல்கள் ஆகியவைகளில் மூழ்கிக் கிடந்தது. ஹிப்பாக்ரடீஸ் மூடநம்பிக்கைகளிலிருந்தும், ஊகத்திலிருந்தும் மருத்துவத்தை விடுவித்து, மருத்துவத்தைத் தனி அறிவியலாக்கியவர்.

ஹிப்பாக்ரடீஸ் தான் முதன் முதலாக மருத்துவர்களை மதகுருக்களிடமிருந்து பிரித்துப் பார்த்த அறிஞர். தெய்வத்தன்மை, தெய்வ அருள் பெற்ற நிலை அல்லது இயற்கைக்கு மேலான நம்ப முடியாத செயல்களை ஆற்றவல்லத்தக்க செயல் ஆகியவைகளைப் பற்றிய கருத்துக்களை எதிர்த்து, ஏன் நோய் வருகிறது? அதன் காரணம் என்ன? என்று மருத்துவத்தை அறிவியல் ரீதியாக ஆராய்ந்து மருத்துவம் செய்யத் துணிந்த முதல் மருத்துவர் ஹிப்பாக்ரடீஸ் ஆவார். வலிப்பு நோய் மந்திரத்தாலும் புனிதநீர் சூட்டுவதாலும் குணமாகிவிடும் என்று மதகுருமார்கள் சொல்லி வந்த மூடப் பழக்கத்தை எதிர்த்த மூலவர். மதகுருமார்கள் என்பவர்கள் ஒரு பிறவி வித்தைக்காரர்கள், மருத்துவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு நோய் என்பது கடவுளினால் கொடுக்கப்படும் தண்டனை என்று கூறியதை எதிர்த்து தன்னை அவர்களிடம் இருந்து பிரித்துக் காட்டிய சுய சிந்தனையாளர்.

இக்கூறுகள் அனைத்தும் இவரைக் கடவுள் பற்றற்றவராகவும் நாஸ்திகராகவும் மற்றவர்களிடமிருந்து தனித்துக் காட்டின என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இவர் தன் வாழ்நாளில் மருத்துவத்தில் ஆற்றியிருக்கும் தொண்டு, மகத்தானது. ஆகையால் தான் இவர் 'மருத்துவத்தின் தந்தை' என்று இன்றும் அன்றும் போற்றப்படுகிறார்.

எஸ்கலாபியஸ் என்னும் மருத்துவப் பூசாரி ஒருவரின் மகனான இவர் சாக்ரடீஸின் சமகாலத்தவர். நோயாளிகளை மருத்துவப் பரிசோதனைகளுக்குட்படுத்தி, அவர் கண்டறிந்தவற்றைக் குறிப்புகளாக எழுதி வைத்தார். நோய்களை விரிவாக ஆராய்ந்து வகைப்படுத்தினார். திறந்த வெளியில் மரத்தடியில் மருத்துவமனையை நடத்தி மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்த பெருமைக்குரியவர். இவர் கற்றுக் கொடுத்த மரத்தடியும் அந்த மரமும் 2500 ஆண்டுகளாகவும் இன்னும் சாட்சியம் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இவருக்குப் பிடித்தமான மருந்து தேன்.

ஹிப்பாக்ரடீஸ் ஒரு பெரும் பயணி. ஒசாலி, ஏதென்ஸ் முதலிய இடங்களில் மருத்துவம் பார்த்தவர். கி.மு.385இல் தமது 95ஆம் வயதில் லாரிஸ்ஸாவில் இறந்தார்.


ஒரு மருத்துவர் நோயாளியை முழுமையாக ஆராய்வதுடன் அவனுடைய சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்துடன், இயற்கையியல் அறிஞரின் பார்வையோடு நோயைக் கவனிக்க வேண்டும் என்னும், அவரது கருத்து இன்றைக்கும் ஏற்கக் கூடியதாகவே அமைந்திருக்கிறது. இக்கருத்து ஹிப்பாக்ரடீசால் எழுதப்பட்ட பல நூல்களில் ஒன்றான காற்று, நீர், இடங்கள் *(Airs, Water and Places)* என்ற நூலில் சுற்றுச்சூழலுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள தொடர்பினையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியும் மிக ஆழமாக விவாதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய நிலையில் உடற்கூறு மற்றும் மெய்யியல் பற்றிய அறிவு குறைந்து, அறிவியல் சார்பான சாதனங்கள் இல்லாதிருந்த பொழுதும் இவர் கூறிய அறிவியல் கொள்கைகளும் பார்வைகளும் தத்துவ ரீதியாக யாவரும் ஒத்துக் கொள்ளக் கூடியதாகவே இருந்தன. மருத்துவர்கள் உண்ட உணவுக்குப் பின் ஏற்படும் மாறுபாடுகளை, காலநிலை, குடிநீர், வேலை, பழக்க வழக்கம், காற்றடிக்கும் தன்மை ஆகியவைகளைக் குறித்து அறிந்து கொண்டுதான் ஒரு நபரின் நோயை அறிதல் வேண்டும் என்று கூறினார். இக்கருத்தை மருத்துவர்கள் மனதில் கொண்டு பொதுவாக ஆராயும் பொழுது எப்பகுதியில் எவ்வித நோய்கள் உள்ளன என்பதை அறிந்து அதற்கேற்றவாறு மருத்துவம் அளிக்க வாய்ப்பாக இருக்கும் என்றும் போதித்தார்.

உடல் நோய்க்கு மருந்துகளை விட உடற்பயிற்சியும் உணவுக் கட்டுப்பாடுமே சிறந்தவை என்பதை வலியுறுத்தினார். மிதமான அளவில் நல்ல உணவு, சுத்தமான குடிநீர், உடற்பயிற்சி, நல்ல தூக்கம் ஆகியவை நல்வாழ்வுக்கு அடிப்படையாகும் என்றார்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின்னரும் இவர் குறிப்பிட்ட நோயாளியைப் பற்றிய விரிவுரைகள், கருத்துக்கள் நோயாளிகளின் அறிகுறிகள் தோற்றம் அனைத்தும் ஒருமித்துப் பார்த்தால் அவை நிலைத்து நிற்கும்படியே உள்ளன. இரத்தம் சீழ் பிடித்த நிலை, வலிப்பு, காய்ச்சல் போன்றவற்றைப் பற்றிக் கூறிய குறிப்புகள் இன்றும் சாகாவரம் பெற்றவை. இதற்கு ஆதாரமாகக் கூறவேண்டுமானால் இக்கருத்துக்கள் இன்றைய மருத்துவ நூல்களிலும் அப்படியே சிலவற்றை நீக்கி எழுதப்பட்டு உள்ளன என்பதே உண்மை ஆகும்.

ஹிப்பாக்ரடீஸ் ஒரு நோயின் அறிகுறிகள் எப்பொழுது தோன்றும், அதன் முன் அறிவிப்புகள் யாவை, அதன்பின் நோயின் போக்கு எப்படி மாறுபட்டு காட்சியளிக்கும், அவருக்கு சாவு ஏற்படுமா இல்லையா? என்பதைப் பற்றி எல்லாம் தெளிவாக விவரித்துள்ளார். இவர் பெயரைக் கொண்டு அழைக்கப்படும் 'ஹிப்பாக்ரடீஸ் முகம்' என்ற அறிகுறியில் சாகும் தறுவாயில் மூக்கு நீண்டு, கண்களில் குழி விழுந்து 'நெற்றி சுருங்கி' காதுகள் குளிர்ந்து, முகத்தோல் விரைத்து உலர்ந்து காணப்படும் என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தின் மூலம் ஒரு நோயாளி எப்படிக் காட்சியளிப்பார் என்பதைத் தெளிவாக கண்ணாடி போட்டு விளக்கி விட்டார்.



ஹிப்பாக்ரடீஸ் மருத்துவக் கொள்கை நான்கு கோட்பாடுகளைக் கொண்டது. அவைகள் முறையே கபம், ரத்தம், மஞ்சள் நிற பித்தம், கருநிற பித்தம் என்பன. இந்த நான்கு பொருள்களும் சீராக உள்ளபொழுது உடல் நலமாக இருக்கும். ஆனால் அவைகள் கூடிக் குறையும் பொழுதுதான் உடல் சீர் கெட்டுப்போய் நோய் ஏற்படுகிறது என்பது அவர் கொள்கை. இவர் நோயைப் பற்றி மருத்துவ ஆய்வு செய்கையில் நோயாளிக்கு உண்டாகும் கனவுகளையும் கேட்டு அறியச் சொல்கிறார். கனவுகள் எண்ணங்களும், செயலும் ஒத்துப் போகும் நிலையில் தான் சாதகமாக அமையும் என்றும், இல்லாவிடில் சாதகமற்ற நிலையிலும் இருக்கும் என்றும் கூறுகின்றார்.

இவரால் போதிய மருந்துகள் கொடுக்கப்பட்டன. சுரத்திற்கும் தலையில் அடிபட்டதற்கும் ஒரு மருத்துவமாக ரத்தம் வெளியேற்றப்பட்டது. இவர் சில வகைக் குளியல்களையும், ஒத்தடங்களையும் சில நோய்களுக்கு சொல்வதோடு உணவைச் சாதாரண முறையில் செரிமானமாக்கும்படியாக (எ.கா) பார்லி கஞ்சியை நோய்க்குக் கொடுக்கச் செய்தார். வலியைப் போக்க வினிகரையும், தேனையும் கலந்து அருந்தச் செய்தார். இவர் நோய்களுக்கு மருந்தை மிகவும் அரிதாகவே பயன்படுத்தினர். குறிப்பாகக் கூறவேண்டுமானால், இவர் முறையில் நோயைக் கண்காணித்து இயற்கையாக அவை குணமாவதைத் தடுப்பதில்லை. மற்றும் உள் மூல நோய்க்கு இரும்பு சூட்டுக்கோலினால் சுடும் முறை மற்றும் மூலத்தைக் கட்டி வெட்டும் முறை ஆகியவைகளையும் கூறினார். எலும்பு முறிவு, எலும்பு மூட்டுப்பிசகு ஆகியவைகளுக்கு எலும்பை இழுத்து மூட்டுப் பிசகைச் சரி கட்டும் முறைகளும் இன்றும் இவர் பெயராலே அழைக்கப்படுகின்றன.

இவர் தன் மருத்துவக் கருத்துக்களைக் கூறத் தன் மாணவர்களைத் திறந்த வெளிகளுக்கு அழைத்துச் சென்று பாடம் நடத்துவார். இவர் தன் காலத்தில் நோய்க்கு மருந்து மட்டும் கொடுக்காது அறுவைச் சிகிச்சைகளைக் கூட செய்து வந்தார். இம்முறை அறுவைச் சிகிச்சைகளும் தற்பொழுது நிபுணர்களால் போற்றப்படுகின்றன.


ஹிப்பாக்ரடீஸ் உடல்கூற்றை அறிய பிணப் பரிசோதனை செய்தாரா என்பது கேள்விக்குறியாக உள்ளது. இருப்பினும், போர்க்களத்தில் காயமுற்ற நபர்களைக் கண்ணுற்றும், கோயில்களில் பலிக்கு இரையாகும் மிருகங்களைப் பார்த்தும் தன் அறிவை வளர்த்திருக்க வேண்டும். இவர் மறைந்த கி.பி.320-க்குப் பிறகும் அவரது கண்டுபிடிப்புகளில் தோன்றிய மருத்துவ நுணுக்கங்கள் மருத்துவத்தின் அடித்தளம் போல் இருப்பதால் இன்றும் மருத்துவ அறிஞர்களால் போற்றப்படுகிறார். மருத்துவத்தில் அறிவியல் அணுகுமுறையைப் புகுத்தி மருத்துவத்துறைக்கு இவர் ஆற்றிய அரும்பணிகளால் இன்றளவும் போற்றப்பட்டு வருகிறார்.

ஹிப்பாக்ரடீஸ் மருத்துவர்களுக்காக விதிக்கப்பட்ட ஒழுக்க விதிகள் *(Code of conduct)* இன்று வரை மருத்துவர்களின் ஒழுக்கத்திற்கு அடிப்படையாக இருந்து வருகிறது. இதனாலேயே இன்றும் மருத்துவர்கள் பட்டம் பெறும்போது ஏற்கும் உறுதிமொழி ஹிப்பாக்ரடீஸ் உறுதிமொழி *(Hippocratic oath)* என்று அழைக்கப்படுகிறது.

ஹிப்பாக்ரடீஸின் மருத்துவத்திற்கு அடித்தளம் அமைத்தவர் பித்தகோரஸ் எனும் தத்துவ ஞானிதான். நான்கு தாதுக்கொள்கையை (நிலம், நீர், தீ, வளி) ஹிப்பாக்ரடீஸ் பித்தகோரசின் மாணவர்களிடமிருந்துதான் கற்றார். பித்தகோரஸ் இந்தியாவிற்கு வந்து சென்றதற்கான குறிப்புகள் கிடைப்பதால் பித்தகோரஸ் மூலமே இந்திய மருத்துவம் கிரேக்கம் சென்றது என்று கருத இடமுண்டு என்பார் டாக்டர் பி.குடும்பையா.

●

# நியூ செஞ்சுரியின்
# விற்பனை சாதனை நூல்கள்





**புலம் பெயர்ந்தோர் இலக்கியம்**
**முனைவர் பா.ஆனந்தகுமார்**
விலை ₹ 80/-





**எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம்**
**ராஜ் கௌதமன்**
விலை ₹ 100/-





**லண்டனில் சிலுவைராஜ்**
**ராஜ் கௌதமன்**
விலை ₹ 145/-




**குழந்தைகளுக்கான ஆப்பிரிக்கக் கதைகள்**
**தமிழில் : எம். பாண்டியராஜன்**
விலை ₹ 99/-




**சே.ராமானுஜத்தின் நாடக வாழ்க்கை**
**சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்**
விலை ₹ 365/-





**தமிழால் மருத்துவக் கல்வி முடியும்**
**டாக்டர் சு.நரேந்திரன்**
விலை ₹ 165/-




**பீகாரிலிருந்து திகார் வரை**
**கன்னையா குமார்**
விலை ₹ 110/-





**பழந்தமிழில் எழுத்தியல் ஆய்வுகள்**
**முனைவர் சுபாஷ் சந்திரபோஸ்**
விலை ₹ 155/-




**சொல் பண்பாட்டு அடையாளம்**
**இரா.வெங்கடேசன்**
விலை ₹ 200/-

கட்டுரை



# கி.ரா. எனும் நாட்டார் மரபின் கதைசொல்லி

**இரா. காமராசு**

ராயங்குல ஸ்ரீகிருஷ்ண ராஜநாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர் (16.09.1922 - 17.05.2021) எனும் நீண்ட பெயர் கொண்ட மனிதர், கி.ரா. எனும் இரண்டெழுத்தில் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலைபெற்றார். கயத்தாறுக்கும் கோவில்பட்டிக்கும் இடையே நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்த இடைசெவல் எனும் கிராமத்தில் பிறந்தார். வானம் பார்த்த கரிசல் பூமியின் சம்சாரி அவர்.

விவசாய வாழ்வும் பொதுநல நாட்டமும் இசை ஈடுபாடும் மிக்கவராகவே அவரின் தொடக்ககால வாழ்க்கை அமைந்தது. பள்ளிப் படிப்பில் ஆர்வமில்லா நிலையில், மனிதர்களை அவர்களின் மன ஓட்டங்களை நுணுகிப் பார்க்கும் தன்மை இவரின் இயல்குணமாகிப் போனது.

விடுதலைப் போராட்டத்தில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். விடுதலைக்குப் பின் முழு விடுதலைக்காகப் போராடிய பொதுவுடைமை இயக்கம் தடைசெய்யப்பட்டது. அதன் மீது பற்று கொண்டார். நாங்குனேரியை மையப்படுத்திய விவசாயப் போராட்டங்கள் தீவிரப்பட்டக் காலமது. புகழ் பெற்ற நெல்லை சதி வழக்கில் தொடர்புடையவர்கள் கோவில்பட்டியிலும் சுற்று வட்டாரத்தில் இடைசெவலிலும் தலைமறைவாகி இருந்தனர்.

அத்தருணத்தில் அவர்களுக்கு உதவிய சிலர் மீது 'கோவில்பட்டி சதி வழக்கு' பாய்ந்தது. அதில் கி.ரா.வும் ஒருவர்.

கி.ரா. ரசிகமணி டி.கே.சி.யின் நண்பர். டி.கே.சி. கி.ரா.வுக்கு உதவ எண்ணி அப்போதைய முதல்வர் குமாரசாமிராசாவிடம், "இடைசெவல் நாயக்கருக்கு இந்த வழக்கில் என்ன தெரியும்? அவரையும் எதற்கு இந்த வழக்கில் சேர்த்திருக்கிறீர்கள்?" என்று முறையிட்டு, கி.ரா. விடுதலை பெற்றார். பின்னர் ஒருமுறை நாராயணசாமி நாயுடு நடத்திய விவசாயப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றார்.

கி.ரா. கோவில்பட்டி வட்டார விவசாயிகள் இயக்கத்தில் ஈடுபட்டார். பொதுவுடைமைக்கட்சி உறுப்பினராகவும் ஆனார். ஜீவா, நல்லகண்ணு, இரா. அழகர்சாமி போன்றோருடன் அணுக்கமாகத் தொடர்பு கொண்டார். பேராசிரியர் நா. வானமாமலை, தி.க. சிவசங்கரன், தொ.மு.சி. ரகுநாதன் ஆகியோரின் தோழமை கிடைத்தது. சோவியத் இலக்கியங்களை வாசிக்கத் தொடங்கினார். இசையார்வமும் பக்தி இலக்கியத் தொடர்பும் அவரை இலக்கியத்தில் தோய வழிவகுத்தன எனலாம்.

*1958* இல் சரஸ்வதியில் தன் முதல் கதையை எழுதினார். அப்பொழுது சரஸ்வதி தரமான முற்போக்கு இலக்கிய இதழாக வெளிவந்து கொண்டிருந்தது. தொடர்ந்து தாமரை இதழிலும் சிறுகதைகளை எழுதத் தொடங்கினார். இடைசெவலில் இவரின் பக்கத்துத் தெருக்காரர்தான் எழுத்தாளர் கு.அழகிரிசாமி. இருவரும் பால்ய சிநேகிதர்கள். கம்யூனிஸ்ட் சார்பாளர்கள்.

பின்னாளில் உலகப் புகழ் பெற்ற கதை-யிலக்கியங்களைப் படைத்தளித்தார்கள். ஒரே ஊர், ஒரே வட்டாரம், ஒரே காலம், ஒரே கருத்து நிலை என்றாலும் ஒருவர் எழுதியதோடு மற்றவரை ஒப்பிட முடியாமல் தனித்தனி படைப்பாக்க முறைமையை அமைத்துக் கொண்டார்கள். இது பிரமிப்பு.

கி.ரா. கதை கூறும் நாட்டார் மரபை மீட்டெடுத்தார். 'பேசுவது போலவே எழுதுதல்' என்பதை தன் எழுத்தின் பண்பாகப் பிரகடனப்படுத்தினார். அவர் இலக்கியம் படைத்தார் என்பதைக் காட்டிலும் பண்பாட்டைப் படம்பிடித்தார் என்பதே பொருத்தமானது. பண்பாட்டை எழுத்தில் வடித்தக் கதைசொல்லி அவர். அவரின் ஒவ்வொரு கதைக்குள்ளும் மக்களின் வாழ்வும் பண்பாடும் இரண்டறக் கலந்து நிற்கக் காணலாம். அவ்வகையில் பண்பாட்டு எழுத்து நெசவு செய்தவராக அவரைச் சுட்ட முடியும்.

'சாவு' என்றொரு சிறுகதை. ராமானுஜ நாயக்கர் எனும் இளைஞர். மூன்று வயதில் அவருக்கு ஒரு மகன் இருக்கிறான். மனைவி கருவுற்றிருக்கிறாள். இத்தருணத்தில் அவ்விளைஞர் மாரடைப்பால் மாண்டு போகிறார். இந்த நிகழ்வைக் காட்சிப்படுத்துவது தான் கதையின் மையம். இறப்புச் சடங்குகள் முடிகின்றன. பதினாறாம் நாள் 'பெண்கள் சடங்கு', தாலி அகற்றும் சடங்கு நடைபெறுகிறது. சடங்கு நடைபெறும் போது நள்ளிரவில் ஒரு வயதான மூதாட்டி கூட்டத்தினரிடம் வந்து வெங்கலத்தட்டைத் தட்டுவதாக ஒரு காட்சி. இதற்கு என்ன பொருள்? "தாலி அறுக்கப் போகும் சுமங்கலிப் பெண் கருவுற்றிருக்கிறாள். பிறக்கப் போகும் குழந்தைக்கு இவன்தான் தந்தை" என்பதை ஊரறிய வெளிப்படுத்துவது.

இது ஒரு முக்கியமான பண்பாட்டு வழக்கம். இக்கதை முழுவதுமே மரபுகள், தொன்மங்கள், குறியீடுகள் வாயிலாக கி.ரா. அந்தச் சாவையும் அந்த இளைஞனின் குழந்தைப் பிறப்பையும் பிணைத்து ஒரு பண்பாட்டுச் சங்கிலியை உருவாக்கி விடுவதைக் காணலாம்.

கி.ரா.வின் தொடக்கக் காலக் கதைகள் யதார்த்த வாழ்வின் பிழிவாய் அமைந்தன. அவரிடம் எப்போதும் ஒரு வித இரசனை உணர்வு மீதூறி இருந்தது. அதனால் அவரின் கதைகள் கலையழகு கைவரப்பெற்று அமைந்தன. தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் 'கதவு', 'வேட்டி' ஆகிய இரு கதைகளுக்கும் நிச்சயம் இடமுண்டு. தமிழ் மக்களின் பூர்வீகத் தொழில்களான உழவும் நெசவும் குறித்து இவை அமைந்ததும் தற்செயல்தான்.

வேளாண் வாழ்வின் சிதைவை, நெருக்கடியை 'கதவு' ஒரு துளியளவு பதிவு செய்து விடுகிறது. ஒரு காலத்தில் கோரத்தாண்டவம் ஆடிய 'ஜப்திமுறை' பற்றிய அரிய பதிவு. அரசிடமோ, வங்கியிலோ வாங்கிய கடனை மீளச் செலுத்த இயலாவிட்டால் குடியானவர்களின் பொருள்களை எடுத்துச் செல்வது இன்னும் நடக்கிற ஒன்றுதான்.

வாழ்ந்து கெட்ட சம்சாரியின் வீட்டுக் கதவை, அதுவும் கூட கதவாகப் பயன்படாமல் உள்ளதை ஊர்த்தலையாரி கைப்பற்றிச் செல்கிறார். கையறு நிலையில் தாயும் பிள்ளைகளும், அந்தத் தாயின் கதறல் "ஐயா அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சு மாசமாச்சி. ஒரு தகவலையும் காணோம். மூனு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்த வச்சி உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலி வேலை செய்து இந்தக் கொளந்தைகளைக் காப்பாத்ரதே பெரிய காரியம். உங்களுக்குத் தெரியாதா?". அதிகாரம் தர்மம், ஞாயம் பார்க்குமா என்ன?

'வேட்டி', நெசவு செய்து எல்லோரின் மானத்தைக் காக்கும் நெசவாளிகள் வாழ்வில் மானம் காற்றில் பறப்பதை எள்ளலோடு சொல்லும் கதை. தூங்கா நாயக்கர் நெசவாளி. அவருக்கு இருப்பதோ ஒரே ஒரு வேட்டி. அதைத் துவைத்துக் காயப் போட்டு மறுபடி மறுபடி உடுத்திக் கொள்வார். அவ்வளவு வறுமை. ஒரு நாள் காற்றாடி வரலாம் என்று வெளியே

செல்கிறார். வழியில் ஒரு புளிய மரம். சில புளியம் பழங்கள் விழுந்து கிடக்கின்றன. வாயூர ஆசைப்பட்டு உட்கார்ந்து எடுக்க முயல்கிறார். பழைய வேட்டி ரெண்டாக ஒரு சாண் நீளத்துக்குக் கிழிந்து விடுகிறது. அப்பொழுது விடுதலைப் போராட்டத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாட நிதி வசூலிக்கச் சிலர் வருகின்றனர். “பரபரப்போடு எழுந்து நின்று இடது கையால் வேட்டியின் பிய்ந்த கிழிசலை மறைத்துக் கொண்டு அவர்களை வரவேற்கத் தயாரானார்” என்று எழுதிச் செல்வார் கி.ரா. தூங்கா நாயக்கர் வீட்டில் 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஒருவர் தலைமறைவாக இருக்க, போலீசால் நையப் புடைக்கப்பட்டவர் நாயக்கர். ஆனால் தியாகி பென்சன் கிடைக்காமல் போய் விடுகிறது என்ற குறிப்பையும் கதை சுட்டும். கிழிந்தது நாயக்கர் வேட்டி மட்டுமா? தேசத்தின் விடுதலையும் அல்லவா?

கி.ரா. மனிதர்களைப் படித்தார். மனித அகத்தை ஊடுருவிச் சென்றார். மனித மனங்களை தன் எழுத்தில் சித்திரங்களாகத் தீட்டினார். அப்படி ஒரு மிக நுட்பமான கதை ‘கன்னிமை’. ஊரில் பெருந்தனக் குடும்பம் நாச்சியாரம்மாளுடையது. ஒரு நாள் ஒரு சிறுவன் அவர்களின் தோட்டத்தில் பருத்திச் சுளையை எடுத்து விடுகிறான். இதனைப் பார்த்துவிட்ட அவளின் தந்தை தன்னுடைய ஊனுக்கம்பால் அச்சிறுவனைப் புரட்டி எடுத்து விடுகிறார். மேலெல்லாம் ரத்த விளார்கள். அச்சிறுவனின் தகப்பன் சுந்தரத்தேவன் அவனோ பெரிய போக்கிரி, கொலைகாரன். காயம்பட்டச் சிறுவனை வீட்டில் அவன் தாயும் உறவினர்களும் ஒத்தடம் கொடுக்கிறார்கள். சுற்றிப் பெண்கள் கூட்டம். சுந்தரத்தேவனோ தன் பிள்ளையை இப்படி அடித்தவரை வெட்டிப் போடுவேன் என அரிவாளோடு கூக்குரல் இட்டபடி நிற்கிறான். அச்சூழலில் அவ்வீடு நோக்கி நாச்சியாரம்மாள் விடுவிடுவெனச் செல்கிறாள். அச்சிறுவனை வாரி அணைத்து உடலெல்லாம் தழுவி, தடவிக் கொடுத்து அள்ளி மடியில் வைத்துக் கொள்கிறாள். கதறி அழுகிறாள். இதனைக் கண்ட சிறுவனின் தந்தை சுந்தரத்தேவன் அரிவாளைக் கீழே போட்டு விட்டு உட்கார்ந்து கேவிக் கேவி அழுகிறான். ஒரு குறுங்காவியம் போலத் தீட்டி விடுகிறார் கி.ரா. மனிதத்தின் உச்சம்.

கி.ரா. இன்று நிரம்பவும் கொண்டாடப்படக் காரணம் அவரின் நாட்டார் மரபு. எழுத்து மரபில் நாட்டுப்புற மக்களின் வழக்காறுகளையும் வாழ்முறைகளையும் பதிவு செய்தது அவரின் முக்கியக் கொடை. தமிழில் முதல் வட்டார நாவல் எனப் போற்றப்படுவது ஆர். சண்முகசுந்தரத்தின் ‘நாகம்மாள்’.

1942 இல் ஆர்.சண்முகசுந்தரம் தன்னால், ஒரே மாதத்தில் எழுதப்பட்டது எனச் சொன்ன நாகம்மாள் நாவல் கொங்கு வட்டார மக்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியது. இதன் முன்னுரையில் கு.ப.ரா. “கிராம புனருத்தாரணம் என்கிறோம். கிராமக் கைத் தொழில்கள் மறுபடி உயிர்பெற வேண்டுமென்கிறோம். அவற்றிற்கெல்லாம் முன்பு கிராம வாழ்வே புத்துயிர் பெற வேண்டும். மனதைக் கவரும்படியான முறையில் சித்திரங்கள் உற்பத்தியாக வேண்டும். கிராம வாழ்க்கையின் விரிவையும் மேன்மையையும் தூய்மையையும் படம்பிடிக்க வேண்டுமென்று எனக்கு நெடுநாளைய அவா” எனக் குறிப்பிடுகிறார். இது தமிழில் முதல் வட்டார நாவல் என அடையாளப்படுத்தப்பட்டது.

மொழி அடிப்படையில் மட்டுமின்றி இனவியலாக, பண்பாட்டு மானிடவியலாக தனித்ததொரு வகைமை உருவாக வித்திட்டவர் கி.ரா. 1976 இல் வெளிவந்த அவரின் “கோபல்ல கிராமம்” தமிழ் நாவல் வரலாற்றில் தனித்தடம் பதித்தது. இதன் தொடர்ச்சியே கோபல்ல கிராம மக்கள், அந்தமான் நாயக்கர் போன்ற அவரின் மற்றைய நாவல்கள்.

கி.ரா. எழுதத் தொடங்கிய பொழுது தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் மேலெழுந்தது. திராவிட இயக்க மொழி நடை எழுத்தில், பேச்சில் முன்னிலை பெற்றது. தனித்தமிழ் இயக்கமும் அழுத்தம் பெற்றது. இச்சூழலில்தான் பேச்சு மரபை, மக்கள் மொழியைத் தன் எழுத்துவாகனமாக்கிக் கொண்டார் கி.ரா. மொழிநடை என்ற ஒன்றைத் தாண்டியும் தொன்மங்கள், வழக்காறுகள், சடங்குகள், நம்பிக்கைகள் ஆகியனவற்றை தன் எழுத்தில் ஊடுபாவாகக் கொணர்ந்தார். இதன் வழியே தன்னை ஒரு பண்பாட்டு எழுத்துக்குச் சொந்தக்காரராக கி.ரா. உருமாற்றிக் கொண்டார்.

‘கோபல்ல கிராமம்’ நாவல் ஆந்திராவிலிருந்து தென் தமிழ்நாட்டின் கோவில்பட்டி வட்டாரத்திற்கு இடம் பெயர்ந்த கம்மாவர் நாயக்கர்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் பேசுகிறது.

ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்த தெலுங்கு மக்கள் (1) நாயக்கர் மன்னர்களின் ஆட்சியில் உடன் வந்தவர்கள் (2) பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் (3) இஸ்லாமிய மன்னர்களின் கொடுமை தாங்காமல் இடம் பெயர்ந்தவர்கள் என மூன்று வகைகளில் அடங்குவர். கம்மாவர், ரெட்டியார், கம்பளத்தார், செட்டியார், பிராமணர், பொற்கொல்லர், சக்கிலியர் போன்ற சாதிகள் இதில் அடங்கும்.

இந்தத் தெலுங்கு மக்களில் ஒரு பிரிவினர் நாடோடிகளாகவும், அரை நாடோடிகளாகவும் இன்றும் இருக்கின்றனர். மற்றொரு பிரிவினர் வேளாண்குடிகளாகி நிலைத்த மக்களாகிவிட்டனர். இந்த நிலைத்த வேளாண் குடிகள் காடழித்து கரிசல் மண்ணைச் சீர்திருத்தி வேளாண்மை செய்து வாழ்ந்தனர்.

இந்தத் தெலுங்கு கம்மாவர்களின் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை வட்டச் சடங்குகள், வீட்டு

அமைப்புகள், புழங்கு பொருட்கள், வேளாண் கருவிகள், நம்பிக்கைகள், மருத்துவம், தொன்மங்கள் முதலிய பண்பாட்டுக் கோலங்களை வரலாற்றுப் பின்புலத்தில் கி.ரா. பதிவு செய்வது புதுமை.

137 வயதுள்ள மங்கத்தாயாரு அம்மாவின் நினைவலையாக நாவலில் பல நிகழ்வுகள் அடுக்கப்படுகின்றன. இடப்பெயர்வும், நிலத்தைக் கண்டடைவதும் நிலை கொள்ளலும் பின்புலத்தில் கொள்ளப்படுகின்றன.

காது வளர்த்து வளையம் போன்ற 'கம்ம' (கம்மல்) என்ற காதணிகளை இச்சமூகப் பெண்கள் அணிவதால் 'கம்மாவர்' எனப் பெயர் வந்ததாக மங்கத்தாயாரு வழி கி.ரா. சொல்லுவார்.

நாகார்ஜுன மலையில் வீரம் நிறைந்த ஒரு ராட்சதப் பெண் இருந்தாள். அவளை அடக்க யாராலும் முடியவில்லை. அழகும் வீரமும் கொண்ட பிராமணன் அவளை அடக்கி அவளுடைய மூக்கில் தொரட்டியைப் போட்டு இழுத்துக் கொண்டு வந்தானாம். இதுவே கம்மாவர் பெண்கள் விரும்பி அணியும் ஆபரணம் ஆனது. அப்பெண்கள் மூக்கில் 'தொரட்டி' போடும் வழக்கம் உண்டானது, எனப் பல கதைகள் இந்நாவலில் இடம் பெறுகின்றன.

இந்நாவலுக்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் நா.வானமாமலை இதனை நாட்டார் நாவல் என்று வகைப்படுத்துவார்.

1. இதன் கதாநாயகர்கள் உழைப்பாளிகள், உழைப்பை நம்பி இயற்கையை மாற்றுபவர்கள்.
2. இருவேறு காலகட்டங்களில், ராஜ்ய அதிகாரமில்லாத பகுதியில் சமுதாயத்தை அமைக்கிறார்கள்.
3. இயற்கையை அழித்து நாட்டை உண்டாக்குகிறார்கள்.
4. அச்சமுதாயத்தைப் பாதுகாக்கப் போராடுகிறார்கள்.
5. அதற்காகத் தமது வரலாற்று வீரர்களைப் போற்றும் கவிதைகளைப் பண்பாட்டுச் செல்வமாகக் கருதுகிறார்கள்.
6. வீரர் கதைகள், நாட்டுப்பாடல்கள், பழமொழிகள், வழக்கங்கள் ஆகிய கலைச் செல்வங்களால் இவர்கள் ஒன்றுபடுத்தப்படுகிறார்கள்.

என்ற காரணங்களை வரிசைப்படுத்தும் நா.வா. நாட்டுப் பண்பாட்டை வெளிப்படுத்தும் இந்நாவலை "வரலாறு, இவர்களுக்கு மன்னர்கள் வரலாறு அல்ல. தங்கள் முன்னோர்களது போராட்ட வரலாறு. இவ்வரலாறு ஒலிவழியாகப் பரவுவது. உண்மையைக் கற்பனையாக மாற்றி அமைத்த உருவம் கொண்டது". என மதிப்பீடு செய்வார்.

கி.ரா.வின் எழுத்துக்களில் அழகியல் அடிப்படையில் உச்சம் தொட்டதாக 'கிடை' குறுநாவல் மதிப்பிடப் படுகின்றது. தமிழில் முதல் மேய்ச்சல் சமூக இலக்கியப் படைப்பு இதுவே. சமூக உறவுகளையும் சாதிய ஏற்றத் தாழ்வுகளையும் நுட்பமாகக் கிடையில் காணலாம். எல்லப்பனின் கல்யாண ஊர்வலமும், செவனியின் பேயோட்டு வைபவமும் சமூக முரணின் சித்திரங்கள். பொன்னுசாமி போன்ற ஊர்ப்புற துடியானவர்களையும் இதில் தரிசிக்க முடியும். எல்லப்பனும் செவனியும் தமிழ்ச் சமூகத்தின் வகை மாதிரிகள் தானே? வழக்கம் போல் இக்கதையிலும் 'கதை' வருகிறது. இடைக்காட்டுச் சித்தரைக் கி.ரா. காட்டுவார். ஆடுகளுக்குத் தீனியாக ஆவாரந் தழைகள், இடைக்காடர் வரகரிசியையும் மண்ணையும் குழைத்துக் கோட்டைக் கட்டி ஆடுகளோடு அவரும் குடியிருக்கிறார். ஆவாரம் இலைகளைத் தின்ற ஆடுகள் தினவில் அந்தக் கோட்டைச் சுவற்றை உரசும். வரகு தரையில் உதிரும். பஞ்ச காலத்தில் அந்த வரகரிசித் தூளையும் ஆட்டுப்பாலையும் கலந்து சாப்பிட்டு பன்னிரண்டு வருடங்களைக் கழித்ததாக சுவையாக கி.ரா. எழுதிச் செல்வார்.

கிடையில் கி.ரா. சொல்லும் கால்நடை நுட்பங்கள் அரிதான செய்திகள். கிட்ணக் கோனார் இருபத்தேழு வகையான ஆடுகளையும், கோபால் நாயக்கர் முப்பது வகையான ஆடுகளையும் இந் நாவலில் சுட்டுவார்கள்.

ருஷ்ய நாவலாசிரியர் சிங்கிஸ் ஐத்மாத்தவ் 'குல்சாரி' எனும் நாவலைப் படைத்திருப்பார். இதில் குதிரைகள் இடம் பெறும். குதிரைகளின் குளம்படி ஓசையையும் கோதுமை வயல்களின் வாசனையையும் நாம் நுகரமுடியும். அப்படித்தான் கிடை நாவலும். ஆட்டுப் புழுக்கைகளின் வாசமும், கருவுற்ற சினை மாடுகளின் வீச்சமும் நம்மைக் கவ்விப் பிடிக்கும். இது கி.ரா. வின் எழுத்துக்கலையின் வெற்றி. இது 'ஒருத்தி' எனும் பெயரில் திரைப்படமாக்கப்பட்டது.

கி.ரா. இயற்கை உபாசகர். அவர் அளவுக்கு செடி, கொடிகளை, விலங்குகளை, பறவைகளை எழுத்தில் கொண்டு வந்தவர்கள் குறைவு. கரிசல் காட்டு கடுதாசியில் தன்னை விட்டுப் பிரிந்து செல்லும் மகனிடம் அம்மா சொல்லுவாள் "போகும் போது புளியமரத்தின் கீழ் இளைப்பாறு, வரும் போது வேப்பமர நிழலில் இளைப்பாறு" இதன் அர்த்தம் தாவரப் பயன்பாட்டையும் பண்பாட்டையும் உணர்ந்தவர்களுக்கே தெரியும்.

கி.ரா. தேர்ந்த இரசனைக்காரர். இது இசையினால் வந்தது. சிறுவயது முதலே இசையில் அலாதிப்பிரியம். காருக்குறிச்சி அருணாசலம், விளாத்திகுளம் சுவாமிகள், ராஜரத்தினம் பிள்ளை போன்றோர்களிடம் தொடர்பில் இருந்தார். எழுத்தில் இவர் அளவுக்கு இசையைப் பயன்படுத்தியவர்கள் குறைவு.

கி.ரா.வின் மற்றொரு துறை நாட்டுப்புறவியல். புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தில் கல்வியாளர்

கி. வேங்கடசுப்பிரமணியன் துணை வேந்தராக இருந்தபோது ஒவ்வொரு துறை சார்ந்து புகழ் பெற்ற ஆளுமைகளை வருகைதரு சிறப்பு நிலை பேராசிரியர்களாக அழைத்தார். அப்படித் தமிழ்த் துறைக்கு அழைக்கப்பட்டவர்கள் க.நா.சு., இந்திரா பார்த்தசாரதி, கி.ரா. ஆகியோர். க.நா.சு. இந்திய இலக்கியம், விமர்சனம் குறித்து ஒரு சில பணிகளைச் செய்துவிட்டு ஓராண்டில் வெளி வந்தார். இந்திரா பார்த்தசாரதி நிகழ்கலைத் துறை என்ற புதுத்துறையைக் கண்டார். கி.ரா.வோ நாட்டுப்புறவியலைக் கைக்கொண்டு நாட்டுப்புறக் கதைகளைச் சேகரிக்கத் தொடங்கினார். 1989 தொடக்கம் 1993 வரை இது நடந்தது. பேராசிரியர் சிலம்பு செல்வராசு அவருடன் இணைந்து பணியாற்றினார்.

கல்விப்புலத்துக்கு வெளியே நாட்டாரியக் கதை மரபில் எழுதிவந்த கி.ரா. கல்வித் துறைத் தொடர்பில் செயல்பட முனைந்தார். இவரால் நாட்டுப்புறவியல் வெகுமக்கள் கவனத்தைப் பெற்றது. நாட்டுப்புறக் கதைகள் தொகுப்பு, கதைக்களஞ்சியம், பெண்கள் கதைகள், சிறுவர் விளையாட்டுகள், வழக்காறுகள் தொகுப்பு... என விரிவடைந்து வட்டார வழக்குச் சொல் அகராதி வரை அது ஆழப்பட்டது. கரிசல் காட்டு கடுதாசி, வயது வந்தவர்களுக்கு மட்டும், பாலியல் கதைகள் போன்றவை வணிக, வெகுஜன வரவேற்பைப் பெற்றன. இரசனை விஞ்சிய இம்முயற்சிகள் "Folklore" அல்ல "Fakelore" என்றெல்லாம் கூட விமர்சிக்கப்பட்டன. அது பற்றி அவர் கவலைப்படவில்லை.

கழனியூரன், பாரத தேவி போன்றவர்களை ஊக்கப்படுத்தி, களஆய்வில் ஈடுபடுத்தி கதைகளை, வழக்காறுகளை ஆவணப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது. கதை சொல்லி இதழ் வழி செய்த பணியும் முக்கியமானது. எழுத்தில் வாய்மொழி மரபைப் பின்பற்றியதும், வாய்மொழி இலக்கியங்களை எழுத்துப் பெயர்ப்பு செய்ததும், வட்டார வழக்குச் சொல் அகராதி வரைந்ததும், நாட்டுப்புறவியல் துறையை வெகுஜனப்படுத்தியதும் இத்துறையில் கி.ரா.வின் சாதனைகள் என்றே சொல்லலாம்.

கி.ரா. தொடக்கத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தார். பின்னர் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் ஆகிய இரு அமைப்புகளோடும் நெருங்கிய தொடர்பில் இருந்தார். புதுச்சேரியில் கலை இலக்கியப் பெருமன்றத்தின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கி.ரா. இல்லாமல் நடந்ததில்லை. மாநிலத் தலைவர் எல்லை. சிவக்குமார் மிக நெருங்கி இருந்தார். "இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உடைஞ்சதற்கான காரணத்தை ஒண்ணு + ஒண்ணு = 11ன்னு ஒரு கட்டுரை எழுதினேன். உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று சொன்ன ஒரு சங்கம் இப்படி ரெண்டா உடைஞ்சிடுச்சு. உடைச்சது முதலாளிகள் சங்கம் தான். அவங்களுக்குள்ள ஒற்றுமை கட்சியில் இருந்திருந்தா கட்சி உடைஞ்சிருக்காது" என்று அப்போது எழுதியவர் கி.ரா. கடைசி வரை இரு கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்ற விருப்பையும் வேண்டலையும் வெளிப்படையாகவே சொல்லி வந்தார்.

கி.ரா. தன் நீண்ட வாழ்வில் எல்லோராலும் கொண்டாடப்பட்டார். கரிசல் எழுத்தாளர்கள் எனப் பெரும் படையே உருவானது மட்டுமல்லாமல் நிலவியல் சார்ந்த திணை வாழ் எழுத்து தமிழ்நாடெங்கும் முகிழ்த்துக் கிளைத்தது. எழுத்துக்கும் வாழ்வுக்கும் வேறுபாடில்லாத மனிதர். மனித விடுதலையே அவரின் இலக்கு, மனித மகிழ்ச்சியையே அதன் வழிமுறையாகக் கொண்டார். அவரோடு பேசுவது இன்பம். அவர் எழுத்தை வாசிப்பது இன்பம். அவரே இன்பம். மனிதத் துன்பங்களை தூர நிறுத்தவே இறுதிவரைப் போராடினார், வென்றார்.


**நன்றிக்கடன்**

கி.ரா. எனும் நம் காலத்து கலைஞன் இவ்வளவு காலம் பூரிப்போடு உலகில் நிலைத்திட துணை நின்றவர் அவரின் துணைவியார் கணவதி அம்மையார் (2019 செப்டம்பர் 25 இல் காலமானார்). திவாகரன், பிரபாகர் ஆகிய இரு மகன்கள். கி.ரா.வுக்கு வளர்ப்பு மகன் போல ஆகிவிட்ட ஒளிப்படக் கலைஞர் புதுவை இளவேனில் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.


வழக்கறிஞரும் எழுத்தாளருமான கே.எஸ். இராதாகிருஷ்ணன், எழுத்தாளர் பா. ஜெயப்பிரகாசம், பேராசிரியர் க. பஞ்சாங்கம், திரைப்படக் கலைஞர் சிவக்குமார் குடும்பம், முதலில் கி.ரா. வை அடையாளப்படுத்திக் கொண்டாடிய கவிஞர் மீரா., தொடர்ந்து கி.ரா.வின் ஒட்டுமொத்தப் பதிப்பாளராக விளங்கும் 'அன்னம்' கதிர் ஆகியோரை கி.ரா.வின் தோழமை அடையாளமாகச் சுட்டலாம். பட்டியல் பெரிது.

கி.ரா.வின் மறைவையொட்டி அவரை அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்ததுடன் இடைசெவல் பள்ளியில் நினைவரங்கமும் கோவில்பட்டியில் திருவுருவச் சிலையும் நிறுவும் அறிவிப்புகளை வெளியிட்ட தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ் கலை இலக்கிய உலகம் கரம்கூப்பி நன்றி சொல்கிறது. இவற்றுக்குப் பின்புலமாக துணை நின்ற தொழில் துறை, தமிழ் வளர்ச்சிப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம். தென்னரசு, தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி, தலைமைச் செயலாளர் எழுத்தாளர் வெ. இறையன்பு ஐ.ஏ.எஸ். போன்றோருக்கும் நன்றிகள். இது தமிழின் வரலாற்று முன்னெடுப்பு. இந்த நற்பணி தொடர வேண்டும்.

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





₹160/-




₹315/-




₹185/-




₹20/-

# கி.ரா. ஒரு சகாப்தம்



முனைவர் **நா.சுலோசனா**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்னும் குறளடிகள் கி.ரா.,வுக்கு மிகவும் பொருத்தப்பாடுடையன. அதனால்தான் தமிழ் எழுத்துலகின் பிதாமகர் எனப் போற்றப்பட்டவர். ஒரே ஊரில் பிறந்து வளர்ந்து (தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகேயுள்ள இடைசெவல் என்னும் கிராமம்) தம்மோடு பழகிய கரிசல் மனிதர்களை, கரிசல் மண்ணைத் தம் படைப்புகளின் வழியே வெளிக்கொணர்ந்தவர்களில் முன்னோடிகள் கி.ரா.வும் (கோபல்ல கிராமத்து மக்கள் நாவல், 1991) கு.அழகிரிசாமியும். (அன்பளிப்பு சிறுகதை, 1970) இரண்டு பேரும் சாகித்ய அகாதமி பரிசுபெற்றவர்கள். கு.அழகிரிசாமியின் படைப்புகளைக் கதையாடும் களமாக "இலக்கிய அமுதம்" என்னும் அமைப்பைத் (செப்டம்பர் 23,2018) தொடங்கி அதன் வழி தமது தந்தையின் படைப்புகளைப் பேசும் களம் கண்டிருக்கின்றனர் அவரின் புதல்வர்கள். கி.ரா.வுக்குப் படைப்புலகம், எழுத்துலகம், வாசகர் வட்டம், கல்வி நிறுவனங்கள்

> *சின்ன வயசுலேர்ந்தே நான் பெரிய நோயாளி. ஐயோ எனக்கு வந்த வியாதி எல்லாம் இருக்கே.. அதுலெ ஒரே ஒரு வியாதியைக் கண்டாலே அவனவன் செத்துருவான். நான் சாகலை. ஆனா எல்லோருக்குமே பயம்தான். எப்ப போவேனோன்னு வந்து எட்டிப் பாத்துட்டு பார்த்துட்டு போவானுக.*

என அவரின் பிறந்தநாளில் அவரின் படைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன, பேசப்படுகின்றன, ஆராயப்படுகின்றன. இரண்டு பேருடைய பிறந்த நாளும் செப்டம்பர்த் திங்கள் தான். முன்னவர் செப்.16, பின்னவர் செப்.23. மாபெரும் ஒற்றுமை இருவருக்குள்ளும். சமகாலத்துப் படைப்பாளிகள். இவ்விரு படைப்பாளிகளின் கதையாளும் இடமாக இருந்தது கரிசல்மண்தான். கி.ரா., வரலாற்றையும் பண்பாட்டையும் தொன்மத்தையும் மக்களின் மொழியையும் படைப்புகளில் ஒளிரச் செய்தவர். கரிசல் வட்டாரப் படைப்பாளிகளுக்கு எல்லாம் முன்னத்தி ஏராக இருந்தவர், பாசமுடன் 'நைனா' என்று அழைக்கப்பட்டவர். கரிசல் இலக்கியத்தின் தந்தை எனப் பாராட்டப்பட்டவர்.

பல ஆளுமைகளைக் கொண்ட கரிசல் எழுத்தாளர் கி.ரா. இன்றைய இளைஞர்கள் கி.ரா.வைப் படிக்கவேண்டும் என்றால் எதிலிருந்து தொடங்க வேண்டும் எனும்போது அவரின் பெரும்பாலான சிறுகதைகள் யாவும் அதிகபட்சம் நான்கு பக்கங்கள்தான். சிறுகதைகளிலிருந்து தொடங்கலாம். கரிசல் மக்களின் மொழி, சொலவடைகள், நாட்டார் தெய்வங்கள், இடம்பெயர்வு, கண்ணீர், துயரம், விவசாயிகளின் நிலைப்பாடு இன்னும் பிற. வாழ்வியல் பாடுகளைத் தம்முடைய கதைகளினூடே கடத்தியவர்.

அவுரி, ஜடாயு, கதவு, அரும்பு, அங்கணம், கன்னிமை, நாற்காலி, கரண்ட், வேட்டி, நாற்காலி, இல்லாள், கறிவேப்பிலை, காய்ச்ச மரம், அம்மா பிள்ளை அப்பா பிள்ளை, பொம்மைகளும் குதித்தெழும், கனிவு, கோபல்ல கிராமம், கோபல்ல கிராமத்து மக்கள், அந்தமான் நாயக்கர், கிடை, கரிசல் காட்டு சம்சாரி, கோமதி, கொத்தைப் பருத்தி, கரிசல் காட்டு கடிதாசி இதுபோன்ற கதைகளின் வழி கரிசல்மக்களின் மனத்தையும் கரிசல் மண்ணின் மணத்தையும் மணம் வீசச்செய்தவர். வட்டார வழக்குச் சொற்களைப் பதிவு செய்த விதம், நாட்டுப்புறக் கதைகளுக்குப் பலவாறாக உதவி செய்த படைப்பாளி கழனியூரன், எஸ்.எஸ்.போத்தையா, பாரதி தேவி இப்படியாக உறுதுணையாக இருந்தவர்களைப் பற்றி என்றும் எங்கும் மனநிறைவோடு எண்ணிப் பார்க்கும் மாந்தநேயப் படைப்பாளி.

தமிழ் எழுத்துலகில் பொன்னீலன், சோ.தர்மன், பூமணி, மேலாண்மை பொன்னுசாமி, தமிழ்ச்செல்வன், உதயசங்கர், கோணங்கி, எஸ்,ரா., பா.ஜெயப்பிரகாசம், அப்பணசாமி, நாஞ்சில் நாடன் போன்ற தெக்கத்திப் படைப்பாளிகள் எனும் மிக நீண்ட இலக்கியப் பரம்பரையைக் கொண்டவர் கி.ரா.

கி.ரா.,வின் நூற்றாண்டை நோக்கிய மாபெரும் பயணம் நின்றுவிட்டது என்பது பெரும் வருத்தம். ஜனரஞ்சகமான படைப்பாளி தமிழ் இலக்கிய உலகுக்குக் கிடைப்பதற்கரிய பரிசு. பேச்சு வழக்கில்தான் உணர்வோடு உறவாட முடியும் என்பதை உணர்ந்தவர். பண்டிதன் சொன்னது பழமொழி, பாமரன் சொன்னது சொலவடை என்பதை நுட்பமாக எழுதியவர்.

மணம் இல்லாத, இயற்கை அழகு இல்லாத, வெற்றுக் காகிதப்பூதான் எழுத்து வழக்கு என்று அவர் எழுத்து வழக்கைச் சொல்கிறார். மக்களின் மொழி நடையை ரசித்தவர். மொழிக்கு உயிரூட்டியவர். எளிய சொற்களைக் கையாள்வது, மக்கள் மொழியில் கதை சொல்வது என வாசகனின் மனம் அறிந்தவராகத் திகழ்ந்தார். வாசிப்பவர்களை மேலும் வாசிக்கவும் வாசிப்பு அனுபவம் இல்லாதவர்களுக்கு வாசிப்பைத் தூண்டுவதிலும்தான் கி.ரா.வின் படைப்புலகம் வெற்றிபெறுகிறது.

பொடிக்கும் தாடிக்கும் இடையில் பிறந்தவர் எனச் சொல்வதுண்டு. பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளுக்கும் (செப்டம்பர், 15), தந்தை பெரியாரின் பிறந்த நாளுக்கும் (செப்டம்பர்,17), இடையில் கி.ரா.வின் பிறந்தநாள்(செப்டம்பர், 16) வருவதால் இப்படிச் சொல்வதுண்டு.

சின்னச் சின்ன நோய்களுக்கெல்லாம் மனம் தளர்கிறவர்களுக்குக் கி.ரா., ஒரு தன்னம்பிக்கை நட்சத்திரமாகப் பிரகாசித்தவர். 7 வயதிலிருந்து சுவாசக் கோளாறு பிரச்சினை, 60 ஆண்டு காலமாக இனிமா கொடுத்து காலைக் கடன் கழிப்பது என்று எண்ணற்ற உடல் உபாதைகளைக் கடந்து 99 அகவை கடந்து தன்னம்பிக்கை தந்தவர். (சின்ன வயசுலேர்ந்தே நான் பெரிய நோயாளி. ஐயோ எனக்கு வந்த வியாதி எல்லாம் இருக்கே.. அதுலெ ஒரே ஒரு வியாதியைக் கண்டாலே அவனவன் செத்துருவான். நான் சாகலை. ஆனா எல்லோருக்குமே பயம்தான். எப்ப போவேனோன்னு வந்து எட்டிப் பாத்துட்டு பாத்துட்டு போவானுக.) என்று தானே விவரிக்கிறார். அப்படிச் சொன்னவங்க எல்லாம் போயிட்டாங்க நான் இருக்கேன் என்று சொல்லிச் சிரிக்கிறார் வெள்ளந்தியாக. அவரின் உடல் நோய்க்கு மாமருந்தாக இருந்தவை அவரின் படைப்பாக்கச் சிந்தனை என்றுதான் சொல்ல வேண்டும். தமிழைச் சுவாசித்தாலும் நேசித்தாலும் வாழ்நாள்கள் அதிகரிக்கும் என்பதற்குக் கி.ரா. ஒரு உதாரணமாகத் திகழ்ந்தார்.

ராயங்குல ஸ்ரீ கிருஷ்ண ராஜ நாராயணப் பெருமாள் ராமானுஜம் எனும் நீண்ட பெயர் கொண்டவர்க்குக் கி.ரா. என்பதே எழுத்து உலகில் நிலைத்த பெயராகிவிட்டது. கரிசல் வட்டார அகராதியின் வழி கரிசல் மக்களின் பேச்சு வழக்குகளைப் பதிவு செய்தவர். கொரோனா தீநுண்மி பொது முடக்கக்காலத்தில் தனிமை என்பது பெரும்

பாடு எனும்போது எழுத்தாளனுக்கும் இசை அறிவு உடையவனுக்கும் ஏது தனிமை என்று தனிமையை எழுத்துக்காக வசமாக்கிக் கொண்டவர். அச்சூழலிலும் பெண்களைப் பற்றிய "அண்டரெண்டப்பட்சி" எனும் புத்தகத்தைக் கைப்பட எழுதி அச்சுப் பிரதியாக இல்லாமல் கைப்பிரதியாகவே வாசகர்களுக்குப் படைத்தவர். ஆண் பெண் உறவு குறித்து படிக்க வேண்டிய புத்தகம் என்கிறார். மனித வளர்ச்சியின் ஒரு அங்கமாக பாலியல் உணர்வுகளைப் பார்க்க வேண்டும் என்பதே கி.ரா.வின் மனநிலைப்பாடு. நாங்கள் மறைந்து மறைந்து புத்தகங்களில் படித்தோம்; இன்று மறைந்து மறைந்து செல்போன்களில் பார்க்கிறார்கள். வடிவம்தான் மாறியிருக்கிறது; இந்த மானுடத் தேவை மாறவில்லை என்கிறார். பறவைகளைப் போல வாழக் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். எதிலும் வெளிப்படையான பேச்சு. வெள்ளந்தியான மனசு.

சாதி குறித்து "சாவஞ்செத்த சாதிகள்" என்ற கதையினையும் தான் எழுதாமல் விட்ட கதைகளைத் தொகுப்பாகக் கொண்டு "மிச்ச கதைகள்" என்ற புத்தகத்தையும் எழுதி தம் வாழ்நாளில் நிறை வாழ்வு எய்திய கி.ரா.வுக்கு எழுத்துலகம், படைப்பாளிகள், வாசகர்கள் சார்பில் புகழஞ்சலியாக இக்கட்டுரைப் பதிவு.

சாவஞ்செத்த என்பதே வட்டார வழக்குதான். சாவஞ் செத்த கழுதை, சாவஞ் செத்த பயலுக என்று வசைபாடுவதுண்டு. ஒரு தங்கச் சங்கிலி செய்யும்போது சேதாரமாக தங்கம் விழும். அப்படி விழுந்தவற்றைக் கொண்டு மிச்ச கதைகள் உருவாக்குகிறேன் என்று 'மிச்ச கதைகள்' எழுதியதற்கு விளக்கம் அளித்துள்ளார்.

தாம் எழுதிய படைப்புகள் அனைத்தையும் தம்முடைய மகன்கள் மற்றும் அவருடைய வாசகருமான சங்கர் என்ற புதுவை இளவேனிலுக்கும் உரிமையுடையவை என திசம்பர் 26, 2020இல் எழுதி வைத்துள்ளார். தன்னுடைய படைப்புகள் மூலம் வரும் வருவாயில் ஒரு பகுதியைக் "கரிசல் அறக்கட்டளை" எனத் துவங்கி அதன் மூலம் எழுத்தாளர்களுக்கும் சிறு பத்திரிகைகளுக்கும் தன்னுடைய பெயரில் விருது வழங்க ஏற்பாடும் செய்துள்ளார். அதன்படி கி.ரா.வின் 99ஆவது அகவையில் எழுத்தாளர் கண்மணி குணசேகரனுக்கு கி.ரா. விருதும் ரூ. ஒரு இலட்சமும் அளிக்கப்பட்டன.

கரிசல் மக்களின் வாழ்வியல், இன்ப துன்பங்கள், நம்பிக்கைகள், ஏமாற்றங்கள், சொலவடைகள், பழக்க வழக்கங்கள் என அனைத்தையும் கி.ரா.வின் எழுத்துகள் மண் மணம் மாறாமல் மக்களின் மனத்தைப் பிரதிபலித்தன. தனக்கென தனி எழுத்து நடையை உருவாக்கிக் கொண்டவர். கிடை என்ற குறுநாவல் ஒருத்தி என்னும் பெயரில் திரைப்படமாக்கப்பெற்றது.

நீங்கள் நூறு வயசு வாழவேண்டும் என்றால் 'அதான் நூறைத் தொட்டுவிட்டேனே. ஏன் நூறு என்கிறீர்கள்' ஒரு 150, 200 வயது சொல்லுங்கள் என்பாராம். அவ்வளவு தூரம் வாழ்க்கையை ரசிக்கக் கற்றுக்கொண்டவர். வாழப் பழக்கிக் கொண்டவர்.

படிப்பு குறித்துப் பேசும்போது "படிக்க அக்கறை எல்லாம் இருந்திச்சு. ஆனா, படிப்பு ஏறலை. படிப்பை வாங்கிக்குற சக்தி எனக்கு இல்லைனு சொல்ல முடியாது. எனக்குப் படிப்பைக் கொடுக்கிற சக்தி வாத்தியார்களுக்கு இல்லைங்கிறதுதான் உண்மை. ஆனா, எந்த வாத்தியாரும் இதை ஏத்துக்க மாட்டாங்க" என்று சொல்லிச் சிரிக்கும் கி.ரா. ஏழாம் வகுப்புவரை மட்டுமே படித்தவர். கி.ரா. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் மதிப்புறு பேராசிரியராகப் பணியாற்றியவர். எழுத்துக்கும் படிப்புக்கும் தொடர்பில்லை என்பதை நிரூபித்தவர். 1958 இல் சரசுவதி இதழில் வெளியான மாயமான் என்னும் சிறுகதையே முதலில் வெளிவந்ததாகும். அதற்கடுத்து 'சீப்பு' கதை. இப்படியாகத் தொடர்ந்து படைப்புகள் வலம் வந்தன.


ரசிகமணி டி.கே.சிதம்பர முதலியாரின் வட்டத்தொட்டி மூலம் ரசனையைப் பெற்றவர். பொதுவுடைமை இயக்கங்கள் மூலம் முற்போக்கைக் கண்டவர். ஜஸ்டிஸ் மகாராஜன், மீ.ப.சோமு, ஆ.சீனிவாசராகவன் போன்ற ஆளுமைகளுடனான நேரடித் தொடர்பு மூலம் தமிழ் மரபிலக்கியத்தை அறிந்தவர். பேராசிரியர் நா.வானமாமலை போன்றோரிடம் உருவான நாட்டாரிலக்கியப் பார்வை எல்லாமும் பெற்ற ஆளுமை அவர் எழுத்துக்களில் மிளிர்ந்தன.

நூற்றாண்டை நோக்கிய கரிசலின் எழுதுகோல் எழுதுவதை நிறுத்திக் கொண்டது. அவருடைய எழுத்துகள் யாவும் மூன்று தலைமுறைகளைக் கண்டது. டி.எஸ்.எலியட் சொன்னதுபோல் 'எழுத்தாளன் ஒரு மிகச் சிறந்த ஆற்றல் கடத்தி' என்பது கி.ரா.வுக்குப் பொருத்தப்பாடுடையது.


வாழ்ந்த போதும் மறைந்த போதும் எழுத்தாளருக்குக் கிடைக்க வேண்டிய மரியாதையும் மதிப்பும் கி.ரா.வுக்குக் கிடைத்திருக்கிறது என்றால் அவர் நிறைவாழ்வும் பெருவாழ்வும் வாழ்ந்திருக்கிறார் என்றே பொருள். தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை. ஆம், தமிழ் எழுத்துலகில் 60 ஆண்டுகளுக்கு மேலாகப் பயணித்த கி.ரா.வின் மூச்சுப்பயணம் நின்றாலும் வாசகன் என்னும் பயணி வழியாக அவரின் எழுத்துக்கள் தொடர்ந்து பயணிக்கும். படைப்பாளிகளின் எழுத்துகள் சாகா வரம் பெற்றவை. கி.ரா., என்னும் தமிழ் எழுத்துலக சகாப்தம் தமிழ்கூறும் நல்லுலகம் இருக்கும் மட்டும் பேசப்படும்; ஆராயப்படும்; வாசிப்புக்கும் வசப்படும்.

●


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் மார்க்ஸிய வெளியீடுகள்





**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**
**கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்**
தமிழாக்கம், அறிமுகவுரை, விளக்கக் குறிப்புகள்
எஸ்.வி.ராஜதுரை
₹ 550/-




**மார்க்ஸ் - எங்கல்ஸ்**
**தேர்வு நூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்**
20 தொகுதிகள்
பதிப்பாசிரியர் - ந.முத்துமோகன்
₹ 5000/-




**மூலதனம்**
**கார்ல் மார்க்ஸ்**
மூன்று பாகங்களும் சேர்ந்து ஐந்து புத்தகங்களும்
₹ 2000/-




**கார்ல் மார்க்ஸ் 200**
பதிப்பாசிரியர் - எஸ்.வி.ராஜதுரை
₹ 675/-



கட்டுரை

# கி.ரா. எனும் கரிசல் இலக்கிய நெசவாளி

முனைவர் மு. ஏழுமலை

> *"என்னுடைய மக்கள் பேசுகிற பாஷையில் அவர்கள் சிந்திக்கிற மனோ இயலில் அவர்கள் வசிக்கிற சூழ்நிலையில் என்னுடைய சிருஷ்டிகள் அமைய வேண்டும் என்று நினைக்கிறவன் நான். அவர்கள் சுவாசிக்கிற சூழ்நிலையில் என்னுடைய சிருஷ்டிகள் அமைய வேண்டும் என்று நினைக்கிறவன் நான். அவர்கள் சுவாசிக்கிற காற்றின் வாடை, அவர்கள் பிறந்து விளையாடி நடந்து திரிகின்ற என் கரிசல் மண்ணின் வாசமெல்லாம் அப்படியே என் எழுத்துகளில் கொண்டுவந்துவிட வேண்டும் என்பது என் தீராத விருப்பம். இந்த மண்ணை நான் அவ்வளவு ஆசையோடு நேசிக்கிறேன்."*
>
> *- கி.ராஜநாராயணன்*

தமிழ் மொழியின் இலக்கிய ஆளுமைகளின் வரிசையில் தம்முடைய பெருவாழ்வின் மூலம் நீங்காத இடம் பிடித்திருப்பவர் கி.ரா. என்று அழைக்கப்படும் கி. ராஜநாராயணன். தமிழ்மொழியில் 1960களில் வெளிவந்து கொண்டிருந்த படைப்பிலக்கியத்தை மடைமாற்றம் செய்தவர்களில் கி.ரா. அவர்களுக்கு ஒரு முதன்மையான இடம் உண்டு. கரிசல் பகுதிசார்ந்து கி.ரா. உருவாக்கிய படைப்புகளைப் படித்த மீ.ரா. அவர்கள் அந்தக் கரிசல் பூமியை நேரில் காண வேண்டும் என்று கடிதம் எழுதும் அளவிற்கு மண்ணையும் மக்களையும் இணைத்து படைப்புகளை உருவாக்கிய இலக்கிய நெசவாளி கி.ரா. என்றால் மிகையாகாது.

ஒரு படைப்பாளியின் சுய வாழ்க்கைக்கும் படைப்புக்கும் நீண்ட இடைவெளியிலான கற்பனைப் பொருண்மைகளைக் கொண்ட கதைகளை உருவாக்கிக் கொண்டிருந்த படைப்புச் சூழலில், தான் வாழ்ந்துகொண்டிருக்கின்ற கரிசல் மண் சார்ந்த வாடையோடு இலக்கியங்களை உருவாக்கிய வட்டாரப் படைப்பாளியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் கி.ரா. இத்தகைய படைப்பிற்கு அவர் எடுத்துக்கொண்ட பொருண்மை, வெளிப்பாட்டு மொழி, இலக்கிய நடை முதலானவை எல்லாம் கரிசல்பகுதி மக்களின் வாழ்க்கையை உட்செரித்தே இருந்தன. இத்தகைய போக்குக்குக் காரணம் கு.அழகிரிசாமி, டி.கே.சி., ஜீவா உள்ளிட்டவரோடு இவர் கொண்டிருந்த தொடர்பும், இவர் சார்ந்திருந்த மார்க்சிய இயக்கமும் ஒரு குறிப்பிட்ட காரணங்களாக அமைந்தன எனலாம்.


கி.ரா. அவர்களின் இலக்கியத்தன்மை என்பது கதை சொல்லல் என்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. தான் வாழ்ந்த சமூகம் குறித்த கொண்டாட்டமாகவும் விமர்சனமாகவும் அமைந்தது என்றே கூறலாம். இத்தன்மையை கி.ரா. அவர்களால் இயற்றப்பட்டு, இந்திய மொழிகளில் பெரும்பான்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் பெரும் வாசகர்களின் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டும் பரவலாக்கம்பெற்ற "கரிசல் காட்டுக் கடுதாசி" என்னும் நூலின் இலக்கியப் போக்கின் வழி காணலாம்.

**வட்டார வழக்குச் சொற்கள்**

கி.ரா. அவர்களின் வாழ்க்கை என்பது தான் வாழ்ந்த கரிசல் வட்டார மண்ணோடும் மக்களோடும் ஒன்றிணைந்ததாகவே இருந்திருக்கிறது. இவற்றின் வெளிப்பாடுதான் தன்னுடைய ஒவ்வொரு கதையிலும் தன் மண் சார்ந்த வட்டாரச் சொற்களை எளிதில் உணர்ந்துகொள்ளக் கூடிய அளவில் கதையோட்டத்திற்கு ஏற்ப இழைத்து பதிவு செய்திருக்கும் நிலை. குலக்கைக்குள், சேம்பியன், துட்டி, பாந்தம், பாதகத்தி, நொட்டாங்கை, முட்டு முழுக்கு முதலான சொற்கள் கரிசல் வட்டாரத் தன்மையை உணர்த்துவதோடு, அச்சொற்கள் கரிசல் பகுதியில் வாழும் மக்களின் சமூக பண்பாட்டுப் பரிமாணங்களையும் வெளிப்படுத்துவதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

**வழக்காறுகளைப் பிணைக்கும் பாங்கு**

கி.ரா. அவர்கள் கரிசல் வட்டார மக்களிடத்தில் உள்ள நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் முதலானவற்றை முழுமையாக உள்வாங்கியுள்ளார். நாட்டுப்புற வாய்மொழி வழக்காறுகள் என்பது, அம்மக்கள் தம் வாழ்வின் சூழல் சார்ந்து கொண்டிருக்கும் அறிவின் வெளிப்படுத்துதல்கள். இத்தகைய வழக்காறுகளை கி.ரா. அவர்கள் கதையின் போக்குக்கு ஏற்பவும் தான் கூறவரும் கருத்தின் அழுத்தத்திற்கு ஏற்பவும் வருணனைகளாகவும் நேரடியாக பழமொழிகளாகவும் பயன்படுத்தும் நேர்த்தியைக் கொண்டிருக்கிறார்.




உலகத்தில் பிறந்த ஒவ்வொரு ஆணுக்கும் ஒரு பெண் பிறந்திருப்பாள் என்பதை கதையில் வெளிப்படுத்த எண்ணும் கி.ரா., கரிசல் பகுதியில் வழங்கும் "அம்மி செய்த தச்சன் குழவியையும் செய்து போடாமலா இருப்பான்" என்றும், 'அண்ணாச்சி' என்னும் தலைப்பிலான அனுபவப் பகிர்வில், அண்ணாச்சி நாளிதழ்களையும், மாதப் பத்திரிகைகளையும் மேலோட்டமாகப் பார்க்கும் நிலையை "சரகு அரிக்கத்தான் நேரம் இருந்தது, குளிர் காய நேரம் இல்லை" என்ற பழமொழியைக் கூறி வெளிப்படுத்தும் உத்திமுறை கி.ரா. கூறவரும் கருத்தை ஆழப்படுத்துகிறது எனலாம். இவ்வாறு, நாட்டுப்புற வழக்காறுகளை கருத்து வெளிப்பாட்டிற்கு மட்டுமல்லாது கதை உருவாக்கத்திற்கும் பயன்படுத்தும் உத்திமுறை கி.ரா. அவர்களுக்கே உரிய அழகியலாக

உள்ளது. இந்த அழகியலை எமனுக்கு எருமை வாகனம் வந்த வரலாறு, மொய்ப்பன் கதைகேட்ட வரலாறு, டீ, காபி, பேருந்து ஊருக்குள் வந்த வரலாறுகளோடு இணைத்துக் கூறும் முறைகளிலும் உணரலாம்.

**கதை சொல்லுதலும் பண்பாட்டுக் குழைவும்**

கி.ரா. அவர்கள் தான் வாழும் சூழல் சார்ந்த ஒவ்வொரு பண்பாட்டுக் கூறையும் அனுபவித்தும் நுட்பமாக உள்வாங்கியும் தன் இலக்கிய உருவாக்கத்திற்குப் பயன்படுத்தியுள்ளார். பிறப்பு முதல் இறப்பு வரையிலான மக்களின் பண்பாட்டு வழக்குகளை தம் கதை சொல்லல் திறனால் நுட்பமாகக் கூறும் போக்கு கி.ரா. அவர்களின் இலக்கிய உருவாக்கத் தனித்தன்மை என்றே கூறலாம். அவற்றிற்கான எடுத்துக்காட்டாக, 'நம்பிக்கைகள் பரிகாரங்கள்' என்னும் தலைப்பிலான கதைப் பகிர்வில், வீட்டுக்கு 'தூரமான' பெண்கள் கறிவேப்பிலைச் செடிக்குப் பக்கத்தில் போனாலே பட்டுப்போகும் என்ற கரிசல் வட்டார மக்களின் நம்பிக்கையைப் பதிவு செய்திருக்கிறார். இதோடு, இந்த நம்பிக்கைக்கு "இனிமேல் கறிவேப்பிலைக் கன்று வைத்தால், வீட்டுக்கு தூரமான பெண்டுகளைக் கொண்டு நடச் சொல்லுங்கள்" என்று ஒரு பாட்டி கூறுவதாகப் பதிவு செய்திருப்பது, நாட்டுப்புற மக்கள் தம் நம்பிக்கையையும், பரிகாரமாகவும் கொண்டிருக்கக் கூடிய வழக்கத்தைத் தெளிவாக கதையோட்டத்தில் வெளிப்படுத்துகிறார். இதே போன்று, குழந்தைகளுக்கு கல்யாணச்சீர் தைத்தல், உறம் விழுதல் முதலான நோய்களைப் போக்கும் கரிசல் வட்டார வழக்குகளையும், முச்சந்தி மண்ணெடுத்து கண்ணேறு கழிக்கும் முறையையும் பதிவு செய்கிறார். அம்மி, உரல் ஆகியவற்றின் மீது ஒருவர் அமர்ந்தால் அப்பொருள்கள் தேய்வது போல அதன் மீது அமருபவர்களும் தேய்வார்கள் என்பது போன்ற பல நம்பிக்கைகளையும் கி.ரா. பதிவு செய்வது, இலக்கிய வெளிப்படுத்துதலில் பண்பாட்டுக் கூறுகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை அறியச் செய்கிறது.

**கிராமிய தனித்தன்மைப் பதிவுகள்**

கி.ரா. கிராம மக்களின் வாழ்வியலையும் நகர மக்களின் வாழ்வியலையும் பல்வேறு சூழல்களில் வேறுபடுத்தி, கிராம மக்களின் தனித்தன்மையையும் சிறப்பையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. கிராம மக்களின் தன்னிறைவான வாழ்வியல் சூழல், மக்களுக்கிடையே ஒருங்கிணைந்த உறவு முதலானவற்றை தாம் கொண்ட அனுபவத்தின் வழி, மிகப் பொருத்தமான கதையோட்டத்தில் வெளிப்படுத்துகிறார். 'கிராம வினோதங்கள்' என்னும் தலைப்பிலான கதைப் பகிர்வில், மெட்ராஸில் இருந்து வந்த ஒருவர் ஒரு முருங்கை மரத்தில் காய்த்திருக்கும் முருங்கைக் காயைப் பார்த்து ஆச்சர்யப்பட்டுக் கூறும் வார்த்தைகளைக் கேட்ட கிராமவாசி, அப்படியெல்லாம் கூறக் கூடாது, அப்படிக் கூறுவதைக் கேட்டால் முருங்கை மரத்தின் உரிமையாளரின் ஏச்சுப் பேச்சுக்கு ஆளாகக்கூடும் என்று கூறுவது, கிராம மக்கள் கொண்டிருக்கும் "கண்ணேறு நிலையை" உணர்த்துகிறது. இவற்றோடு, தஞ்சாவூரில் இருந்து வந்த ஒருவர் நண்பரின் வீட்டிற்கு ஒரு கூடை நிறைய மாம்பழங்களை இலவசமாகக் கொண்டுவந்து கொடுத்த நிலையைக் கேட்டு ஆச்சர்யம் அடையும் மெட்ராஸ் நபரின் மனநிலையைப் பதிவுசெய்யும் கி.ரா. அவர்கள், கிராம மக்கள் தன் நிலத்தில் விளையும் விளைபொருள்களை இலவசமாகத் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ளும் கிராமப் பண்பாட்டு நிலைகளை மேலும் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை உருவாக்குகிறது எனலாம்.

**கி.ரா.வின் சாதியப் பார்வை**

கி.ரா. கரிசல் வட்டாரம் சார்ந்த பண்பாட்டு நிலைகளை தம் படைப்புகளால் ஆவணப்படுத்துதலின் மூலம் கரிசல் வட்டார இலக்கியத்தின் தந்தை என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார். ஆனாலும் ஒவ்வொரு படைப்பாளியும் பெறும் விமர்சனத்தையும் கி.ரா. அவர்கள் கடந்தவரில்லை. கி.ரா. அவர்கள் ஒரு நேர்காணலில் தலித் இலக்கியங்களைப் பற்றி கேள்வி முன்வைத்தபோது, அவை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறியதை மேற்கோள்காட்டி கி.ரா.வின் எழுத்துக்களை சாதிய நிலையில் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்ட வரலாறும் உண்டு. இதே போன்று இந்துத்துவக் கட்டமைப்பு கொண்ட இலக்கியங்களை உருவாக்குபவர் என்ற விமர்சனமும் கி.ரா.வின் மீது உள்ளது. ஆனால் "கரிசல் காட்டுக் கடுதாசி" நூலில் மேற்காணும் விமர்சனங்களைக் கடத்துவதாகவும் ஐயம் கொள்ளச் செய்வதாகவும் சில பதிவுகள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நூலில், 'தோற்றது' என்னும் கதையில் உயர்சாதியைச் சேர்ந்த மாயம்மா என்பவள் இளம் வயதிலேயே தன் கணவனை இழந்தவள். இவள் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவனோடு காதல் கொண்டு இரவில் இணைந்து உடலுறவு கொள்ளும் நிலையை நியாயப்படுத்தும் கி.ரா. அவர்கள்,

"முதலில் மாயம்மா வந்தாள் கூந்தலை முடித்துக்கொண்டே. கூர்ந்து நிலவைப் பார்த்தாள். சிரிப்பதுபோல இருந்தது அவள் முகம். நடையில் ஒரு உல்லாசம் தெரிந்தது. ஊரைப் பார்த்து வேகமாக நடந்தாள்.

கொஞ்சம் கழித்து அவன் வந்தான். தெரிந்தவன்தான்! அந்த ஜோடியின்மேல், முக்கியமாக

மாயம்மாவின் மேல் எனக்கு மிகுந்த மரியாதை ஏற்பட்டுவிட்டது, அந்தக் கணமே. அந்த சாதாரணப் பெண் எவ்வளவு உயர்ந்துவிட்டாள்! இந்தச் சமூகத்தையே அவள் எவ்வளவு சுலபமாக ஜெயித்துக் காட்டிவிட்டாள்!

அவர்கள் தங்கள் காதலை - காதல் வாழ்க்கையை நிலைநிறுத்திக் கொண்ட விதத்தை நினைக்க நினைக்க ஆச்சர்யமாகவும், மலைப்பாகவும் இருந்தது. உயர்ந்த ஜாதி என்று தன்னைச் சொல்லிக் கொள்ளும் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண், ஜாதிகளிலெல்லாம் மிகத் தாழ்ந்ததாக இந்தச் சமூகத்தால் கருதப்படும் ஜாதியில் பிறந்த ஒருவனோடு வாழ்வில் இணைந்து கொண்ட விதத்தை நினைத்து, வியப்பும் ஆனந்தமும் படாமல் எப்படி இருப்பது?

இப்பேற்பட்டவர்களுக்குப் பேராதரவாக நிற்கும் பேயையும், பிசாசையும், ஜடாமுனிகளையும், சாமியையும் கிடையாது என்று நான் அம்பலப்படுத்துவதைப் போலப் பைத்தியக்காரத்தனம் வேற உண்டா?''

என்று பதிவு செய்கிறார். இப்பதிவு ஒரு இலக்கியத் தன்மையுடனான சாதிய மறுப்பையும் கடவுள் மறுப்பை மீறிய நாட்டார் தெய்வ இருப்பையும் அழுத்தமாக நிலை நிறுத்தக் கூடியதாக உள்ளது.

**வரலாற்று ஆவணமாக கி.ரா.வின் எழுத்து**

ஒரு இலக்கியம் என்பது பொழுதுபோக்குத் தன்மையைக் கொண்டது அல்ல. காலத்தின் கண்ணாடி. ஒரு சமூகத்தின் பிரதிபலிப்பு. இந்நிலையில், கரிசல் நிலம் சார்ந்த அனுபவங்களின் தொகுப்பான கி.ரா. அவர்களின் எழுத்து ஒரு குறிப்பிட்ட காலத்தின் வரலாற்றை சுமந்திருக்கும் ஆவணமாகவும் இடம்பெறுகிறது. இரண்டாம் உலகப்போரின் தாக்கம் இந்தியாவில் ஏற்படுத்திய விளைவுகளையும், தாது வருடப் பஞ்சம் குறித்து தமிழக மக்களிடையே நிலவும் நினைவுகளையும் ''கரிசல் காட்டுக் கடுதாசி'' சுமந்திருப்பதன் மூலம் கி.ரா.வின் எழுத்து, வரலாற்றைக் கற்பிக்கும் ஆவணமாகவும் பரிமாணம் பெறுகிறது எனலாம்.

**அரசியலை விமர்சிக்கும் கி.ரா.வின் எழுத்து**

இலக்கியப் படைப்பாளிகளில் இரண்டு வகை உண்டு. சாதிய அரசியலையும், அரசு அதிகாரத்தையும் சாதுரியமாகக் கடந்து போகும் நிலையிலான படைப்பாளிகள் ஒருவகை. வர்க்க வேறுபாடுகளையும் சாதிய வேறுபாடுகளையும் அரசியல் அதிகாரங்களையும் விமர்சிக்கும் காத்திரமான படைப்பாளிகள் மற்றொரு வகை. இத்தகைய விமர்சனங்களுக்கான ஆயுதமாக தம் இலக்கியப் படைப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளும் சவாலான போக்கை, பெரும்பாலும் மார்க்சிய இயக்கப் புரிதலைக் கொண்டிருக்கும் படைப்பாளிகளிடமே காண முடியும். அந்த வகையில் கி.ரா. அவர்களின் மார்க்சிய வாசிப்பும், இயக்கச் செயல்பாடுகளும் சமூகம் குறித்த புரிதலை ஆழப்படுத்தியிருப்பதை அவருடைய எழுத்துகள் பிரதிபலிக்கின்றன. அவற்றிற்கான உதாரணங்களாக,

**''இந்திய நாட்டின் பெரும் பீடைகளான அரசியல்வாதிகளின் ஒழுக்கக்கேடு, அரசு அதிகாரிகளின் ஈரமின்மை, போலீஸின் மனசாட்சி-யின்மை இவைகளை சரிசெய்ய முடியும் என்று தோன்றவில்லை''**

**''லெனின் ரொம்ப யோசித்தாராம். புரட்சி பண்ணுகிறது சரிதான்; அரசையும் கைப்பற்றி-விடலாம்; அரசை யாரிடம் ஒப்படைப்பது?''**

**''வெள்ளைக்காரனோடு சுதந்திரத்திற்கென்று போராடினோம். இப்போது நம்மவனோடு வாழ்வுக்காகப் போராடுகிறோம் நாங்கள்''**

முதலான பதிவுகளைக் குறிப்பிடலாம். இவை மட்டுமின்றி கரிசல் நில மக்கள் வன அதிகாரிகளாலும், மின்சாரத்துறை அதிகாரிகளாலும் ஏமாற்றம் அடைந்ததை நகைச்சுவையாகவும் கேலி, கிண்டல்களாகவும் விமர்சித்து இருப்பதை பல கதைகளில் இடம்பெறும் பல பதிவுகளின் மூலம் காண முடிகிறது. இத்தகைய பதிவுகள் தன்னைச் சூழ்ந்த மக்கள் சமூகம் அரசால் ஏமாற்றப்படும்பொழுது, அந்த அரசுக்கு எதிரான தன் கருத்தைப் பதிவு செய்யத் தவறாமை என்பது ஒரு இலக்கியப் படைப்பாளிக்குரிய கடப்பாடு என்பதையும், அக்கடப்பாட்டுக்கு உட்பட்டவர் கி.ரா. என்பதையும் உணர்த்துகிறது.

தொ.ப. அவர்கள், 'ஒவ்வொரு கிழவனும் படிக்க வேண்டிய புத்தகம் படியுங்கள். அவர்களைப் படித்துக்கொண்டே இருங்கள்; என்று குறிப்பிடுவார். அதைப்போல கி.ரா. அவர்கள் தான் அனுபவித்ததை, கேட்டதை, பார்த்ததை, மக்களோடு பழகியதை என அத்தனையையும் இலக்கியமாக்கும் வல்லமையைக் கொண்டிருக்கிறார். கி.ரா. தன் கரிசல் நிலம் சார்ந்த மக்களின் இன்பங்களையும், துன்பங்களையும், அறிவையும், பண்பாட்டையும் குழைத்து மண்மணம் மாறாமல் மக்களின் மொழியில் வெளிப்படக்கூடியது அவரின் இலக்கியத் தனித்தன்மை என்றே கூறலாம். கி.ரா.வின் கதைகள் மெல்லிய குரலில் நகைச்சுவையாகவும் கோபமாகவும் மக்களின் பல பரிணாமங்களிலான வாழ்க்கையை பல பரிமாணங்களோடு உணர்த்தக்கூடியது. கி.ரா.வின் உடல் மறைந்திருந்தாலும், இன்றும் என்றும் அவரின் எழுத்து நெடிய உருவத்தில் மெல்லியக் குரலில் என்றும் ஒலித்துக் கொண்டேதான் இருக்கும் - தமிழ் நிலமும் தமிழ் இனமும் உள்ளவரை.

●




# அடர்த்தியும் ஆழமும் கொண்ட சிறுகதைத் தொகுப்பு


## பொன்னீலன்

அகிலா கிருஷ்ணமூர்த்தியின் ‘தூர்’ என்னும் சிறுகதைத் தொகுப்பை இப்போதுதான் வாசித்து முடித்தேன். வாசிப்பு அனுபவத்தில் இருந்து என்னால் மீள முடியவில்லை. கிட்டத்தட்ட எல்லாக் கதைகளுமே பெண் உணர்வு பற்றியவைதான். கவித்துவமான சொற்கள், சொற்றொடர்கள், பத்திகள் என ஒவ்வொரு கதையும் கவித்துவமாகவே அமைந்திருக்கிறது.

நாவல் என்பது நாடகமும் கவிதையுமாகப் பின்னிப்பிணைந்த ஒரு சமூகக் கட்டுமானம் என்பார்கள். இந்தச் சொற்றொடருக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது அகிலாவின் இந்தக் கதைகள்.

மாமியார் மருமகள் பிரச்சினை, கணவனின் அத்துமீறல்கள், மருமகள் விருப்பங்களால் குடும்பத்தில் ஏற்படும் சச்சரவுகள் முதல், குடும்பத்தைப் பிளவுபடுத்தும் நெருக்கடிகள்வரை பல பிரச்சினைகள் இங்கே பதிவாகியுள்ளன.

‘பழையவீடு’ ஒரு அருமையான கதை. பழையவீடு என்பது பழைய சுவர்கள், குழந்தைகளின் பழைய கிறுக்கல்கள், அடையாளங்கள் கொண்டது. அந்தவீடு இடிபட்டுப் புதுவீடாக மாறும்போது பழைய அடையாளங்கள் தொலைந்துபோகின்றன. இந்தப் பழைய அடையாளங்களைத் தேடுபவருக்கு புதுவீடு எல்லாம் இழந்து பாழ்பட்டு நிற்பதுபோல்தான் தோன்றும். வீட்டுக்காரி வினோதா தன் தோழிக்குத் தன் புதுவீட்டைச் சுற்றிக் காட்டுகிறார். போர்டிகோ, சிட் அவுட், மெகா - ஹால், மாஸ்டர் பெட்ரூம்ஸ், அட்டேச்டு வெஸ்டனைஸ்டு பாத்ரூம்ஸ், மாடுலர் கிச்சன், இங்கதான் டிஷ் வாஷர், இங்கபாரு ஹைபை




'தூர்'
அகிலா கிருஷ்ணமூர்த்தி
முடிவிலி வெளியீடு
கரந்தை. தஞ்சாவூர்.
விலை - ரூபாய். 125 /-

வாஷிங் மிசின் எல்லாம் இருக்கு என்கிறாள். இவை எல்லாம் இருந்தாலும் ஏதோ இழந்திட்ட மாதிரி இருக்கு என அவள் உணருகிறாள். தியானம், யோகான்னு செஞ்சுதான் பார்க்குறேன். இரவு நேரங்கள்ல தூக்கம் வரமாட்டேங்குது. பழைய வீட்ல இருந்த மனநிம்மதி இல்லை என்று ஆதங்கப்படுகிறாள் வீட்டுக்காரி. இம்மாதிரியான ஆழமான உளவியல் உணர்வு பழையவீட்டில் பதிவாகி இருக்கிறது.

'பறத்தலின் சப்தம்' என்ற ஒரு அருமையான கதை. பெற்றோரின் மருத்துவக் கனவுக்காகக் குழந்தைகளை அவர்கள் படுத்தும்பாடு இங்கே வாசகரின் மனதை அதிரவைக்கும் வண்ணம் பதிவாகியுள்ளது. பெற்றோர் கொடுக்கும் தொந்தரவு தாங்காமல் குழந்தை, நாம வேற வீட்ல பொறந்திருக்கலாமோ என்று சிந்திக்கும் அவலநிலை ஏற்படுகிறது.


'அன்பெனப்படுவது' என்னும் கதையில், பெண்ணின் சுதந்திர உணர்வு முக்கியமாகப் பேசப்படுகிறது. என் படிப்பை, உணவை, தூக்கத்தை நானல்லவோ தீர்மானிக்கணும் என்று யோசிக்கும் குழந்தை போலத்தான் இன்றைய பெரும்பாலான தமிழ்நாட்டுக் குழந்தைகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு சாதனைக்காகப் பிறந்தது. அந்த ஆற்றல் குழந்தையின் கருவிலேயே அமைந்துள்ளது. அந்தக் குழந்தையின் சாதனையைக் கண்டுணர்ந்து, அதற்குத் தக்கவாறு அந்தக் குழந்தையை வளர்ப்பதுதான் பெற்றோரின் கடமை. ஆசிரியர்களின் கடமையும் அதுவே. சாதிக்க உலகில் ஆயிரம் வழிகள் உண்டு. டாக்டர் மட்டும்தான் உச்சமா? என்று எண்ண வைக்கின்ற அருமைக்கதை.

'நிலாவாசம்' இந்தத் தொகுப்பின் உச்சக்கதை. மூளையிலும் நுரையீரலிலும் புற்றுநோய் பரவிய அம்மா, மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். அவர் மறைந்தபோது அவர் மகள் வெளியே வந்து வானத்தை அண்ணாந்து பார்க்கிறார். நிலவொளியில் வானம் நிரம்பி இருக்கிறது. அம்மா மா.மா.. கண்களை மூடி மனது உருகுகிறாள் மகள். கமகம என வானம் முழுக்க மணத்தது அம்மாவின் வாசம். நான் பெரும் வாசிப்பாளன் அல்ல. வாசித்த அளவில் இந்தக் கதைக்கு நிகரான கதை வேறு இல்லை என்று உணர்கிறேன்.

'ஃபாரின் அப்பா' இன்னும் ஒரு அருமையான கதை. சுசீந்திரன் பல பொய்களைச் சொல்லி மனைவியை அட்டையாய் உறிஞ்சுகிறவன். இந்த அநியாயத்திற்கு முடிவு என்ன? விவாகரத்தே முடிவு. தன் கதையில் இதை மிக நுட்பமான பார்வையில் வெளிப்படுத்துகிறார் அகிலா. அதிலும் குழந்தையின் பார்வையில் வெளிப்படுத்துவது அபாரம்.

' கடத்துபவன் கடவுள்' கனவாலும் நினைவாலும் பிசையப்பட்ட அருமைக் கதை. ரயில் நிலையம், கடுமையான மழை, அந்த மழையில் ஒரு இளைஞன் நனைந்துகொண்டே எகிறிக் குதிக்கிறான், குதித்து ஆடுகிறான். ஆற்று நீரை முத்தமிடும் நாணல்போல இடுப்பை இடமும் வலமுமாக வளைக்கிறான். எதையோ யோசித்து முணுமுணுத்தபடி தன் ஆட்டத்தில் தீவிரமாக ஈடுபடுகிறான். ஜீன்ஸ் பேண்ட்டும், டி சர்ட்டும் கிழிந்து தொங்க, நீண்ட தலைமயிரை ஒரு ரப்பர்பேண்ட் கட்டி இறுக்க முடியாமல் தவிக்க மழைக்குப் போட்டி போட்டுப் பாடி ஆடிக் கொண்டிருக்கிறான் அவன். 'தக்க...ஜம்' எனக் குதித்து ஓரடி எடுத்து வைத்தான் இளைஞன். நெறுக்கிய அவன் புருவங்கள் மேலேறின தா...தை... தக திமிதா... ஜதிக்கு ஏற்ப காற்றும் கேசமும் பிணைந்து உன்மத்தம் ஏறி அவன் ஆடிய வேகத்தில் விரிசடை மூர்த்தியாகக் காட்சியளிக்கிறான் அவன். அண்மையில் நான் வாசித்த சிறந்த கதை இது. கதை சொல்லும் திறமை அகிலாவிடம் நிரம்ப இருக்கிறது. அவர் கதைகள் கவித்துவமானவை. ஆழமானவை. நுட்பமானவை. உளவியல் உணர்வுகள் இழையோடுபவை. ரொம்பவும் யோசிக்க வைப்பவை.

●



கட்டுரை

# கீழை மார்க்சியத்தை முன்வைத்த அறிஞர் எஸ்.என். நாகராசன்

கண. குறிஞ்சி

**24-05-2021 அன்று மறைந்த மார்க்சிய அறிஞர் எஸ்.என்.நாகராசன் மறைவுக்கு 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.**

சத்தியமங்கலம் நாகராசனுக்குத் தமிழக மார்க்சிய வட்டத்தில் காத்திரமானதோர் இடம் உண்டு. தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சி என்ற அமைப்பின் சார்பாக அவர் வெளியிட்ட சிறு வெளியீடு *(15-03-1969)* தமிழகத்தில் அக்காலகட்டத்தில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியது. தமிழ்நாடு விடுதலை குறித்து மார்க்சிய- லெனினிய வழியில் தமிழில் முன்னோடியாக வந்த ஆவணம் இதுதான்.

முதன்முதலில் மார்க்சிய வட்டத்தில் தேசிய இனச்சிக்கல் குறித்த முக்கியத்துவத்தை அந்த வெளியீடு வலியுறுத்தியது. பல்வேறு மொழிகள், வரலாறுகள், மரபுகள், பண்பாடுகள் கொண்ட இந்தியா போன்ற ஒரு நாட்டில் ஒற்றை மையத்தில் அதிகாரத்தைக் குவிப்பது சனநாயகத்திற்கு எதிரானது என்பதை நாகராசன் இறுதி வரை எதிர்த்து வந்தார். கோவை ஞானி, எஸ்விஆர் போன்றோர் இவரோடு இணைந்து தொடக்கத்தில் செயலாற்றி வந்தனர். அப்பொழுது இவர்கள் வெளியிட்ட "புதிய தலைமுறை" பத்திரிகை முற்போக்குச் சிந்தனை வட்டத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதில் ரமணன் என்ற பெயரில் நாகராசனின் கருத்துகள் வெளியிடப்பட்டன. "*1844* பொருளாதார மற்றும் தத்துவக் குறிப்புகள்" எனும் நூலில் கார்ல் மார்க்ஸ் குறிப்பிட்ட "அந்நியமாதல்" எனும் கருத்தைத் தமிழகத்தில் முதன்முதலில் நாகராசன்தான் முன்னெடுத்தார். முதலாளித்துவ சமுதாயம், எப்படி அனைவரையும் அந்நியமாக்குகிறது என்பதை நடைமுறை எடுத்துக்காட்டுகள் மூலம் நாகராசன் தெளிவாக்கினார்.

மார்க்சியக் கோட்பாடுகளை மண்ணின் மரபோடு இணைத்துக்கொண்டு செல்ல வேண்டும் என்பது அவரது கருத்து. இயங்கியல் கோட்பாடுகளைக் கூட எளிய மொழியில் தமிழ்ப்பழமொழிகள் மூலம் அவர் வெளிப்படுத்தினார். ஒரு சமூகத்தின் சாரம், பழமொழிகளில் உறைந்திருக்கிறது எனவும்,

இந்தியாவிலேயே தமிழில்தான் அதிகப் பழமொழிகள் உள்ளன எனவும் அடிக்கடி கூறி வந்தார். மேலை மார்க்சியம், கீழை மார்க்சியம் என வேறுபடுத்தி அவர் கருத்துக்களை முன்வைத்தார். இக்கருத்தாக்கம் கடும் எதிர்வினைகளை உருவாக்கியது. இருப்பினும் அவர் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். கீழை மார்க்சியம் *(Eastern Marxism)* எனும் அவரது ஆங்கில நூலில் தனது வாதத்தை அவர் முன்வைத்தார். மார்க்சியம் கிழக்கும் மேற்கும், கம்யூனிசம், விடுதலையின் இலக்கணம், வாழும் மார்க்ஸ், அழிவின் தத்துவம், கிழக்கு வெல்லும் போன்ற நூல்களில் அவரது பரந்துபட்ட கண்ணோட்டத்தைக் காண முடியும். அறிவியல் தொழில்நுட்பம் குறித்துக் கறாரான கருத்தாக்கத்தைக் கொண்டிருந்தார்.

அறிவியல் தொழில்நுட்பம், இன்று வல்லரசு நாடுகளுக்குச் சேவை செய்வதாக மாறிவிட்டது எனச் சுட்டிக் காட்டியதோடு, அறிவியல், எப்பொழுதும் அறம் சார்ந்து இருக்கவேண்டும் என்பதும், அது மக்கள் சார்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதும் அவரது தீர்க்கமான முடிவுகளாக இருந்தன. அந்த அடிப்படையில் அவர் போர்களுக்கு எதிரான கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். உலக சமாதான அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதும் அவரது கனவாக இருந்தது. மாவோவின் கொள்கைகளை அவர் விடாப்பிடியாக வலியுறுத்தி வந்தார். சீன வரலாறு, அதன் தொன்மை மரபு, இலக்கியச் செழுமை ஆகியவற்றின் அடிப்படையில் மாவோ எவ்வாறு சீனப்புரட்சியை முன்னெடுத்தார் என்பதைப் பல்வேறு தரவுகள் மூலம் விளக்குவார். உழவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், சிறுபான்மையினர், தேசிய இனத்தினர் மற்றும் மகளிர் ஆகியவர்களின் ஒருங்கிணைவுதான் தமிழ்நாட்டிற்கு - இந்தியாவிற்கு - விடியலைத் தேடித்தரும் என்பதில் உறுதியாக இருந்தார்.

எந்தவொரு நூலாக இருந்தாலும், கோட்பாடாக இருந்தாலும், அது சமுதாயத்தில் விளக்கப்படாத ஒன்றை விளக்கக்கூடியதாகவும், அடுத்த செயல் திட்டத்திற்கு வழிவகுப்பதாகவும் இருக்க வேண்டும் என அவர் வரையறை செய்தார். அப்படி இல்லாத எந்த நூலும், கோட்பாடும் ஏற்கத்தக்கதல்ல என்பது அவரது முடிவு. சூழலியம் குறித்த விழிப்புணர்வைத் தமிழ்ச் சமூகத்தில் வளர்த்தெடுத்ததில் அவருக்கு முக்கியப் பண்பு உண்டு. குறிப்பாகச் செயற்கை உரம், பூச்சிக்கொல்லி மருந்து, வீரிய விதை போன்றவை நமது சூழலை எவ்வாறு பாழாக்குகின்றன என்பதை அவர் அனுபவ வாயிலாக விளக்கினார். இதற்கான போராட்டங்களிலும் அவர் இயன்ற அளவு பங்கேற்றார். வேளாண் அறிவியலாளர் நம்மாழ்வார் அவர்களோடு இணைந்து இயற்கை விவசாயம் குறித்த பரப்புரையை மேற்கொண்டார். மரபுவழி வேளாண்மை குறித்து அறிவியலாளர் ஆர்.எச். ரிச்சாரியா போன்றோரது கருத்துகளைத் தமிழ்ச் சமூகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

தவிர, இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அறிவுப்புலத்தில் செயல்பட்டவர்களுடன் தொடர் உறவில் இருந்தார். அஸ்கர் அலி எஞ்சினியர், இரஜினி கோத்தாரி, அஷீஷ் நந்தி போன்றவர்களோடு அவருக்கு இருந்த நட்பு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, புகழ்பெற்ற அறிஞர் நோம் சாம்ஸ்கியுடன் இறுதி வரை கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். பிராமணராகப் பிறந்திருந்தாலும், படிக்கும் காலத்திலேயே பூணூலை நீக்கிவிட்டார். பொதுவாழ்வில் செயல்படக்கூடியவர்கள், தம்மைச் சாதி நீக்கம், வர்க்க நீக்கம் செய்துகொள்ள வேண்டும் என அவர் குறிப்பிடுவார். அறிவுச் செருக்கு, செல்வச் செருக்கு, சாதிச்செருக்கு ஆகியவற்றை நீக்கியவனே மனிதன் என்பது அவரது முடிவு. தனிப்பட்ட வாழ்விலும் அவர் இயன்ற வரை அதைக் கடைப்பிடித்தார். அவரது தேவைகள் மிக மிகக் குறைவு. எளிமையே அவரது வாழ்முறையாக இருந்தது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் குறித்து அடிக்கடி குறிப்பிடுவார். குறிப்பாக, வைணவ மரபை மிகவும் உயர்த்திப் பிடிப்பார். அவரது இறுதிக் காலத்தில் தன்னை "இராமனுசதாசன்" என அடையாளப்படுத்திக்கொண்டார்.

வைணவமே சமூக விடுதலைக்கு வழி என்ற அளவுக்கு அவர் நிலைப்பாடு எடுத்தது விவாதத்துக்குரியது. ஓர் இயக்கத்தைக் கட்டி அமைக்க முடியவில்லை என்ற ஏக்கம், வாழ்நாள் முழுவதும் அவரிடம் நீடித்திருந்தது. சிக்கலான தருணங்களில் எந்த முடிவை எடுப்பது என்று வந்தால், அதை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றி அவர் ஒருமுறை எழுதினார். "நமக்குத் திட்டமில்லை என்று பெரியாரிடம் கேட்டார்களாம். 'என்ன பெரிய திட்டம்? இராஜாஜி என்ன சொல்கிறாரோ, அதற்கு எதிராகச் சொல்லு. அவர் வேண்டும் என்றால் நீ வேண்டாம் என்று சொல்' என்று மிக எளிமையான சூத்திரம் ஒன்றைப் பெரியார் நமக்கு தந்தார். இதையே மாவோ, எதிரிக்கு எது நியாயமோ, அது நமக்கு அநியாயம். எதிரிக்கு எது கெடுதலோ, அது நமக்கு நல்லது" என நாகராசன் எழுதினார். "குறைகள், நிறைகள் குறித்து முடிவெடுக்கும் தருணத்தில், குறை - நிறை ஆகியவற்றில் எது அதிகமாக இருக்கிறதோ, அதைக் கொண்டு ஒரு விஷயத்தை மதிப்பிட வேண்டும்" என மாவோ குறிப்பிட்டதை நாகராசன் அடிக்கடி குறிப்பிடுவார். அந்த அளவுகோல் நாகராசனுக்கும் பொருந்தும்.

***நன்றி: தினமணி நாளிதழ்***

கட்டுரை

# ஏர் ஆயுதக்கடவுள்

அ.கா.பெருமாள்



கருப்புசாமி கிருஷ்ணனையும் வெள்ளைச்சாமி பலராமனையும் குறிப்பன என்னும் செய்தியை முதலில் யார் சொன்னார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இந்தத் தகவல் பேரா. தொ.பரமசிவம் அவர்களின் பேரில் பரவியுள்ளது. இந்தக் கருத்தைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்கலாம். வெள்ளைச்சாமி என்ற பெயர் எல்லா சாதிக்காரர்களிடமும் குறிப்பாக உயர்சாதியினர் என்று கருதப்பட்டவர்களிடம் வழக்கில் இல்லை. கருப்புசாமியும் அப்படியே.

பலராமனின் வழிபாடு சங்க கால இறுதியிலேயே நின்றுவிட்டது. பின் எப்படி அது நாட்டார் தெய்வ வழிபாட்டில் வந்து வெள்ளைச்சாமியானது. பலராமன் தமிழகத்துக்கு வைதீகம் வழி வந்த தெய்வமல்ல. பூர்வீகமாய் வழிபாடு பெற்று இணைக்கப்பட்ட தெய்வமுமல்ல.

பின் எப்படி அந்தப் பெயர் சாதாரண மக்களிடம் வெள்ளைச்சாமியாகப் பரவலானது என்று தெரியவில்லை. வைதீக தெய்வமான கிருஷ்ணன் தமிழக மாயோனுடன் இணைக்கப்பட்டது சங்க காலத்துக்குப் பிற்பட்டுதான். அந்த இணைப்பு கருப்புசாமி என்னும் நாட்டார் தெய்வத்திற்கு வரும் சூழ்நிலை இருந்ததாகவும் தெரியவில்லை.

கருப்புசாமி, வெள்ளைச்சாமி பற்றிய செய்திகளோ வழிபாட்டு முறைகளோ பலராமனையும் கிருஷ்ணனையும் நினைவுபடுத்தவும் இல்லை. பண்டைக் காலத்தில் வழிபாடு பெற்றிருந்த தெய்வங்கள் சில முகவரி இழந்துள்ளன, (எ.கா. வருணன். இந்திரன்) இவர்கள் சாமி என்னும் பின் ஒட்டுடன் நாட்டார் வழிபாட்டில் இடம்பெறவில்லை. பலராமன் மட்டும் எப்படி வெள்ளைச்சாமியானான் என்பது புரியவில்லை.

பலராமன் என்ற பெயர் பாலபத்திர ராமன். பாலபத்திரா, சங்கர்ஷணா, வாலியோன், வாசிக நாயகன். காலாயுதன், ஏராயுதன், ஆதிசேஷன்,

சமகத்தினன் என்றெல்லாம் புராணங்களில் வழங்குகிறது.

பலராமனின் கதை கிருஷ்ணனின் கதையுடன் தொடர்புடையது. பலராமனின் கதைகள் பாகவதம் பத்தாம் சருக்கத்தில் வருகின்றன. மகாபாரதம், ராமாயணம் ஆகிய காவியங்களிலும் அக்கினி புராணம், ஹரிவம்ச விவரணம் போன்ற நூற்களிலும் வருகின்றன.

யயாதி மன்னரின் சாபத்தால் அவனது மக்கள் நாடின்றி அலைந்தபோது நிறுவப்பட்டதுதான் யதுகுல அரசு. இக்குலத்தில் புகழ்பெற்றவர்கள் கிருஷ்ணன், பலராமன், பிரத்யும்னன், அனுருத்தினன், வசுதேவன் என 13 பேர்கள் வருகின்றனர். சூரசேனன் யதுகுலத்தவன்; இவன் தம்பி வாசுதேவன். மகள் பிருதை (பரீதா). இவளைக் குந்திபோஜன் வளர்த்தான். அதனால் குந்தி ஆனாள். இவளது கணவன் திருதராஷ்டிரனின் சகோதரன் பாண்டு. குந்தியின் மக்கள் பாண்டவர்கள்.

வசுதேவருக்கு தேவகி, ரோகிணி என இரண்டு மனைவிகள் உண்டு. தேவகி கம்சனின் தங்கை. வசுதேவர் தேவகியை மணந்த அன்று கம்சன் மணமக்களைத் தேரில் அமர்த்தி வலம் வந்தான். அப்போது அசரீரியின் குரல் கேட்டது; "கம்சா இந்தத் தேவகியின் வயிற்றில் பிறக்கப்போகும் மகன் உன்னைக் கொல்லுவான்."

இதைக் கேட்ட கம்சன் தேரைவிட்டு இறங்கினான். தேவகியின் கூந்தலைப் பற்றிப் பிடித்து வாளை ஓங்கினான். வசுதேவர் தடுத்தார்; கம்சனிடம் கெஞ்சினார். "விட்டுவிடு; இவளுக்குப் பிறக்கும் குழந்தைகளை உன்னிடம் தந்துவிடுகிறேன்" என்றார். கம்சன் தேவகியையும் வசுதேவரையும் சிறையில் அடைத்தான்.

வசுதேவருக்கும் தேவகிக்கும் சிறையில் பிறந்த ஆறு குழந்தைகளையும் கம்சன் எடுத்துக்கொண்டான். தேவகி வயிற்றில் வளர்ந்த கருவை விஷ்ணு - வசுதேவரின் மூத்த மனைவியான ரோகிணி வயிற்றில் சேர்ப்பித்தார்.

ரோகிணிக்குப் பலதேவன் பிறந்தான். தேவகி வயிற்றில் எட்டாவது மகனாகக் கிருஷ்ணன் பிறந்தான். யதுகுலத்து நந்தகோபரின் மனைவி யசோதை கிருஷ்ணனையும் பலதேவனையும் வளர்த்தாள். இதனால் பலராமன் அண்ணன், கிருஷ்ணன் தம்பி எனப்பட்டான்.

வர்ஷிணி வம்சத்து நாயகர்களான இருவரும் விஷ்ணுவின் அம்சமாகவே கொள்ளப்பட்டனர். என்றாலும் கிருஷ்ணனே பகவான் எனப்பட்டான். விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் எட்டாவது அவதாரம் பலராமன். பிற்கால நூற்கள் பலராமனைப் புத்தருடன் இணைக்கின்றன.

இராம அவதாரத்தில் பரசுராமனும் வருகிறான். இருவரும் விஷ்ணுவின் அம்சமாகவே கொள்ளப்படுகின்றனர். இராமன் பரசுராமனிடம் மாறுபடுகிறான்; இராமனுக்கு அடங்கியவனாக பரசுராமன் காட்டப்படுகிறான். கிருஷ்ண அவதாரத்தில், பலராமன் மாறுபடவில்லை.

பலராமன் ஆதிசேசனின் அம்சமாகக் கூறப்படும் கதைகளும் நிறைய வழங்குகின்றன. இது குறித்த சிற்பங்களும் கிடைக்கின்றன. 8ஆம் நூற்றாண்டு சிற்பம் ஒன்றில் பலராமனின் தலையில் ஆறு பாம்புகள் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது என்கிறார் கோபிநாத ராவ்.

பலராமனின் அவதாரம் முடியும்போது இவனது வாயிலிருந்து 1000 தலைகளை உடைய ஆதிசேசன் கிளம்பினான் என்ற தொன்மம் உண்டு. நந்தகோபன் பலராமனுக்கு ராமன் என்றுதான் பெயர் வைத்திருந்தான். ஆனால் அவனது அபரீதமான பலத்தின் சக்தியால் பலராமன் ஆனான். இவனும் கிருஷ்ணனைப்போல் பெருவீரனே.

இவன் ரைவத மலையில் வாழ்ந்த த்விதா என்னும் ராட்சதக் குரங்கைக் கொன்றவன்; தேனுகா என்பவன் கழுதை உருவாக வந்து யாதவ மக்கள் வாழ்ந்த பனைமரக்காட்டில் அட்டகாசம் செய்தபோது அவனைக் கொன்றவன்; அஸ்தினாபுரம் நகரையே தன் ஏர் ஆயுதத்தால் குத்தித் தூக்கியவன்; துரியோதனன் பணிந்து வேண்டியதால் கோபம் தணிந்தவன்; யமுனையின் போக்கை மாற்றியவன்; பிரவம்மன் என்ற அரக்கனை அழித்தவன்.

குபேரின் சேவகன் சங்கசூடன் என்பவனுடன் கண்ணன் போரிட்டு அவனது மகுடத்திலிருந்த ரத்தினத்தை எடுத்து பலராமனுக்குக் கொடுத்தான். அதைச் சூடும் தகுதி பலராமனுக்கே உரியது என்றான். கக்குத்மி என்பவனின் மகள் ரேவதியைப் பலராமன் கண்டபோது மிக உயரமாக இருந்தாள். அவளது தலைமேல் தன் ஏரை வைத்து அழுத்தி உயரத்தைக் கட்டுப்படுத்தினான், பின் அவளையே மணந்துகொண்டான்.

அக்கினி புராணப்படி பலராமன் கிருஷ்ணனுக்கு உதவி செய்பவனாகவே காட்டப்படுகிறான். கம்சனைக் கொல்ல உதவியவன் பலராமன். கிருஷ்ணனுக்கு வழிகாட்டியாக ஆசிரியராக இருந்தவன். லட்சுமணன்

இராமனிடம் இப்பிறவியில் நீ எனக்கு மூத்தவனாக இருந்ததால் அடங்கி நடந்தேன் சேவகனாக இருந்தேன். அடுத்த பிறவியில் நான் உன்னை ஆளவேண்டும் என வேண்டிக் கொண்டானாம். இது ராமாயணக் கதை. ஆதி கேசவனின் அம்சமான லட்சுமணனே பலராமனாகப் பிறந்தான் என்பது ஒரு கதை.

பலராமன், சூரியன், காமன், சாமன் போன்றோருக்குச் சமமானவனாகப் போற்றப்படுகிறான், நாராயணீயம் கிருஷ்ணனைப் பரமாத்மாவாகவும் பலராமனை ஜீவாத்மாவாகவும் கூறும். பலராமன் பவாஞ்ச ரத்தின சாஸ்திரம் அறிந்தவனாகவும் காட்டப்படுகிறான்.

மகாபாரதம் சபாபருவத்தில் பலராமனைப் பற்றி வரும் கதைகள் பிற்சேர்க்கை என்ற கருத்துண்டு. துரியோதனனின் மகன் லட்கணைக்கு பலராமனின் மகள் வத்சலையை மணமுடிக்க நடந்த முயற்சியை கிருஷ்ணன் முறியடித்து விட்டான். அர்ஜுனனுக்கும் பலராமனின் தங்கை சுபத்திரைக்கும் பிறந்த அபிமன்யுவை வத்சலைக்கு கிருஷ்ணன் மணமுடித்து வைக்கிறான். இப்படியான ஒரு கதை தமிழக நாட்டார் வழக்காற்றில் வேறு வேறு வடிவங்களில் அம்மானைப் பாடலாக மாறியிருக்கின்றன. (அபிமன்னன் சுந்தரிமாலை)

பாண்டவ யுத்தத்தின்போது பலராமன் இரண்டு பக்கத்தினரையும் சமாதானப்படுத்த முயன்று தோற்றான். அதனால் கிருஷ்ணரின் அறிவுரைப்படி தீர்த்த யாத்திரை சென்று விடுகிறான், போரின் இறுதியில் வருகின்றான். அப்போது பீமனும் துரியோதனனும் தொடையில் கதையால் அடிப்பதைப் பார்த்து "இது அதர்மமான காரியம், சரியல்ல" என்கிறான். கிருஷ்ணன் "அண்ணா - அதர்மத்துக்கு அதர்மம்; திரௌபதையின் வஸ்திரத்தை உரித்தபோது தர்மம் எங்கே போயிற்று" எனக் கேட்கிறான். பலராமன் பேசவில்லை. இதுபோன்ற கதைகள் பிற்காலத்தில் இணைக்கப்பட்டவை.

பலராமனின் அவதார முடிவை பாகவதமும் வேறு புராணங்களும் கூறுகின்றன. யதுவம்சம் தங்களுக்குள் போரிட்டபோது பலராமனின் இரண்டு மக்களும் (நிசாதன், உல்முகன்) இறந்துவிடுகின்றனர். பலராமன் கடலில் இறங்கி தியானம் செய்கிறான். அப்படியே மறைந்து போகிறான்.

யாதவ வம்சம் அழியும்போது வசுதேவரும் மறைந்து போகிறார். அப்போது தேவகியும் ரோகிணியும் உடன்கட்டை ஏறுகின்றனர். பலராமனின் மரணத்தின்போது அவனது மனைவி ரேவதியும் உடன் மடிந்து விடுகிறாள்.

பலராமனின் அவதார முடிவில் அவனது வாயிலிருந்து ஆதிசேசன் கிளம்பினான். குஜராத் சோமநாதபுரம் ஆலயம் அருகே ஒரு குகையினுள் பலராமனின் வாயிலிலிருந்து வெள்ளைநிறப் பாம்பு சென்றது என்ற கதை வழங்குகிறது.

இந்திய நாட்டார் மரபில் சில மாநிலங்களில் வேளாண் தொழில் வளர்ச்சிக்கு உதவுபவனாக பலராமன் காட்டப்படுகிறான். இது பற்றிய சில தொன்மங்களும் புராணங்களும் உள்ளன. இவனே வேளாண் தொழிலைக் கண்டுபிடித்தவன்; உதவுபவன் என்பர். நாகர் இனத்தில் விவசாயக் கடவுளாக இவன் வழிபாடு பெறுகிறான். இந்தச் சமூகத்தில் இவனை நீரின் பெருக்கத்துடனும் உணவு உற்பத்தியுடனும் தொடர்புபடுத்திப் பேசும் கதைகள் உள்ளன. விஷ்ணு தருமோத்திர புராணம் விவசாய உற்பத்தியில் இவனுக்கு இடம் அதிகம் எனக் கூறுகிறது.

இந்திய மரபில் ஆரம்ப காலத்திலேயே பலராமனுக்கு வழிபாடு இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பலராமன் வைகாசி மாதம் சுக்கிலபட்ச திருதியையில் தோன்றினான் என்பது புராணக்கதை. இந்த நாளில் சில கோவில்களில் விழா நிகழ்ந்ததே இதற்குச் சான்று. பலராமனுக்கு உரியதான தசாவதார காயத்திரி மந்திரம்

**ஓம் ஹலாயுதாய வித்மஹே**
**மஹா பலாய தீமஹி**
**தன்னோ பலராமப்ரசோத யாத்**

என்பதாகும்.

அர்த்த சாஸ்திரத்தில் பலராமனுக்கு தனியாகக் கோவில் இருந்தது பற்றிய குறிப்பு வருகிறது; இதற்குக் கல்வெட்டுச் சான்றும் உண்டு என்கிறார் ஜே.என்.பானர்ஜி. வாசுதேவனுக்கும் பலராமனுக்கும் ஒரே காலத்தில் வழிபாடு வந்திருக்க வேண்டும் என்கிறார். பானர்ஜி.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் வெள்ளைநாகர் கோட்டம் காவிரிப்பூம்பட்டினம் நகரத்தில் இருந்தது. நாகர் என்பது பலராமனின் நிறத்தையும் ஆதிசேஷனின் தொடர்பையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இதனால் வட இந்தியப் பகுதிகளில் பலராமன் வழிபாடு பெற்ற காலத்திலேயே தமிழ்நாட்டிலும் வழிபாடு பெற்றான் என்று ஊகிக்கலாம்.

பலராமனின் சிற்பம் இந்தியாவில் பரவலாகக் கிடைத்திருக்கிறது. இவனது படிமம் இப்படி இருக்கவேண்டும் என்ற கோட்பாடும் ஆகம சிற்ப நூல்களில் உள்ளது. பலராமனின் சிற்பத்தை

வைகாச முறைப்படி அமைக்க வேண்டியது பற்றி கோபிநாதராவ் கூறுகிறார்.

இதன்படி பலராமன் மத்யமதாசதரம்; அதாவது 100 அங்குல உயரம். இரண்டு கைகள்; ஒரு கையில் உலக்கை; இடது கையில் ஏர் ஆயுதம் என இருக்கவேண்டும். பலராமன் முல்லைமலர் போன்ற தூய வெண்ணிறமுடையவர். இவரது ஆடை சிவப்பு நிறமாய் இருக்கும். தலையில் நீண்ட முடிகள். பிருகத் சம்ஹிதா என்ற நூல் குண்டலம் அணிந்தவன் எனக் கூறும்.

வடஇந்திய மதுராவிலிருந்து எடுக்கப்பட்டு இப்போது லட்சுமணபுரி அருங்காட்சியகத்தில் இருக்கும் பலராமனின் சிற்பமே கிடைத்தவற்றில் பழமையானது என்கிறார் செண்பகலட்சுமி. இதற்கு இரண்டு கைகள்; ஒன்றில் உலக்கை; இன்னொன்றில் ஏர். இவன் அவதாரப் புருஷனாக உருப்பெற்ற காலத்திற்கு முன்பு செய்யப்பட்ட சிற்பங்களில் இரண்டு கைகள் இருந்திருக்கலாம்.

குவாலியூர் அருங்காட்சியகத்தில் உள்ள பலராமனின் சிற்பம் - கி.பி. 5ஆம் நூற்றாண்டினது. ராஜஸ்தானில் கிடைத்த ஒரு சிற்பம் மத்தியகாலத்தது. நாகர் இனத்தவருடன் தொடர்புடையது. வங்காளத்தில் கிடைத்த ஒரே ஒரு சிற்பத்தில் ஞான முத்திரை உண்டு. இச்சிற்பத்தின் ஒருகை பாஞ்சராத்ர அடையாளமுடையது. இவர் இங்கு சம்ரட்சண பலராமன் எனப்படுகிறார்.

விஷ்ணு தர்மோத்திராம் என்ற நூல் பலராமன் கையில் ஏர் ஏந்தியிருப்பார்; காதில் வளையம் உடையவர்; வெள்ளை நிறத்துடன் திரிபங்கமாய் சிவப்பு ஆடையுடன் கால் வளையத்துடன் இருப்பார் எனக் கூறும். திருமங்கையாழ்வார் பலராமன் ஏர் ஆயுதம் ஏந்தி காதில் குண்டலத்துடன் இருப்பார் என்கிறார்.

பலராமன் நான்கு கைகளுடன் இருப்பார் என விஷ்ணு தர்மோத்திரம் கூறும் என்கிறார் கோபிநாதராவ். பின்புறம் இடது கையில் ஏரும் வலது கையில் உலக்கையும் பின்புற இரண்டு கைகளில் சங்கு சக்கரங்களுடன் இருப்பார். பலராமனைப் போலவே கல்கி அவதாரப் புருஷனும் வெள்ளை நிறத்துடன் இருப்பார்.

கோபிநாதராவ் பலராமனின் இடது காலில் மதுக்குப்பியும் வலது கையில் ஓர் ஆயுதத்துடனும் கழுத்தில் வனமாலையுடன் இருப்பார். சில சிற்பங்களில் திரிசூலமும் உண்டு. பனைமர நிழலில் இவர் இருப்பது போலவும் காட்டப்பட்டதுண்டு என்கிறார்.

பிரஹத் சம்ஹிதை என்ற நூல் இவன் காதில் வளையத்துடன் அல்லி அல்லது சங்கு நிறத்துடன் இருப்பான் எனக் கூறும். இந்நூல் இவனை விவசாயக் கடவுளாக வருணிக்கும். ஹயஸ்ரக பாஞ்சரத்ரா என்ற நூல் இவன் நான்கு கைகள் உடையவன்; இவற்றில் வாள், ஏர், சங்கு, சக்கரம் இருக்கும் எனக் கூறும்.

பலராமனுக்குத் தனிக்கோவில் குறைவு. கிருஷ்ணன் கோவில்களில் துணைத் தெய்வமாக இவன் காட்டப்படுவதுண்டு. பலராமனின் வலப்புறம் இவனது மனைவி ரேவதியின் உருவம் இருக்கும். இவள் மஞ்சள் நிறம். பூ வேலைப்பாடுடைய ஆடை அணிந்திருப்பாள். இவளுக்கு இரண்டு கைகள் இடது லோலாஹஸ்தம் வலது கையில் தாமரை இருக்கும்.

தமிழகத்தில் ஆரம்பகாலத்தில் பலராமன் சிற்பங்கள் இருந்ததற்கான சான்றுகள் முழுமையாகக் கிடைக்கவில்லை. மாமல்லபுரம் கோவர்த்தன மண்டபம், திருவல்லிக்கேணி, திருநாரையூர் கோவில்களில் சில நல்ல சிற்பங்கள் உள்ளன.

பல்லவர் கால மாமல்லபுரம் கோவர்த்தனகிரி சிற்பம் ஒன்றில் பலராமன் சிற்பம் உள்ளது. கோவர்த்தனகிரியைக் கிருஷ்ணன் தூக்கி நிறுத்துகிறான். அருகே பலராமன் வலது கை இடுப்பில் இருக்க இடது கையை மேலே தூக்கியபடி நிற்கிறான். இவனுக்கு மகுடமும் யக்ஞோபவிதமும் உண்டு.

பிற்காலச் சோழர், விஜயநகரக் கட்டுமானக் கோவிலான திருக்கண்ணமங்கை பக்தவத்சலம் பெருமாள் கோவிலில் பலராமன் சிற்பம் உள்ளது. இரண்டு கைகள், ஏர், உலக்கை கைகளில்.

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு கோவிலில் உள்ள பலராமன் வலது கையில் ஏரும், இடதுகையில் அம்பும் உடையவன். இது இடைக்காலச் சிற்பம். அரியலூரில் உள்ள கோவிலில் பலராமனுக்கு நான்கு கைகள். பின் கைகளில் சங்கு சக்கரம் முன் கைகளில் கதாயுதமும் ஏரும் உள்ளன. இந்தக் கதாயுதத்தின் பெயர் கவுமோதகி. ஏர் ஆயுதத்தை ஹாலாயுதம் என்பர்.

தமிழகத்தில் சங்க காலத்திலிருந்தே பலராமனைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. பொதுவாக, பாகவதக் கதைகள் தமிழகத்தில் பரவிய காலம் கி.பி.5 அல்லது 6ஆம் நூற்றாண்டு என்கிறார் செண்பக லட்சுமி. இது முற்பட்ட பல்லவர் காலம். ஆனால் இதற்கும் முந்திய சங்கப் பாடல்களில் பலராமனைப் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன.

தொகை நூல்களில் மிகப் பழமையானவையதாகக் கருதப்படும் நற்றிணை, புறநானூறு ஆகியவற்றிலும் சங்க கால இறுதியில் தோன்றிய பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம் ஆகியவற்றிலும் பலராமனைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. (பின் இணைப்பு காண்க)

**பின் இணைப்பு**

**நற்றிணை**

1. மாயோன் அன்ன மால்வரைக் கவா அன்
வாலியோன் அன்ன வயங்குவெள் அருவி எண்- 32

**புறநானூறு**

2, கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடியோனும் எண்-56

கடற்கண்ணே வளரும் புரிந்த சங்கை ஒக்கும் திருநிறத்தை உடைய கொலையை விரும்பும் கலப்பையையும் பனைக் கொடியையும் உடைய பலராமன்

(புறம் பழைய உரை உ.வே.சா. பக்.138)

3. பால்நிற உருவில் பனைக்கொடியோனும் எண்-58
பால்போன்ற நிறத்தை உடைய பனைக்கொடியோன் (பலராமன்)

**கலித்தொகை**

4. ஒருகுழை அவள் மார்பில் ஒண்தார் போல ஒளிமிக
(முல்லைக்கலி - எண்.5 வரி-11)

காதில் குழை மார்பில் சிவந்த மணலை உடைய நம்பி மூத்தபிரான் (பலராமன்)

5. பாலன்ன மேனியான் (நெய்தல் திணை 7, வரி-124)

6. வானுற ஓங்கிய வயங்கொளிர் பனைக்கொடி
பால்நிற வண்ணன்போல் பழி தீர்த்த வெள்ளையும்
(முல்லைத்திணை 4, வரி-104)

ஆயரெல்லாம் சேரத்திரண்டு விளங்குகின்ற வானில் எறியும்படி ஓங்கிய ஒளிபெருகுகின்ற பாலின் நிறம் உடைய பனைக்கொடியோன்.

**பரிபாடல்**

7, விறல்மிகு வலியொலி பொலிபகழ் புழுதியின்
நிறனுழும் வளைவாய் நாஞ்சிலோனும்
(எண்-13, வரி 33-34)

விறல்மிகு வலியும் ஒலியும் பொலிந்து புழுதியை அகழுமாறு போல அவர் நிறத்தை உழும் நாஞ்சில் படையை உடைய

(பரிமேலழகர் உரை உ.வே.சா., பக்.150)

8. வாய்விளங்கும் வளைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை (எண்-1, வரி-20)

9. வளையொடு புரையும் வாலியோன் (எண்-2, வரி-20)

10. பனைக் கொடியோன் (எண்-2, வரி-22)

11. கருங்கண் வெள்ளை(எண்-3, வரி-8)

திருமாலை பஞ்சமூர்த்தியாகக் கொண்டு அவர்களில் ஒருவனாகப் பலராமனைக் கொள்ளுகிறார் பரிபாடல் (உரைகாரர் பரிமேலழகர்)

12. செங்கண்காரி கருங்கண் வெள்ளை
பொன்கண்பச்சை பைங்கண் மால்
செங்கட்காரி - வாசுதேவர்
கருங்கண்வெள்ளை - கங்கருடணன் (பலராமன்)
பொன்கண் பச்சை - பிரத்யும்னன்
இவர்களுடன் திருமால்
பரிபாடல் பரிமேலழகர் உரை, உ.வே.சா. பதிப்பு ப.26

13. உயர்கொடி நாஞ்சில் (எண்-4, வரி-39)
ஏர் கொடியை உடைய பலராமன்

**சிலப்பதிகாரம்**

14. வால்வளை மேனி வாலியோன் கோவில்
இந்திரவிழவூர் எடுத்த காதை, வரி-171.

15. புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம்
வெள்ளை நாகர் - பலதேவர்
(அடியார்க்குநல்லார் உரை, ப.245)

16. மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
மேழியாகிய படையை வலமாக
ஏந்திய பலதேவர் கோவில்

சங்கப்பாடல்களிலும் சிலப்பதிகாரத்திலும் பலதேவனைப் பற்றி வரும் பெயர்கள்: வாலியோன், பனைக்கொடியோன், வெள்ளை நிறத்தவன். காதில் குழை உடையவன், மார்பில் சிவந்த மாலை உடையவன், ஏராயுதத்தான் பஞ் சமூர்த்தி ஆகியன. சிலப்பதிகாரக் காலத்தில் இவனுக்குக் கோவில் இருந்தது.

●


**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**


அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

# விரைவில்...
# நியூ செஞ்சுரி வெளியீடாக...




விலை: ரூ.20/-

## பாரிஸ் கம்யூன்: 150 ஆண்டுகள்

**மார்செல்லோ முஸ்ட்டோ**

ஆங்கிலம் வழித் தமிழாக்கமும் அடிக்குறிப்புகளும்

**எஸ்.வி.ராஜதுரை**

புரட்சியை நடத்தும் பொறுப்பைப் பாரிஸ் கம்யூன் தன் சொந்தக் கைகளில் எடுத்துக் கொண்டபோது; சாமானிய உழைக்கும் மனிதர்கள் தங்களுக்கு ''இயற்கையிலேயே மேலானவர்கள்'' என்று சொல்லப்பட்டவர்களின் அரசாங்க சிறப்புரிமைகளை முதல் முறையாக மீறத் துணிந்தபோது, முன்னுவமை இல்லாத கடினமான சூழ்நிலைமைகளில், ஒரு பெருநகரப் பள்ளிக்கூட நிர்வாகிகளின் செயலாளருக்குக் குறைந்தபட்சமாகத் தேவைப்படுவதில் ஐந்தில் ஒரு பங்கு ஊதியத்தையே தங்களுக்கான மிக அதிகபட்சமான ஊதியமாகப் பெற்று செயலாற்றிய போது, உழைப்பாளர் குடியரசின் சின்னமான செங்கொடி, ஹோட்டல் தெ வில்லில் பறந்து கொண்டிருப்பதைக் கண்டு பழைய உலகம் வெஞ்சின வலிப்புகளால் பதைபதைத்துக் கொண்டிருந்தது.

**- கார்ல் மார்க்ஸ்** (பிரான்ஸில் உள்நாட்டுப் போர் பற்றி சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் மே, 1871இல் ஆற்றிய மூன்றாவது உரையிலிருந்து)


## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!










**ஜுன் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6066 | 959 | 4382 | 4243 | 6094 | 6114 |
| 4856 | 4857 | 6080 | 4244 | 6095 | 6903 |
| 4241 | 6078 | 6901 | 4245 | 6100 | 6904 |
| 6901 | 6076 | 307 | 4246 | 6101 | 7579 |
| 6081 | 4858 | 306 | 4254 | 6102 | 7580 |
| 4238 | 4581 | 4528 | 6086 | 6103 | 7581 |
| 4710 | 909 | 2201 | 6087 | 6105 | |
| 6079 | 4859 | 2202 | 6088 | 6107 | |
| 4240 | 4242 | 2203 | 6090 | 6107 | |
| 960 | 2415 | 2876 | 6093 | 6113 | |

**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

தனி இதழ் ₹ 30.00,
ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00,
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

நூல் அறிமுகம்




# ஒளிமயமான புதுச்சேரியில் தமிழர்களின் வாழ்க்கை

சி.ஆர்.ரவீந்திரன்

மண் வளமும், மனித வளமும், நீர் வளமும், இயற்கை வளமும் நிறைந்த இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு சிறிய நிலப்பரப்புதான் புதுச்சேரி. இருந்தாலும், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஒரு தனிப்பட்ட நிலப்பரப்பாக இன்றும் விளங்கி வருகிறது. இதனுடைய தனிச்சிறப்பு அனைவரின் கவனத்திற்குத் தொடர்ந்து உள்ளாகி வருவதே. பிரெஞ்சுக் காலனியாக விளங்கிய இதன் நூற்றிருபது வருட வரலாறுதான் இந்த நூல். இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் இந்தியர்கள் பலருக்குப் பாதுகாப்பளித்தது புதுச்சேரி. அந்த வகையில் மாபெரும் தத்துவஞானியான அரவிந்தருக்கும், மகாகவி பாரதியாருக்கும் புகலிடம் அளித்து தனக்குப் பெருமை சேர்த்துக் கொண்டது இந்த நகரம்.


வரலாறு குறித்த தனது தெளிவான கண்ணோட்டத்தை வரலாற்றாசிரியர் தன்னுடைய முன்னுரையில் குறிப்பிடுவதுடன் அதன் நோக்கத்தையும் தெளிவுபடுத்துகிறார். ''ஒவ்வொரு காலத்திலும் வரலாறு திரும்ப எழுதப்பட வேண்டும். புதிய கோணத்தையும், பார்வையையும், புதிய கண்டுபிடிப்புக்களையும், புதிய உண்மை நிகழ்வுகளையும் கால முன்னேற்றத்தினால், மாற்றங்களால், சூழ்நிலைகளை நோக்கும் எண்ணங்களால், கடந்த காலத்தைப் பற்றி சரியான முடிவுகளைப் பெறவும், வரலாற்றுத் திருத்தம் செய்வது புதுமையான ஒழுகலாறாகவும் இருக்கும். ஒவ்வொரு வாழ்விடப் பகுதிக்கும் வரலாறு உண்டு. மனித இனத்தின் பெருக்கத்தினால், ஏற்பட்ட வாழ்விடங்களின் வளர்ச்சியின் மூலம் அறிஞர்கள் கடந்த காலத்தை ஆய்வு செய்தனர். இந்த ஆய்வுகளில் அதிக முக்கியத்துவமாக ஆற்று நாகரிகங்கள் குறித்தும் நிலவியல் குறித்தும் உள்ளன. நுட்பமான வரலாற்றை அறிதல் என்பது தொல்லியலோடு இணைந்துள்ளது. அதன் மூலம் கிடைத்த படிப்பினைகள், வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டே மனிதனும் இயற்கையும் இணைந்த வாழ்வியலை நன்கு அறிந்து கொள்ள உதவுகின்றன.''

அவர் எழுதியுள்ள இந்த வரலாற்று நூலை வாசித்தபோது அவருடைய கண்ணோட்டம் ஆழமாகவே புலப்படுவதை உணர முடிகிறது. புதுச்சேரி தமிழ் மக்கள் வரலாறு அடங்கிய 6 இயல்களை மட்டும் ஆசிரியரின் விருப்பத்திற்கு இணங்க மொழிபெயர்த்துள்ளார் கி.இளங்கோவன். வாசிப்புக்கு உகந்ததாக உள்ளது.

இயல் ஒன்றில், ஆய்வுப் பொருளையும் அதன் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் சுட்டிக்காட்டத் தற்போது இருக்கின்ற இலக்கியங்களை மறுமதிப்பாய்வுகளின் மூலமும் அதன் வழிமுறைகளையும் பின்பற்றி உள்ளார் ஆசிரியர்.

அடுத்த இயலில், புதுச்சேரியிலிருந்து ஆசியா மற்றும் பிரான்சிற்கு தமிழ் வணிகர்கள் துணி வணிக ஏற்றுமதி செய்வதில் ஆற்றிய பங்கு விரிவாக விளக்கப்படுகிறது.

மூன்றாவது இயலில், புதுச்சேரியில் இருந்து வந்த வலங்கை, இடங்கை சாதியினரையும், நடுநிலை மற்றும் கலப்பு சாதியினர் குறித்தும் விளக்கப்படுகிறது.




பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி
மக்களின் சமூக வாழ்க்கை
எஸ்.ஜெயசீல ஸ்டீபன்
தமிழில்: கி. இளங்கோவன்.
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.,
சென்னை 600 050.
விலை: ரூ.160/-

இயல் நான்கு, இந்து முசுலிம் மக்களின் சமூக வாழ்க்கையையும், பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தின் மதக் கொள்கைகளில் இருந்து வந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும் ஆய்வு செய்கிறது.

ஐந்தாவது இயலில், உள்ளூர்க் கிறிஸ்தவர்களின் சமூக வாழ்வு குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கிறிஸ்தவர்களின் சாதிய நடைமுறைகளும் அதற்கான அவர்களுடைய மனப்பான்மையும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

இயல் ஆறில், புதுச்சேரியில் இயற்கை மற்றும் மனிதர்களால் ஏற்பட்ட பேரிடர்கள் குறித்து மையப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில், புயல், வெள்ளம், போர் படையெடுப்பு, படை முகாம்கள் அமைத்தல், முற்றுகை மற்றும் சமூகக் கலகங்கள் அடங்கியுள்ளன. அவற்றின் விளைவாக ஏற்பட்ட சேதங்களும், துயரங்களும் குறிப்பிடப்படுகின்றன.

ஏழாவது இயல், பிரெஞ்சுக் குடியேற்றங்களில் நிலவிய தொழிலாளர்களின் சமூக வாழ்க்கையையும் புதுச்சேரியிலிருந்து கடல் கடந்து வேறு இடங்களுக்குச் செல்வதையும் எடுத்துக் கூறுகிறது. பிரெஞ்சு நிறுவனத்தில் பொதுவான பிரிவுகள், படைத்துறை மற்றும் நீதித் துறைப் பணிகளில் உள்ளூர் மக்களின் வேலை வாய்ப்பு குறித்து விவரிக்கப்படுகின்றது.

எட்டாவது இயலில், இந்த நூலின் இறுதிப் பகுதியில் முடிவுரையும், முக்கிய ஆய்வுத் தகவல்களும் தரப்பட்டுள்ளன.

சங்க இலக்கியமான தொல்காப்பியத்திலும் மணிமேகலைக் காப்பியத்திலும் வர்த்தக நடவடிக்கைகளைக் கையாளும், தமிழ்ச் செட்டிகளையும், வைசிக வணிகர்களைப் பற்றியும், துணிவணிகர்களை அறுவை வாணிகர் என்று அழைக்கப்பட்ட தகவல்களையும் ஆசிரியர் அடையாளப் படுத்துகிறார்.

வணிகத் தொழிலுக்கு பிரெஞ்சு முக்கியத்துவம் அளித்தது. அதற்கு ‘துபாஷி’ என்ற மொழி பெயர்ப்பாளர் பதவியை பிரெஞ்சியர் வழங்கினர். துணி வணிகத்தில், பிரெஞ்சு நிறுவனத்திற்கும், உள்ளூர் வணிகத்திற்கும் கட்டுப்படியாகும் விலைகளை நிர்ணயம் செய்வது துபாஷியின் பணியாக இருந்தது.

அன்றைய புதுச்சேரியின் நிகழ்வுகளையும், நடைமுறைகளையும், மாற்றங்களையும், வளர்ச்சியையும் அவ்வப்போது ஆனந்தரங்கம் பிள்ளை தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ள விவரங்களை வரலாற்றாசிரியர் அங்கங்கே ஆதாரங்களாகவும், ஆவணங்களாகவும் முன்வைக்கிறார்.

“புதுச்சேரியில் பிள்ளை சாதியினர்களின் துணி வணிகத்தைக் குறிப்பிடுகிறார் வரலாற்றாசிரியர். பிள்ளை என்ற சாதியினர் வலங்கைப் பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களில் இரண்டு முக்கிய உட்பிரிவுகளில்,

வெள்ளாளர்கள், நிலச் சொந்தக்காரர்களாகவும், சைவ நெறியைப் பின்பற்றுபவர்களாகவும், இடையர்கள் என்பவர்கள் மேய்ச்சல் தொழில் செய்பவர்களாகவும், வைணவ நெறியைப் பின்பற்றுபவர்களாகவும் இருந்தனர் என்ற விவரங்களை இவர் குறிப்பிடுகிறார். தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் ஐரோப்பியர் துறைமுகக் குடியேற்றங்களை நிறுவியபோது, செல்வச் செழிப்பான இந்த உட்பிரிவுச் சாதியினர் கடற்கரை உள்நகரங்களுக்கு இடம் பெயர்ந்து பின்னர் துறைமுக நகரங்களில் குடியேறினர். துணிவணிகத்தில் முதலீடுகள் செய்து புதிய வகையான வருமானம் பெற்று மேலும் செல்வம் சேர்த்துக் கொண்டனர்.''

வணிகம் மற்றும் உற்பத்தி போன்ற தொழில் சார்ந்த வளர்ச்சிகளின் விளைவாகத் தமிழக மக்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்த விதத்தை விலாவாரியாக விளக்குகிறார் வரலாற்றாசிரியர்.

தமிழர்களிடையே காலப்போக்கில் சமூகத்தில் ஏற்பட்ட சமத்துவமின்மை காரணமாக, சமூக ஒழுங்கிற்காக சமூக அடுக்குகள் துளிர்விடத் தொடங்கின. அவை, வலங்கை, இடங்கை என்ற இரு குழுக்களாகப் பிரிந்தன. அதைக் குறித்த காரண காரியங்களைத் தகுந்த ஆதாரங்களோடு ஆசிரியர் விளக்குகிறார். அதைத் தொடர்ந்து அதற்கு உள்ளேயும், வெளியேயும் தோன்றிய உள்சாதிப் பிரிவுகளையும் அவற்றிற்கிடையே நிகழ்ந்த விளைவுகளையும் அடையாளப்படுத்துகிறார். அவற்றை விலாவாரியாக இனம் கண்டு வகைப்படுத்தி சமுதாய மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். கடந்த 1724ஆம் ஆண்டு பிரெஞ்சு ஆவணங்களின்படி புதுச்சேரியில் 18 வலங்கை மற்றும் இடங்கை சாதி மக்கள் மட்டும் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது.

புதுச்சேரியில் வலங்கை, இடங்கை சாதியினரிடையே நடந்த சமூக வன்முறைகளும் சண்டைகளும் வாழ்விடங்கள் மற்றும் நிலம் தொடர்பான மோதல்களும் தகுந்த எடுத்துக் காட்டுகளுடன் விவரிக்கப்படுகின்றன.

அதோடு மட்டுமல்லாமல், சமூக, கலாச்சார குடும்ப விழாக்களில் சலுகைகள் மற்றும் மரியாதைகளின் காரணமாக நிறையத் தகராறுகள் விளைந்தன. மேலும், மதம், கோயில் வழிபாட்டால் ஏற்பட்ட மோதல்கள் பற்றிய விவரங்களும் தகுந்த சான்றுகளுடன் விளக்கப்படுகின்றன.

தனிப்பட்ட வகையிலான காவல்துறை நிர்வாகம் ஒன்று புதுச்சேரியில் உருவானது. பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனம் புதுச்சேரியில் ஒரு பொது காவல் அமைப்பை அறிமுகப்படுத்தியது. சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பு நயினார் என்ற அலுவலரையே சார்ந்தது. அவர் இந்தப் பதவியை பரம்பரை பரம்பரையாக வகித்து வந்தார். புதுச்சேரியில் ஒவ்வொரு சமூக இனக் குழுவிற்கும் மகாநாட்டார்கள் முன்னிலையில் ஆறு பாளையக்காரர்களை நியமித்தனர்.

ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்பு தமிழகத்தில் இந்து, முசுலிம் உறவு நல்ல நிலைமையில் இருந்ததைக் குறிப்பிடுகிறார் இவர். பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தின் படையில் தமிழர்கள் தங்களுடைய சமூக பண்பாட்டு வாழ்வியலைத் தொடர்ந்து கடைப்பிடித்தனர். இந்து முசுலிம் மத அமைப்புக்களின் செயல்பாடுகளையும் நடவடிக்கைகளையும் விவரிப்பதுடன் பிரெஞ்சியரின் மதக் கண்ணோட்டம் குறித்தும் விவரிக்கிறார். காலப்போக்கில் அவைகளின் மோதல்களையும், கொந்தளிப்புக்களையும் விருப்பு வெறுப்பு இல்லாமல் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

தொடர்ந்து, பிரெஞ்சு கிறிஸ்துவ சமயப் பரப்பாளர்களின் வருகையாலும், வெற்றிகரமான மதமாற்றங்களின் மூலமும் புதுச்சேரியில் கிறிஸ்துவ சமூகம் பெருக ஆரம்பித்தது. புதுச்சேரி உள்ளூர் கிறிஸ்துவ சமூக வாழ்விலும் அன்றாட வாழ்விலும் சமுதாய மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்பதையும் குறிப்பிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர்.

புதுச்சேரியில் பிரெஞ்சியர் ஆட்சியின்போது இயற்கைக்கும், மனிதர்களுக்கும் இடையில் எப்படிப் பெருந்துன்பங்கள் நிகழ்ந்தன என்பதையும் இவர் தெளிவாக விளக்குகிறார். மக்கள் புதிய இடங்களைத் தேடி எவ்வாறு புலம் பெயர்ந்தனர் என்பதையும் குறிப்பிடுகிறார்.

மக்கள் தொகை, புதுச்சேரியில் 1760ஆம் ஆண்டு ஆகஸ்டில் 20,000 என்ற அளவுக்குக் குறைந்தது. அடுத்து, 1761ஆம் ஆண்டு சனவரியில் அதுவே 3,000 ஆகக் குறைந்துவிட்டது.

மேலும் 1730 முதல் 1784 வரை புதுச்சேரி வாழ்மக்கள் மோரிசியத்திற்கும், ரீயூனியன் மற்றும் கோமோரோஸ் தீவுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்ற விவரங்களையும் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார் இவர்.

கடந்த 17ஆம் நூற்றாண்டில், டேனிஷ் மற்றும் டச்சுக்காரர்கள் வணிகத்தால் இதன் முக்கியத்துவம் குறைந்தது. பிரெஞ்சுக்காரர்களின் வருகையால் புதுச்சேரி நகரமாக வளரத் தொடங்கியது. பிரான்சுவா மர்தேனின் வழிகாட்டுதலால் வேளாண்மை வளர்ச்சியடைந்தது. புதுச்சேரியின் உள்நாட்டுப் பகுதியில் வணிகமும், தொழில்களும் பெருகின. அதன் துணை நகர்ப்புறங்களும், நகர மையங்களும் வளர்ச்சி பெற்றன. புதுச்சேரியில் சிக்கலான மற்றும் பல அடுக்குகளைக் கொண்ட நிலப்பரப்பு இதில் காட்சிப்படுத்தப்படுகிறது.

●




கட்டுரை

# இராசராச சோழன் ஆட்சி

## பொற்காலமா? கற்காலமா?

### உதயை மு.வீரையன்

தமிழ் மன்னர்கள் முடியுடை வேந்தர்கள் என்றே அழைக்கப்பட்டனர். சேர, சோழ, பாண்டியர்களில் சோழர்களின் ஆட்சிக் காலத்தைப் பற்றிய விவாதம் இப்போது அரங்கேறி வருகிறது. நமது முன்னோர்கள் என்பதற்காகவே போற்றுவதோ அல்லது தூற்றுவதோ இல்லாமல் நடுநிலையோடு வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இதனைப் பார்க்க வேண்டும்.

தஞ்சையில் நெடிதுயர்ந்து நிற்கும் பெரிய கோயிலை அடையாளமாகக் கொண்ட இராசராச சோழனின் ஆட்சியைப் பொற்காலம் என்று சிலரும் கற்காலம் என்று சிலரும் பட்டிமன்றம் நடத்துகின்றனர். இத்தனைக் காலமாக தமிழ் மன்னர்களின் பெருமைகள் பேசப்பட்டு வருகின்றன. அதனையே நம்பியிருக்கும் தமிழர்கள் மத்தியில் குறைகளைக் கூறும்போது ஆத்திரம் வருவதும் இயற்கைதான்.

அன்று முதல் இன்று வரை தமிழர்களின் வரலாறு முறையாக எழுதப்படவில்லை. எழுதப்பட்டவை எல்லாம் அரசர்களின் வரலாறுதானே தவிர மக்களின் வரலாறு அல்ல. மன்னர்களின் வரலாறு என்பதும் போரும், அதன் வெற்றியும் தோல்வியும் மட்டுமே! வெற்றி பெற்றால் மன்னரின் வீர, தீர, பராக்கிரமம் பாராட்டப்படும். அந்த வெற்றிக்காகப் போரிட்டு மடிந்த வீரர்களைக் கண்டு கொள்வதில்லை.

தமிழர் வரலாறுகளைப் பதிவு செய்த கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, பேராசிரியர் கே.கே. பிள்ளை மற்றும் டி.வி.சதாசிவப் பண்டாரத்தார் போன்றவர்கள் இந்தக் கண்ணோட்டத்திலேயே வரலாறுகளைப் படைத்துள்ளனர். அந்தக் குறிப்புகளே தமிழர் வரலாறுகளாகப் பேசப்படுகின்றன.

பண்டைய தமிழ் மன்னர்கள் எடுப்பித்த கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளும்,

செப்பேடுகளும், அவர்களின் காலத்திய நாணயங்களும், மன்னர்களின் புகழ்பாடும் மெய்க்கீர்த்திகளும் வரலாற்றுக்கு ஆதாரங்களாகக் காட்டப்படுகின்றன. காலப் போக்கில் புதிய ஆவணங்கள் கிடைக்கும்போது வரலாறுகள் திருத்தப்பட வேண்டும்.

சோழர்கள் என்பவர்கள் தமிழ்நாட்டின் ஒரு பகுதியான சோழ மண்டலத்தைத் தொன்று தொட்டு ஆண்டுவந்த அரச மரபினர். இவர்களில் முதல் இராசராச சோழனே தலை சிறந்தவனாகக் குறிப்பிடப்படுகிறான். இவனது காலம் கி.பி. 985-1014.

இவன் இரண்டாம் பராந்தக சோழனுக்கும். பட்டத்தரசி வானவன் மாதேவிக்கும் பிறந்தவன். இவனது இயற்பெயர் அருண்மொழி வர்மன். இவனது ஆட்சியில் மூன்றாம் ஆண்டு முதல் இவனுக்கு இராசராசன் என்னும் பெயரே வழங்கி வந்தது என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகிறது.

இந்நிலையில் இராசராச சோழனின் ஆட்சியைப் பற்றி இயக்குநர் ரஞ்சித் பேசிய சர்ச்சைக்குரிய பேச்சு தமிழ் மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சர்ச்சைக்குரிய வகையிலும், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் பேசியதாக அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இயக்குநர் பா.ரஞ்சித் முன்ஜாமீன் வழங்கக் கோரி உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்துள்ளார். தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாளில் கடந்த ஜூன் 5 அன்று நீலப்புலிகள் அமைப்பின் சார்பில் அதன் நிறுவனர் டி.எம்.மணி என்ற உமர் பரூக்கின் நினைவுநாளையொட்டி நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய பேச்சே இந்தச் சர்ச்சைக்குக் காரணம்.

சாதியத்தை எப்படி நீக்குவது? சாதியில்லாத சமூகத்தை உருவாக்குவது எப்படி போன்றவை பற்றியும், நிலமற்ற மக்கள் குறிப்பாக தலித்துகள் நடத்தப்பட்ட விதம் பற்றிய உமர் பரூக்கின் 'செந்தமிழ் நாட்டுச் சேரிகள்' என்னும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளவை பற்றியும் அவர் பேசியுள்ளார்.

நமது வரலாறு, பேரரசன் இராசராச சோழனின் ஆட்சிக் காலம் 'பொற்காலம்' என்று குறிப்பிடுகிறது. ஆனால் பல்வேறு சமூக சீர்திருத்தவாதிகளும் அவனது ஆட்சிக் காலம் ஒடுக்கப்பட்ட மக்களின் 'கற்காலம்' எனக் குறிப்பிட்டுள்ளனர். தேவதாசி முறை அவனது ஆட்சிக் காலத்தில் அதிக அளவில் இருந்துள்ளது.

"பல்வேறு வரலாற்றுப் புத்தகங்களிலும் குறிப்பிட்டுள்ள தகவல்களையே நான் குறிப்பிட்டேன். இந்தத் தகவலை வேறு பலரும் பேசியுள்ளனர். ஆனால் என்னுடைய பேச்சு மட்டும் சமூக வலைத்தளங்களில் தவறாகச் சித்தரிக்கப்பட்டு வருகிறது. நான் உள்நோக்கத்துடன் எந்தக் கருத்தையும் பதிவு செய்யவில்லை. எனது கருத்து எந்தச் சமூகத்திற்கும் எதிராக அமையவில்லை" என்று அந்த மனுவில் இயக்குநர் ரஞ்சித் கூறியுள்ளார்.

சோழ மன்னர்களில் முதல் இராசராசன் என்னும் இம்மன்னன் பேராற்றலும், பெரு வீரமும் கொண்டவனாக விளங்கினான்; இவன் ஆட்சியில் சோழ இராச்சியம் மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அண்டை நாடுகளின் மேல் படையெடுத்து வெற்றிமேல் வெற்றி பெற்று நாட்டை விரிவுபடுத்தினான். பாண்டி மண்டலம், சேர மண்டலம், தொண்டை மண்டலம், சங்க மண்டலம், கொங்கு மண்டலம், நுளம்பபாடி நாடு, கலிங்க நாடு, ஈழமாகிய மும்முடிச் சோழ மண்டலம் ஆகியவை அவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.

இந்த மாபெரும் வெற்றிக்கு அவன் மகன் இராசேந்திரனும் துணையாக இருந்தான். கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் என்னும் சிறப்புப் பெயர்கள் சோழ மன்னர்களின் மாவீரத்தைப் பறைசாற்றின. கடல் கடந்து சென்று போரிடுவதற்கு மாபெரும் கப்பற்படையும் நால்வகைப் படைகளுக்குத் துணை செய்தன.

சோழ நாட்டின் தலைநகராகிய தஞ்சாவூரில் தன் பெயர் என்றும் நின்று நிலவ வேண்டும் என்பதற்காக மாபெரும் கோயில் கட்டுவித்தான். அது பிற்காலச் சோழர் காலத்துச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகவும், இராசராசனது பெருமைக்கும், புகழுக்கும், சிவபக்திக்கும் ஒரு கலங்கரை விளக்காகவும், கண்டோர் வியக்குமாறு வான்முட்ட நின்று நிலவுகிறது.

இவையெல்லாம் இராசராச சோழனின் பெருமைகளைப் பறைசாற்றும் ஒரு பக்கம்தான்; அவனது ஆட்சியின் மறுபக்கத்தையும் பார்க்க வேண்டும். இராசராச சோழனின் ஆட்சியில் ஆரியப் பார்ப்பனரின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. தமிழ் மன்னர்களாகிய சோழர்கள் ஆரியப் பார்ப்பனர்களுக்குச் சிறப்பிடம் அளித்து அவர்களின் அடிமைகளைப் போல ஆட்சிசெய்துள்ளனர். இராசராச சோழன் உள்பட அனைத்து மன்னர்களின் கதையும் இப்படித்தான் இருந்திருக்கிறது என்று வரலாறுகள் கூறுகின்றன.

"தமிழகத்து மன்னர்கள் தமிழகத்தைச் சேர்ந்த அந்தணர்களிடம் என்ன குறை கண்டனர் என்பது விளங்கவில்லை. இம்மன்னர்கள் ஆயிரக்கணக்கில் வடநாட்டு பிராமணர்களை இறக்குமதி செய்து கோவில்களிலும், கல்வி நிறுவனங்களிலும், மடங்களிலும் அவர்களைப் பணிக்கு அமர்த்தி மரியாதை செய்தனர். பொன்னையும், பொருளையும். குடியுரிமைகளையும் வாரி வழங்கினர்.

பிராமணருக்கு மட்டும் நிலங்களும், கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன. அகரம், அக்ரஹாரம், சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம் எனப் பல பெயரில் இவை விளங்கின. அரசனுடைய ஆணைகள் எதுவும் அவற்றினுள் செயல்படாது. எல்லாவிதமான வரிகள், கட்டணங்கள், ஆயங்கள், கடமைகள் ஆகியவற்றிலிருந்து முழுவிலக்கு பிராமணர்களுக்கு அளிக்கப்பட்டது" என்று பேராசிரியர் கே.கே.பிள்ளை தம் வரலாற்று நூலில் குறிப்பிடுகிறார்.

இந்தியாவின் வரலாற்று அறிஞராகப் போற்றப்படும் ரொமிலா தாப்பர், தமிழ்நாட்டில் கிடைத்த கல்வெட்டுகளில் தீண்டாமை பற்றிய முதல்குறிப்பு இராசராச சோழனின் ஆட்சிக் காலத்தில் வந்துள்ளது என்று சுட்டிக் காட்டுகிறார். அவனது காலத்தில் ஊருக்கு வெளியே தீண்டாச்சேரியும்; பறைச்சேரியும் இருந்ததை எடுத்துக்காட்டுகிறார்.

இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இராசராசனின் காலத்தில் தமிழ்நாட்டில் நிலப்பிரபுத்துவம் செல்வாக்குப் பெற்றிருந்தது. அவனது காலத்தில் சமூகக் கட்டமைப்பு வருணாசிரமமே என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. நிலமானது தனியொரு பார்ப்பனர்க்குத் தரப்பட்டால் 'ஏகபோக பிரமதேயம்' எனப்படும். அதுவே பார்ப்பனர் குழுவுக்குக் கூட்டாகத் தரப்பட்டால் 'பிரமதேயம்' எனப்படும்.

புகழ்பெற்ற வரலாற்றாசிரியர், கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார், "முதலாம் இராசராசன் மற்றும் இராசேந்திரனின் ஆட்சிக்காலத்தில் பிரமதேய கிராமங்களின் தனித்தன்மையைக் காக்க வேண்டி இதர வகுப்பினர்களின் நில உரிமைகள் சுருக்கப்பட்டன" என்று கூறுகிறார்.

"இராசராச சோழனின் 17ஆம் ஆண்டில் (கி.பி.1002) ஒரு பொதுக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி பிரமதேயங்களில் நிலம் வைத்திருக்கும் பிற வகுப்பினர் எல்லோரும் தங்கள் நிலங்களை விற்றுவிட வேண்டும். அவ்வாறு விற்கப்பட்ட நிலங்களை வாங்கும் பார்ப்பனர்கள் பணத்தை உடனடியாக அதிகாரியிடம் கட்டிவிட வேண்டும். இவ்வாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது" என்று மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோயில்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட நிலங்களுக்கு 'தேவதானம்' என்று பெயர். இந்த நிலங்களில் இருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு வருணாசிரமக் கல்வி கற்பிக்கப்பட்டது.

இதுபற்றி நீலகண்ட சாஸ்திரியார் கூறும்போது, "உயர் கல்வியானது சாதி தழுவியே கற்பிக்கப்பட்டது. மடங்கள் - கோயில்களைச் சார்ந்த பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இது பயிற்றுவிக்கப்பட்டது" என்கிறார்.

அவர்கள் படித்ததும், இவர்கள் சொல்லிக் கொடுத்ததும் சமஸ்கிருத நூல்கள். நான்கு வேதங்கள், சூத்திரங்கள், ரூபாவதரா இலக்கணம் போன்றவையே பாடத்திட்டங்கள். எனவே சோழர்கள் ஆட்சியில் வேதக் கல்வியே சொல்லிக் கொடுக்கப்பட்டது. தமிழ்க் கல்வியைப் பற்றி ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை.

கோயில்களில் தேவாரம் ஓதுவதற்கு ஓதுவார்களை நியமித்தான் என்பதைத் தவிர, மற்றபடி அவனது காலத்தில் கல்விமுறை சமஸ்கிருதமாகவே இருந்தது. கோயில்களிலும் அர்ச்சனை மொழியாக சமஸ்கிருதமே செல்வாக்குப் பெற்றிருந்தது.

சோழர்களின் காலத்தில் கிராமசபை சிறப்பாகச் செயல்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனை உத்திரமேரூர் சாசனம் மூலம் அறியலாம். பிராமணர் அல்லாதவர்கள் கிராமசபையில் உறுப்பினராகும் தகுதியற்றவர்கள் என்பதால் பிரமதேயக் கிராமங்களை பிராமணர்களே நிர்வாகம் செய்து கொண்டனர்.

பிற கிராமங்களை நிலப்பிரபுக்களே நிர்வாகம் செய்து கொண்டனர். இந்த இரண்டிலும் தாழ்த்தப்பட்ட அடித்தட்டு மக்களுக்கு எந்தப் பங்கும் இல்லை. இவர்கள் பண்ணை அடிமைகளாகவே இருந்தனர். ஊருக்கு வெளியே ஒதுங்கி - ஒடுங்கிக் கிடந்தனர்.

அக்காலத்தில் பெண்கள் நிலை மிகவும் பரிதாபகரமானது. அவர்கள் விற்கப்படுகிறவர்களாகவும், வாங்கப்படுகிறவர்களாகவும் இருந்தனர். கோயில்களில் 'தேவரடியார்' என்னும் தேவதாசிகள் தொழிலுக்காகவே உருவாக்கப்பட்டனர்.

கணவன் இறந்ததும் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கமும் இருந்தது. இராசராசனின் தந்தையாகிய சுந்தர சோழன் மாண்டபோது, அவனது மனைவி வானவன்மாதேவியும் உடன்கட்டை ஏறினாள் என்று கல்வெட்டு கூறுகிறது.

இவ்வாறு சோழ மன்னர்களின் ஆட்சியைப் பற்றி வரலாறுகள் கூறுகின்றன. பயன் பெற்ற உயர்குடியினர் அவர்களைப் பாராட்டுவதும், பாதிக்கப்பட்டவர்கள் எதிர் கருத்துகளைக் கூறுவதும் இயல்புதான். இராசராச சோழனைத் தங்கள் சாதியின் மூத்த வழித்தோன்றலாகக் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்கிறவர்கள் ஆத்திரப்படுவதும் இயற்கைதான்.

மனித வரலாற்றில் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் சாதிவெறியும் மதவெறியும் தலைதூக்கி நிற்கும்போது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வருணாசிரமம் இருந்தது ஒன்றும் வியப்பல்ல. இராசராச சோழனின் ஆட்சி பொற்காலமா? கற்காலமா? என்று விவாதம் செய்வது இக்காலத்தில் எரியும் பிரச்சினையிலிருந்து மக்களைத் திசை திருப்புவதாகும்.

●

கட்டுரை



# வள்ளலாரின் பயணம்: தொன்மத்திலிருந்து எதார்த்தத்திற்கு...

- வீ. அரசு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்த தனித்த ஆளுமைகளில் சிதம்பரம் இராமலிங்கம் என்னும் வள்ளலார் (1823 - 1874) ஒருவர் (இனி வள்ளலார்). இவர் குறித்தப் புரிதல் இன்றைய சமூகப் பொதுவெளியில் எவ்வாறெல்லாம் உள்ளது; ஒரு மனிதர் குறித்தப் பல்வேறு புரிதல்கள் எவ்வாறு உருப்பெறுகின்றன; அவர் மறைந்து நூற்றிநாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கழிந்த பின்பும் அவர் குறித்தப் புரிதலில் உள்ள பல்வேறு பார்வைகளை விளங்கிக் கொள்வது எப்படி எனப் பல்வேறு கேள்விகளை நாம் எழுப்பிக் கொள்ள முடிகிறது. இவ்வகைக் கேள்விகளுக்கான உரையாடல்கள் மூலம் வள்ளலாரை அறிமுகப்படுத்தும் நோக்கம் இப்பகுதியாகும்.

வள்ளலாரை அறிமுகப்படுத்துவதற்கான அடிப்படை எடுகோளாக திருவாளர் ஆ.பாலகிருஷ்ண பிள்ளை (1890 - 1960) பதிப்பித்துள்ள பன்னிரண்டு தொகுதிகளைக் கொள்கிறேன். வள்ளலார் ஆக்கங்களுக்குத் தர்க்கபூர்வமாகவும் முழுமையாகவும் வடிவம் கொடுத்திருப்பவர் ஆ.பாலகிருஷ்ண பிள்ளைதான் (இனி ஆ.பா.). தமிழ் உலகிற்கு

வள்ளலாரை முழுமையாகவும் முதன்மையாகவும் அறிமுகப்படுத்திய ஆ.பா. அவர்கள் பற்றியும் பதிவு செய்வது அவசியம். 'பருந்தும் நிழலும்' (1956) எனும் ஓர் மொழிபெயர்ப்புத் தொகை நூல் - மூலமும் உரையும் என்ற ஆக்கத்தை ஆ.பா. உருவாக்கியுள்ளார். இந்நூலில் அவர் பற்றிய ஆசிரியர் குறிப்பு பின்கண்ட வகையில் அமைந்திருப்பதைக் காணலாம். "ஆங்கிலத்தினின்று இதைத் தமிழில் பெயர்த்து உரை எழுதி வெளியிடுபவர்: சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் தத்துவ நூல் ஆசிரியராகவும் சென்னைச் சட்டக் கலாசாலையில் அறநூல் ஆசிரியராகவும் சென்னை இந்து சமய மத தர்ம பரிபாலன போர்டில் செக்ரடெரியாகவும் கமிஷனராகவும் இருந்த திருவாளர் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பி.ஏ., எம்.எல்., அட்வொகேட் அவர்கள்". இதன் மூலம் ஆ.பா. அவர்களின் பின்புலத்தை அறியமுடிகிறது. தமிழியல் ஆய்வில் சட்டம் படித்தவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. கா.சுப்பிரமணியப் பிள்ளை (1888 - 1945), சு.அனவரத விநாயகம் பிள்ளை (1877 - 1940), ச.வையாபுரிப்பிள்ளை (1891 - 1956) ஆகியோர் வழக்கறிஞர்களாகவும் தமிழியல் ஆய்வாளர்களாகவும் இருந்தனர். அந்த மரபில் உருவானவர் ஆ.பா. இவரது 'பருந்தும் நிழலும்' நூலுக்கு சிறப்புப் பாயிரம் எழுதிய சு.அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள் ஆ.பா. பற்றி எழுதும் குறிப்பு கவனத்தில் கொள்ளத்தக்கது. "எனது நண்பர் ஆ.பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் இயற்றிய 'பருந்தும் நிழலும்' என்னும் இவ்வுரைநூல் தமிழ் மொழிக்குப் புதிதாயதொன்று. கார்லைஸ், எமர்சன், தோரோ, ரஸ்கின் முதலிய ஆங்கிலப் பெரும் புலவர் நூல்களை எவரே இவர்க்கு முன் தமிழில் மொழிபெயர்க்கத் துணிந்தார்?"..... (1956. சிறப்புப் பாயிரம்). மேலும் இந்நூலில் முகவுரையாக தமிழ் உரைநடை வரலாறு குறித்து ஆங்கிலத்தில் ஆ.பா. எழுதியுள்ள நீண்ட கட்டுரை அவரது நவீனத் தமிழ்ப் புலமைக்குக் கட்டியம் கூறுகிறது.

ஆ.பா. எனும் மனிதர் ஆங்கில இலக்கிய உலகின் பல்வேறு பரிமாணங்களை அறிந்தவர். தர்க்க பூர்வமாக எழுதும் தமிழியல் ஆய்வு நெறிக்கு உரியவர். சட்ட நுணுக்கங்கள் அறிந்த வழக்கறிஞர். இப்பண்புகள் கைவரப்பெற்ற இப்பெரியவர், தத்துவம் பயிற்றும் ஆசிரியராகவும் சட்டம் பயிற்றும் ஆசிரியராகவும் இந்து அறநிலையத்துறை நிர்வாக அலுவலராகவும் இருந்தவர். இந்தப் பின்புலத்துடன் இவர் வள்ளலார் ஆக்கங்களைப் பதிப்பித்திருக்கிறார். சட்டம் மற்றும் அகராதித்துறையில் வல்லுநரான ச.வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியங்களுக்கான ஒரு தனித்த பதிப்பை உருவாக்கியது போல், ஆ.பா. எனும் தத்துவ - சட்ட அறிஞரும் வள்ளலாரைப் பதிப்பித்தார். இந்தப் பின்புலத்தோடு வள்ளலாரைப் புரிந்து கொள்ள, ஆ.பா. அவர்களின் பதிப்புப் பணி உதவுகிறது. எனவே, அவரது பதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு வள்ளலாரைப் புரிந்து கொள்ள முயலுதல் அவசியம். இங்கு ஒன்றைப் பதிவு செய்ய வேண்டும்: வள்ளலார் குறித்த அனைத்து ஆக்கங்களையும் விரிவான விவரக் குறிப்புகளோடு பதிவு செய்யப்பட்டிருக்கும் ஆய்வாளர் வி. தேவேந்திரனின் வள்ளலார் குறித்த இக் கைநூலைப் பார்க்கும் வாய்ப்புள்ளவர்களுக்கு, வள்ளலார் பற்றிய அறிமுகம் மற்றும் புரிதல் அவசியம். அதனை நிறைவேற்றவே இப்பகுதியை எழுதுகிறேன். அதற்கான மூலமாக ஆ.பா. அவர்களின் பதிப்புக்களைக் கொள்கிறேன்.

வள்ளலாரைப் புரிந்துகொள்ள கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்வோம். அதன் மூலம் வள்ளலாரின் காலத்தையும் கருத்தையும் உள்வாங்க முடியும். தனிமனித வழிபாடாக அமையாது, தர்க்கப் பாங்கில் ஒரு மனிதனைப் புரிந்து கொள்ளவும் அது உதவும். தமிழ்ச் சமூகத்தில் கடவுளாக வழிபடப்படும் ஒரு மனிதர் பற்றிய புரிதலை உருவாக்குவது என்பது ஒரு சிக்கலான பணி. ஆனால் ஆ.பா. அவர்களின் பதிப்பு வழி, அச்சிக்கலைக் கடந்து வள்ளலாரைப் புரிந்து கொள்ள முடிகிறது.

- சைவ சித்தாந்த மரபில் திருமூலருக்கு தனித்த இடமுண்டு. இவரது காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்கிறார்கள். இவரது ஆக்கங்களில் உள்ள மொழி அமைப்பிற்கும் சொல்லப்படும் காலத்திற்குமான உறவு தர்க்கமாக இல்லை. இவரது மொழி தனித்தது. இவரது செல்வாக்கு வள்ளலாரிடம் வளமாகவே உள்ளது. திருமூலரை வள்ளலார் உள்வாங்கியிருக்கிறார். இத்தன்மைகள் குறித்தும் உரையாட ஏதுண்டு.
- தமிழ்ப் பக்திப்பாடல்களாக அமைந்த தேவாரம், திருவாசகம் ஆகியவற்றை உருவாக்கியவர்கள், தமிழ்த் தோத்திர மரபை உருவாக்கியவர்கள். கோயில் வழிபாட்டோடு இம்மரபு செழுமையாக வளர்ச்சியுற்றது. இம்மரபில் திருஞானசம்பந்தர் (7 ஆம் நூ.), திருநாவுக்கரசர் (7ஆம் நூ.), சுந்தரர் (8ஆம் நூ.), மாணிக்கவாசகர் (9ஆம் நூ.) ஆகிய நால்வர் முதன்மையானவர்கள். இதில் மாணிக்கவாசகர் பல்வேறு தனித்தன்மைகளைக் கொண்டவர். வள்ளலாரிடம் மாணிக்கவாசகரின் தாக்கம் வலுவாக உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டு மாணிக்கவாசகராக வள்ளலாரை ஒருவகையில் காணமுடியும்.

- தமிழ்ப் பக்தி மரபில் பட்டினத்தார் என்ற பெயரில் மூவரைக் குறிக்கிறார் மு. அருணாசலம் (1909 - 1992). திருமுறைப் பட்டினத்தார் (10 ஆம் நூ.), சித்தர் பட்டினத்தார் (14 ஆம் நூ.), பிற்காலப் (போலிப்) பட்டினத்தார் (17ஆம் நூ.) (தமிழ் இலக்கிய வரலாறு, 10 ஆம் நூ.). இம்மூன்று பட்டினத்தார் பாடல்களின் வடிவத்தில் வள்ளலார் பாடல் வடிவங்களும் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.
- முருக வழிபாட்டை முதன்மைப்படுத்திய அருணகிரிநாதர் (15ஆம் நூ.) தாக்கத்தையும் வள்ளலாரிடம் காணமுடிகிறது. அருணகிரிநாதரின் இசைமரபு வள்ளலாரிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை விரிவாகவே கண்டறிய முடிகிறது. இவ்வகையில் இரண்டாம் பக்தி இயக்கத்தின் முதன்மையானவராகக் கருதப்படும் அருணகிரியை வள்ளலார் உள்வாங்கியுள்ளார்.
- பதினெட்டாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க பக்திப் பாடல்களைப் பாடிய தாயுமானவர் (1706 - 1744) மரபுகள் பலவற்றை வள்ளலாரிடம் கண்டறியலாம்.

வள்ளலாரின் பக்தி சார்ந்த பாசுரங்கள் என்பவை திருமூலர், மாணிக்கவாசகர், பட்டினத்தார்கள், அருணகிரிநாதர், தாயுமானவர் ஆகிய தமிழ் பக்திமரபில் வளமிக்க ஆளுமைகளின் தாக்கங்களை உள்வாங்கியவை. இதன் மூலம் வள்ளலார், தமிழ் பக்தி மரபின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் வடிவமாக அமைகிறார். ஆனால் இம் மரபை உள்வாங்கி, அதிலிருந்து ஒரு கட்டத்தில் தன்னை விடுவித்துக் கொள்ளவும் செய்கிறார். இவ்வகையில் ஆ.பா. அவர்கள், வள்ளலாரின் ஆக்கங்களைப் பதிப்பித்துள்ள முறை சார்ந்து, கால ஒழுங்கில் அவற்றை எப்படி வகைப்படுத்த இயலும் என்ற உரையாடலும் தேவை. இதனைப் பின்வரும் வகையில் தொகுத்துக் கொள்ள இயலும். இதன் வழி வள்ளலாரைப் புரிந்துகொள்ள முடியும்.

- முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி, இரண்டாம் திருமுறையும் அல்லது திருஒற்றியூர்ப் பகுதி, திருத்தணிகைப் பகுதி, நான்காம் திருமுறைப் பகுதி ஆகியவை முறையே ஏழு, எட்டு, ஒன்பது மற்றும் பத்தாம் புத்தகத்தின் ஒரு பகுதி ஆகியவை ஆகும். ஆ.பா. அவர்களின் இப்பதிப்பு சார்ந்து வள்ளலாரின் இளமைக் காலம் முதல் கி.பி. 1865 ஆம் ஆண்டுவரை உள்ள ஆக்கங்களாக இவற்றைக் கருதலாம்.
- வசனப்பகுதி, வியாக்கியானப்பகுதி, உபதேசப் பகுதி ஆகியவை மநுமுறைகண்ட வாசகம் (1854) நூலைத்தவிர, பிற நூல்கள் கி.பி. 1865 முதல் அவரது இறுதிக் காலம் வரை உருவான ஆக்கங்கள் என்று கொள்ள முடியும். ஆ.பா. அவர்களின் இரண்டாம் புத்தகம், மூன்றாம் புத்தகம், நான்காம் புத்தகம் ஆகியவை இதில் அடங்கும்.
- ஆறாம் திருமுறை முன்பகுதியும் அல்லது பூர்வ ஞான சிதம்பரப்பகுதி, ஆறாம் திருமுறை இடைப்பகுதி அல்லது உத்தர ஞான சிதம்பரப் பகுதி, ஆறாம் திருமுறை முடிந்த பகுதி அல்லது சித்தி வளாகப் பகுதி என்பவையும் கி.பி. 1865 ஆம் ஆண்டு தொடக்கம், அவரது இறுதிக் காலம் வரையில் உருவான ஆக்கங்களாகும். ஆ.பா. அவர்களின் நான்காம் புத்தகத்தின் ஒரு பகுதி, பத்தாம் புத்தகம், பதினொன்றாம் புத்தகம், பன்னிரண்டாம் புத்தகம் ஆகியவை இவ்வகையில் அடங்கும்.
- கீர்த்தனைப் பகுதி, திருமுகப்பகுதி, தனிப்பாசுரப் பகுதி ஆகியவை முதல், ஐந்து, ஆறாம் புத்தகங்களாக ஆ.பா. பதிப்பித்துள்ளார். இவை முதன் முதலாக ஆ.பா. அவர்களே கண்டறிந்து பதிப்பித்தவை பெரும்பான்மையாகும். இவை வள்ளலாரின் அனைத்துக் காலச் சூழலிலும் உருவாக்கப்பட்ட ஆக்கங்கள் ஆகும்.

ஆ.பா. அவர்களின் பதிப்பு நூல்களை, கால ஒழுங்கில் வள்ளலாரைப் புரிந்து கொள்வதற்கான ஒரு முயற்சி சார்ந்து மேலே குறித்தவாறு தொகுத்துக் கொண்டிருக்கிறேன். இத்தொகுப்பு சார்ந்து ஆ.பா. அவர்கள் இப்புத்தகங்களில் பேசப்படும் செய்திகளை தமது பாயிரப் பகுதியில் உரையாடலுக்கு உட்படுத்தியிருக்கிறார். அவரது விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வள்ளலாரைப் புரிந்துகொள்ள முயல்வோம்.

வள்ளலாரின் தொடக்ககால ஆக்கங்களாக அமையும் ஏழு, எட்டு, ஒன்பது மற்றும் பத்தாம் புத்தகத்தின் ஒரு பகுதியில் அமைந்துள்ளவற்றின் அடிக்கருத்தாக அமையும் தன்மையை ஆ.பா. பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> "இதன் முதல் நூல் திரு அடிப்புகழ்ச்சி. இதன் தொடக்கத்தில், நம் பெருமானார் வேதாந்தம் அல்லது உபநிஷத்துக்களின் அடி நடு முடிகளாக விளங்கும் அரும்பெருங் கருத்துக்களைத் தெரிவிக்கும் வடமொழிச் செஞ் சொற்களைக் கொண்டு, இறைவன் திருவடியை வழுத்துகிறார்கள். இதனை அடுத்து "விரிகலை"

*என்று ஆன்றோர் போற்றும் ஆகமாந்தத்தின் முடிவான உபதேசங்களைக் கொண்டு, எல்லையற்ற இன்பம் தரும் இறைவனது திருவடியைப் போற்றுகிறார்கள். இதன் பின்பு, பலவாய் விரிந்த புராண முடிபுகளின் உட்கிடையை விளக்குமுகத்தான், இறைவன் திருத்தாளினை இறைஞ்சுகிறார்கள். இறுதியில், நம் தமிழகத்தின் வரம்பற்ற செம்பொருட் செல்வங்களாகிய தேவார திருவாசகங்கள், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய அருள் நூல்களின் உயிர்ப் பகுதிகளில் சிற்சில கூறித் தம்மை மறந்து அருளமுதம் உண்டு தேக்குகிறார்கள். இந்நூலின் தொடக்கம் முழுதும் தத்துவச் செம்பொருள் நிறைந்த வடமொழிச் சொற்கள் நிரம்பியிருத்தலால், அவற்றைச் சிறிதளவிலாவது தமிழ்ப் பெருமக்கள் விரும்பிப் பின்பற்றும் பொருட்டு, இந்நூலின் அநுபந்தத்தில் அவற்றின் விளக்கம் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒருவாறு கூறியிருக்கிறது" (ஆ.பா. பதிப்பு, ஏழாம் புத்தகம், பாயிரம், ப. 11).*

ஆ.பா. அவர்கள் "திரு அடிப்புகழ்ச்சி" என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு, மேற்குறித்த கருத்தைப் பதிவு செய்திருந்தாலும் வள்ளலாரின் முதல் ஐந்து திருமுறைகளில் அமைந்துள்ள பாசுரங்களின் உட்கருத்து இந்த அடிப்படையைச் சார்ந்து பெரும்பான்மையாக அமைந்திருப்பதைக் காணமுடியும். திருமூலர் காலம் தொடங்கி, தாயுமானவர் காலம் வரை தமிழ்ச் சிந்தனை மரபில் உருப் பெற்றிருந்தவற்றின் தொடர்ச்சியாகவே வள்ளலார் அமைகிறார். வேதாந்த மரபு தமிழ்ப் பக்தி இயக்கப் போக்கில் செலுத்திய செல்வாக்கை, வள்ளலாரிடமும் காண முடிகிறது. வேதாந்தம், சித்தாந்தம் இவற்றின் இணைவாகவே தமிழ்ப் பக்திப் பாசுரங்கள் அமைந்துள்ளன. இதனை திருமூலர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், தாயுமானவர் ஆக்கங்களில் கண்டறிய முடியும்.

இதனை வள்ளலார் தமது மஹாதேவ மாலை எனும் நூலில் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

"வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கு நண்ணா தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்றும்
மவுனவியோ மத்தினிடை வயங்குந் தேவே"

(ஆ.பா. பதிப்பு, ஏழாம் புத்தகம், ப. 115).

வள்ளலார் இவ்வாறு வேதாந்தம் மற்றும் சித்தாந்தம் தொடர்பாகக் கொண்டிருந்த நிலைபாட்டை தமது பிற்காலத்தில் கேள்விக்குட்படுத்துகிறார். வேதாந்த மரபுகள் குறித்த விரிவான விமரிசனங்களை முன்வைக்கிறார். அவரது உரைநடைப்பகுதி ஆக்கங்கள், ஆறாம் திருமுறைப் பாடல்கள் ஆகியவற்றில் இதனை நாம் காணமுடியும். இவ்வகையில் ஒரு இயல்பான சமூக மாற்றம் சார்ந்த புரிதலைக் கொண்டிருந்த மனிதராக இருக்கிறார். எல்லாக் காலங்களிலும் ஒரே கருத்தைப் பற்றி மட்டும் பேசியவர் அல்லர். பக்திப் பாசுர மரபில், ஒரே செய்தியே மீண்டும் மீண்டும் பேசப்படும். ஆனால் வள்ளலார் அம்மரபைக் கைக்கொண்டவரில்லை. கால வளர்ச்சியோடு தன்னை வளர்த்துக் கொண்டவர். பத்தொன்பதாம் நூற்றாண்டு சமூக இயங்கியலை உள்வாங்கியவர் என்றே கருத முடியும். அவரது ஆக்கங்கள் முழுமையாக கால ஒழுங்கில் தர்க்கபூர்வமாக வாசிக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் இதனை உணர முடியும். மாறாக, பக்தி வயப்பட்ட மனிதர்களால் வள்ளலாரின் இம்மாற்றத்தை வெறும் சீர்திருத்தமாகவே புரிந்து கொள்ள இயலும்.

o o o

**வ**ள்ளலாரின் முதல் ஐந்து திருமுறை மரபிலிருந்து மாற்றம் பெற்று புதிதாக அவர் வரித்துக் கொண்ட பகுதிகளாக வசனப் பகுதி, வியாக்கியானப்பகுதி, உபதேசப்பகுதி என அமையும் இரண்டு, மூன்று, நான்காம் புத்தகங்களைக் கருதலாம். இந்த ஆக்கங்கள் குறித்த ஆ.பா. அவர்களின் மதிப்பீடுகளை நாம் இங்கு நினைவு படுத்திக்கொள்வோம்.

*"இவ் வியாக்கியானங்களிலிருந்து ஸ்ரீ சுவாமிகளது வித்தியா வடிவத்தைச் சித்தரித்துக் கொள்ளலாம். எவ்வெக் கல்வித் துறையில் எவ்வளவுக் கெவ்வளவு ஞானம் அவர்கள் வாய்க்கப் பெற்றிருக்கிறார்கள் என்பதை மதிப்பிட்டுக் கொள்வதற்கு இந்நூல் மிகவும் பயன்படும். ஒழிவிலொடுக்க உரையினின்றும் அவர்களது சித்தாந்த ஞானத்தையும், குறட்பா உரையினின்றும் அவர்களது சித்தமார்க்க ஞானத்தையும், தமிழ் உரையினின்றும் அவர்களது மந்திர சாஸ்திர ஞானத்தையும், தொண்டைமண்டல சதக உரையினின்றும் அவர்களது இலக்கிய இலக்கண தர்க்க ஞானத்தையும், பெரிய புராண உரையினின்றும் அவர்களது வேதாகம தத்துவாநுபவ ஞானத்தையும் அறிந்து கொள்ளலாம். அவர்கள் அறிவு ரூபமான இக்காலத்திய சன்மார்க்க இயக்கத் தலைவர் என்பது அவர்கள் வேதாகமாதிகளுக்கு அறுதியிட்டிருப் பதின்றும் போதரும்" (ஆ.பா. பதிப்பு, மூன்றாம் புத்தகம், பாயிரம், ப. 21).*

மேலும் உபதேசப் பகுதி மூலம் வள்ளலார் பதிவு செய்துள்ளதை ஆ.பா. அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.

> “ஜாதி ஆசாரம், குலாசாரம், ஆசிரமாசாரம், சமயாசாரம், மதாசாரம், கலாசாரம், சாத்திராசாரம் முதலியன ஒழிந்து சன்மார்க்க சத்திய ஞானசாகரம் ஒன்றே, அதாவது, பெருந்தயவே வடிவமாக இருப்பதொன்றே” (ஆ.பா. பதிப்பு, நான்காம் புத்தகம், பாயிரம், பக். 22).

வள்ளலார் உருவாக்கிய சன்மார்க்க சங்கம் (1865), சத்திய தருமச் சாலை (1867), சித்தி வளாகம் (1870), சத்திய ஞானசபை (1872) ஆகிய அமைப்புகளைப் புரிந்து கொள்ள ‘உபதேசப்பகுதி’, ‘வியாக்கியானப் பகுதி’ ஆகியவை பெரிதும் உதவுகின்றன. இளமைக் காலம் முதல் கடவுளைப் பாடிப் பரவிய மனிதர், பிற்காலங்களில் அதன் வளர்ச்சியாக அமைப்புகளை உருவாக்குகிறார். அதற்கான விரிவான உரையாடல்களை நிகழ்த்தியுள்ளார். இப்பகுதிகளில் பேசப்படும் செய்திகள், தனது முன்நிலையிலிருந்து மாற்றம் பெற்ற மனிதராக வள்ளலாரைக் காணமுடிகிறது. தருமச் சாலையின் கிளை நிறுவனங்களாக வைத்தியசாலை, சாஸ்திரசாலை, உபகார சாலை, உபாசனா சாலை, யோக சாலை, விவகார சாலை ஆகிய பல்வேறு அமைப்புக்களையும் உருவாக்கத் திட்டமிட்டிருந்தார். மேலும் ‘சன்மார்க்கப் போதினி’, ‘சமரச வேத பாடசாலை’ ஆகிய பாடசாலைகள் உருவாக்கத் திட்டமிட்டார். “சன்மார்க்க விவேக விருத்தி” எனும் இதழையும் நடத்தத் திட்டமிட்டிருந்தார். இவை நடைமுறைக்கு வரும் முன்னே அவரது மறைவு நிகழ்ந்துவிட்டதைக் காண்கிறோம். இத்தன்மைகளின் விரிவான பதிவுகளை அவரது இறுதிக்கால பாசுரமான ஆறாம் திருமுறைகளிலும் பதிவு செய்திருக்கிறார்.

ooo

ஆ.பா. பதிப்பித்துள்ள நான்காம் புத்தகத்தின் ஒருபகுதி, பத்தாம் புத்தகம் முதல் பன்னிரண்டாம் புத்தகம் வரை அவரது இறுதிக்காலப் பதிவுகள் ஆகும். இதனை ஆறாம் திருமுறை என்று அழைக்கிறோம். இப்பகுதியில் அமைந்துள்ள “பிள்ளைச் சிறு விண்ணப்பம்”குறித்து ஆ.பா. அவர்கள் தரும் விளக்கம் பின்வருமாறு அமைகிறது.

> “தம் உடம்பிலோ அல்லது மண் விண் உலகங்களின் ஆட்சிகளிலோ தமக்கு விருப்பம் இல்லை என்றும்; சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சாதனங்களிலாவது, பிறப்பிறப்பு, புகழ், சித்தி-நிலைகள் ஆனவற்றிலாவது தமக்கு ஒருபோதும் ஆசை இருந்ததில்லை என்றும்; சன்மார்க்கர்களோடு இருந்து இறைவனைப் பாடி ஆடுதலிலும், இறைவனோடு கலந்து நின்று, உயிர்த்திரளினை எல்லாம் தாமாகக் கருதி அவற்றிற்கு உற்றவை புரிந்து, அவற்றை எல்லாம் இறைவனுக்கு அடிமை ஆக்குவித்தலிலும், சிதம்பரத் திருக்கோ-யிலை மறைகளும் ஆகமங்களும் சொன்னவாறு அமைத்தலிலும், சன்மார்க்க சங்கமும் சங்கக் கோயிலும் காண வைத்தலிலும், புலை கொலை ஒருவிய திருநெறியில் உலகெலாம் நடக்க உஞற்றுதலிலும், இவற்றைச் சார்ந்த பிறவற்றிலுமே தமது இச்சை இயங்குகிறது என்றும்; உயிர்த்துன்பம் போக்குதல் உள்ளிட்ட மேற்சொன்ன நவையில் நல்வரங்களைத் தமக்கு அளித்தருளல் வேண்டும் என்றும் இன்னோர் அன்ன இன்மொழியில் இயம்பி என்பும் இளக இறைவனிடம் மன்றாடுதலைப் பன்னாள் ஓதியும் ஓர்ந்தும் உணர்ந்தும், பிள்ளைத் தன்மையின் பெரும் பேற்றினை மேற்கொண்டமைக” (ஆ.பா. பதிப்பு, பத்தாம் புத்தகம், ப. 104).

ஆறாம் திருமுறைப் பாடல்கள் பலவற்றிலும் இறைவனை நோக்கிய தமது வேண்டுதல் என்பது, இதற்குமுன் இருந்த வேண்டுதல் மரபிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருப்பதைக் காணமுடியும். திருமூலர் முதல் தாயுமானவர் வரை உருவாக்கிய பாசுர மரபுகள், இறைவனை எப்படி வழிபட்டனவோ அந்த மரபில்தான் வள்ளலாரும் தமது கி.பி. 1865 ஆம் ஆண்டுகட்கு முற்பட்ட காலங்களில் வெளிப்படுத்தியுள்ளார். முதல் ஐந்து திருமுறைகளாக அவை தொகுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, பின்னுள்ள பகுதிகளில் ஒளி வழிபாட்டை முன்னிருத்தி வள்ளலாரைப் புரிந்து கொள்ளும் பக்தர்கள், அவரைச் சைவ மரபின் ஒரு பகுதியாகவே கருதுகின்றனர். இவ்விதம் சொல்லுவதில் அவர்களுக்குச் சிக்கல் இல்லை. சமூக நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட சாதிமறுப்பு, மதமறுப்பு, வேதமறுப்பு, ஆகம மறுப்பு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும் வள்ளலாரை முழுமையாக உள்வாங்குவதிலும் சங்கடம் இருப்பதாகவே நாம் புரிந்து கொள்ளவேண்டும். அப்படி அதைப் பேசினாலும் ஒரு சடங்காச்சாரமாகவே பேசுவர். வள்ளலாரின் முதல் ஐந்து திருமுறைகளைப் பதிப்பித்து வெளியிட்ட அவரது தலைமாணாக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள், ஏன் ஆறாம் திருமுறையைப் பதிப்பிக்கவில்லை என்ற கேள்வியையும் மேற்குறித்தப் பின்புலத்தில் எழுப்புவதில் உள்ள தர்க்க நியாயத்தைப் புரிந்துகொள்வது அவசியம். ஆறாம் திருமுறையில் உள்ள பின்கண்ட பாடலை மேற்குறிப்பிட்ட பின்புலத்தில் வாசிக்கலாம்.

**“சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே**
**சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே**
**ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்**
**அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே**
**நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த**

நிறுத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே".

(ஆ.பா. பதிப்பு, பன்னிரண்டாம் புத்தகம், ப. 143)

இப்பகுதி மூலம் சாதி, மதம், சமயம், சாத்திரம், கோத்திரம் ஆகியவற்றை வள்ளலார் மறுத்து சன்மார்க்க நிலை தேவை என்று கூறுகிறார். அதற்கான தேடலையே தனது வழிபாடாக அவர் முன்னிறுத்துகிறார். இத்தன்மையை அறிவதன் மூலம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக மாற்றங்களை உள்வாங்கியவராக அவரைப் புரிந்து கொள்ளலாம். மேலும் அன்றைய ஆட்சி அதிகாரம் குறித்தும் அவர் பதிவு செய்திருக்கிறார்.

அப்பகுதி வருமாறு:

"கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக
அருணயந்த நன்மார்க்கர் ஆள்க - தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்
தெல்லோரும் வாழ்க இசைந்து."

(ஆ.பா.பதிப்பு, பன்னிரண்டாம் புத்தகம், ப. 160)

அவர் வாழ்ந்த காலத்தில் முடியரசு ஆட்சி படிப்படியாக அழிந்து கொண்டிருந்தது. குடியரசு ஆட்சிக்கான பல்வேறு அடிப்படைகள் கால்கோளிடப்பட்டன. இதனால் தான் 'கருணை இலா ஆட்சி' என்று அவர் விளிக்கிறார். மநுமுறை கண்ட வாசகத்தில் வள்ளலார் பதிவு செய்துள்ள செய்திகளை இங்கு நினைவுப்படுத்திக் கொள்ளலாம்.

ooo

முதலாம் பகுதியாகிய கீர்த்தனைப் பகுதி மூலம், வள்ளலாருக்கு இருந்த இசையறிவு குறித்த விவரங்களை அறியமுடிகிறது. நமது தமிழ் இசை மரபு என்பது பண்முறையில் அமைந்தது. பரிபாடல், வரிப்பாடல், பக்திப் பாடல்களில் உள்ள பண்முறை ஆகியவை பிற தமிழ் இலக்கிய மரபில் இடம்பெற்றவை. இவ்வகையான இசைமரபு தொடராமல் விடுபட்டுப் போனதைக் காண்கிறோம். ஆனால் வள்ளலார் இசை மரபில் தொடர்ச்சியாகச் செயல்பட்டிருக்கிறார். இது தொடர்பாக ஆ.பா. அவர்கள் (முதலாம் புத்தகம், ப.28) செய்துள்ள பதிவு கவனத்தில் கொள்ளத்தக்கது. அப்பகுதி வருமாறு:

"சீர்காழி ஸ்ரீ நாராயணசாமி பிள்ளை அவர்கள் பிடில் வாசிப்பதில் மஹோன்னத நிலையை அடைந்து அந்தப் பிறநாட்டு இசைக் கருவியை இந்நாட்டில் பரவச் செய்தவர்களில் ஒருவராவார். அவர்கள் பலகால் வடலூர் சென்று, சுவாமிகளைத் தெரிசித்து, அங்கே அப்போதப்போது சிற்சிலகாலம் வசித்து வந்தார்கள் என்றும்; சுவாமிகளிடத்திலிருந்தே சங்கீத வித்தையின் நுட்பங்களை அவர்கள் கற்றுக் கொண்டார்கள் என்றும்; பலதடவை சுவாமிகள் பாட, அவர்கள் பிடில் வாசித்து மகிழ்ந்தார்கள் என்றும்; சுவாமிகளுக்கு ஒப்புயர்வற்ற கின்னர ஸ்வரம் என்றும்; தாம் கண்ட மற்றைய பாடல்களில் சிறந்தவை மனமுருக்கும் தன்மையனவாக, சுவாமிகளின் பாடல்கள் மனத்தை உருக்குவதோடு நில்லாது எலும்பையும் உருக்கும் தன்மையன என்றும் சொல்லி ஆனந்தமடைவார்கள் என்றும் அவர்களே நேரே சொல்லக்கேட்ட கீர்த்தனாசாரியார் ஸ்ரீ (C.R.) ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள் (பி.எ., எல்.டி.) சொல்ல எனக்குத் தெரிந்தது" (ஆ.பா. பதிப்பு, முதல் புத்தகம், ப. 28-29).

இதன் மூலம் வள்ளலாரின் இசைப்புலமையை அறியமுடிகிறது. அவரது பாசுரங்கள் அனைத்தும் இசை வடிவில் அமைந்தவை. அவை வெகுமக்களிடம் மிக எளிதாகச் சென்றடைந்தமை என்பது அதன் இசை வலிமையால்தான். இத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் வள்ளலாரின் கீர்த்தனைப் பகுதியில் (முதலாம் புத்தகம், ஆ.பா. பதிப்பு) வள்ளலார் பாடல்கள் அனைத்திற்கும் ஸ்வரம் - தாளம் அமைத்து பதிப்பித்துள்ளார் ஆ.பா. இசைத் துறையில் இருந்த புலமையாளர்களான ஸ்ரீ (C.R.) ஸ்ரீநிவாசய்யங்கார், ஸ்ரீ (N) கோடீசுவர ஐயர், ஸ்ரீ (N) இராம கிருஷ்ணய்யர் ஆகியோர் வள்ளலார் பாடல்களுக்கு ஸ்வரப் படுத்தி தந்தார்கள் என்று ஆ.பா. குறிப்பிடுகிறார் (முதலாம் புத்தகம், ப.30-31). இவ்வகையில் வள்ளலாரின் இசைப்புலமைக்கான ஆவணமாக கீர்த்தனைப் பகுதி அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

ஐந்தாம் புத்தகமாக ஆ.பா. அவர்கள் பதிப்பித்துள்ள திருமுகப்பகுதி, வள்ளலார் குறித்து அறிய உதவும் முழுமையான ஆவணமாகும். கடிதங்கள் என்பது உள்ளத்து உணர்வுகளை நேரடியாகப் பதிவு செய்யவல்லவை. அவ்வகையில் வள்ளலாரின் வாழ்க்கை குறித்த பல்வேறு தகவல்களை அறிய திருமுகப்பகுதியே அடிப்படையாக அமைகிறது. இதனை முதன் முதல் உலகிற்கு அறிமுகப்படுத்திய ஆ.பா. அவர்களின் பணி முக்கியமான ஒன்று. இக்கடிதங்கள் நமக்குக் கிடைக்க வில்லையெனில் வள்ளலார் குறித்த தொன்மக்கதைகளே வரலாறு ஆகிவிட்டிருக்கும். தொன்ம உலகிலிருந்து எதார்த்த உலகிற்கு வள்ளலாரை இக்கடிதங்கள் அறிமுகப்படுத்துகின்றன. இதில் வள்ளலாருக்குப் பிறர் எழுதிய கடிதங்களும் வள்ளலார் எழுதியவையும் இடம்பெற்றிருப்பது சிறப்பு. இறுக்கம் இரத்தினம் அவர்களின் கீழ்க்காணும் கடிதப்பகுதி, அருட்பா, மருட்பா உரையாடல் குறித்தப் புரிதலுக்கு வழிவகுக்கிறது.

"கூடலூரிலிருந்து மகா-ள-ள-ஸ்ரீ விசுவலிங்க வாத்தியார் அனுப்பிய பிரார்த்தனை பத்திரிகைகள் 200-ம் வந்து சேர்ந்து மதுரை,

இராமனாதபுரம் திருவாவடுதுறை, பெங்களூர் முதலிய வூர்களுக்கும் தபாலிலனுப்பிவிட்டு சென்னையிலும் வித்துவான்கள் பிரபுக்கள், பண்டிதர்கள் முதலியோர்க்கும் சேர்ப்பித்தேன். எல்லோரும் அதிக வியப்பையும் சந்தோஷத்தையும் அடைந்திருக்கின்றார்கள். ஆனால் தாமோதரம் பிள்ளைக்கும் ஆறுமுக நாவலருக்கும் அவரைச் சார்ந்த மற்றைச் சில பேர்க்கு மாத்திரம் வெறுப்பையும் கோபத்தையும் துக்கத்தையு முண்டு பண்ணிற் றென்று கேழ்விப்படுகிறேன்" *(31-3-1869) (ஆ.பா. பதிப்பு, ஐந்தாம் புத்தகம், ப.126).*

இவ்வகையில் திருமுகப் பகுதி அரிய ஆவணமாகும். மேலும் ஆறாம் புத்தகமாகிய ஆ.பா. பதிப்பித்துள்ள 'தனிப்பாசுரப்பகுதி' பாயிரப் பகுதியில் அருட்பா தொகுத்துப் பதிப்பித்த வரலாற்றை விரிவாகப் பதிவு செய்துள்ளார். தொழுவூர் வேலாயுத முதலியார் ஆறாம் திருமுறையைப் பதிப்பிக்க முன்வராமை குறித்த குறிப்பையும் (ப.20-21) இப்பகுதியில் காணமுடிகிறது.

நாற்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக உழைத்து, 1931 ஆம் ஆண்டு தொடங்கி 1958ஆம் ஆண்டு முடிய பன்னிரண்டு புத்தகங்களாக வள்ளலார் ஆக்கங்களை ஆ.பா. வெளிக் கொணர்ந்துள்ளார். இவற்றில் 'பாயிரம்' என்ற பகுதியிலும், அடிக்குறிப்புக்களாகவும் பதிவு செய்துள்ள செய்திகளும் வள்ளலாரைப் புரிந்துகொள்ள உதவுபவை. இதனை அடிப்படையாகக் கொண்டே மேற்குறித்த செய்திகளைப் பதிவு செய்துள்ளேன். வள்ளலார் குறித்த கைநூலில் திரு அருட்பா தமிழ்ச் சூழலில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கும் முறைகள், பல்வேறு பதிப்புகள் ஆகியவை குறித்த விரிவான விவரம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. திரு அருட்பா மொழியாக்கம் குறித்த விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வள்ளலாரின் உரைநடை வடிவில் அமைந்த ஆக்கங்கள் குறித்த விரிவான விவரங்கள் இடம்பெற்றுள்ளன. வள்ளலார் குறித்து நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் தொடர்பான விவரணங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. வள்ளலார் குறித்தக் கட்டுரைகள், கண்டன நூல்கள், வள்ளலார் பதிப்பித்த நூல்கள், சன்மார்க்கச் சங்கங்கள் குறித்த விவரங்கள் ஆகிய அனைத்தும் விரிவான விவரணங்களுடன் ஆவணமாக்கப்பட்டுள்ளன இக் கைநூலில். இதனை வள்ளலார் குறித்த ஆயத்த ஆவண ஏடாகக் (Ready Reference Document) கொள்ளலாம். இவ்வேட்டின் அருமை புரிய, அதற்கு மூலவரான வள்ளலார் குறித்தப் புரிதல் அடிப்படைத் தேவையாகும். அந்தப் புரிதலை ஆ.பா. அவர்களின் பதிப்பினை மூலத்தரவாகக் கொண்டு தெளிவுபடுத்தும் முயற்சியை மேற்குறித்தப் பகுதியில் மேற்கொண்டுள்ளேன். இக் கைநூலின் முக்கியத்துவத்தை உணருவதற்கு இப்பகுதி உதவும்.

வள்ளலார் குறித்த ஆய்வுக்குள் செயல்பட விரிவான தளங்கள் உண்டு. பெண் குறித்தப் பதிவை வள்ளலார் ஆக்கங்கள் எப்படி வெளிப்படுத்துகின்றன; அவரைச் சைவ சமய மரபினராக மட்டுமே கட்டமைப்பு செய்வது ஏன்; சித்தர் மரபில் ஒருவராக அவரைச் சேர்ப்பது சரியா; அவர் குறித்து, அவரது காலத்தில் வாழ்ந்த ச.மு. கந்தசாமி பிள்ளை, தொழுவூர் வேலாயுத முதலியார் ஆகியோர் பதிவு செய்திருக்கும் தொன்மக் கூறுகள் அடங்கிய வாழ்க்கை வரலாற்றை எப்படிப் புரிந்து கொள்வது; பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் உருவான பல்வேறு சீர்திருத்தவாதிகளுள் இவரும் ஒருவரா; எனப் பல்வேறு பரிமாணங்களில் அவரது வாழ்க்கைப் பயணத்தை நாம் உரையாடலுக்கு உட்படுத்தலாம். அந்த நோக்கம் இங்கு முதன்மையானது அன்று. மாறாக அவரது ஆக்கங்கள் மூலம் அவரது பல்வேறு பரிமாணங்களை, அடிப்படையான தரவுகள் சார்ந்து புரிந்துகொள்ளும் தேவை இங்கு முதன்மைப்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் இக் கைநூலின் முக்கியத்துவத்தை உணரலாம்.

இக்கைநூல் உருவாக்கியுள்ள ஆய்வாளர் வி.தேவேந்திரன் எனது ஆசிரியப் பணியின் இறுதிக்கால மாணவர்களில் ஒருவர். மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்து சமூகம் பற்றிய இலட்சியமயப்பட்ட பார்வையுடைய இளைஞர். நேர்மை, உழைப்பு ஆகிய பண்புகளைப் பெற்றுள்ள எனது மாணவர்கள் பலர் குறித்து விரிவாகவே என்னால் பதிவு செய்ய முடியும். நேர்மை, உழைப்பு என்பதை சமூகம் சார்ந்த செயல்பாடாகவே கருதுகிறேன். சக உயிர்களிடத்தில் கொள்ளும் நேயமும் ஈடுபாடும் இதில் முதன்மையாக அமையும். இத்தன்மை மிக்க பல மாணவர்களை நான் பெற்றிருப்பது எனது பேறு. அவர்களிடத்தில் உயிர்கலந்து உறவாட முடிகிறது. அவர்கள் உலகம், எனது உலகம் ஆகியவை ஒன்றில் ஒன்று கலந்து போகிறது. இவ்வகையான எனது மாணவ நண்பர்களில் தேவேந்திரனுக்கு தனித்த இடமுண்டு. வள்ளலார் குறித்த அரிய உழைப்பை மேற்கொண்டு இந்த ஆவணத்தை உருவாக்கியுள்ளார். வள்ளலாருக்கு அவர் செய்யும் அரிய கைமாறாக இது அமைகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூகத்தின் முதன்மையான மனித ஆளுமை குறித்து ஆவணப்படுத்தியதில் தேவேந்திரன் பங்கு முதன்மையானது. தமிழ்ச் சமூகம் தேவேந்திரனை என்றும் நினைவில் கொள்ளும். தேவேந்திரனை அன்புத்தழுவ வாழ்த்தி மகிழ்கிறேன்.

**சான்றாதார நூல்**


- *பாலகிருஷ்ணபிள்ளை, ஆ., திரு அருட்பா பன்னிரண்டு புத்தகங்கள், பார்க்கர், சென்னை, மறுபதிப்பு: 2007.*



கட்டுரை

# ஒரு பழைய நாவலும் ஒரு புதிய நாவலும்


**பாவண்ணன்**

ஆர். ஷண்முகசுந்தரம் என்னும் நாவலாசிரியர் 1960இல் எழுதி வெளிவந்த நாவல் அறுவடை. கீரனூர் வட்டாரத்தில் பெரிய பண்ணையாராக இருக்கும் சின்னப்ப முதலியாரின் கதைதான் நாவலின் உள்ளடக்கம். பண்ணையார் நல்ல ஊக்கமுள்ள உழைப்பாளி. தொடங்கும் ஒவ்வொரு செயலையும் வெற்றிகரமாக முடிக்கும் வேகம் நிறைந்தவர். சாதாரணமான வேலங்காட்டை மிகக்குறைச்சலான விலைக்கு வாங்கி கிணறு வெட்டி பாசனம் செய்து நான்கே ஆண்டுகளில் பூவும் பிஞ்சுகளும் காய்களுமாக காய்த்துக் குலுங்கும் பருத்தித் தோட்டமாக மாற்றிக்காட்டும் ஆற்றல் அவருக்கு இருக்கிறது. அந்த உழைப்பாளி அடையாளம் அவருடைய ஒரு பக்கம் மட்டுமே. மற்றொரு பக்கத்தில் அவர் பெண்சபலம் நிறைந்தவர். தன் ஒரு பக்க வெற்றியால் இன்னொரு பக்க கேவலங்களைப் பொருட்படுத்தாமல் தன் போக்கில் வாழ்கிறார் அவர்.

நாவல் அந்தத் தந்திரத்தை அடையாளம் காட்டினாலும் அதன்மீது நிற்கவில்லை. மாறாக, அவர் வழியாக தனக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை இழந்துவிடக் கூடாது என்பதற்காக அனைத்துப் பிழைகளையும் கண்டும் காணாமல் ஒதுங்கிச் செல்லும் மற்றவர்களின் தந்திரத்தின் மீது நிற்கிறது.

நாற்பது வயதில் முதலியார் தன் மனைவியை இழந்தார். அப்போது அவருக்கு இரு பெண்கள், ஒரு ஆண் என மூன்று பிள்ளைகள். ஆனால் பெண்துணையை மட்டும் அவரால் உதற முடியவில்லை. அடுத்து வந்த முப்பது ஆண்டுகளில் வெளிப்படையாகவே அவ்வப்போது அவர் பல பெண்களைச் சேர்த்துக்கொள்வதும் குடும்பம் நடத்துவதும் பிறகு விரட்டுவதும் வாடிக்கையாக நிகழும் செயல்கள். எங்கும் ஒரு சின்ன எதிர்ப்புக்குரல்கூட எழுவதில்லை. கல்யாண வயசில் பேரப்பிள்ளைகள் நடமாடுகிறார்கள். ஆனால் அதைப்பற்றியெல்லாம் அவருக்கு பொருட்படுத்துவதில்லை. அவராகவே குடும்பத்திலிருந்து விலகி தோட்டத்திலேயே ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டு தனியாக வாழ்க்கை நடத்துகிறார்.

அவர் செய்வதை தவறு என சுட்டிக்காட்ட அந்தக் குடும்பத்தில் ஒருவரும் இல்லை. ஊரிலும் யாருமில்லை. எல்லோருமே அவரைச் சார்ந்து வாழ்பவர்கள். அவருடைய சொத்து மீது எல்லோருக்குமே ஒரு கண் இருக்கிறது. அது தப்பு, இது தப்பு என நெறி சார்ந்து எதையாவது சுட்டிக்காட்டி எதிர்நிலை எடுப்பதன் வழியாக தனக்குச் சேரவேண்டிய பங்கை இழந்துவிடுவோமோ என அஞ்சுகிறார்கள். அதனாலேயே அவர் மீது மதிப்பு கொண்டவர்கள்போல நடிக்கிறார்கள்.




கருப்பண்ண முதலியார் என்றொருவர் அதே ஊரில் இருக்கிறார். அவர் சின்னப்ப முதலியாருக்கு திருமண ஆசையை ஊட்டுகிறார். எழுபது வயசுள்ள ஆளை இளைஞர் என்று நாக்கூசாமல் பொய் சொல்கிறார். அவ்வப்போது ஒரு பெண்ணைச் சேர்த்துக்கொண்டு வாழ்வதைவிட, நிரந்தரமாக ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்துகொள்ளும் யோசனையை சின்னப்ப முதலியாரின் நெஞ்சில் அவர்தான் முதன்முதலாக தந்திரமாக விதைக்கிறார். வயதை முன்னிட்டு சற்றே தயக்கம் காட்டுபவரை ஏராளமான பொய்க்கதைகளைச் சொல்லி ஒப்புக்கொள்ளவைக்கிறார். பொருத்தமான பெண்ணைப் பார்த்து திருமணம் செய்துவைக்கும் பொறுப்பை தானே ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதி அளித்து அவருடைய தயக்கத்தைத் தகர்த்தெறிகிறார். அக்கணம் முதல் முதலியாரின் நெஞ்சில் ஆசை நெருப்பு கொழுந்துவிட்டு எரியத் தொடங்குகிறது.

சின்னப்ப முதலியாரின் திருமணத்தின் மீது கருப்பண்ண முதலியார் காட்டும் ஈடுபாட்டுக்கும் சுறுசுறுப்புக்கும் காரணம் பற்றோ, பாசமோ அல்ல. அற்பத் தன்னலமே அதற்கும் காரணம். திருமண முயற்சி என்கிற பெயரில் அவ்வப்போது தன் செலவுக்குப் பணம் வாங்கிக்கொள்வது ஒரு திட்டம். முதலியாரின் திருமணத்துக்கு நகை எடுக்கச் செல்லும்போதும் துணிமணிகள் எடுக்கச் செல்லும்போதும் எதிர்காலத்தில் தன் பிள்ளையின் திருமணத்துக்குத் தேவையான நகைகள், துணிமணிகள், பலசரக்குச் சாமான்கள் எல்லாவற்றையும் ரகசியமாக வாங்கி வைத்துக்கொள்வது என்பது இன்னொரு திட்டம். தனக்குப் பழக்கமான நண்பனின் வறுமைச்சூழலைப் பயன்படுத்தி அவன் குடும்பத்தை தன் வலையில் வீழ்த்தவும் அவர் தயங்கவில்லை. அந்த நண்பன் நாச்சிமுத்துவோ பணத்துக்காக தன் சொந்த மகளான தேவானையிடம் நாடகமாடி பொய்சொல்லி திருமணத்துக்கு உடன்பட வைக்கிறான்.

எழுபது வயதுள்ள முதலியாருக்கும் இருபதும் நிறையாத தேவானைக்கும் திருமணத்தை நிச்சயித்துவிடுகிறார்கள். இந்தப் பொருந்தாத் திருமணம் ஏன் நடக்கிறது என்று அங்குள்ள ஒருவரும் வாய்திறந்து கேட்கவில்லை. முதலியாரின் பிள்ளைகள் அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட விமர்சிக்கவில்லை. அவர்களுக்குள் நிகழும் உரையாடலில் கூட அதைப்பற்றி பேசுவதில்லை. ஒவ்வொருவரும் புத்தாடைகளை அணிந்துகொண்டு திருமண வேலைகளைக் கவனிக்கிறார்கள். அந்தப் பெண்ணை மனமாரக் காதலித்த முதலியாரின் பேரன் கூட அந்தச் சதித்திட்டத்துக்கு எதிராக வாய் திறப்பதில்லை. அவள் தன் தாத்தாவுக்கு மனைவியாக வருவது ஏதோ ஒரு வகையில் தனக்கும் தோதாகவே இருக்குமென்று தப்புக்கணக்கு போடுகிறான் அவன். அந்தப் பெண்ணின் கண்ணீரைப்பற்றி ஒருவரும் கவலைப்படவில்லை. இன்று அவசரப்பட்டு வாயைத் திறந்து எதையாவது பேசி, நாளைக்குக் கிடைக்கவிருக்கிற சொத்துப்பங்கை ஏன் இழக்கவேண்டும் என எல்லோருடைய மனத்திலும் ஒரு கணக்கு ஓடுகிறது, அதுவே அனைவரையும் உண்மையை நேருக்கு நேர் பார்க்கவிடாமல் செய்கிறது. ஒரு பிழையை பிழை என சொல்லும் நேர்மையை இழந்தவர்களாக ஒவ்வொருவரும் நிற்கிறார்கள். பணத்திலும் சொத்திலும் கிடைக்கக்கூடிய பங்கு பற்றித்தான் ஒவ்வொருவரும் அக்கறை கொண்டிருக்கிறார்களே தவிர, நெறி சார்ந்தும் உண்மை சார்ந்தும் ஒருவருக்கும் அக்கறை இல்லை. சொத்து மீது கொண்ட ஆர்வம் அனைவருடைய கண்களையும் மறைக்கிறது.

அறுவடை என்பது பொதுவாக விதைத்து, பாடுபட்டு, வளர்த்து, காத்திருந்து காலத்தால் கனிந்துவரும் விளைச்சலை அறுத்துக் குவிக்கும் செயலைக் குறிப்பதற்குப் பயன்படுத்தும் சொல்லாகும். ஆனால் ஆர்.ஷண்முகசுந்தரம் அந்தப் பொருளில் அச்சொல்லைப் பயன்படுத்தவில்லை. மாறாக, தக்க தருணத்துக்குக் காத்திருந்து எடுத்துச் செல்லவிருக்கிற சொத்துப்பங்கை அடையாளப்படுத்தும் சொல்லாக பயன்படுத்துகிறார். விதைக்காமலேயே அறுத்துச் செல்லும் அறுவடை. பாடுபடாமலேயே பெறும் பலன். அந்த அறுவடைக்கு எந்தக் குறையும் நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் ஒவ்வொருவரும் அமைதி காக்கிறார்கள். நூற்றுக்கு நூறு சதவீதம் தவறு என்று தெரிந்தபோதும் தடுத்துப் பேச சொல்லில்லாமல் பார்த்தும் பார்க்காதமாதிரி அமைதி காக்கிறார்கள்.

தாலி கட்டுவதற்கு இன்னும் சில நொடிகளே பாக்கியிருக்கும் நிலையில் எதிர்பாராத விதமாக மணமகனான சின்னப்ப முதலியார் இறந்துவிடுகிறார். அவர் தன் வாழ்நாள் முழுதும் தேடிவைத்த சொத்து

முழுமையும் அதுவரை அவரைச் சுற்றி வாழ்ந்தவர்கள் முன்னிலையில் அறுவடைக்காகக் காத்திருக்கிறது. அனைவராலும் வஞ்சிக்கப்பட்டு மணக்கோலம் பூண்டு மணமேடைக்கு வந்துவிட்ட அந்தக் கன்னிப்பெண் தேவானை இன்னொரு பக்கம் காத்திருக்கிறாள். இந்தச் சிக்கல்களைத் தீர்க்க எப்படிப்பட்ட முடிவை எடுக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் எடுக்கப்போகிற முடிவைவிட, அதுவரை ஒவ்வொரு தருணத்திலும் அவர்கள் எடுத்த முடிவுகளையே பிரதானமாக அடையாளப்படுத்துகிறது நாவல். மனிதர்களின் அவசரங்களுக்குப் பின்னணியாக இருக்கும் ரகசியமான தன்னலத்தின் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறது. சின்னப்ப முதலியாரின் மகள்கள் கூட தன் தந்தையின் விவேகமற்ற செயலால் பாதிக்கப்படும் பெண்ணின் எதிர்காலம் பற்றி நினைத்துப் பார்க்கவில்லை. பெண்ணாக இருந்தும் மற்றொரு பெண்ணின் துன்பம் பற்றி கொஞ்சம் கூட பொருட்படுத்தவில்லை. தன்னலம் அவர்களுடைய கண்களை மறைத்துவிடுகிறது.

அறுவடை வெளிவந்து நாற்பத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு 2017இல் வெளிவந்த நாவல் காச்சர்கோச்சர். இதன் மூல ஆசிரியர் கன்னட எழுத்தாளரான விவேக் ஷான்பாக். தமிழில் மொழிபெயர்த்தவர் கே.நல்லதம்பி. தன்னலத்தையே மூச்சாகக் கொண்ட மற்றொரு குடும்பத்தின் சித்திரத்தை இந்த நாவல் முன்வைத்திருக்கிறது.

காச்சர்கோச்சர் என்பது பொதுப்புழக்கத்தில் உள்ள சொல்லல்ல. மனைவியோடு தனித்திருக்கும் கணவன், பிரிக்கமுடியாத பாவாடை நாடாவின் முடிச்சைக் கண்டு பேச்சுப்போக்கில் உருவாக்கிய ஒரு சொல். சிடுக்கு என்பது அதன் பொருள். ஒருவகையில் நாவலின் பேசுபொருளே இப்படிப்பட்ட சிடுக்குகள்தான்.

இளைஞனொருவனின் மனைவி அவன் மீது கோபம் கொண்டு திடீரென அவனைவிட்டு வெளியேறி-விடுகிறாள். அவர்களிருவருக்கும் இடையில் உருவான சிடுக்கை விடுவித்து, அவளை எப்படி அமைதிப்படுத்தி வரவழைப்பது என்று புரியாமல் ஒரு காபி கிளப்பில் குழப்பத்துடன் அமர்ந்து யோசனையில் மூழ்குகிறான் அந்த இளைஞன். தனக்கும் தன் மனைவிக்கும் இடை-யிலான சிடுக்கைப்பற்றி யோசிக்கத் தொடங்கியவன் தன் குடும்பத்தில் அடுக்கடுக்காக விழுந்து கிடக்கும் ஏராளமான சிடுக்குகளை யோசித்துப் பார்க்கிறான். ஒவ்வொரு சிடுக்குக்கும் பின்னால் ஒரு கதை. எந்தச் சிடுக்கையும் நேர்செய்ய முயற்சி செய்யாமல் மீண்டும் மீண்டும் சிடுக்குகளை உருவாக்கியபடியே அவர்கள் வாழ்க்கை அத்தனை ஆண்டுகளையும் கடந்துவந்திருப்பதை திகைப்புடன் நினைத்துக்கொள்கிறான்.

அவர்களுடைய குடும்பம் கீழ் நடுத்தரப்பிரிவைச் சேர்ந்த ஒன்று. அந்த வீட்டின் சுவரோரமாக எறும்புகள் எப்போதும் சாரைசாரையாகச் சென்றுகொண்டே இருக்கின்றன. அந்த வரிசையிலிருந்து விலகி ஓடிவரும் எறும்புகள் திசைதெரியாமல் அலைந்து மனிதர்கள் கண்ணில் பட்டு நசுக்குண்டு உயிரை விடுகின்றன. அவன் அம்மாவுக்கு எறும்புகளைத் தேடித்தேடிக் கொல்வது ஒரு வேலையாகவே இருக்கிறது.


எறும்புகளின் சித்திரம் மிகக்குறைவான வரிகளில் வந்து போனாலும், நாவலின் அமைப்பைப் புரிந்துகொள்ள அச்சித்திரம் மிகவும் உதவியாக உள்ளது. எதிர்பாராத விதமாக தண்ணீரில் சிக்கிக்கொள்ளும் எறும்புக்கூட்டம் சட்டென ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு ஒரு பந்தாகத் திரண்டு அந்த ஓட்டத்தில் தரை தென்படும் வரை பிழைத்திருக்கும். பிறகு வரிசையில் சென்று பிழைத்துக்கொள்ளும். ஒட்டிக்கொண்டிருக்கும் வாழ்க்கையிலும் சரி, வரிசையில் செல்லும் வாழ்க்கையிலும் சரி கூட்டமாக இருப்பது அதற்கு ஒரு பாதுகாப்பு.

எறும்புகளை அவ்விதமாக சித்தரிப்பதே, மனிதர்கள் அவ்விதமாக வாழமுடியுமா, அப்படியே வாழ நேர்ந்தாலும் அந்த வாழ்க்கை பெருமைக்குரிய வாழ்க்கையாக இருக்குமா, எறும்பையும் மனிதனையும் வேறுபடுத்தும் பகுத்தறிவுக்கு வாழ்க்கையில் இருக்கும் பங்கு என்ன என்பதுபோன்ற பல கேள்விகளை எழுப்பி நாம் விடை தேடவேண்டும் என்பதற்காக என்று தோன்றுகிறது.

குடும்பப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய அப்பா முதுகெலும்பில்லாத தன் விட்டேத்தியான குணத்தால் சோறு கிடைக்குமிடமே சொர்க்கமென அமைந்துவிட்ட வாழ்க்கையில் அமிழ்ந்து கிடக்கிறார். தினசரி செலவுகளுக்குப் பணம் கிடைத்தால் போதும், அது வந்த வழியைப்பற்றிய யோசனைக்கு ஒருபோதும் இடம்தராதவளாக இருக்கிறாள் அம்மா. இயற்கையாக அமைந்துவிட்ட சோம்பல் குணத்தால் திருமணமான பின்னும் புகுந்த வீட்டுக்குச் செல்லாமல் அம்மாவோடு சேர்ந்து வாழும் அக்கா. அந்தக் குடும்பத்தையே தன் வருமானத்தால் தாங்கி நிற்கிறது சித்தப்பா பாத்திரம். அவர் நடத்தும் நிறுவனத்தில்தான் வருமானத்துக்காக அந்த இளைஞனும் ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறான். எல்லோருக்குமாக அந்தச் சித்தப்பா சம்பாதித்துக் கொடுக்கிறார். அந்தக் குடும்பத்தில் இருப்பவர்கள் அனைவரும் எறும்புகளைப்போல ஒருவரோடொருவர் ஒட்டிக்கொண்டு ஆண்டுக்கணக்கில் வாழ்கிறார்கள். அந்தச் சித்தப்பா தவறான வழிகளில் பணமீட்டுகிறார் என்று தெரிந்த போதும் ஒட்டுண்ணி வாழ்க்கைக்குப் பழகிவிட்ட அவர்களில் ஒருவரும் அதைத் தட்டிக் கேட்பதில்லை. கண்டும் காணாததுபோல இருக்கிறார்கள்.

வெங்கடாசலம் சித்தப்பா மறைமுகமாக ஒரு பெண்ணோடு தொடர்புகொண்டிருக்கிறார். அந்த உறவைப்பற்றிய உண்மை தெரிந்தும் கூட அக்குடும்பத்தினர் அவரிடம் எதையும் விசாரிப்பதில்லை. அதைப்பற்றிய பேச்சையே எடுப்பதில்லை. அவர் கட்டிய புதிய வீடு, அதன் வசதிகள் போன்றவற்றிலேயே திளைத்திருக்கிறார்கள். அவர் கைவிட்டு வந்த பெண் திடீரென ஒருநாள் வீட்டு வாசலேறி வந்து அவரைப் பார்க்க விரும்பும்போது அவர் வீட்டில் இல்லை என்று பொய்யுரைக்கவும் அவர்கள் தயங்கவில்லை. விவாதம்

நீண்டு செல்லும்போது இரக்கமே இல்லாமல் அவளை குடும்பமே சேர்ந்து வெளியேற்றுகிறது. அக்கா தன் கணவனை அடிப்பதற்கு ஆட்களை ஏவுகிறாள். இரவு நேரத்தில் சுதந்திரமாக வெளியே சென்று தங்கிவிட்டு வருகிறாள். எல்லாவற்றுக்கும் சித்தப்பா உதவி செய்கிறார். அப்பாவோ அம்மாவோ ஒருவரும் அதைப்பற்றி கேள்வி கேட்பதில்லை.




ஆனால் அந்த இளைஞனின் புதுமனைவியாக அந்த வீட்டுக்குக் குடிவந்த இளம்பெண் அனிதா அக்காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைகிறாள். அவர்களுடைய செயல்களைக் கண்டிக்கிறாள். அவள் கேள்வி அச்சூழலில் ஒருவித ஒவ்வாமையை அளிக்கிறது. அவர்களுடைய தன்னலப்போக்குகளை தினந்தினமும் பார்த்தபடி தொடர்ந்து அங்கு வாழ அவளால் முடியவில்லை. அதனால் அக்குடும்பத்திலிருந்தே விரைவில் வெளியேறிவிடுகிறாள்.

தன்னலத்தின் ஆற்றல் எத்தகையது என்பதை அவர்களுடைய குடும்பக்காட்சிகள் அழகாகச் சித்தரிக்கின்றன. பிழைகளையும் கோணல்களையும் முதலில் அவர்கள் மனம் சகித்துக்கொள்கிறது. பிறகு கண்டும் காணாமல் இருக்க பழகிவிடுகிறது. அடுத்து, 'அதனால் என்ன' என்னும் எண்ணம் மேலெழுகிறது. தொடர்ந்து, 'உலகத்தில் இல்லாததா இங்கு நடந்துவிட்டது' என்று தன்னைத்தானே அமைதிப்படுத்திக் கொள்கிறது. இறுதியில் அதில் ஒன்றும் பிழையே இல்லை என்ற நிலைபாட்டுக்கு வந்து சேர்கிறது. மதிப்பீடுகளில் ஏற்படும் பிறழ்வு அவர்களுடைய வாழ்க்கையின் செல்திசையையே மாற்றிவிடுகிறது. குற்ற உணர்ச்சி என்பதே யாருக்கும் இல்லாத நிலை ஏற்படுகிறது.

வேறு வழியில்லாமல் பணமீட்டுபவனைச் சார்ந்திருக்கும் ஒரு அமைப்பாக மாறி நிற்கிறது குடும்பம். ஒட்டுண்ணி வாழ்க்கையில் கிட்டும் சுகம் மெல்ல மெல்ல குடும்ப உறுப்பினர்களின் மனத்தில் முதலில் ஒரு திரிபை உருவாக்கி, பிறகு கொஞ்சம்கொஞ்சமாக அதையே இயல்பான ஒன்றாக நிலைத்து நிற்கவைத்துவிடுகிறது. அதுவே தன்னலத்தின் உச்சம். திரிபே இயல்பான பிறகு ஒட்டுண்ணி வாழ்க்கையே உத்தமமான வாழ்க்கையாக மாறிவிடுகிறது. திருமணத்தின் வழியாக தனக்குக் கிடைத்த புதுவாழ்க்கையை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதவேண்டிய அக்கா எதிர்பாராத விதமாக பழகிவிட்ட ஒட்டுண்ணி வாழ்க்கைக்கே மீண்டும் வந்து அந்தச் சேற்றில் அமிழ்ந்துகொள்கிறாள். திரிபே இயல்பாக மாறியதன் விளைவு அது. மீண்டும் திரிபுநிலையிலேயே திளைத்திருக்க நினைக்கிறது.

சித்தப்பாவுக்கும் இதே நிலைமைதான். அவருக்கு நல்ல நிலையான வருமானம் இருக்கிறது. அவருக்கு அதிர்ஷ்டவசமாக நல்ல காதலி கிடைக்கிறாள். அவர் நினைத்திருந்தால் அவரால் அவளோடு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொண்டு எங்கோ தனியாக அமைதியாக வாழ்ந்திருக்கமுடியும். அவருக்கு காலமே ஒரு நல்ல வாய்ப்பை அப்படி அமைத்துக்கொடுக்கிறது. ஆனால் சிறிதுகாலம் மட்டுமே அவளோடு ரகசியவாழ்க்கையை வாழ்ந்துவிட்டு அவரும் மீண்டும் அந்தக் குடும்பத்தை நோக்கித் திரும்பிவந்து அவர்களிடையே மறைந்துகொள்வது புரியாத புதிர். அவராலும் அந்தத் திரிபிலிருந்து மீண்டும் வரமுடியவில்லை. ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு உருண்டுருண்டு செல்லும் எறும்புப்பந்துபோல அக்குடும்பம் உருண்டுகொண்டே இருக்கிறது. உயிர்த்திருக்கிறோம் என்னும் எண்ணமே அவர்களுக்கு நிறைவை அளிக்கிறது. அதற்கு மேல் மதிப்பீடு, உயர்வு, மேன்மை போன்றவற்றைப்பற்றி எந்த யோசனையும் இல்லை.

முழுக்க முழுக்க தன்னலங்களால் நிறைந்த மனிதர்களைக் கொண்ட குடும்ப அமைப்பின் ஒற்றுமையை வெவ்வேறு நாவல்களில் தற்செயலாக உணர்ந்தபோது புதிராக இருந்தது. அறுவடையில் தேவானையும் காச்சர் கோச்சரில் அனிதாவும் மட்டுமே அந்தத் தன்னலத்தைக் கண்டு அருவருப்பால் முகம் சுளிக்கிறார்கள். தன் அருவருப்பை வெளிப்படுத்த தேவானைக்கு வாய்ப்பே இல்லை. தந்தையின் பாசத்துக்குக் கட்டுப்பட்டு அமைதியாக நின்றுவிடுகிறாள். ஆனால் அனிதா துணிவு மிக்கவள். கல்வி கற்றவள். வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசும் ஆற்றலும் முனைப்பும் உள்ளவள். அதனால் கண்ணால் கண்ட கணத்திலேயே அருவருப்பை வெளிப்படுத்துகிறாள். தன் தரப்புக்கு இடமில்லை என்று உணர்ந்த கணமே புகுந்த வீட்டிலிருந்து வெளியேறவும் அவள் தயங்கவில்லை. அவற்றை அவள் தன் உரிமைகளாக நினைக்கிறாள். அருவருப்பை வெளிப்படுத்துவதற்கும் வெளியேறுவதற்குமான உரிமை அது. அந்த எண்ணமே அவளைச் செயல்படத் தூண்டுகின்றது. தேவானை, அனிதாவாக மாற்றமுற அறுபது ஆண்டு கால இடைவெளி தேவைப்பட்டிருக்கிறது. ஒருவேளை புற உலக எதார்த்த வாழ்க்கையில் இது முன்னமேகூட நிகழ்ந்திருக்கலாம். ஆனால் இவ்வளவு தெளிவாக இலக்கியப்பரப்பில் நிகழ்வதற்கு அறுபது ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன. இந்த மாற்றத்தை முதன்முதலாக காச்சர் கோச்சர் பதிவு செய்து தொடங்கிவைத்திருக்கிறது.



# ‘தொடரும்’ இயக்கத் தோழர் சந்திரகாந்தன்

கிருங்கை சேதுபதி

நெடிதுயர்ந்த தோற்றம், எப்போதும் பாரதியை நேசிக்கும் உள்ளம். ஜெயகாந்தனைக் குருவாக வரித்துக் கொண்ட நேயம். மார்க்சியத் தெளிவும், காந்திய ஒழுக்கமும், நேருவின் சோசலிசப் பார்வையும் கொண்ட தமிழ் இயக்கம், இவையாவும் ஒருருக் கொண்ட பேரியக்கத்தின் பெயர் சந்திரகாந்தன்.

அவருக்கு இட்ட பெயர், குப்புசாமி. அழைத்த பெயர் சந்திரன். அவர் தாமே புனைந்துகொண்ட பெயர் சந்திரகாந்தன். சுருக்கமாய், சகா. இவர் பெற்ற பிள்ளை, அரவிந்தன். அப்பெயர் விளங்க, ‘அரவிந்தப்பன்’ என்ற பெயரிலும் மொழிபெயர்ப்பு ஆக்கங்களைச் செய்தவர். சிறுகதையாளர், நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர், ஆய்வாளர், கவித்துவம் ததும்பக் கதைசொல்ல வல்ல இவர் அவ்வப்போது கவிதைகளும் எழுதியவர். ஜெயகாந்தனின் சஹ்ருதயர் வட்டத்து உறுப்பினர்களுள் ஒருவர்.

நாவலாசிரியர் ஆ.சந்திரபோஸ் அடிக்கடி இவர் பற்றிச் சொல்லும் ஒரு வாசகம், ‘சந்திரகாந்தன் ஓர் அற்புதமான தோழன். நெல்லிக்காய்களாய் இருக்கும் நபர்களையெல்லாம் ஒருங்கிணைத்து இயக்கம் கட்டவல்ல தோழன்.’ தன்னலம் துளியும் இன்றிப் பொதுநலம் தவிர வேறு எந்நலமும் அறியாத அறத்தின் வடிவம் சந்திரகாந்தன்.

தன் முகவரியைத் தமிழ் முகவரியாய்ச் செய்யவல்ல எழுத்தாற்றல் உள்ளபோதும், தான் மேற்கொண்ட வங்கிப் பணியையே முதன்மையாய்க் கொண்டிருந்தார். வாடிக்கையாளர்களின் தேவையறிந்து அதனை நிறைவு செய்வதைத் தவமாகக் கொண்டிருந்தார். அவர்களைச் சுற்றத்தினருக்கும் மேலாக மதித்தார். அவருக்கு இருந்த திறமைக்கும் ஆற்றலுக்கும் வலியவந்த எந்தப் பதவி உயர்வையும் ஏற்றதில்லை. அவை வேண்டாம் என்று எழுதிக் கொடுத்துவிட்டு, சிவகங்கை மாவட்டக் கிளைகளில்,

அதுவும் சிங்கம்புணரியில் பல ஆண்டுகளும், நெற்குப்பையில் சில ஆண்டுகளும் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். இந்தியன் வங்கியை, இந்தியாவைப் போல நேசித்தார். இவரது யூனியன் இயக்கப்பணிகளும் மகத்தானவை. உழைக்கும் தோழர்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவதிலும், கடமை தவறாமல் பணிபுரிய நெறிப்படுத்துவதிலும் ஆசான் நிகர்த்தவர்.

கலை இலக்கியப் பெருமன்ற மதுரைக் கிளையின் விழுதென எழுந்தவர். சிவகங்கை மாவட்டக் கிளையை ஒருங்கிணைக்கவும் செயற்படுத்தவும் முனைந்து நின்றவர். புதுக்கோட்டை, அறந்தாங்கிக் கிளைகளின் பல நிகழ்வுகளில் தவறாமல் பங்கேற்றவர். ஓய்வுபெற்றபின், முழுமூச்சாய்ப் பெருமன்றத்தின் ஆக்கப்பணிகளிலும், தாமரை இதழ் வளர்ச்சிப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

'கடவுள் அறியக் கடவுள் பொய்' என்று கடைசிவரைக்கும் நாத்திகம் பேசியவர். ஆனால், கடவுளை நம்புகிறவர்களைக் கடவுளைவிடவும் அதிகமாகக் கடைசிவரையிலும் நம்பியவர். 'உச்சபட்ச நாத்திகமும் உச்சபட்ச ஆத்திகமும் ஒரு புள்ளியில் இணையும்' என்பதை உணர்ந்தவர்; உணர உரைத்தவர்.

பாரதியைக் குருவாகவும், ஜெயகாந்தனை ஆசானாகவும், குன்றக்குடி அடிகளாரை ஞானத்தந்தையாகவும் கொண்டு எழுந்த 'தொடரும்' இயக்கத்தின் தலைவர். ஆனால், கடைநிலைத் தொண்டரிலும் கடைநிலையராகத் தன்னை நிறுத்திக் கொண்டு, எங்களை முன்னுக்குக் கொண்டுவந்தவர். பற்றற்றுப் பணி செய்கிற பக்குவம், இவருக்கு இயல்பிலேயே வாய்த்தது. எந்த இடத்திலும் தன்னை முன்னிறுத்திக் கொள்ளாமல் விலகிநின்று தன் பணிகளை மட்டுமே திட்டமிட்டுச் செய்து கொண்டிருப்பார். மிகச்சிறந்த ஜனநாயகவாதி.

எதற்கும் ஆசைப்படாத, எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் என்கிற இலட்சியப் பெருநோக்கிலிருந்து எப்போதும் விடுபடாத இயல்பு இவருக்குப் பிறவியிலேயே அமைந்துவிட்டது. 'இயல்பு அலாதன செய்யேல்' என்பது இவரது வாழ்வின் அடிப்படை அறம். அதனையே உபதேசமாகவும் தந்தவர். 'தோழர்' என்று இவர் உச்சரிக்கும் நேர்த்தியும், 'தோழா' என்று அழைக்கும் பாணியும் புன்னகை தவழும் இவரது அன்பு முகத்தை முன்கொண்டுவந்து நிறுத்தும்.

'சார்' என்று அழைத்தாலும், 'தோழர்' என்று குறிப்பிட்டாலும், 'அண்ணன்' என்ற உறவையும் உரிமையையும் கொள்கிற வாய்ப்பை எம் போன்றோருக்குத் தந்திருந்தார். எங்கள் வீட்டின் தலைப்பிள்ளை, சந்திரகாந்தன். இப்படி என்னொத்த எத்தனையோ உயிர்த்தோழர்களோடும் இத்தகு உறவை- ஒப்புக்காக அல்லாமல் - உணர்ந்து கடைப்பிடித்து ஒழுகிய உன்னத மனிதர். தன் குடும்பத்துக்கும் மேலாகத் தோழர்களின் குடும்பங்களை நேசித்தவர். அவர்களின் குடும்ப உறுப்பினராகவே திகழ்ந்தவர். அக்குடும்பங்களில், பெற்றோருக்கும் மற்றோருக்கும் கட்டுப்படாத முரட்டுத்தனம் கொண்ட இளைஞர்களையும், அறம் பிறழாது விவாதித்து விளங்கவைத்து ஒழுங்குபடுத்தியதில் இவருக்கு இணை யாருமில்லை. தம்மில் மூத்தோருக்குள்ளும் ஏற்படுகிற பிணக்குகளைப் போக்கி நல்லிணக்கம் கொள்ளவைக்கிற குடும்ப வழக்கறிஞரும் நீதிபதியும் ஆக இவர் திகழ்ந்தார். அந்த அனுபவங்களை மட்டுமே, இவர் எழுதியிருந்தால், அவை பல நாவல்களாகப் பெருகியிருக்கும்.

சமகால வாழ்வின் அபூர்வ மனிதகணங்களைத் தெரிவுசெய்து சித்திரிக்கும் சந்திரகாந்தன் கதைகளில் மண் மணமும் மக்கள் நேயமும் இழையோடும்; எப்போதும் மார்க்சியப் பார்வை அடிநாதமாகத் திகழும்; தர்க்க நியாயங்கள் எழும். வாசக மனங்களின் முன் வினாக்களை எழுப்பி விவாதிக்கும் பாத்திரங்கள் இவருடையவை. இரத்தமும் சதையுமாகத் தான் கண்முன் கண்ட நிகழ்கால மாந்தர்கள் பலர் இவரது படைப்புகளில் பாத்திரங்களாக உலவுகிறார்கள். வரலாற்றுப்பின்புலமும், சமூகப் பிரக்ஞையும் கொண்ட அம்மனிதர்களின் உள்ளக்கிடக்கையைத் தன் சித்தாந்தப் பின்புலத்தோடு இணைத்துக் கதை எழுதுவதில் கைதேர்ந்தவர் சந்திரகாந்தன்.

யதார்த்த வாழ்வின் நிதர்சன உண்மைகளைத் தத்துவச் செறிவோடு கவித்துவமாகச் சொல்லத் தெரிந்தவர். சொலவடைகள், பழமொழிகள், இவற்றினூடே சொல்லாய்வுகளையும் செய்து அவற்றுக்குள் பொதிந்திருக்கும் தொன்மங்களைப் புலப்படுத்திவிடுவார். சிங்கம்புணரி வட்டார மொழிகளை எழுத்துநடையில் பதிவிட்ட சிறப்பு இவர்தம் கதைகளுக்கு உண்டு. சான்றுக்கு ஒன்று.

'அவன்' என்பது ஒருமை. 'அவர்கள்' என்பது பன்மை. மரியாதைக்குரிய 'அர்' விகுதியை விடுத்துப் பன்மையாக, 'அவன்கள்' என்று பொருள் கொள்ளும் வண்ணம் சொல்கிற வார்த்தையை எழுத்துநடையில் இவர் கொண்டு வந்தார். 'அவனுக', 'அவனுங்க' என்றெல்லாம் எழுதிக் கொண்டிருந்த காலத்தில், அதே ஒலிப்பு முறையில், 'அவங்ய' என்று எழுதினார். அதேபோல், 'பேச்சாக்குறது' என்ற சொல்லுக்கு இவர் தந்த விளக்கம், ஒரு புதிய கண்டுபிடிப்பு என்றே சொல்ல வேண்டும்.

பக்கங்களைக் கணக்கில் வைத்துக்கொண்டோ, பத்திரிகைகளைக் கவனத்தில் கொண்டோ, இவர், தம் கதைகளை எழுதியதில்லை. தனக்குள் கதையை நிகழ்த்திக் கொண்டும், கதாபாத்திரங்களைப் பேசவிட்டும் வாத, தர்க்க நியாயங்களை எழுப்புகிற அந்த உரையாடலில், செயற்கைப் பூச்சு நிகழாமல்

பார்த்துக் கொண்டும், அவர் தீவிரமாகச் சிந்திப்பார். தன்னளவில், முழுமையாகிற வரைக்கும் அதை எழுதுதற்காகப் பேனாவைத் திறந்ததில்லை. பெரும்பாலும் அடித்தல் திருத்தல் இவர் எழுத்துக்களில் வந்தது இல்லை.

தாமரை, கல்பனா, தொடரும், ஆகிய இதழ்களிலும், முகநூல் பகுதியிலும் வெளிவந்த இவரது கதைகள் குறைவானவை. எனினும் சிறுகதை உலகில் தனித்தன்மை பெற்று நிறைவானவை.

அழகாக எழுதுவார். அவர், சொல்லச் சொல்ல எழுதிய அனுபவம் எனக்கு உண்டு என்பதால், எழுதுவதுபோலவே சொல்லுவார். அதுபோலவே வாழ்ந்தும் நிறைந்தார். எழுத்து, சொல், இயக்கம் அனைத்திலும் அப்பழுக்கில்லாத ஒழுங்கின் திருவுரு சந்திரகாந்தன். குற்றங்கடிவதில் ஈவிரக்கம் அற்றவர்.

எல்லாவற்றுக்கும் இன்னொரு பக்கம் இருக்கிறது என்பதை இவரைப் போல் துல்லியமாகக் கணக்கிட்டு எவராலும் எடுத்துரைக்க முடியாது. எப்போதும் அந்த இன்னொரு பக்கத்தையே முன்னிறுத்தி யோசித்ததால்தான், இவரால் முன்பக்கத்தையே முற்றாகத் துறக்க முடிந்தது போலும்.

தங்குதடையில்லாமல் பொங்கிப் பெருகும் அன்பின் ஈரத்தில் பாச வழுக்கலுக்கு இடமே-யில்லை. சாதி, சமய, இன, மொழிக்கூறுகளில் மக்களுடன் இணைவு கொண்டிருந்தாலும், அவற்றைக் கடந்தே வாழ்ந்தவர். இணைத்து வென்றவர். இந்தியாவையும் சோவியத் யூனியனையும் அளவு கடந்து நேசித்தவர். உலக இலக்கியங்களை, குறிப்பாக, சோவியத் இலக்கியங்களை ஆழக் கற்றவர். மதுரை தியாகராசர் கல்லூரியில் இவர் பயின்றது கணிதம். பின்னர் ஆர்வமிகுதியால் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அஞ்சல்வழியாக, முதுகலைத் தமிழ் பயின்றார். முனைவர் பட்ட ஆய்வுக்கு நிகராக, இவர் பாரதியிலும் கம்பனிலும் தோய்ந்து எழுதிய கட்டுரைகள் இன்னும் நூல் வடிவம் பெறாதிருக்கின்றன. தன் பெயர் குறிப்பிடாமலேயே, தொடரும் இதழில் கடைசிவரைக்கும் இவர் தந்து கொண்டிருந்த தொடர், ‘சாபவிமோசன யாத்திரை.’ கம்பனை முன்னிறுத்தித் தொடர்ந்த இந்த ஆய்வுத் தொடரில், வான்மீகம் தொடங்கி, உலகக் காப்பியங்களையெல்லாம் தேடிக் கற்று விவாதித்து எழுதினார். அது தொடர்பாக, காரைக்குடி கம்பன் கழகத்தில் ஓர் ஆய்வுரையும் நிகழ்த்தியிருக்கிறார்.

இஸ்கஸ், இந்திய முற்போக்கு எழுத்தாளர் தேசியச் சம்மேளனம் ஆகியவற்றின் கிளைகளைச் சிங்கம்புணரியில் சக தோழர்களை இணைத்து நிறுவி, எத்தனையோ விழாக்களை நடத்தியவர். அவற்றுள் மிகமுக்கியமானது, ஜெயகாந்தன், தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் ‘இராஜராஜன் விருது’ பெற்றதற்காகச் சிங்கம்புணரியில் இவர் நடத்திய மிகப்பிரம்மாண்டமான பாராட்டுவிழாக் கூட்டம். மக்கள் கூடும் சந்தைக்கிழமையான ஒரு வியாழக்கிழமையில், சிங்கம்புணரி ‘மக்கள் மன்றத்தில்’ தோன்றி, ஜெயகாந்தன் பேசிய பின்னர், அந்த ஞானப் பரம்பரையில் ஒருவராகத் தங்கள் பகுதிக்கு வாய்த்த ஜெயகாந்தனாகச் சந்திரகாந்தனைச் சிங்கம்புணரி வட்டாரம் தேர்ந்துகொண்டது.

இராமநாதபுரத்துக் காவனூரைச் சொந்த ஊராகக் கொண்ட குப்புசாமியைத் தன் ஊர் சந்திரகாந்தன் என்ற எழுத்தாளனாகச் சிங்கம்புணரி ஈர்த்துக் கொண்டது, அப்போது, இதுவும் இராமநாதபுர மாவட்டத்தின் ஓரூராக இருந்தது. பின்னர் சிவகங்கையைத் தலைநகராகக் கொண்டு பிரிக்கப்பட்டபோது, சிவகங்கையை இலக்கிய கங்கையாக மாற்றிய கவிஞர் மீரா மரபில், சிங்கம்புணரியை இலக்கியபுரியாக மாற்றிய எழுத்தாளராகச் சந்திரகாந்தன் இருந்தார்.

அவரைத் தேடித் தமிழகத்தில் இருந்து பல எழுத்தாளர்கள் இந்த ஊருக்கு வருகை தருவது தொடர்ந்தது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை வரவழைத்து, நேரு நூற்றாண்டுவிழாவை நடத்தினார். 1990களில் தொடரும் உருளச்சிதழைத் தொடங்கிய காலத்தில் இருந்து இன்று வரை அதன் பொறுப்பாசிரியராக இருந்து நடத்தியிருக்கிறார். நமது அருமைத்தோழர்கள், ஜெயகாந்தன், பொன்னீலன், தனுஷ்கோடி இராமசாமி, பேராசிரியர் தி.சு.நடராசன், தோழர் சி.ஏ.பாலன், தோழர் மகேந்திரன் உள்ளிட்ட பல தோழர்கள் இங்கு வந்து இலக்கிய நிகழ்வுகளில் பங்கேற்றுப் பெருமை சேர்த்திருக்கின்றனர். இராமநாதபுரம் கலை இலக்கியப் பெருமன்ற விழாக்களையும் பொறுப்பேற்று நடத்தியிருக்கிறார். வருடம் தவறாமல், தேவகோட்டை பாரதிவிழாவில் பங்கேற்றுப் பணி செய்த பண்பாளர் சந்திரகாந்தன். புதுச்சேரி கலைஇலக்கியப் பெருமன்ற விழாக்களிலும் பங்கேற்று உரைநிகழ்த்தியிருக்கிறார். 2019 சென்னைப் புத்தகத் திருவிழாவில் ஜெயகாந்தன் குறித்த தொடரும் கருத்தரங்கை வெற்றிகரமாக நடத்தியவர். ஜெகாதா, ஆர்.எஸ். சண்முகம், மு.பழநியப்பன் உள்ளிட்ட தோழர்களின் நட்பு வட்டத்தில் சந்திரகாந்தன் ஒரு மையப்புள்ளி.

‘மார்க்சிய ஞானரதம்’ என்று போற்றப்பெறும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், இவரது ஆக்கங்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறது. ‘புல்லைப் புசியாத புலிகள்’(1986), சப்தக்குழல் (1994) ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் ‘எர்னஸ்டோ சே குவேரா’ மொழிபெயர்ப்பு நூலையும் சந்திரகாந்தன் தந்திருக்கிறார். நியூ செஞ்சுரி நிறுவனம், விரிவான விளக்கங்களுடன் பாரதியார் கவிதைகள் நூலை எளிய மக்கள் பதிப்பாகக் கொண்டுவர விரும்பியபோது, இவரே அப்பணியைச் செய்து முடித்தார். அனைத்துக் கவிதைகளையும் கைப்பட எழுதி, பிழைதிருத்தித்

தொகுத்தளித்தபோது, உடனிருந்து பணிசெய்து பார்த்த அனுபவமும் உண்டு.

அந்தக் காலகட்டத்தில், 'மகாகவியின் கல்விக்கொள்கை' என்ற தொடரைத் 'தொடரும்' இதழுக்காக எழுதிக் கொண்டிருந்தார். ஒரு பத்தி எழுதுவதாக இருந்தாலும் அதற்கான தரவுகளை எத்தனையோ நூல்களில் இருந்து திரட்டித் தொகுத்து, விவாதித்து எழுதுவது இவரது வழக்கம். வார விடுமுறை நாட்களில் மதுரை நியூ செஞ்சுரி நிறுவனத்திற்குத் தவறாமல் வந்துவிடுவார். புதிதாய் வரும் எந்த நூலாயினும் உடனே படித்து விவாதிப்பதும், தக்க இளம்படைப்பாளிகளை அடையாளம் கண்டு, அவர்களுக்குள் பொதிந்திருக்கும் முற்போக்குச் சிந்தனைகளைக் கிளர்த்தி, உற்சாகப்படுத்தி ஊக்குவிப்பதும் இவர் வழக்கம்.

அமரர்களாகிவிட்ட தோழர்கள் உலகநாயகம், நவபாரதி, 'சகுந்தலை' என்ற புனைபெயரில் எழுதிய ஆ.சந்திரபோஸ் ஆகியவர்களின் தோழமையில் உருவான இலக்கிய இயக்கம் சந்திரகாந்தன். கவிஞர் பரிணாமனின் கவிதைகளை ரசிப்பதிலும் அப்படியே பாடி விளக்குவதிலும் அவரைத் தூண்டி தொடர்ந்து எழுதவைப்பதிலும் மிகுந்த அக்கறை செலுத்தினார்.

என்.சி.பி.எச். வெளியீடாக 'வைகையில் வெள்ளம் வரும்' (கல்பனா, மாத இதழ், மலர்-2. இதழ்-4, 1980) என்ற நாவலைத் தந்த இவர், பின்னர், ஸ்ரீசெண்பகா பதிப்பக வெளியீடுகளாக, 'தழல்' (2003), 'அண்டரண்டப்பட்சி' (2004) ஆகிய நாவல்களையும் எழுதியிருக்கிறார். தொடர்ந்து, ஆளுக்கொரு கனவு (2000), குதிரைவீரன் கதை (2019) ஆகிய சிறுகதைத் தொகுப்புகளையும் தந்திருக்கிறார். மேலும், 'இருபதாம் நூற்றாண்டின் சில சிறுகதைகள்' என்று மகாகவி பாரதியார் தொடங்கி இவர் எழுதிய சிறுகதை வரைக்குமான பத்துக் கதைகளைத் தொகுத்தளித்திருக்கிறார். இவரது படைப்புகள் பல கல்லூரிகளில் பாடநூல்களாக வைக்கப்பெற்றிருக்கின்றன. தமிழ் இணையப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக்குழு உறுப்பினராக இருந்து, இவர் எழுதிய கதைகளும், நாடகங்களும் குறிப்பிடத்தக்கவை. மேலும், 'தொடரும்' இதழின் சிறப்பு வெளியீடுகளாக வந்துள்ள 'தொடரும் சிறப்பு மலர்' (1993), 'தொடரும் ஒளித்திரள்' (2002) 'ஜெயகாந்தம்' (2020) ஆகியவற்றின் பதிப்பாசிரியர் குழுவில் ஒருவராக இருந்து தமிழ் இலக்கியத்திற்குப் பங்களித்திருக்கிறார். சாகித்திய அகாதெமிக் கருத்தரங்குகளில் பங்கேற்றுக் கதைகள் வாசித்தும், கட்டுரைகள் எழுதியும், உரைகள் நிகழ்த்தியும் இருக்கிற சந்திரகாந்தன். இந்திய மொழிச் சிறுகதைகளையும், கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். முகநூலில், 'கட்செவிப் புலன'த்தில் இவர் எழுதிய விமர்சனங்கள் சிறப்பானவை. தொடரும் இதழில் சடாயு என்ற பெயரில் 'சாவடி' எனும் தொடர் எழுதிய சந்திரகாந்தன் முகநூலில், அய்யம்பெருமாள் எனும் பெயரில் எழுப்பிய கேள்விகள் சமகாலப் போக்குகளைப் பகடி செய்து எழுப்பப்பட்ட ஆய்வுபூர்வமான ஐயங்கள்.

கவிஞர் மீரா, தோழர்கள் ஜெயகாந்தன், பொன்னீலன், இளசை மணியன், நா.தர்மராஜன், தவத்திரு குன்றக்குடி அடிகளார், அடிகளாரின் உதவியாளர் மரு.பரமகுரு ஆகியோரைப் பேட்டி கண்டு விரிவாகத் தொடரும் இதழில் வெளியிட்டுப் பெருமை சேர்த்தவர் சந்திரகாந்தன்.

தான் எழுதுவதைவிடவும் தன் காலத்துப் படைப்பாளிகள் நிறையவும் நிறைவாகவும் எழுதவேண்டும் என்பதில் அதிகக் கவனம் செலுத்தினார். அவரால், இலக்கிய உலகில் புகுந்த இளம்படைப்பாளிகள் பலர். கலை இலக்கியப் பெருமன்றக் களப்பணியாளர்களாகவும் அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வைரவிழாக் காணும் கலை இலக்கியப் பெருமன்றத்தின் துணைத் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்த சந்திரகாந்தனின் எதிர்பாராத மறைவு பேரிழப்பு. கொரோனாவுக்குப் பின்னர், அவர் செய்யத் திட்டமிட்டிருந்த களப்பணிகளும், எழுத்துப்பணிகளும் எவ்வளவோ? அவர் படித்து முடித்து அடிக்கோடிட்டிருந்த பக்கங்களை மையப்படுத்தி, யோசித்து வைத்திருந்த சிந்தனைகள் எத்தனையோ?

22.09.1957 அன்று அருணாசலம்- சேதுபருவதம் தம்பதியருக்குத் தலைப்பிள்ளையாகப் பிறந்த சந்திரகாந்தனின் திருமணம் ஜெயகாந்தனின் தலைமையில் இராமநாதபுரத்தில் நிகழ்ந்தது. அவருக்கு வாழ்க்கைத் துணையாக வாய்த்தவர், உமாமகேஸ்வரி. மகன் அரவிந்தன். உடன்பிறந்த தம்பி தங்கையர்க்குத் தந்தைநிலையில் நின்று இவர் ஆற்றிய கடமைகள் மிக நேரியவை. அவற்றை விடவும் சக தோழர்களின் இல்லத்து நிகழ்வுகளில் இவர் இருந்து பங்கேற்றுப் பணி செய்தவை எழுதித் தீராதவை. அவர் இல்லை எனில் நாங்கள் இல்லை என்று சொல்லும் அளவுக்கு என்னொத்த தோழர்களைக் கண்டெடுத்துத் தமிழுக்குத் தந்த இலக்கியத் தளபதியை இழந்து தவிக்கிறது, பெருமன்றம்.

எதிர்பாராத விதமாக, 9.05.2021 அன்று ஞாயிற்றுக் கிழமை நண்பகலில், 'தழல்' நாவல் தந்தவரைத் தழல் தின்னக் கொடுத்துவிட்ட வெக்கையும் வெறுமையும் இன்னும் அடங்கவில்லை. அவர்தம் எழுத்துக்களை முழுதாகத் தொகுத்து வெளியிடுவதும், அவர் விட்ட பணிகளைத் தொடர்ந்து செய்வதும் அவருக்குச் செய்யும் உரிய அஞ்சலியாக உணர்கிறோம். அவரது இருப்பு முற்றுப் பெற்றுவிட்டாலும், அவர் தொடர்ந்த 'தொடரும்' என்றும் தொடரும்...

●

கட்டுரை



# தனித்தன்மைகளைத் தாங்கியிருந்த தா.பா.

- மேது.ராசுகுமார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1967-68ஆம் கல்வியாண்டில் நான் இளங்கலை பயின்றுகொண்டிருந்தபோது, மாணவர் பேரவையில் உரையாற்றத் தோழர் தா.பாண்டியன் அவர்களை அழைத்திருந்தோம். எதிர்பாராத போக்குவரவுத் தடங்கல்களால், உரிய கால அளவில் அவரால் வந்துசேர இயலவில்லை. அவருடன் தோழர் குணாளனும் வந்திருந்தார். நிகழ்வை அடுத்த நாளுக்கு ஒத்திவைத்துவிட்டு, அவர்களைப் பல்கலைக்கழக விருந்தினர் இல்லத்தில் தங்கவைத்தோம். அன்றுதான் தா.பா. அவர்களுடன் எனக்கு முதன்முதலாக அறிமுகம் ஏற்பட்டது. அன்றைய நாள் இரவிலிருந்து அடுத்த நாள் மாலை நிகழ்வு தொடங்கும் வரை தா.பா.வோடு உரையாடவும் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளவும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும் அரிய வாய்ப்புகள் அமைந்தன.

1965 இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தை அடுத்த ஆண்டுகளில்கூட மாணவர்களிடையே எரிந்துகொண்டிருந்த கனல் தணிந்திருக்கவில்லை. மாணவர் இயக்கப் பணிகளில் நாங்கள்

எதிர்கொண்ட பெரும் சிக்கலாக இந்தித் திணிப்பு நீடித்துக்கொண்டிருந்தது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலை, அப்போது இந்தியை, இணைப்பு மொழியாக மட்டுமல்லாது, தேசிய மொழியாகவே கருதத்தக்க வகையில் இருந்தது.

அப்போது, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயற்குழு உறுப்பினராக இருந்த தோழர் ப. மாணிக்கம் அவர்கள் மாணவர் இயக்கப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார். அவருடைய வழிகாட்டுதலில் தக்க வழிமுறைகளை வகுத்துக்கொண்டு, இந்தித் திணிப்பு எதிர்ப்பையும் உள்ளடக்கிய வகையிலான செயல்பாடுகளை அப்போது நாங்கள் மேற்கொண்டிருந்தோம்.

இந்த நிலையில், தா.பா. அவர்களுடனான உரையாடல் எங்களுக்கு மன நிறைவைக் கொடுத்தது. கட்சியின் அரசியல் முடிவுகளை ஏற்றுக்கொள்வது என்பது வேறு, வேறுபட்ட கண்ணோட்டங்களில் மார்க்சியக் கருத்துப் பகிர்வுகள் என்பது வேறு என்ற தெளிவினை நாங்கள் முன்னரே பெற்றிருந்தோம். ஒரு தலைவர் என்ற அளவில் தா.பா.வுடன் வெளிப்படையாகப் பலவற்றையும் பேசும் வாய்ப்பினை அப்போது பெறமுடிந்தது.

மாணவர் பேரவையில் தா.பா.வின் பேருரை அனைத்து மாணவர்களது ஈர்ப்பினையும் பெற்றது. மொழிச் சிக்கலையும் தனக்கே உரிய தெளிவுடன் தா.பா. விளக்கினார்.

பேச்சாற்றல் கொண்டோர் திமுக தலைவர்கள் மட்டுமே என்ற எண்ணவோட்டத்தில் பல மாணவர்கள் அன்று இருந்தனர். ஆனால், அந்த மாயை அன்றைய தா.பா.வின் சொற்பொழிவில் மறைந்தது.

பொதுவுடைமை இயக்கம் சார்ந்த மாணவர் அமைப்பு எதுவும் 1950களின் தொடக்கத்திலிருந்தே செயல்பாட்டில் இருக்கவில்லை. தோழர் ப. மாணிக்கம் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளால், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் (அப்போது தமிழக மாணவர் மன்றம்) மாவட்ட மாநாடுகளை நடத்த அப்போது முடிவெடுக்கப்பட்டது. தென்னாற்காடு மாவட்ட மாநாட்டினை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே 30-03-1968ஆம் நாளன்று நடத்த நான் முன்னின்று ஏற்பாடுகளைச் செய்தேன். அதில் தோழர் கே. பாலதண்டாயுதம் அவர்களையும் தோழர் தா.பா. அவர்களையும் அழைத்திருந்தேன். பொதுக் கூட்டத்திலும் அவர்கள் பேசினார்கள். சற்றேறக்குறைய பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மாணவர் இயக்கம் தொடர்பான முதல் மாநாடு அது. மாணவர் இயக்க வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அந்த நிகழ்வினைக் கூற முடியும். பாலன், தா.பா. இருவருமே தங்களது எழுச்சிமிக்க உரைகளால் மாணவர்களின் உணர்வுகளைக் கொள்ளை கொண்டார்கள்.

பாலதண்டாயுதம் அவர்களைத் திட்டமிட்டபடி மதுரைக்கு வழியனுப்பிவிட்டு, தா.பா.வை சென்னைக்கு அனுப்பிவைக்க சிதம்பரம் தொடர்வண்டி நிலையத்தில் காத்திருக்க வேண்டியிருந்தது. இரண்டு மணிக் கால அளவுக்கு மேலாகத் தோழர்களுடன் அவரது கலந்துரையாடல் இன்னும் எனது நினைவுகளை விட்டு அகலவில்லை. அவரது அகன்ற அறிவும் பரந்த பார்வையும் வெளிப்படையாகப் பல விவரங்களைப் பகிர்ந்துகொண்ட பாங்கும் எங்களுக்கு உற்சாகத்தைத் தந்தன; சிந்திக்கவும் தூண்டின.

21-07-1968 அன்று தஞ்சைத் தரணியில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் அய்ந்தாவது மாநில மாநாடு நடைபெற்றது. தமிழ் மாநிலப் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த எனது தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பாலதண்டாயுதம், ப.மாணிக்கம், மொகித்சென், தா.பா., சுதாகர் ரெட்டி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தஞ்சை மாநில மாநாட்டுக்குப் பின்னர் சில திங்கள்களுக்குள்ளாகவே கட்சியின் சார்பில் மாணவர் அமைப்புக்கான பொறுப்பினை தா.பா. ஏற்றுக்கொண்டார். இதனால் எங்களுடைய தொடர்புகள் மிகுந்தன.

இதற்கிடையில், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலக் குழு உறுப்பினராகவும் நான் இணைத்துக்கொள்ளப்பட்டேன். கட்சி அமைப்பொன்றின் நடுவப் பொறுப்பில் இருந்தாலும், ஓராண்டு வரை சென்னைக்கு அவ்வப்போது வந்துசென்றுகொண்டிருந்தேனேயன்றி, அங்கேயே தங்கியிருக்கவில்லை.

1969இல் தமிழ் முதுகலைப் படிப்புக்காக சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்தேன். மாணவனாக இருந்தாலும், பெரிதும் காலையிலும் மாலையிலும் அலுவலகத்துக்கு வருவதை வழக்கமாக்கிக்கொண்டிருந்தேன். பல வேளைகளில், பகல் உணவுக்குச் சென்றுவிட்டு அலுவலகம் திரும்பிவிடுவேன்.

மாணவர்களைக் காணப் பிற கல்லூரிகளுக்குச் செல்லும் நாள்களிலும்கூட, அலுவலகம் வந்து மாலை வரை இருப்பேன்.

பிராட்வே சாலையில் இருந்த ஜனசக்தி அச்சகத்துக்கு எதிரில் கட்சியின் மாநில அலுவலகம் இருந்தது. அங்கேயே ‘ஜனசக்தி’ ஆசிரியர் குழுவும் இயங்கிவந்தது. பிராட்வே சாலைக்கு இணையாக அடுத்து இருந்த பெரியண்ண மேசுதிரி தெருவில் கட்சியின் மாவட்ட அலுவலகம் செயல்பட்டது.

மாவட்ட அலுவலகத்துக்கு அடுத்த அறை மாணவர் அமைப்புக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. வெளியூர் பயணம் இல்லாமல் சென்னையில் இருக்கும் நாள்களில் தா.பா. மாவட்ட அலுவலகம் வந்துவிடுவார். சென்னை மாவட்டச் செயலாளராக முன்பு இருந்ததால் ஏற்பட்ட பழக்கம் தொடர்ந்துகொண்டிருந்தது.

இதனால், தா.பா. அவர்களுடனான தொடர்புகள் எனக்கு அன்றாட நிகழ்வுகளாக அமைந்தன. கட்சியின் பிற தலைவர்களுடனும் நெருங்கிய இணைவு ஏற்பட வாய்ப்புகள் வந்துசேர்ந்தன.

முன்னரே திட்டமிட்டிருந்தவாறு, நான் சென்னைக்கு வந்தவுடன் மாணவர் அமைப்புக்காக 'மாணவர் முழக்கம்' திங்களிருமுறை முதல் இதழ் 05-08-1969 நாளிட்டு வெளியிடப்பட்டது. தா.பா. ஆசிரியர்; நான் பொறுப்பாசிரியர்.

1966ஆம் ஆண்டிலிருந்து அரசியல், இலக்கியம், மாணவர் இயக்கம் தொடர்பான கட்டுரைகளையும் சிறுகதைகளையும் 'ஜனசக்தி', 'சாந்தி', 'தாமரை', 'ஆனந்தவிகடன்' போன்ற இதழ்களில் தொடர்ந்து எழுதிவந்திருக்கிறேன். ஆனால், இதழ் உருவாக்கத்தில் ஈடுபட்டதில்லை. ஆயினும், 'மாணவர் முழக்கம்' முதல் இதழிலேயே எனக்கு முழு உரிமை வழங்கிவிட்டார் தா.பா. படைப்புகள் தேர்வு, தலையங்கம், வடிவமைப்பு உள்ளிட்ட அனைத்திலும் எத்தகைய தலையீடும் இல்லாமல் தனித்துச் செயல்படவும் எனக்கு வாய்ப்புகளைத் தந்தார். அவருடைய கட்டுரைகளைத் தரும்போதுகூட, "என்ன முடித்துவிட்டீர்களா? இடம் இருக்கிறதா?" என்று கேட்கத் தவறியதில்லை. மாணவர் அமைப்பில் நான் பொறுப்பில் இருக்கும் வரை இந்த நிலை நீடித்தது. இதழ் வெளியான பிறகுகூட, பெரிதும் மாற்றுக் கருத்தைக் கூறமாட்டார். அவருக்கே உரித்தான புன்னகையுடன் ஒரு சில சொற்கள், அவ்வளவுதான். உள்ளடக்கத்திலும் உருவமைப்பிலும் அன்று 'மாணவர் முழக்கம்' பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

'மாணவர் முழக்கம்' இதழ் பணிகளில் நான் பெற்ற பட்டறிவுதான், பிற்காலத்தில் இதழியல் நுட்பங்களில் தேர்ச்சியும் நேர்ச்சியும் பெற எனக்கு அடிப்படையாகவும் உரமாகவும் அமைந்தது என்று துணிந்து கூறமுடியும்.

மற்றொன்று, தா.பா. கொடுத்த கருத்துரிமை. 'ஜனசக்தி' இதழின் மற்றொரு மாற்று வடிவமாக 'மாணவர் முழக்கம்' இருந்துவிடக்கூடாது என்ற எண்ணங்களுக்கு ஊக்கம் தந்தார். பொதுவுடைமை இயக்கத்தில் இது மிக அரிதான போக்காகும். மாறுபட்ட கண்ணோட்டத்தில் எண்ணவும் எழுதவும் செயல்படவும் முடியும் என்பதற்கு தா.பா. ஒருபோதும் தடையாக இருக்கவில்லை.

கட்சியின் அரசியல் உறவுகளையொட்டி, செயல்பாடுகளை அமைத்துக்கொள்ளாமல், கொள்கை நிலைபாடுகளையும் மனத்தில் கொண்டு, தனித்து, வேறுபட்டுச் செயல்பட ஒப்புதல் தந்தார். இதனால், கட்சி அளவிலான அரசியல் உறவுகள் ஒருபுறம் இருந்தாலும், அன்றைய திமுக ஆட்சிக்கு எதிராக, கல்வி தொடர்பான - மாணவர் நலன் தொடர்பான பல போராட்டங்களை மாணவர் பெருமன்றம் முன்னெடுக்க முடிந்தது. தமிழ்நாட்டில் அன்றைய மாணவர் போராட்டங்கள் பலவற்றுக்குப் பெருமன்றமே தலைமையும் தாங்கியது. இதில் தா.பா.வின் பங்களிப்பு குறிக்கத்தக்கது.

இந்தப் போராட்டங்களை, அரசியல் இயக்கங்களாக உருமாற்றியிருந்தால், பொதுவுடைமை இயக்கம் வலுப்பெற்றிருக்க வாய்ப்புகள் வந்திருக்கலாம்.

மக்கள் வெளியீடு நிறுவனத்தை நான் 1974இல் தொடங்கியபோது, முதல் நூலாக பாலதண்டாயுதம் அவர்களின் 'ஆயுள் தண்டனை அனுபவங்கள்' என்று முடிவு செய்திருந்தேன். பாலன் உயிரோடு இருந்தபோதே, முற்றுப் பெறாத அந்தத் தொடரை முடித்துத் தருவதாக எனக்கு வாக்களித்திருந்தார். இதற்காகத் தோழர் விசயபாஸ்கரனின் 'சமரன்' இதழில் பல ஆண்டுகளுக்கு முன்னர் வந்த கட்டுரைகளையும் தேடி எடுக்கச் சொல்லியிருந்தார். தோழர் வி.ராதாகிருஷ்ணனிடம் அந்தக் கட்டுரைகள் இருந்ததால் எனது பணி எளிதாயிற்று. ஆனால், எதிர்பாராத பாலன் மறைவினால், அந்த நூல் முழுமை பெறாமலேயே வெளியானது.

அடுத்து, தா.பா. அவர்கள் 'ஜனசக்தி' வார இதழில் எழுதிய 'மார்க்சிஸ்ட் கட்சியினரின் சிந்தனைக்கு' என்ற தொடரை நூலாக்க விழைந்தேன். மிகுந்த வரவேற்பைப் பெற்ற தொடர் அது. அந்தக் காலகட்டத்தில் அது மேலும் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு இருந்தது.

ஆனால், ஒரு சிறு சிக்கல் இடையிட்டது. அமைப்பு அளவில் தா.பா. அவர்களுக்கும் எனக்கும் அப்போது சில வேறுபாடுகள் தோன்றியிருந்தன. தனிப்பட்ட முறையில் அல்ல என்றாலும், தயக்கம் இருந்தது. அனைத்தையும் ஒதுக்கிவைத்துவிட்டு, தா.பா. அவர்களை மாவட்டக் கட்சி அலுவலகத்தில் போய்ப் பார்த்தேன். வழக்கம் போல், இருவரும் உள்ளூர் அரசியலிலிருந்து உலக அரசியல் வரை, இலக்கியங்களில் இருந்து எனது பிஎச்டி ஆய்வுகள் வரை அனைத்தையும் பேசினோம். ஆனாலும், மாவட்டத் தோழர்கள் முன் கேட்க மனம் வரவில்லை. அவர் பகல் உணவுக்காகப் புறப்பட்டபோது, ஜனசக்தி அச்சகம் அருகில் இருந்த பேருந்து நிறுத்தம் வரை நானும் சென்றேன். பேருந்து வருமுன் மக்கள்

வெளியீடு வழியிலான முயற்சிகளைக் கூறினேன். குறைந்த விலையில் அரசியல் வெளியீடுகள் கொண்டுவரும் நோக்கத்தினை வரவேற்றார். அந்த இடைவெளியில் மனம் திறந்தேன். "போகுமா?" என்றார். "நம்பிக்கை உள்ளது. நம் தோழர்களுக்கே விளக்கங்கள் வேண்டியுள்ளது" என்று கூறிவிட்டு, அவர் மறுமொழி கூறுமுன், "கட்டுரைகளை நான் எடுத்து வைக்கவில்லை; உங்களிடம் இருக்கிறதா?" என்றும் கேட்டுவிட்டேன். அதற்குள் பேருந்து வர அதில் ஏறிவிட்டார்.

முடிவைத் தெரிந்துகொள்ள அடுத்த நாள் அவரைப் பார்த்தேன். வரவேற்கும் வகையில் சிரித்தார். உடனே தனது கைப்பையைத் திறந்து கொண்டுவந்திருந்த கட்டுரைத் தொகுப்பைக் கொடுத்தார்.

கட்சியின் மாநில மாநாடு 1974ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது. அப்போது அறுபத்துநான்கு பக்கங்களுடன் ஒரு ரூபாய் விலையில் மூவாயிரம் படிகள் அச்சிடப்பட்ட அந்த நூல் சில நாள்களிலேயே விற்பனையாகிவிட்டது.

தா.பா.வின் நூலினை நான் முன்னுரிமை கொடுத்து வெளியிட்டதும், அவர் தனது நூலினை வெளியிட என்னிடம் மாறுபாடுகளை மறந்து வழங்கியதும், எங்கள் நிலையை அறிந்த சிலருக்கு வியப்பாகவே இருந்தது. வேறுபாடுகளை முன்நிறுத்தாமல், கொள்கைப் பரவலை மட்டுமே மனத்தில் கொண்டு இருவரும் செயல்பட்டோம்.

கட்சி பிளவுபட்ட பிறகு இருவரும் காணும் சூழல் பெரிதும் அமையவில்லை.

கட்சிகளின் இணைப்பை அடுத்தும், தா.பா. ஒன்றுபட்ட கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒரு முறை வாழ்த்துக்களைத் தெரிவிக்க அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போதெல்லாம் விரிவாகப் பேச முடியவில்லை என்றாலும், 'நாம் மீண்டும் பேசுவோம்' என்று கூறத் தவறியதில்லை. பின்னரும் பல முறைகள், பல நிகழ்வுகளில் பார்த்துக்கொண்டதுதான்.

நியூ செஞ்சுரி நூல் நிறுவனத்தாரின் பொன்விழா சென்னையில் நடைபெற்றது. அந்த நிகழ்வுக்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன். எனது பட்டறிவிலிருந்து நியூ செஞ்சுரி நூல் நிறுவனத்தாரது பங்களிப்பின் சிறப்பு, நூல் வெளியீடு, செய்யவேண்டிய பணிகள் போன்றன குறித்துச் சில கருத்துக்களை முன்வைத்தேன். நான் பேசி முடித்தவுடன், தன்னருகில் அழைத்த தா.பா. எனது உரையினைப் பாராட்டினார். அப்போது மேலும் அவர் கூறியது நினைவை விட்டு இன்னும் நீங்கவில்லை. "நாம் பேசவேண்டும்; நாங்கள் ஒரு வகையில் இதுதான் சரியென்று நினைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்; நீங்கள் வெளித் தொடர்பில் இருக்கிறீர்கள்; என்ன செய்யலாம் என்று விவாதிப்போம்; எல்லாவற்றையும் பேசலாம்; அலுவலகம் வாங்க" என்று கேட்டுக்கொண்டார். எனக்கு வியப்பாக இருந்தது. சில மூத்த தோழர்களிடமும் இதனைப் பகிர்ந்துகொண்டேன்.

கட்சியின் செயல்பாட்டு எல்லைகளை மேலும் விரிவடையச் செய்யவேண்டும் என்று அவர் விரும்பினார். தமிழர் நலன், தமிழர் பண்பாடு, தமிழ்த் தேசியம் உள்ளிட்ட சமூக-பொருளிய-பண்பாட்டு அரசியலில் பல ஆண்டுகளாகத் தொடாமல் விடுபட்ட எல்லைகளை எட்டிப்பிடிக்க எண்ணங்களைக் கொண்டிருந்தார்.

ஈழத் தமிழர் உரிமையில் அவரது முன்னெடுப்புகள் ஓர் எடுத்துக்காட்டாகும்.

அகவையும் நோயும் அவரைத் தடுக்க முடியவில்லை. எனது மூத்த மகன் மே.து.ரா. இனியன் மண வரவேற்பு விழா அழைப்பிதழோடு 2019 ஆகத்துத் திங்களில் அவரைக் காணச் சென்றேன். அவரது முதல் வினா 'என்ன கிழமை வருகிறது' என்பதுதான். 15-09-2019 'ஞாயிறு' என்றேன். 'ஞாயிறு ஓய்வுதான்; இப்போதுள்ள உடல் நிலை நீடித்தால் கண்டிப்பாக வருவேன்' என்றார்.

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி என மூன்று நாள்கள் குருதித்தூய்மை (டயாலிசிஸ்) மருத்துவம் செய்யவேண்டிய நிலை. முதுமை, நோயினால் இன்னல், உடல் வலி, துயரம் எதுவும் அவருக்குப் பொருட்டாக இருக்கவில்லை. நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டும் என்ற மனநிலையே அவரிடம் மேலோங்கியிருந்தது.

தொன்னூறைத் தொட்டும் முடங்கிவிடாமல், மூச்சு இருக்கும் வரை மார்க்சியக் கொள்கைகளை முன்னிறுத்துவேன் என்று மதுரையில் தா.பா. இறுதி முழக்கம் செய்தது நமக்கு முன்னெடுத்துக்காட்டாக நின்று வழிகாட்டும்.

1964இல் கலைஞர் உரையாடலில், எம்ஜிஆர் நடிப்பில் வெளியான 'காஞ்சித் தலைவன்' படம் அண்ணாவைக் குறியீடாக மட்டுமே காட்டியது.

ஆனால், 1994ஆம் ஆண்டு மணிவண்ணன் இயக்கத்தில், சத்யராஜ் நடிப்பில் வெளியான 'தோழர் பாண்டியன்' என்றொரு திரைப்படம் நேரடியாகவே தா.பா.வை நினைவு கொண்டது. தா.பா. என்ற ஒரு தலைவர் ஏற்படுத்திய சமூக-பண்பாட்டு-அரசியல் தாக்கத்தின் விளைவு இது.

கொண்ட கொள்கைகளில் மட்டுமல்லாது, வாழ்ந்த வாழ்க்கையிலும் வரலாறாக என்றும் தா.பா. நிலைத்திருப்பார்.

●



# தோழர் தா. பாண்டியன்

## நினைவஞ்சலி, படத்திறப்பு, நூல் வெளியீடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் மறைவையொட்டி 07.03.2021 அன்று ஈரோட்டில் படத்திறப்பு மற்றும் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் டி. ராஜா பங்கேற்று தா.பா. வின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து இரங்கலுரை நிகழ்த்தினார். தா.பா.வை முதன்முதலில் சந்தித்த அனுபவத்தில் தொடங்கி தா.பா. எந்தெந்த விதத்தில் எல்லோருக்கும் பாடமாக இருக்கிறார் என்பதை விவரித்து - தா.பா.வின் அரசியலை இன்றுள்ளோர் உணர்ந்து செயல்படுவதே அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும் என்பதற்கு அழுத்தம் கொடுத்து உரையை நிறைவு செய்தார் பொதுச் செயலாளர் டி.ராஜா.

இந்நிகழ்வில் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர்கள் த.ஸ்டாலின் குணசேகரன், வி.பி. குணசேகரன், வழக்கறிஞர்கள் பி. திருமலைராஜன், ப.பா. மோகன், சமூக விஞ்ஞானம் இதழின் ஆசிரியர் மே.து. ராசுகுமார், கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சி.எம்.துளசிமணி ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர். நிகழ்வுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர். திருநாவுக்கரசு தலைமையேற்றார்.

இந்நிகழ்வில் 'வரலாறு நம்மை அடையாளம் காட்டும்' என்ற தலைப்பிலான தா.பா.வின் நூல் வெளியிடப்பட்டது. 2006 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவில் தா.பா. ஆற்றிய உரையை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பித்துள்ளது. இந்நிகழ்வில் ஈரோடு என்.சி.பி.எச் கிளை மேலாளர் எஸ்.முத்துகிருஷ்ணன் கலந்துகொண்டார்.

நூல் அறிமுகம்



# வற்றாத நினைவுகளின் நடைவழியில்...

**கமலாலயன்**

பிறப்பும், இறப்பும் மனித வாழ்க்கையின் இரு பக்கங்கள். ஒரு நாணயத்தின் இரு பக்கங்களையும் போலத்தான் இவ்விரு அம்சங்களும் மனிதர்களைக் காலம் காலமாக இயக்கிக் கொண்டிருக்கின்றன. மனிதன் 'பிறக்கும் போதும் அழுகின்றான், இறக்கும் போதும் அழுகின்றான்...' என்று தமிழ்த்திரைப் படப்பாடல் ஒன்று புகழ்பெற்றது; மறக்க முடியாத கலைஞரான சந்திரபாபுவின் குரலையும், முகபாவங்களையும்,இந்தப்பாடலுக்கு உயிர்கொடுத்து நிலைபெறச்செய்த அவர் நடிப்பையும், இசையமைப்பையும், கருத்துகளையும் யாரால் மறக்க இயலும்?

மிகப்பெரிய ஆளுமைகளாக, நாடே அறிந்து போற்றிக் கொண்டிருக்கும் கலைஞர்களாக, எழுத்தாளர்களாக, நாடகக்காரர்களாக,சிந்தனையாளர்களாக யாராக இருந்தாலும் ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் அவர்களின் வாழ்க்கை முடிவுக்கு வந்துவிடுகிறது.சாதாரண மனிதர்களுக்கு அதோடு எல்லாமே முடிந்துபோகின்றன. அவர்களுடைய உற்றார் உறவினர்கள்,மனைவி மக்கள் ஆகியோரின் நினைவுகளில் மட்டுமே அவர்கள் கொஞ்சகாலம் வரை ஆழமான பாதிப்பை ஏற்படுத்தி வருவார்கள். அதன் பிறகு மெல்ல மெல்ல அத்தகைய மனிதர்களின் நினைவுகள் மங்கி மறைந்து போகும். ஆனால், சமூகத்தின் மேன்மைக்காக, இலக்கிய உலகின் உன்னதங்களுக்காக, கலைத்துறைகளின் சிகரங்களை எட்டுவதற்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு அவற்றுக்காகவே வாழ்ந்து மறைந்த இவ்வாறான இன்னபிற பல்துறை வல்லுனர்களைப் பொருத்தவரை மரணம் என்பது அவர்களுடைய உடல்களை மட்டுமே நமது பார்வைக்கு எட்டாமல் கவர்ந்து சென்று விடுகிறது. கலைவடிவில்,இலக்கியங்களின் மூலம், நாடகங்களின் பாத்திரங்களில், திரைப்படப்பிரதிகளில், இசைப்பாடல்களின் சுரங்களின் இழைகளில் அத்தகைய புகழ்பெற்ற நிபுணர்கள் அழியாமல் நிலைபேறு பெற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

மறைந்தவர்களுக்கு மணிமண்டபங்களையும், நினைவுச்சின்னங்களையும், தாஜ்மஹால் போன்ற கலையழகு மிக்க கட்டடங்களையும் எழுப்புவது உலக வழக்கம். ஆனால், ஓர் எழுத்தாளரின் வாழ்வில், அவருடைய மதிப்புக்கும், அன்புக்கும், ஏன், வழிபாட்டுக்கும் உரிய ஆளுமைகளின் மறைவுச்செய்திகள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன? செய்தியைக் கேட்டதும், எல்லாரையும் போல முதல் எதிர்வினை மனமும், கண்களும் கலங்கிப்போய், நிலைகுலைந்து செயலற்றவர்களாக உறைந்துபோவதுதான். பின், இறந்தவர்களின் மறைவுக்கு அஞ்சலியை நேரில் சென்று செலுத்தி விட்டு அங்கே திரண்டிருக்கும் அன்பர்களோடு மறைந்த ஆளுமைகளின் வாழ்நாள் சாதனைகளை நினைவுகூர்ந்து உரையாடிவிட்டு, எதையோ பறிகொடுத்து விட்ட கையறு நிலையில் வீடு திரும்புவது நடக்கும்.

இதற்குப்பின், மறைந்தவர்களின் மீது இவர்கள் கொண்டிருக்கும் நேசமும், மதிப்பும், அவர்களிடமிருந்து இவர்கள் கற்றதும் பெற்றதும் எவ்வளவு அடர்த்தியும் ஆழமும் கொண்டவையோ அவற்றைப்பொருத்து இவர்களின் எழுத்தில் அல்லது ஏனைய கலைவடிவங்களில் அந்த உணர்வுகள் எழுச்சி பெற்றுத் திரண்டு மண்ணைப்பிளந்து கொண்டு வெளிக்கிளம்பும் விதைகளைப் போல் வெளிப்படுகின்றன. இந்தப் பதிவுகள், விசுவரூபம் பெற்று வாசிப்பவர்கள் அல்லது ரசிகர்களின் மனங்களில் மறைந்த ஆளுமைகளின் முழுமையான தரிசனங்களைத் தந்து விடுபவையாக ஆகின்றன.

பாவண்ணன் அவர்கள் நாடறிந்த நல்லதோர் எழுத்தாளர். நாவல்கள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புகள், கவிதைகள், குழந்தைகளுக்கான பாடல்கள், கட்டுரைகள் என இலக்கியத்தின் எல்லா வகைமைகளிலும் முத்திரை பதித்து வரும் அற்புதமானதொரு மனிதர். எல்லாரிடமும் அன்புடனும், இயல்பான எளிமையுடனும் பழகி நட்புகளைச் சம்பாதித்திருக்கும் அன்புக்குரியவர். அவருடைய கலைமனம் எழுத்தில் வடித்திருக்கும் இரங்கல் கட்டுரைகளின் தொகுப்பு ‘வற்றாத நினைவுகள்’.

கல்லூரிக்காலத்தின் ஆசானாக விளங்கிய ம.இலெ.தங்கப்பா, ஜெயகாந்தன், கன்னட இலக்கிய உலகத்தின் கொடுமுடிகளாகத் திகழ்ந்த கிரீஷ் கர்னாட், யு.ஆர்.அனந்தமூர்த்தி, தமிழில் புரட்சிகர இலக்கியப் படைப்புகளின் முன்னோடிகளில் ஒருவரான இன்குலாப், தி.க.சிவசங்கரன், சுஜாதா, ‘என்னைக்கேட்டால்’ என்.எஸ்.ஜெகன்னாதன், சின்னக் குத்தூசி,மொழிபெயர்ப்பாளர்கள் தி.சு.சதாசிவம், சு.கிருஷ்ணமூர்த்தி, சித்தலிங்கையா, கவிஞர் ஞானக்கூத்தன் போன்ற மகத்தான ஆளுமைகளைப் பற்றிய தன் நினைவுகளை இருபது கட்டுரைகளில் ஒரு நதியின் வெள்ளப் பெருக்கைப் போல் பெருகச்செய்திருக்கிறார். இவற்றுள், ம.இலெ. தங்கப்பாவுக்கு மட்டுமே மூன்று கட்டுரைகள் உள்ளன. அதே போல, கிரீஷ் கர்னாட் நினைவுகளைப் பற்றி இரு கட்டுரைகள், அவருடைய ஒரு நேர்காணல் மொழிபெயர்ப்பு -என மூன்று கட்டுரைகள் எழுதியிருக்கிறார் பாவண்ணன்.

முன்னுரையை வாசிக்கும்போதே அடுத்துவரப்போகும் நினைவுகளின் இசைப் பாடல்களுக்கான ராக ஆலாபனைக்கீற்றைப்போல் சில செய்திகள் நமது மனதில் ஒரு மெல்லிய சோகத்தை எழுப்புகின்றன. புதுச்சேரிக்கும் விழுப்புரத்திற்கும் இடையில் இவரின் ஊர்ப் பேருந்து நிறுத்தத்திற்கு சத்திரம் என்றொரு பெயரை மட்டுமே இன்று காணமுடிகிற நிலையில், என்றோ இருந்த அந்தச் சத்திரத்தையும், அதன்முன்னாலிருந்த பெரும் கிணற்றையும், மகிழ மரத்தையும், நாவல் மரத்தையும் கோட்டோவியம் போல் தீட்டிக் காட்டியிருக்கிறார் பாவண்ணன். சத்திரத்தை, கல்திண்ணையை, பத்திர எழுத்தரை, மரங்களை, ஆஞ்சநேயர் பாட்டி என்ற ஒரு பழங்காலத்து மனுஷியை நினைவு கூர்கிறார். பத்திர எழுத்தரோ, பாட்டியோ, தங்கராசு என்ற இவருடைய பள்ளித் தோழனோ யாருமே இன்று இல்லை; இவரின் நினைவுகளில் மட்டுமே வாழ்கிறவர்களாக அவர்கள் மாறி விட்டனர்.

இவர்களோடு, இலக்கியத்துக்காகப் பணியாற்றிய வர்களான, மறைந்த ஆளுமைகள் பலரைப் பற்றிய நினைவுகளின் பதிவுகளைத் தான் கட்டுரைகளாக எழுதியிருப்பதாகக் குறிப்பிடும் பாவண்ணன், அவர்களிடமிருந்து தான் கற்றதையும் பெற்றதையும் ஒருபோதும் மறக்கவில்லை என்கிறார். அது சத்தியமான உண்மை என்பதை இந்த நூலைப்படித்து முடிக்கையில் நாம் ஆழமாக உணர முடியும். இந்தத் தொகுதியை மறைந்த எழுத்தாளர் அசோகமித்திரன் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளது மிகப்பொருத்தமே.

இன்றைய நவீன உலகம் நமக்கு வழங்கியிருக்கும் கொடைகளுள் ஒன்று கணினி. எல்லாவகையான துறைகள் சார்ந்த பணிகளுக்கும் கணினிகள் இன்று தோன்றாத்துணைகளாக உதவி செய்கின்றன.அவற்றைக் கையாளத் தெரிந்திருக்க வேண்டும் என்பதே நிபந்தனை. ஐம்பது அறுபது வயதைக் கடந்து விட்ட முந்தைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு இந்த விஷயத்தில் மிகப்பெரிய தயக்கம் இருக்கிறது எனத் தோன்றுகிறது. இதை இப்போது மடிக்கணினியில் தட்டச்சு செய்துகொண்டிருக்கும் எனக்கு இதில் சொந்த அனுபவமே சாட்சி. பாவண்ணனுக்கும் இந்தத் தயக்கமும், தன்னால் முடியுமா என்ற அச்சமும் இருந்திருக்கிறது. “கம்ப்யூட்டர், லாங்வேஜ் இரண்டையும் கத்துக்கறதுக்கு வயசு ஒரு தடையே இல்ல, பாவண்ணன். அறுவது,எழுவது வயசுல கூட ஒருத்தர் இதக் கத்துக்க முடியும்...” என்று தன்னம்பிக்கை ஊட்டுகிறார் மறைந்த எழுத்தாளர்

சுஜாதா. கடந்த 12 ஆண்டுகளாகக் கணிப்பொறியில்தான் என் படைப்புகளை எழுதுகிறேன் என சுஜாதா மறைவின் போது எழுதிய கட்டுரையில் பாவண்ணன் குறிப்பிட்டிருக்கிறார். அது யுகமாயினி இதழில் ஏப்ரல், 2008-இல் வெளியானது. அதன்பிறகு இப்போது மேலும் 13 ஆண்டுகள் ஓடிவிட்டன. இன்று தான் எழுதும் அனைத்துப் படைப்புகளையும் நேரடியாகக் கணிப்பொறி மூலமே தட்டச்சு செய்வதாகச் சொன்னார் பாவண்ணன். என்னுடைய தயக்கத்தை அவரும், உதயசங்கர், ச.தமிழ்ச்செல்வன் போன்ற எழுத்தாள நண்பர்களும் அடிக்கடி சொல்லிச்சொல்லி பெருமளவுக்கு இப்போது நானும் கணினியைப் பயன்படுத்தி வருகிறேன். பேனாவால் கைப்பட எழுதி, நகல் எடுத்து அனுப்பும் போது எனக்குக் கிடைக்கும் மனநிறைவு இதில் இல்லை என்பதென்னவோ உண்மைதான். ஆனாலும், இது ஒரு மனப்பழக்கம்தான், இது மாறும் எனவும் ஓர் எண்ணம் எழுகிறது.

சின்னக்குத்தூசி, திராவிட இயக்கத்துடன் நீண்டகாலத் தொடர்புமிக்கவர். குறிப்பாக, கலைஞர் போன்ற தலைவர்களுக்கு மிக நெருக்கமான ஒருவர். முரசொலி நாளிதழில் கலைஞரை விடவும் அதிக எண்ணிக்கையில் அரசியல் விமரிசனக் கட்டுரைகளை எழுதியவராக அவர் இருக்கக்கூடும். அதிகார மையத்துக்கு அவ்வளவு நெருக்கமானவராக இருந்திருந்தபோதிலும், கடைசிவரை எந்தவிதப் பதவியையும்,செல்வாக்கான நிலையையும் தேடிக்கொள்ளாமலே வாழ்ந்து மறைந்தவர் சின்னக்குத்தூசி. மனதில் பட்டதைத் தயக்கமின்றி எழுதும் அவரின் இயல்பினால் கலைஞரின் கோபத்துக்கு ஆளாக நேர்ந்தபோதும் கூட, சமரசம் செய்துகொள்ளாமல் விலகி வந்து விட்ட துணிவுமிக்க ஆளுமை அவர். அதிகாரமையங்களைத் தண்ணீராகவும், காலமெல்லாம் அதிலேயே மிதந்திருந்தாலும் துளியும் ஒட்டாத தாமரை இலையாக சின்னக்குத்தூசியையும் உருவகம் செய்து அற்புதமாக அஞ்சலி செலுத்தியிருக்கிறார் பாவண்ணன்.

தி.க.சி.யின் அன்பும், வாஞ்சையும் மிக்க வழிகாட்டல், அவருடைய வாசிப்பின் ஆழம் பற்றி நினைவுகூர்ந்திருக்கிறார். தி.சு.சதாசிவம், சித்தலிங்கையா, சு.கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூன்று மொழிபெயர்ப்பாளர்கள் தமது அரிய மொழி பெயர்ப்புகளின் வழியே தமிழ் இலக்கிய உலகுக்கு வளம் சேர்த்தவர்கள். அவர்கள் மூவரோடும் தனக்கு இருந்த நட்பையும், அன்புப் பிணைப்பையும் மனம் கசிந்து உருகும்வண்ணம் பதிவு செய்கிறார். அவர்களின் மொழிபெயர்ப்புப் படைப்புகளின் சிறப்பை, அந்த ஆளுமைகளின் அரிய பணிகளை தமிழுலகம் அவற்றுக்கு நியாயமாகத் தந்திருக்க வேண்டிய மதிப்புடன் அறிந்துகொள்ளவோ, பாராட்டிப் போற்றவோ தவறிவிட்டது என வருத்தத்துடன் எழுதுகிற பாவண்ணனின் பண்பட்ட மனம் நெகிழ வைக்கிறது.




'வற்றாத நினைவுகள்'
பாவண்ணன்
வெளியீடு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
விலை ரூ.160

இன்குலாபைப் பற்றிய எத்தனையோ கட்டுரைகளை வாசித்திருக்கிறேன். அவருடைய படைப்புகளில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய அனைத்தையும் தேடித்தேடிப் படித்தும் இருக்கிறேன். பாவண்ணன் தனது எழுத்துப்பயணத்தின் தொடக்க காலத்திலேயே இன்குலாபின் பாராட்டுகளையும், வழிகாட்டலையும் பெற்றவர் என்ற செய்தியை இதுவரை அறியாமலே இருந்திருக்கிறோமே என வருந்தினேன். மிக நேர்த்தியாக இன்குலாபின் பண்புகளைப் பதிவு செய்திருக்கிறார். இன்குலாப் போன்ற முற்போக்கு இயக்கங்கள் சார்ந்த கவிஞர்களின் கவிதைகளில் கவித்துவம் இருக்காது எனவும், அவை வெற்றுப்பிரச்சார முழக்கங்களே எனவும் அன்று முதல் இன்றுவரை தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து ஒரு கருத்து வலுவாக முன்வைக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. அழகியல் அம்சங்கள் அறவே இல்லாமல் வறட்டுத் தனமான முழக்கங்களையே கவிதைகள் என்று இவர்கள் சொல்லுகிறார்கள் என்பது முற்போக்காளர்களின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு. இது பற்றிய எதிர்வினைகளைத் தொடர்ந்து இன்குலாப் ஆற்றி வந்திருக்கிறார். ஒடுக்கப்படும்

மக்களின் அழகியலும், ஒடுக்கும் ஆளும்வர்க்க அழகியலும் எப்படி ஒரே அளவுகோலில் அளக்கப்பட முடியும்? இருவேறு வர்க்கங்களுக்கும் அவரவர்க்கென அழகியல்,கலைத்தன்மை, பிற இலக்கிய அம்சங்கள் நிச்சயம் வேறுபட்டவையாகவே இருக்க முடியும். இந்த அடிப்படையான உண்மையை உணராமலோ, அல்லது உணர்ந்தும் உணராதவர்கள் போன்ற பாவனையிலோ இன்னமும் இதே குற்றச்சாட்டுகளைக் கிளிப்பிள்ளைகள் போலச் சொல்லும் போக்கு நிலவி வருகிறது. ஆனால், இன்குலாபின் படைப்புகளைப் பற்றி, குறிப்பாக 'சூரியனைச் சுமப்பவர்கள்' தொகுதியிலுள்ள கவிதைகளைப் பற்றி பாவண்ணன் எழுதும்போது பின்வருமாறு குறிப்பிடுவது இவரின் பரந்த மனதின் வெளிப்பாடாக அமைந்துள்ளது: "ஏனைய முற்போக்குக் கவிஞர்களின் அழகியலுக்கும், அவருடைய கவிதை அழகியலுக்கும் உள்ள வேறுபாட்டை உடனடியாகப் புரிந்து கொள்ள முடிந்தது. செட்டான வாக்கியங்கள். அருவிபோலப் பொங்கி வழிந்தோடும் நடை. வசீகரமான மொழி.வாழ்வின் அவலங்களைக் காண்பதால் உருவாகும் துயரம். கனிவும் ஆவேசமுமிழைந்தோடும் வரிகள்.இன்குலாபின் கவிதைகளில் கண்ட அனைத்து அம்சங்களும் மிகவும் வசீகரமாக இருந்தன..."

கிரீஷ் கர்னாடின் நாடகங்களில் ஒன்பது நாடகப்பிரதிகளை தமிழில் மொழி பெயர்த்தவர் பாவண்ணன். 'இந்த நாடகங்களில் எதையாவது ஒன்றையேனும் மேடை நாடகமாக ஆக்க குழு ஏதேனும் முன்வந்திருக்கிறதா?' எனக் கேட்ட கர்னாடுக்கு இறுதிவரை சாதகமான ஒரு மறுமொழியைக் கூற முடியாத மனக்குறையை அவருக்கான அஞ்சலிக்கட்டுரைகளில் பாவண்ணன் பதிவு செய்கிறார். கர்னாடின் நாடகங்களை குஜராத்தியில் மொழிபெயர்த்த ஓர் எழுத்தாளர் பாவண்ணனிடம் கேட்கிறார்: "நடிப்பதற்காகத்தானே நாடகங்களை மொழிபெயர்க்கிறோம்?"

ம.இலெ.தங்கப்பா குறித்த மூன்று கட்டுரைகளுமே அற்புதமானவை. மிதிவண்டிப்பயணங்களில் தன் மாணவர்களைத் தொடர்ந்து ஆற்றுப்படுத்தியதோடு, தானும் அவர்களின் முன்னால் மேடுகளில் சளைக்காமல் சைக்கிள் ஓட்டிக்கொண்டு பயணம் செய்தவர் அவர். மொழியை, பாடல்களை, சங்க இலக்கியங்களை, மரபு சார்ந்த கவிதைக்கூறுகளை பாவண்ணனுக்குக் கற்பித்து செதுக்கிய மாமனிதராக நாம் தங்கப்பாவை அறிகிறோம். இந்தக் கட்டுரைகள் மூன்றை எழுதியதன் மூலம் தனது ஆசிரியருக்கு பாவண்ணன் எழுப்பியிருக்கும் நினைவுச்சின்னங்கள் மகத்தானவை. இவற்றைப் படிக்கும்போதுதான் பாவண்ணன் தொடக்க காலத்தில் எழுதிய குறுங்காவியங்களைப் பற்றி அறிய முடிந்தது. அந்தக் காவியப்படைப்புகளின் ஆழத்தையும், அழகையும் உணரலாமா, அவை இப்போது இருக்கின்றனவா எனக்கேட்கத்துடித்த மனம், அவையெல்லாம் தொலைந்து போயின என்ற குறிப்பைப் படிக்கையில் சோர்ந்து போனது.

இந்தக் கட்டுரைகளிடையே ஊடுபாவாக இழையோடிக் கொண்டிருக்கும் ஓர் அம்சத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பாவண்ணனின் எழுத்துகளைப் படித்திருந்த தி.க.சி., சின்னக்குத்தூசி, ஞானக்கூத்தன்,வெங்கட் ஸ்வாமினாதன் போன்றோர், முதன்முறையாக இவரை நேரில் பார்த்ததும் "ரொம்ப சின்ன வயசு ஆளா இருக்கீங்களே தம்பி?" என்ற கேள்வியை முன் வைத்திருக்கின்றனர். இளம்வயதில் எழுத்துலகின் சிகரங்களை எட்ட வேண்டுமென்ற கனவுகளுடன் பயணப்படும் இளம் எழுத்தாளர்கள் ஒவ்வொருவருக்கும் மூத்த, புகழ் பெற்ற எழுத்தாளர்கள் யாரேனும் தமது படைப்புகளைப் பற்றி ஒரு நாலு நல்ல வார்த்தை சொல்ல மாட்டார்களா என்ற எதிர்பார்ப்பு இருக்கவே செய்யும். பாவண்ணனின் மனமும் இந்த எதிர்பார்ப்புடன் இருந்திருக்கிறது.இதைப்பற்றி பாவண்ணனின் வார்த்தைகளிலேயே பார்ப்போம்: "அன்பான, உற்சாகமான ஒரு சொல்லுக்காக ஏங்கிக்காத்திருந்த காலம் அது. ஒரு கதையைப் படிக்க எவ்வளவு நேரமாகிவிடும்? அதைப்பற்றி எழுத எவ்வளவு காலம் பிடித்து விடும்? ஏன் இந்த மனிதர்கள் அதைச்செய்வதில்லை?" வெங்கட் சாமிநாதனிடம் நேரடியாகவே இதைக் கேட்கிறார் பாவண்ணன்: "எங்க தலைமுறையைப் பத்தியெல்லாம் நீங்க எழுதவே இல்லியே,சார்?" இந்த மனக்குறை அன்றும் சரி, இன்றும் சரி, புதிதாக எழுதுவோருக்கு அல்லது ஓரளவுக்கு எழுதி கவனம் பெற்றுவிட்டவர்களுக்கும் கூட தீராத குறைதான். 'குறையொன்றுமில்லை' என நாம் பொதுவாகச் சொல்லிக்கொண்டாலும், இம்மாதிரி எதிர்பார்ப்புகள் இல்லாமல் எப்படி எல்லாரும் இருந்துவிட முடியும்? இதுபோல் இக்கட்டுரைகள், வெறுமனே நினைவஞ்சலிகளாக மட்டும் இருந்துவிடாமல், ஒவ்வோர் ஆளுமையையும் பற்றிய முக்கியமான செய்திகளைத் தொகுத்துத்தரும் ஆவணங்களாகவும் இருக்கின்றன. இவர்களில் பலரை நாம் அறிந்திருக்கலாம்; அறியாமல் வெறுமனே பெயர்களை மட்டும் கேள்விப் பட்டிருக்கலாம்.ஆனால், இந்தக் கட்டுரைகளைப் படிக்கையில், இவர்களைப் பற்றிய ஓர் அறிமுகச்சித்திரம் முழுமையாகக் கிடைத்துவிடும்.

மனித மனம் விசித்திரங்கள் நிறைந்தது. வருடக்கணக்கில் நாம் அறிந்தும், அன்பு செய்தும், மதித்தும் வந்தவர்களின் நடுவேயே வாழ்ந்து கொண்டிருந்தாலும் எப்போது,எந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுடனான தொடர்பு எல்லைகளை விட்டு வெளியே நகர்ந்து தவற விட்டோம் என்றே தெரியாமல் திகைத்து நிற்கச்செய்து விடுகிறது.இன்றைய வாழ்வின் சூழல்களில் இது தவிர்க்க முடியாததுதான்; ஆனால், அதனால் நாம் அடையும் இழப்புகளின் பரிமாணங்களை நம்மால் உணர முடிகிறதா? பாவண்ணனின் நெகிழ்ந்த மனம் அவற்றை மனப்பூர்வமாக உணர்ந்து எழுத்தில் தன்னினைவுகளைப் பதிவு செய்திருக்கிறது. நாம் இவற்றை வாசிக்கவாவது செய்யலாமே!

●

கட்டுரை

# இன்று நமக்கு என்ன தேவை?

க. பழனித்துரை





"ஒண்ணுமே புரியலே உலகத்திலே, என்னவோ நடக்குது மர்மமா இருக்குது" என்ற ஒரு பழைய பாட்டு இன்றைய சூழலுக்குப் பொருந்தி வருகிறது. நாம் வாழும் உலகம் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப உலகம். வியத்தகு முன்னேற்றம் கண்ட உலகத்தில் வாழ்ந்து வருகின்றோம். ஆனால் இந்தக் கிருமி இந்த அறிவியலுக்கு சவால் விட்ட வண்ணம் இருக்கிறது. முதல் அலை வந்தது, எங்கிருந்து, யாரால், எதன் மூலம் வந்தது இன்று வரை விவாதம் மட்டுமே மிஞ்சியது. இப்பொழுதுதான் அமெரிக்க அதிபர் குறைந்த கால அவகாசத்தில் இந்தக் கிருமி எங்கிருந்து வந்தது என்று கண்டுபிடித்துத் தரவேண்டும் என உத்தரவிட்டுள்ளார். முதல் அலை நகரத்தில் தாக்கியது. தயாரானது அரசு, கட்டுக்குள் வந்தது கிருமி பரவல். நகரத்தில் கட்டுப்பாடுகள் கடுமையாகவே இருந்தன. முதல் அலை குறைந்தவுடன் மார்தட்டி கொரோனாவை வென்று விட்டோம் என்று கொட்டாவி விட்டு நம் அரசியல் சமூகமும் அறிவுச் சமூகமும் உறங்கிவிட்டன என்றே எண்ணத் தோன்றுகின்றது. இன்றைய சூழலைப் பார்க்கும் போது, முதல் அலையைத் தடுக்க தயாரித்த தயாரிப்புக்களை அவசரமாக கலைத்து விட்டோம். தேர்தல் வந்தது, கிருமியை அழித்து விட்டோம் என்ற ஒரு சிந்தனையை உருவாக்கி, அனைவரையும் இயல்பாக செயல்பட அனுமதித்தோம். திருமணம், கலாச்சார நிகழ்வுகள், கோவில் திருவிழாக்கள் மற்றும் துக்க காரியங்கள் என எல்லா இடங்களிலும் கூட்டங்கள். முகக்கவசம், சோப்புப் போட்டு கை கழுவுதல், கிருமி நாசினி உபயோகப்படுத்துதல் இவை அனைத்தையும் சுருட்டி வைத்து விட்டோம். இரண்டாவது அலை வரப்போகிறது என்று அறிவியல் சமூகம் கூறியதா? அப்படிக் கூறியிருந்தால் ஏன் அரசு கேட்கவில்லை? அப்படிக் கூறியிருந்தால் ஏன் தேர்தல் நடத்தியது தேர்தல் ஆணையம்? இதைக் கேட்டது நீதிமன்றம் மட்டுமே. வேறு யாரும் வாய் திறக்கவில்லை.

இரண்டாவது அலை வருவதற்கு முன்பே தடுப்பூசிகள் வந்துவிட்டன. புலி வருகிறது புலி

வருகிறது என்று கூறியதுபோல் தடுப்பூசி வந்தும் ஏன் அதை விரைவுபடுத்தி நம் மக்களுக்குப் போடவில்லை. தடுப்பூசி வந்த தருணத்தில் மக்களும் தயாராகவில்லை. தடுப்பூசி போட்டவர்கள் மட்டும்தான் அரசுப்பணிகளுக்கு வர வேண்டும் என ஒரு அரசு ஆணை இருந்தால் அத்தனை அரசுப் பணியாளர்களும் போட்டிருப்பார்களே. ஒரு வணிக நிறுவனம் திறக்க வேண்டும் என்றால் அங்குப் பணிபுரிவோர் அனைவரும் தடுப்பூசி போட்டிருந்தால் மட்டுமே வளாகம் திறக்க அனுமதி என்றால் அனைவரும் போட்டிருப்பார்களே? இன்று கிராமப்புறங்களில் தடுப்பூசி போடுவதற்கு மக்களைத் தயார்படுத்தும் பணியைப் பஞ்சாயத்துக்குக் கொடுத்துள்ளது அரசு. எத்தனை பஞ்சாயத்துத் தலைவர்கள் தடுப்பூசி போட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அரசு செய்யத் தவறியது. காரணம் தடுப்பூசிக்கான கொள்கையை முறையாக உருவாக்கவில்லை.

சமூக ஊடகம் என்ற பெயரில் அள்ளிக் கொட்டுகிறார்கள் செய்திகளை. அவைகளெல்லாம் செய்திகள் அல்ல; அபத்தங்கள். இந்த ஊடகங்கள் இந்த மாதிரி அசாதாரணச் சூழலில் அறிவியல் பூர்வமான செய்திகளை யார் தரவேண்டும் என்பதற்கு ஏன் எந்தக் கட்டுப்பாடும் இன்றி வதந்திகளையும் நிரூபிக்கப்படாத செய்திகளையும் தந்து மக்களை அச்சப்பட வைக்கின்றார்கள் என்று நமக்குப் புரியவில்லை. இந்த அச்சமூட்டும் செயல்பாடுகளால் விளைந்த ஒரே நன்மை மக்கள் தடுப்பூசி தேடி அலைகின்றார்கள். ஆனால் அதற்கும் இப்போது தட்டுப்பாடு வந்துவிட்டது.

பொதுவாக ஒரு ஆளுகை, நிர்வாகம் எப்படி உறுதியாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதை எப்பொழுது தெரிந்து கொள்ளலாம் என்றால், ஒரு சிக்கல் வருகின்ற நேரத்தில்தான். அது பலமாக இருக்கிறதா பலவீனமாக இருக்கிறதா என்பதை அப்பொழுது நாம் மிக எளிதாகக் கண்டுபிடித்து விடலாம். உடலும் அப்படித்தான், உடலும் மனமும் எவருக்கு உறுதியாக இருக்கிறதோ அவர்களால் எந்த வியாதியையும் வெல்ல முடியும். பேரிடர்கள் முன்பெல்லாம் எப்போதாவது தான் தாக்கும். ஆனால் இன்று அடிக்கடி தாக்குகின்றது. அதில் இயற்கைப் பேரிடரும் உண்டு, மனிதர்கள் உருவாக்கிய பேரிடரும் உண்டு. ஒவ்வொரு பேரிடரும் பல படிப்பினைகளை நமக்குத் தந்து விட்டுத்தான் செல்கிறது. அதிலிருந்து நாம் எதாவது பாடம் கற்றுக் கொள்கின்றோமா என்பதுதான் கேள்வி. எது நிகழ்ந்தாலும் அதை எப்படி அணுகுகின்றோம் என்பதை வைத்தே நாம் எப்படிப்பட்டவர்கள் என்பது நமக்குப் புலப்பட்டு விடும். எந்த நிகழ்வையும் தீயணைப்பைச் செய்வது போல் செய்கின்றோமேயொழிய, ஒரு நெறிப்படுத்தப்பட்ட முறைமையும் கொள்கை சார்ந்து விஞ்ஞான அடிப்படையில் செயல்படும் தன்மையை வளர்த்துக் கொள்ளாமல் செயல்படுவது என்பதுதான் இன்று அனைவரும் குழப்பத்தில் ஆழ்ந்து யார் என்னை காக்கப் போகிறார் என்று ஓலமிடும் சூழலில் மக்களை வாழ வைத்து விட்டோம்.

கடந்த 30 ஆண்டுகளாக நம் அரசாங்கம், அரசியல், கொள்கைகள், ஆளுகை, நிர்வாகம் அனைத்தும் மாறிய விதம் நம்மை எங்குக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது என்பதைப் பார்த்தால் நாம் எங்கே வழி தவறி இருக்கின்றோம் என்ற உண்மை நமக்குப் புரியும். நம் நாட்டில் இன்னும் ஏழைகள் தான் அதிகம். அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்பில் 80 கோடி மக்கள் இருக்கின்றார்கள். இந்த எண்ணிக்கையில் ஏழைகளை வைத்துக் கொண்டு மக்கள் பிரச்சினைகளுக்கு சந்தையில் தீர்வு தேடுவது என்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். ஒரு கார்ப்பரேட் மருத்துவமனை ஒரு 7 நாள் மருத்துவத்திற்கு ஒரு கொரோனா பாதித்த நபருக்கு 22 லட்ச ரூபாய் கட்டணமாக வசூலித்துள்ளது. அந்த மருத்துவமனை அதை ஏமாற்றி வாங்கவில்லை. அந்த மருத்துவக் கட்டமைப்பு என்பது அப்படி கட்டி எழுப்பப்பட்டுள்ளது. ஏழைகள் வாழும் நாட்டில் கல்வி, மருத்துவம், உணவு, பிரயாணம், தங்குமிடம், அனைத்தும் எளிமைப்படுத்தப்படவில்லை என்றால், இவை அனைத்தும் ஏழைகளைப் பாதுகாக்காது, ஏழைகளுக்கு உதவாது. காந்தி மகான் இதை நன்கு உணர்ந்த காரணத்தால்தான் இந்திய மரபுமுறை அறிவை வளர்த்தெடுத்து ஏழைகளுக்கு உதவக்கூடிய கட்டமைப்பை உருவாக்க எண்ணினார். அரசாங்கம் அனைத்தும் செய்யும் என்ற வாக்குறுதியும் இன்று சாத்தியமில்லை என்பதையே பறைசாற்றுகிறது. காந்தி அதிகம் சிந்தித்தது மானுட மேம்பாடு பற்றித் தான். இன்னும் குறிப்பாகச் சொன்னால் ஏழைகளைப் பற்றித்தான். இவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றால் ஆரோக்யமான வாழ்க்கைக்கு மக்களைத் தயாரிப்புச் செய்ய வேண்டும். நோய் வராமல் தடுக்கும் முறைமைகள்தான் மிக முக்கியமான செயல்பாடுகளாக அரசுக்கு இருக்க வேண்டும். அதில் பெருமளவு மக்கள் பங்கேற்க வேண்டும். இன்று வரை அந்தத் தயாரிப்பு இந்தியாவில் நடைபெறவில்லை. அப்படி நடந்திருக்குமேயானால் நம் உடல் நம் பொறுப்பு, நம் சுத்தம் நம் பொறுப்பு, நம் சுற்றுப்புறத் தூய்மை நம் பொறுப்பு என்ற சிந்தனைப்போக்கு நம் மக்களுக்கு வந்திருக்கும். கழிப்பறையைப் அவர்களே கட்டிக் கொண்டிருப்பார்கள், அரசு கட்டத் தேவையில்லை. ஏழைகளால் கட்ட முடியவில்லை

என்றால் அரசு கட்டி வைத்த கழிப்பறையைப் பயன்படுத்தியிருப்பார்கள், பாதுகாத்து அவைகளை எப்படிச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமோ அப்படி வைத்திருப்பார்கள். இந்த அடிப்படைத் தயாரிப்பு இல்லாததன் விளைவுதான் கைகழுவ சொல்லித் தரவேண்டியுள்ளது. ஆரோக்யமாக வாழ்வதுதான் வாழ்க்கை என்பது புரியாமல் வாழும் சூழலில் மக்களை வாழ வைத்துள்ளோம்.

ஆனால் ஆங்கில மருத்துவ முறைக்கான கட்டமைப்புக்களை அரசு முன்னெடுப்புச் செய்தது. வெள்ளையர்கள் ஆண்ட இடங்களில் மரபுவழி மருத்துவம், சித்த மருத்துவம் மற்றும் இன்ன பிற மருத்துவ முறைகளை ஒழித்துக் கட்டி மக்களை ஆங்கில மருத்துவ முறைக்கு மாற்றினார்கள். ஆனால் அதிர்ஷ்டவசமாக சமஸ்தானங்களில் இந்திய முறை மக்கள் பயன்பாட்டில் இருந்தது. ஆனால் சுதந்திரம் அடைந்த பிறகு நம் மருத்துவ முறைகளை மீட்டெடுக்க முனைப்புக்கள் அரசு காட்டவில்லை என்பது நம் பெரும் சோகம். இந்திய மரபில் இருந்த இயற்கை மருத்துவம், சித்த மருத்துவம், ஆயூர்வேத மருத்துவம் போன்ற பல்வேறு முறைகள் பற்றி எந்த முன்னெடுப்பும் செய்யவில்லை என்பதைப் பற்றிய எந்தப் புரிதலும் நம் அரசியல் கட்சிகளுக்குப் புலப்படவில்லை. அதை மீட்டெடுப்பது என்பது மூடத்தனம் என்ற பார்வையும் நம்மிடம் இருந்தது என்பதை எவரும் மறுக்க இயலாது. இந்த முறைகள் மண்ணுக்கான முறைகள் மட்டுமல்ல. இந்த மண்ணில் பிறந்த மக்களுக்கானவை. அது மட்டுமல்ல, இந்த மண், இந்த மண்ணில் வளரும் மூலிகைகளை வைத்து மக்களின் ஆரோக்யத்தைப் பேண தேவையான ஆய்வுகளை பெருமளவில் முன்னெடுத்து, அவைகளை ஆங்கில முறை மருத்துவத்துடன் இணைத்துச் செயல்பட்டிருந்தால் இவ்வளவு பெரிய இழப்பு ஏழைகளுக்கு நிகழ்ந்திருக்காது இன்றைய சூழலில். நம் நாட்டு மருத்துவ முறைகளுக்கு இவ்வளவு பெரிய கட்டமைப்புக்கள் தேவையில்லை. நம் மருத்துவ முறைகள் சந்தைக்கானவை அல்ல; அது சமூகத்திற்கானவை. நவீன ஆங்கில மருத்துவ முறைகளில் அதிகம் மருந்தும், அறுவைச் சிகிச்சையும் அத்துடன் நோய் கண்டுபிடிப்புக் கருவிகளும் தேவைப்படுகின்றன. நம் நாட்டு மருத்துவ முறைமைகளில் நோயைக் கண்டுபிடிப்பதும் அதன் வேரை அறுப்பதும் தான் மருத்துவரின் திறன். நம் நாட்டு மருத்துவ முறைகளில் வணிகம் என்பதற்கான பார்வை இல்லை. சேவை என்பது தான் மையப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் மேற்கத்திய முறை நவீன மருத்துவம் தொழில் துறையாக மாற்றப்பட்டு வணிகமாக பங்குச் சந்தைக்குள் பயணிக்க ஆரம்பித்தபின், அது மக்களுக்கு சேவை செய்யும் என்றோ, ஏழைகளுக்கும் அது உதவும் என்றோ எண்ணுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். இதை நம் அரசியல் ஆழ்ந்து சிந்திக்க மறந்துவிட்டது.

இன்றைய சூழலில் மக்கள் வாழ்க்கைச் சூழலை சந்தைக்குள் புகுத்தி பெரும்பகுதி நுகர்வு வாழ்க்கைக்கு இழுத்துச் சென்றதன் விளைவு, எவருக்கும் தன் உடல் நலம் பற்றி எந்தப் பார்வையும் அற்று, எது வந்தாலும் மருந்து இருக்கிறது என்ற சிந்தனை ஓட்டத்தில் வாழ பழக்கிவிட்டது நம் சந்தைப் பொருளாதாரம். இந்த நாட்டு மக்களை இன்று வியாதிகள் ரீதியாகப் பிரித்து மருத்துவச் சந்தைக்குள் அவர்களின் இறுதிவரை பயணிக்க தயார்படுத்தி விட்டன. இதைவிட மிக முக்கியமாக எல்லாத் தரப்பு மக்களிடமும் ஆங்கில மருத்துவ முறை உயிரைக் காப்பாற்றி விடும் என்று திடமாக நம்ப வைத்து விட்டது ஆங்கில மருத்துவ முறைக்கான சந்தை விளம்பரங்கள்.

இந்தச் சூழல் நமக்குக் கூறும் செய்திகள் என்ன? ஆங்கில மருத்துவ முறையால் மட்டுமே நம் நாட்டு மக்களின் நலத்தைப் பேண இயலாது. ஆனால் அரசாங்கம் அதைத்தான் நம்பி இருக்கின்றது. அரசு நடத்தும் மருத்துவமனைகளும் சந்தைப்படுத்தப் பட்டவையகவே அவற்றின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. அதன் மூலமாகவே மிகப் பெரும் அளவில் ஊழல் என்ற நோய் அரசாங்கத்தையும் அரசியலையும் வாட்டி வதைக்கின்றன. நம்மிடம் நம் பாரம்பரிய மருத்துவ முறை, சித்த மருத்துவ முறை போன்ற முறைகளை ஏன் தேவைக்கேற்ப ஆங்கில மருத்துவ முறையுடன் இணைத்து செயல்பட வைக்க முடியவில்லை என்பதைப் பற்றிய எந்தப் புரிதலும் நம் ஆட்சியாளர்களுக்குக் கிடையாது. அறிவியல் அறிவுக்கு சான்றளிக்கும் மேற்கத்திய முறைக்குள் நம் மருத்துவ முறைகளைக் கொண்டு வரமுடியவில்லை. அதுதான் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு மிகப் பெரிய ஆயுதமாக இருக்கிறது. அது மட்டுமல்ல, மருந்துச் சந்தை என்பது மிகப்பெரிய சக்தி கொண்டதாகும். அரசியலை இயக்கும் சக்தி கொண்ட மாபெரும் பணபலமிக்க இயக்கம். அந்த இயக்கம் உள்ளூரிலிருந்து உலக சுகாதார அமைப்புவரை அரசாங்கத்துடன் பின்னிப் பிணைந்து செயல்பட்டுக் கொண்டுள்ளது. எப்படி நம் உள்ளூரில் உள்ள தேவாலயம் ரோமாபுரியில் உள்ள அமைப்புடன் ஒரு உயிரோட்டத் தொடர்பை வைத்திருக்கிறதோ அதே போன்றுதான் இந்த மருந்து தயாரிக்கும் நிறுவனம். அத்துடன் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனம். இவை இரண்டும் சந்தை சக்தியில் பெரும் பங்கு ஆற்றுவதால், அவை அரசியல், ஊடகம் இரண்டையும் தம்வயப்படுத்தி வைத்துக் கொண்டுள்ளன. இந்தச் சூழல் மக்களைத் தொடர்ந்து ஊடகங்கள் மூலம் மூளைச் சலவையும் செய்து வைத்துக் கொண்டுள்ளன. இதில் இன்னொரு பரிதாபமும் இருக்கிறது. அதாவது, மருத்துவத் துறைக்கான நியதிகள் அனைத்தும் தகர்க்கப்பட்ட

நிலையில் பெரும் பணம் பார்க்கும் பார்வை கொண்டதாகச் செயல்படுகிறது இந்தத் துறை. இதற்கு மருத்துவக் கல்வியையும் பணம் சம்பாதிக்க என்ற சிந்தனைப் போக்கில் கொண்டுவந்து விட்டனர். ஆரோக்கியமாக வாழும் விழிப்புணர்வை மக்கள் பெற்றுவிட்டால் இந்த மருத்துவக் கட்டமைப்பு இவ்வளவுக்குத் தேவையில்லை.

பெரும்பாலான மக்கள் தன் தேகம் பேணும் பார்வையோ, அதற்கான விழிப்புணர்வோ பெற்றவர்களாக வாழ தயாரிக்கத் தேவையான வாழ்வியல் கல்வியைத் தரவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் படித்தவர்கள் கூட தன் ஆரோக்கியம் தன் பொறுப்பு என்ற உணர்வோ பொறுப்போ இருப்பவர்களாக தயார் செய்து கொள்ளவில்லை. இதன் விளைவு நம் நடுத்தர வர்க்கமும் ஏன் மருத்துவர்களும் கூட நோயுற்ற நிலையில் வாழ்வதுதான் நாம் பார்க்கும் இன்னொரு பரிதாபகரமான சூழல்.

இதைவிட மற்றுமொரு வியாதி நம் நடுத்தர வர்க்கத்தை ஆட்டிப்படைக்கிறது. நம்முடைய அரசு மருத்துவமனைகளில் நல்ல மருத்துவர்கள் இருந்தும், வசதிகள் இருந்தும், அவையெல்லாம் ஏழைகளுக்கு, எனவே தரம் தாழ்ந்ததாக இருக்கும் எனக்கு, நாம் அங்குச் செல்வது நம் தரத்திற்குக் குறைவு என்று எண்ணி, கார்ப்பரேட் மருத்துவமனையில் நான் மருத்துவம் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறுவதில் ஒரு பெரிய பெருமை இருப்பதாக நினைத்து செயல்படுவது அடுத்த ஒரு மன வியாதி.

இவர்களைத் தொடர்ந்து ஏழைகளுக்கும் அரசு தருகின்ற உடல்நலம் பேணும் அட்டையைக் கொண்டு வந்து அந்தக் கார்ப்பரேட் மருத்துவமனைகளில் நோயாளிகளைச் சேர்த்து தங்கள் பணத்தையும் இழந்து, அந்த மருத்துவமனையில் மருத்துவம் பார்த்ததை ஒரு ஸ்டேட்டஸ்ஸாக பேசும் மனநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழலில் இந்தியாவில் முதல் அலையில் கொரோனா நகரங்களைப் பாதித்தது. நகரங்களில் நம் ஊடகங்களால் ஊடுருவ முடிந்தது. எனவே நகரங்களில் நிலை என்ன என்பதைப் படம் பிடித்துக் காண்பித்தது. இரண்டாவது அலை கிராமங்களுக்குள் புகுந்து விட்டது. நகரங்களிலேயே கொரோனா பாதித்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு வருவது மிகப் பெரிய சவாலாக இருந்தது. இப்பொழுது கிராமங்களில் என்ன நடக்கின்றது என்பது பலருக்குத் தெரிவது கிடையாது. தமிழகம் மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில் ஓரளவுக்கு ஊடகங்கள் புக முடியும். வட இந்தியாவில் பாவம் ஆஷாவாக பணிபுரிவோர் கிராமத்தில் எப்படி கொரனா பாதித்தவரைக் கண்டுபிடித்து மருத்துவமனைக்குக் கொண்டு வருவார். உங்களுக்குத் தொற்று இருக்கிறது என்று ஒரு ஆஷாவால் கூறமுடியுமா? அப்படிக் கூறினால் அவர் உயிருடன் திரும்ப முடியுமா? உண்மை நிலை கொரனா நோயாளிகளுக்கு மருத்துவம் என்பது தலைநகரங்களில் நிகழ்கிறது. கிராமங்கள் மாவட்டத் தலைநகரம் அல்லது அடுத்த பெரு நகரம் நோக்கி ஓலமிட்டு ஓடுகின்றனர். ஆங்காங்கே இருந்த சிறிய மருத்துவமனைகள் மூடப்பட்டு விட்டன. சித்த வைத்திய சாலைகள் மூடப்பட்டு அனைவரும் அரசின் மையங்களுக்கு வந்தாக வேண்டும். அல்லது தனியார் மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டும். தனியார் மருத்துவமனைகளை பல கோடிகளைக் கொட்டி உருவாக்கியிருக்கிறார்கள். தற்போது அவர்களுக்கு ஒரு வசந்த காலம். அவர்கள் அரசின் வேண்டுகோளுக்கு செவி சாய்ப்பது மாதிரித் தெரியவில்லை. அதிலும் ஒரு வேடிக்கை, நோயாளிக்கு கடுமையாக இருக்கிறது என்றால் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விடுகிறார்கள்.

இத்தனை ஆண்டுகளிலும் நம் அரசாங்கமும் அரசியலும் மக்களை ஆரோக்கியம் பேணுவதில் பொறுப்பு மிக்கவராக செயல்படத் தேவையான விழிப்புணர்வை, புரிதலைக் கொடுக்க முடியவில்லை என்பது நம் தோல்வி. முதல் அலை ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரை கணக்கிட்டால் ஓராண்டு ஆகின்றது. பொதுமக்கள் முகக் கவசம் அணிய வேண்டும், கை கழுவ வேண்டும், சோப்புப் போட்டு, கிருமி நாசினியைப் பயன்படுத்துங்கள், மனித இடைவெளியைக் கடைப்பிடியுங்கள் என்ற அனைத்துச் செயல்பாடுகளையும் தொடர்ந்து ஊடகங்கள் மூலம் வலியுறுத்தி வந்தும், பெரும் மாற்றம் கிராமங்களில் வரவில்லை. அங்கு ஒரு அரசாங்கம் இருக்கிறது. அதற்கு ஒரு பரிவாரம் அங்கு இருக்கிறது. அவர்கள் அனைவருக்கும் பொறுப்புக்கள், கடமைகள் உள்ளன. அவர்களின் பொறுப்பு பெரிய அளவில் தூய்மைப் பணி நடைபெற்று அது கிராமக் கலாச்சாரமாக மாற வேண்டும். அதேபோல் பொதுமக்களின் நடத்தையில் மாற்றங்கள் வர வேண்டும். முகக்கவசம் முண்டாசு கட்டுவதுபோல் அணிய வேண்டும். சோப்புப் போட்டு கை கழுவுவது அவர்கள் சிந்தனையில் ஒன்றிக் கிடக்க வேண்டும். எங்குச் சென்றாலும் கூட்டமாகக் குவியாமல் வரிசையில் நிற்க பழகிக் கொண்டிருக்க வேண்டும். எல்லாத் தேநீர்க் கடைகளிலும் கபசுரக் குடிநீர் வழங்கும் பழக்கத்துக்கு வந்திருக்க வேண்டும். 100 நாள் வேலை செய்யும் இடங்களில் அரசு கொடுத்த அத்தனை வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். இவையெல்லாம் பின்பற்றப்பட்டிருந்தால் மக்களுக்கு சிந்தனையில் மாற்றம் வந்துவிட்டது என்று நாம் கருத முடியும். கிராமங்களின் நிலைமை அப்படி இல்லை. கிராமங்களில் மக்கள் அறிவியல் சிந்தனையுடன் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவில்லை என்றாலும், சந்தை தரும் தொழில் நுட்பங்கள் அனைத்தும் அவர்களின் உபயோகத்தில்

உள்ளன. அதில் ஒன்று தகவல் தொலைத் தொடர்பு. தொலைக்காட்சிப் பெட்டியும், கைபேசியும் இல்லாத வீடு இருக்க முடியாது. கழிப்பறை இல்லாமல் வீடுகளை நாம் காணமுடியும். அந்த வகையில் அவர்களுக்கு ஊடகங்கள் கொண்டு வந்து கொட்டும் செய்திகள், சமூக ஊடகங்கள் தரும் செய்திகள் அவர்களின் அச்சத்தை, குழப்பத்தைப் போக்குவதற்குப் பதில் அச்சத்தின் உச்சிக்கே கொண்டு செல்வதை நாம் பார்க்க முடிகிறது.

இதற்குத் தீர்வுதான் என்ன என்று யோசிக்கும் போது, நம் சித்த வைத்தியம் போல் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நம் பாரம்பரிய மருத்துவ முறைகளைக் நெறிப்படுத்தி அந்த முறைகளில் படித்தவர்களை களத்தில் இறக்கி செயல்பட வைக்க வேண்டும். இந்த நேரத்தில் ஆரம்ப நிலையில் இருக்கும் கொரோனா நோயாளிகளைக் கவனிக்க அவர்களையும் முறைப்படுத்தி அனுமதிக்க வேண்டும். அவர்களுடைய மருத்துவமனைகள் திறக்கப்பட வேண்டும். இன்று பிராணவாயு தேவைதான் பிரச்சினையாக இருக்கிறது, அதற்கான மாற்று அவர்களிடம் இருக்கும் போது அதைப் பயன்படுத்த நம் அரசு முனைய வேண்டும். களத்திற்கு ஆட்கள் தேவை. அவர்கள் தயாரிப்புடன் இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்த நமக்குத் தேவை ஒரு வழிகாட்டி நெறிமுறை வகுப்பது. அதைச் செய்தால் அரசின் பாரமும் குறையும்; மக்களின் தேவையும் பூர்த்தியாகும். அத்துடன் சித்த மருத்துவம் என்பதை முறைமைப்படுத்தவும் வேண்டும், தரப்படுத்தலும் வேண்டும். அதற்கான ஆய்வுகள் என்பது பெருமளவு நடைபெற வேண்டும். அதற்கான கவனம் செலுத்தப்படல் வேண்டும்.


சித்த மருத்துவம் போல் உள்ள நம் பாரம்பரிய மருத்துவங்கள் கிராமங்களில் முறைப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டால் அதுவே மிகப் பெரிய சமூகத்திற்கு சேவையாக இருக்கும். இந்த முறைகள் நம் ஆங்கில முறைகளுடன் இணைந்தும் செயல்பட அனுமதிக்கப்பட்டால் இன்றைய அரசின் பாரமும் குறையும், மக்களின் பாரமும் குறையும். இன்று நம் மக்களுக்குத் தேவை தன் உடல் பற்றிய ஒரு புரிதல் மற்றும் பார்வை. தன் ஆரோக்கியம் பற்றிய புரிதல் மற்றும் ஆரோக்கியமாக உடலை வைத்துக் கொள்ளும் வழிமுறைகள். இவைகள் நம் பாரம்பரிய நம் நாட்டு சித்தர் மரபில் நிறைய இருக்கின்றன. அவற்றை ஆய்வின் மூலம் வெளிக் கொணர்ந்து ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கு நம் மக்களுக்குத் தேவையான விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். இதைப்பற்றி அறிவு சார்ந்த விவாதம் முன்னெடுக்கப்படுவது இன்றைய காலச் சூழலில் தேவையாக இருக்கிறது. அதை நம் தமிழக அரசு செய்ய முன்வர வேண்டும். ●



## அஞ்சலி

அறிவியல் தமிழறிஞர் வெ.சாமிநாத சர்மா மற்றும் ம.பொ.சிவஞானம் ஆகியோரைத் வழிகாட்டிகளாகக் கொண்டு தமிழ் ஆய்வுலகுக்கு அளப்பரிய பங்காற்றிய எழுத்தாளர், தமிழறிஞர் பெ.சு.மணி அவர்கள் 27-4-2021 அன்று இயற்கை எய்தினார். அவரது மறைவுக்கு 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு சமூக சீர்திருத்த இயக்கம், அரசியல் இயக்கம், பக்தி இயக்கம் மற்றும் தமிழகப் பண்பாட்டு வரலாறு குறித்து எண்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுநூல்கள் எழுதிய 'பாரதியியல்' ஆய்வறிஞர் பெ.சு.மணி அவர்களின் நீண்டகாலத் தமிழ்த்தொண்டு என்றென்றும் போற்றுதலுக்குரியதாகும்.




# காந்தி - லெனின்

## ஆர். பட்டாபிராமன்

காந்தியடிகள் தான் வாழ்ந்த காலத்திலும் தொடர்ந்தும் பல்வேறு உலகத்தலைவர்களுடன் - ஆளுமைகளுடன் ஒப்பிடப்படுவதைப் பார்க்கமுடியும். மார்க்ஸ் உடன் காந்தியை ஒப்பிட்டு மஷ்ருவாலா எழுதினார். விநோபாபாவே அவர்கள் அதில் முன்னுரை தந்திருப்பார். காந்தி - மார்க்ஸ் ஒப்பீட்டை காந்தியைக் கண்டுணர்தல் என்கிற எனது முந்திய ஆக்கத்தில் பல்வேறு கட்டுரைகளில் இடம் பெறச் செய்துள்ளேன். மார்க்சியம் - லெனினியம் என்கிற அளவிற்கு மார்க்ஸ் உடன் இணைப்பைப் பெற்ற லெனினுடன் காந்தியை ஒப்பிடுதல் என்பது இங்கே முயலப்பட்டுள்ளது.

காந்தியையும் லெனினையும் ஒப்பிட்டு 1920களில் இரு புத்தகங்கள் வந்தன. ஒன்று மார்க்சிய - சோசலிச சிந்தனைகொண்ட இந்திய இளைஞர் தோழர் டாங்கே (1899-1991) எழுதி 1921இல் வெளியான புத்தகம் Gandhi VS Lenin . இப்புத்தகம் அளவில் சிறியது. இந்த 2021 ஏப்ரலில் அப்புத்தகம் நூற்றாண்டைக் கண்டது.

அடுத்த புத்தகம் ரெனி ஃபுலோப் மில்லர் எழுதி 1927இல் வெளிவந்த லெனினும் காந்தியும் (Lenin and Gandhi) என்பதாகும். அளவில் பெரிய புத்தகம். ரெனி ஃபுலோப் மில்லர்(1891-1963) வியன்னாவில் செயல்பட்ட கலாச்சார வரலாற்றாசிரியர். மில்லர் எழுதியதை இந்திய வரலாற்றாசிரியர் ராமசந்திர குஹா நல்லவகையில் மதிப்பிட்டுள்ளார். இரு ஆளுமைகளையும் உச்சங்களாக மில்லர் மதிப்பிட்டதை குஹா தெரிவிக்கிறார்.

Gandhi VS Lenin புத்தகத்தை 1921இல் தோழர் டாங்கே எழுதியபோது அவருக்கு வயது 21. இளம் தேசபக்தரின் துணிவான செயலாக இவ்வாக்கத்தைப்

பார்க்கலாம். காந்தியின் ‘ஒத்துழையாமை இயக்கத்தை’ கொண்டாடியவர்கள் ருஷ்ய போல்ஷ்விக்குகளுக்கு இணையான போராட்டம் என்று வர்ணித்ததை ஏற்கமுடியாமல் இரண்டிற்குமான வேறுபாடுகளை இந்தியர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற அவாவில் டாங்கே அதை எழுதினார். டாங்கே ஒத்துழையாமையில் பங்கேற்று தனது கல்லூரிப் படிப்பைவிட்டு வெளியேறியவர்.


இந்தப் புத்தகம் லெனின் பார்வைக்குப் சென்றதாகவும், இந்தியர்களிடம் ‘மார்க்சிய உணர்வு’ பெருகி வருவதாக லெனின் குறிப்பிட்டதாகவும் செய்திகள் உள்ளன.

திலகரின் தொண்டனாகவும் சோவியத் புரட்சி குறித்து அறிந்தவராகவும் இருந்த டாங்கேவிற்கு மாறுபட்ட காந்தியின் போராட்டம்- சிந்தனைமுறை விமர்சனம் செய்யப்படவேண்டிய ஒன்றாக இருந்தது. அதே நேரத்தில் அதன் வன்முறைக்கு எதிரான உறுதிப்பாட்டை, முதலாளித்துவம் சுரண்டலுக்குரிய முறை என்கிற காந்தியத்தை முற்றிலுமாக நிராகரிக்கமுடியாத நிலையும் இளம் டாங்கேவால் உணரப்பட்டிருந்தது

மார்க்சியக் கருதுகோள்களான உற்பத்தி உடைமை, உபரிமதிப்பு ஆகியவற்றை டாங்கே விளக்குகிறார். சோசலிச சமூக மாற்றத்திற்கு ஆயுதம் தாங்கிய புரட்சி தவிர சமாதான வழிகளைப் பேசுவது அறிவீனம் என்பதை ஆரம்பப் பக்கங்களில் சொல்கிறார்.

இந்திய முதலாளிகள் மூன்றுவகைப் பாவங்களை செய்கின்றனர். அந்நிய கொடுங்கோல் ஆட்சியை ஆதரிக்கின்றனர். இந்திய விவசாயிகளையும், கூலிக்காரர்களையும் சுரண்டுகின்றனர். அய்ரோப்பியர் களுக்கு ஆதரவாக நின்று நமது நாட்டின் வறுமைப் பெருக்கத்திற்குத் துணை நிற்கின்றனர். எனவே இரு கடமைகளாக அந்நிய நுகத்தடியிலிருந்து விடுதலை, முதலாளித்துவத்தை அப்புறப்படுத்தல் ஆகியவை எழுகின்றன. இதற்கு வழிமுறை தான் என்ன? என்கிற கேள்விக்கு டாங்கே விடைதேட முயற்சித்தார்.

நவீன தொழில்மய சமூகத்தின், நாகரீகத்தின் கேடுகளை காந்தியும் விமர்சிக்கிறார். ருஷ்யாவின் போல்ஷ்விக்குகளுக்கும் இந்தப் பார்வை இருக்கிறது. இந்துக்களுக்கு கீதை, கிறிஸ்துவர்களுக்கு பைபிள் போல போல்ஷ்விக்குகளுக்கு மார்க்சின் மூலதனம் இருக்கிறது. பொருளாதார பொருண்மைவாதம், உபரிமதிப்பு, வர்க்கப்போராட்டம் மூன்றும் போல்ஷ்விக்குகளின் கருத்தில் கவனம் கொண்டு நிற்பவை. சோசலிசப் புரட்சி என்றால் தொழிலாளர்- விவசாயிகளின் ஆயுதம் தாங்கிய வர்க்க



GANDHI vs. LENIN

BY

S. A. DANGE.

*"We shall not give the Govt. assistance to collect revenue. We shall not assist them in carrying on the administration of justice. We shall have our own courts and if time comes, we shall not pay taxes."*

*Lok. B. G. TILAK.*
*in 1906.*

புரட்சியைத்தான் சொல்கிறோம். முதலாளித்துவத்தின் கோரமான மூர்க்கத்தை சமாளிக்க இது அவசியம் என அவரது தேடல் சென்றது. டாங்கேவின் எழுத்தில் இது இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

*"...an armed revolution of the workers and peasants, with all the fanaticism of a religious belief is the only remedy."*

முதலாளித்துவம் அப்புறப்படுத்தப்பட்டபின் இந்த வெறி தணியும் *(when they have been disposed, fanaticism will fade).*

“காந்தி அனைவரும் உழைக்கவேண்டும் எனச் சொல்கிறார். சோம்பிக்கிடப்பவன் திருடன் என்கிறார். ராட்டை நூற்பு என்பதை முன்வைக்கிறார். ஆனால் உலகின் பேரளவு உற்பத்திக்கு முன்னர் கைத்தறி நெசவால் ஏதும் செய்யமுடியாது. காந்தியம் தொழிலாளர் தங்களைத் தூய்மைப்படுத்திக்கொள்ளவேண்டும் என அறிவுறுத்துகிறது. பிரிட்டிஷ் போன்ற கொடுங்கோன்மை ஆட்சியிலிருந்து விடுபட காந்தியம் போல்ஷ்விசத்திற்கு நேர் எதிரானவற்றை முன்வைக்கிறது. போல்ஷ்விக்குகள் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் மூலம் மனிதமனத்தை மாற்றுதல் என முன்வைத்தால், காந்தி மனிதமனம் மாற்றம் என்பதை முன்வைக்கிறார். அவரைப் பொறுத்தவரை வன்முறை வன்முறைக்குத்தான் வித்திடும்.” என டாங்கே எழுதியுள்ளதைப் பார்க்கிறோம்.

காந்தியம் என்பது இரு அம்சங்களைக் கொண்டிருக்கிறது என டாங்கே மேலும் விளக்குகிறார்.

*One relates to general evils, common to all human society and treats of the solution of problems affecting all. Another aspect treats of the special evil of despotism and proposes means to do away with it."*

*Non Violent Non cooperation* என்பதை காந்தி முன்மொழிகிறார். டால்ஸ்டாய் சொல்வதை ருஷ்யாவே கைவிட்டுவிட்டது. காந்தி எடுத்துக்கொண்டுள்ளார்- *'Gandhism relies on individual purification, individual consciousness, conviction and individual action'.* மனசாட்சியின்படி செயலாற்று என அது பேசுகிறது. இது நல்ல இலட்சியக் கனவாக இருக்கலாம் என்பது அன்றைய டாங்கேவின் விமர்சனம்.

போல்ஷ்விசம் *inherent goodness* என்ற நம்பிக்கையைக் கொள்ளவில்லை. லெனின் காந்தி இருவருக்கும் இன்று நிலவும் சமூகக் கொடுமைகளிலிருந்து மக்களை மீட்பது என்கிற பொதுவான இலட்சியம் இருக்கிறது. ஆனால் இதற்குக் காரணங்கள் என்பதில் நவீன நாகரீகம்- தொழில்புரட்சி மனிதனிடம் காணப்படும் தீங்கான செயல்கள் என்பதுடன் காந்தி நிற்கிறார். லெனின் உற்பத்திமுறை- நிலம் - முதலாளி- அசமத்துவம் என்பதைக் காண்கிறார்.

தீர்வுதான் என்ன என்பதிலும் இருவரும் மாறுபடுகின்றனர். நவீன நாகரீகத்திலிருந்து காத்துக்கொள்தல் என காந்தி மொழிந்தால், லெனின் இந்த வளர்ச்சியை பெருவாரியான உழைக்கும் மக்களுக்கு சாதகமாக மாற்றுவது எப்படி என்பதைப் பேசுகிறார். வழிமுறைகள் என பார்த்தால் கொடுங்கோன்மை அகல அதனுடன் அனைவரும் ஒத்துழையாமையை அனுசரிப்பது என்கிறார் காந்தி. லெனினோ புரட்சிகர சிறுபான்மையால் அவர்களை வீழ்த்தமுடியும் என்பதுடன் பெரும்பான்மை அவர்களின் சொந்த நலனை உணர்ந்து பின்தொடர்வர் என்கிறார். அதுதான் சாத்தியமான வழி என்கிறார்.

காந்திக்கோ மத நம்பிக்கையும் அகிம்சையும்தான் சிறந்த வழியாக இருக்கிறது. வன்முறை வன்முறையைத்தான் பெருக்கும் என காந்தி பேசினால், லெனின் வன்முறை தற்காலிகமானதே- குழப்பங்கள் முற்றிலுமாக நீங்கி மக்களின் நல்வாழ்வு திடமாகும் என்கிறார்.

போல்ஷ்விக்குகளால் அவர்கள் முழங்கிய *'land Bread and peace'* என்பதை தரமுடிந்துள்ளது. லெனின் சர்வாதிகார ஆட்சி நடப்பதாக சொல்லப்படும் மாஸ்கோ சென்ற பத்திரிகையாளர் லெனின் அலுவலகத்தில், அவரின் எளிமையைப் பார்த்துவிட்டு வியந்து பேசினார். இந்த விஷயத்தில் அவர் காந்தி போல இருக்கிறார் என டாங்கே வியக்கிறார்.

ருஷ்ய புரட்சி என்பது முதலாளித்துவ காலத்தை முடிவிற்குக் கொணர்ந்து உழைப்பவர்க்கான காலத்தைத் திறந்துவிட்டுள்ளது. சோவியத் ஆட்சியின் மேன்மைகளைப் பேசிய டாங்கே இந்தியாவில் புரட்சி குறித்தும் தனது எண்ணத்தைத் தந்துள்ளார்.

*Indian Revolution* என்கிற பகுதியில் இந்தியாவிற்கு என்ன வழி எனக்கேட்டு டாங்கே விவாதித்துள்ளார். நமது கான்ஸ்டிடியூஷன் முறை வெற்றியைத் தராது. நாம் ஆயுதம் தாங்கிய புரட்சிதான் என போகவேண்டியதில்லை. அதேநேரத்தில் தீவிர மாற்றங்களை அடியோடு உருவாக்கும் புரட்சி தேவை என்பதை டாங்கே சொல்கிறார்.

இந்தியாவில் 64 சத சொத்தை 2 சத பெரும் பணக்காரர்கள் அனுபவிக்கிறார்கள். சாதாரண 88 சத மக்களிடம் 12 சதம் சொத்து இருக்கிறது. நம்முடைய போராட்டத்தில் வன்முறைதான் வழி என இல்லாவிடினும் வன்முறை ஆங்காங்கே அவ்வப்போது நிகழ்வது தவிர்க்கமுடியாததாகலாம். கம்யூனிஸ்ட் திட்டம் என்பதை நாம் முழுமையாக ஏற்கவேண்டாம். தேசியமயம்- அரசாங்கத்துறை என்ற அளவு அத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் மூலதனக் குவிப்பைத் தடுத்தாக வேண்டும்.

செல்வம் - சொத்து என்றால் இவ்வளவுதான் அதிகபட்சம் என்கிற உச்சவரம்பு வேண்டும். இன்றுள்ள நிலையில் 4 பேர் உள்ள குடும்பம் எனில் ரு 150 போதும். எனவே *very luxurious life* அனுபவிப்பவர் யார் யார் என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டும். அதிகபட்சம் ஒரு லட்சம் ரூபாய் என உச்சவரம்பு விதிக்கவேண்டும். அதற்கு மேல் அவர் சம்பாதித்தால் உபரியை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். இது ஆலோசனை மட்டுமே என டாங்கே முன்மொழிந்தார். காந்தியின் தர்மகர்த்தா முறையில் முதலாளிக்கு குறிப்பிட்ட அளவு கமிஷன் என முன்மொழியப்பட்டதை நாம் அறிவோம்.

அதேபோல் விவசாயிகளுக்கு நிலப்பகிர்வு மற்றும் கிராமப்புறக் கடன் வசதி மேம்பாடு பற்றி டாங்கே முன்மொழிவுகளைச் செய்தார். இப்படி சில சீர்திருத்தங்கள் மூலம் முதலாளி- நிலப்பிரபுக்களைக் கட்டுக்குள் வைக்கலாம். ஆரம்பத்தில் சில எதிர்ப்புகள் வரலாம். இறுதியில் வெற்றிபெறுவோம் என்கிற நம்பிக்கையை இந்த ஆக்கத்தில் டாங்கே தந்திருந்தார்.

சோவியத் குறித்து பெருமிதங்களைப் பேசினாலும், திலகரைக் கொண்டாடுபவராக இருந்தாலும் காந்தியின் தாக்கத்தை நிராகரிக்க முடியாமல் நூறாண்டுகளுக்கு முன்னால் 21 வயதில் டாங்கே இருந்துள்ளமையை நாம் உணரமுடியும். போல்ஷ்விக்குகளின் பாதையை அப்படியே ஏற்பது அவசியமில்லை என்கிற பார்வையும் டாங்கேயிடம் அப்போது இருந்ததை உணரலாம். தேசபக்த தேசியவாதத்திலிருந்து

மார்க்சியராக, கம்யூனிஸ்டாகப் பரிமாணம் பெறும் இளைஞரின் பார்வையாக இவ்வாக்கம் பொதுவாகக் கருதப்படுகிறது.

## II

அடுத்த மிக முக்கியமான புத்தகம் ரெனி ஃபுலோப் மில்லர் எழுதிய 'லெனினும் காந்தியும்' ஆக்கமாகும். புத்தகத்திற்கான முன்னுரையில் மில்லர் ( 1927 மார்ச்) இவ்வாறு வரையறுத்திருந்தார்.

"லெனின் காந்தி இருவருமே வெவ்வேறு வழிகளில் தங்களின் துணிச்சல்மிக்க சோதனைகளை மானுட மேம்பாட்டிற்காகச் செய்தவர்கள். இருவரும் ருஷ்யா, இந்தியா என தங்கள் எல்லைக்குள் நின்று தங்கள் நாட்டின் எதிர்கால திசைக்கான போராட்டத்தை நடத்தினர். சொந்த நாட்டில் நின்று காலூன்றி மக்களின் விருப்பங்களை, கனவுகளை உணர்ந்து செயலாற்றினர். ஆனால் அவர்களின் செயல்பாடுகள்- அரசியல் திசைவழி நாடு கடந்து உலகில் பரவின. உலக மக்களின் பரந்த அனுபவத்திற்காக ருஷ்யா லெனினாலும், இந்தியா காந்தியாலும் *'subject'* ஆக இருந்தன என புரிந்து கொள்ளலாம். இருபதாம் நூற்றாண்டின் தலைவாயிலில் நின்ற இரு தீர்க்கதரிசிகளாக லெனினும் காந்தியும் தெரிகின்றனர். அவர்களைக் கூர்ந்து கேட்போமானால் சகாப்தங்களைத் தொடங்கி வைத்தவர்கள் என்ற உணர்வைப் பெறுவோம்."

லெனின், காந்தி இருவருமே அய்ரோப்பிய கலாச்சாரம் மீதான விமர்சன பார்வையைக் கொண்டவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களின் வழிமுறைகள் வேறாக இருந்தன.

லெனின் கொடும் ஜார் அரசை அப்புறப்படுத்தி தனது மார்க்சிய இலட்சிய அரசை உருவாக்க வன்முறை எனும் வழியைத் தேர்ந்தெடுத்தார். காந்தி *evil empire* என வர்ணிக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசை எதிர்த்து அகிம்சை வழி ஒத்துழையாமையைத் தேர்ந்தெடுத்தார். லெனின் 'சோவியத் நாட்டை மின்சாரமயமாக்குதல், தொழில்நுட்ப வளர்ச்சியை உருவாக்குதல்' சோசலிச பாதை என்றார். காந்தி தொழில்புரட்சி என்ற பெயரால் கோடானுகோடி கைகளுக்கு வேலைகொடுக்கமுடியாத எந்திரமயத்தை எதிர்த்தார். எந்திரத்திற்கு மனிதன் அடிமையாகிவிடக்கூடாது என எச்சரித்தார்.

ரெனி ஃபுலோப் மில்லர் லெனின் வெற்றியின் இரகசியம் என பேசும்போது கோட்பாட்டு செல்வாக்கை நடைமுறையில் கொடுத்ததிலும், நடைமுறை அனுபவங்களின் பாற்பட்டு அவற்றை தனது கோட்பாட்டு அம்சங்களில் குழைத்துக் கொள்வதிலும் இருந்தது என்கிறார். லெனின் தான் பெற்ற கோட்பாட்டறிவை மாற்றிக்கொள்வதிலும் தயங்காமல் இருந்தார். காந்தியும் தனது *inconsistency* குறித்து வந்த விமர்சனங்களில் வீழாமல் உண்மைக்கு அந்த அந்தத் தருணங்களில் நெருக்கமாக இருப்பது என்கிற வழியில் வாழ்ந்தார்.

டால்ஸ்டாய் குறித்த சில விமர்சனங்கள் லெனினிடம் இருந்தாலும் கார்க்கியிடம் பலமுறை மிக உயர்வான மதிப்பீடுகளை வெளிப்படுத்தினார் லெனின். "*Tolstoi what a mass ! What a wealth of material.. What has Europe to compare with Tolstoi.. Nothing* என கார்க்கியிடம் அவர் மகிழ்ந்து வெளிப்படுத்திய தருணத்தை மில்லர் தருகிறார். காந்தியும் டால்ஸ்டாயால் பெருமளவு ஈர்க்கப்பட்டவர் என நாம் அறிவோம்.

ஒருமுறை துணைவியார் குருப்ஸ்காயாவுடன் நாட்டில் உள்ள கல்வியறிவின்மை பற்றி லெனின் உரையாடியபோது, புரட்சிக்கு அந்தக் கல்வியறிவற்றவர்கள்தானே உடன் நின்றனர் என குருப்ஸ்காயா தெரிவித்தார். ஜாரின் வீழ்ச்சி என்கிற அழித்தலுக்கு அந்தச் சூழல் உதவியாக இருந்திருக்கலாம். ஆனால் புரட்சி என்பது வெறும் அழிவுவேலையல்ல. இடிப்பதற்காக மட்டுமே நாம் இடிக்கவில்லையே. புது கட்டுமானத்திற்கு கல்வியறிவின் மேம்பாடு மிக அவசியம் என்றார் லெனின். காந்தியும் 'நயி தாலிம்' என்கிற அடிப்படைக் கல்விக்காக நின்றதை நாம் அறிவோம். லெனினும் சோசலிச கட்டுமானத்திற்கு *liquidate illiteracy* என்றார்.

லெனினைப் பொருத்தவரை போல்ஷ்விசத்தின் அரசியல் தேவைகளுக்குத்தான் முன்னுரிமை தந்தார். ஒழுக்க நெறிகள், சீலம் என்பதெல்லாம் அதற்கு துணைநிற்கும் அளவிற்குத்தான் அவரிடம் கவனம் பெற்றன. சுதந்திரம் என்பதைக்கூட பூர்ஷ்வா சொல்லாடலாக அவர் பார்த்தார். மரணதண்டனை ஒழிப்பு என மக்கள் கமிசார் கூட்டத்தில் பேச்சு வந்தபோது அதனை ஒழிப்பது பைத்தியக்காரத்தனம் என்றார். எதிரிகளை சிறையில் போடுவதால் மட்டும் வெற்றி கிட்டிவிடும் என இருந்துவிடக்கூடாது என எச்சரித்தார்.

ஓடுகாலிகளுக்கு, புரட்சியின் துரோகிகளுக்கு மட்டும் தண்டனை என சொல்லலாமா என காம்னேவ் கேட்டபோது அந்த நல்ல எண்ணம் மாயைதான் என்றார் லெனின். புரட்சிக்கு எதிராக பயங்கரவாதம் இருக்கும்போது புரட்சியின் வெற்றிக்காக நமது பயங்கரவாதம் தேவை என்கிற கருத்து அவரிடம் இருந்தது. *'Friendly kindly fashion '* மூலம் அவற்றைச் செய்ய முடியாது. தூங்குமூஞ்சி சர்வாதிகாரம் என ஏதும் இருக்க முடியாதென்றார்.

நமது சூழல்கள் நம்மை கடுமையாக கொடுமையாக நடக்க வைத்துள்ளன. நமது குழந்தைகள் ஆரோக்கியமான எதிர்காலத்தைப் பெறுவர் என லெனின் பேசும்போது அவரின் உள்மனம் எதற்காக நின்றது என்பதையும் சேர்த்தே உணரலாம்.

காந்தியோ வன்முறைதான் வழி எனில் அத்துடன் எந்தவித ஒத்துழைப்பும் கிடையாது என்பதில் தெளிவாக

நின்றவர். தூய்மையற்ற வழிகளால் எவ்வளவு உயர்வாகப் பேசப்படும் ஒன்றை அடைந்தாலும், விரைவில் அடைவதற்கான வழியாக இருக்குமே தவிர நீடித்து நிற்காது என அவர் உறுதியாக நம்பினார். இலக்கு இலட்சியம் என்பதைவிட வழிமுறைகளுக்கு அவர் முன்னுரிமை கொடுத்தார்.

லெனின் தன்னைப்பற்றி சக தோழர்கள் அவ்வப்போது செய்த விமர்சனங்களையெல்லாம் ஒருமுறை தொகுத்து சொன்னார்.

*" ...autocratic, bureaucratic, centralist, one sided, pig headed, narrow, suspicious and unsociable"*

புரட்சிக்குப் பின்னர் ஜெர்மன் தாக்குதல் என அறிந்தபோது டிராட்ஸ்கி லெனினுடன் உரையாடுகிறார். நாம் இருவரும் கொல்லப்பட்டால் புகாரின் சமாளிப்பாரா? அவர்கள் நம்மைக் கொல்லமாட்டார்கள் என நினைக்கிறேன் என டிராட்ஸ்கி கூற லெனின் பதில் தருகிறார். யார் அறிவர்- கடவுளுக்குத்தான் தெரியும் எனச் சொல்லி லெனின் சிரித்தார். நாம் புரட்சிக்குப்பின் நன்றாக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தோம். இப்போது பிடரிமயிரைப் பிடித்துக்கொண்டு செல்லும் நிலையில் இருக்கிறோம். நிலைமைகளை சமாளிக்கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என துரிதமாக லெனின் செயல்பட்டதால் பிரஸ்ட் லிட்டொவ்ஸ்க் சமாதான உடன்படிக்கை வந்ததை நாம் அறிவோம்.

காந்தி அனைத்து நேரங்களிலும் கடவுள் வழிகாட்டுகிறார்- உள் குரல் என செயல்பாடுகளை அமைத்துக் கொண்டார் என்பதை அனைவரும் அறிவர். லெனின் அப்படி உள்குரல் என எதையும் சொல்லிக்கொண்டதில்லை.

லெனின் தனது கருத்துக்களில் உறுதியாக நிற்பார். தான் பலநேரங்களில் தனித்து விடப்படுகிறோம் என்பதை அறிந்தாலும் *no fear of isolation* என்பது அவரிடம் இருந்தது. காந்தியும் இதே குணம் கொண்டவராகச் செயல்பட்டார். நாடு பிரிவினையின் போது அவர் எவ்வாறு தனிமையானார் என்பது விவரம் அறிந்தவர்களுக்கு நன்றாகத் தெரிந்த செய்தி. அதேநேரத்தில் அஞ்சாமல் உறுதியாக வகுப்புக்கலவரப் பகுதிகளில் நேரில் சென்று மக்களுடன் இருந்து கடமையைச் செய்து அமைதிப்படுத்தினார்.

காந்தியை மேற்குலகிற்கு அறிமுகப்படுத்துவதில் மிக முக்கிய பங்காற்றிய ரொமெய்ன் ரோலந்த் லெனின் குறித்து இவ்வாறு எழுதினார். *Lenin the greatest man of action in our century and at the same time the most selfless.* ரஸ்ஸல் இந்த நூற்றாண்டில் லெனினும், அய்ன்ஸ்டினும் வரலாற்றின் புருஷர்களாக இருப்பர் என்றார்...

காந்திக்கு தனது கருத்து சரியாக இருக்கிறது என்கிற நம்பிக்கை பலமாக ஏற்பட்டால்தான் அதை நோக்கி மற்றவரை அழைக்க அவர் முற்படுவார். ரோலந்த் அவரது மனநிலையை அழகாகத் தருவார் *His forehead remains calm and clear, his heart devoid of vanity. He is a man like all other men.* கோடானுகோடி இந்தியர்களுக்குத் தொண்டன் என்பதைத்தவிர என்னை அழைத்துக்கொள்ள வேறு ஏதுமில்லை என்பார் காந்தி.

காந்தி தன்னைப்பற்றித் தருகின்ற சொற்சித்திரம் அவரைப்போல உண்மையானதாக, எளிமையானதாக இருப்பதைப் பார்க்கலாம்.

“ எனக்கு எந்தப் பிரிவையும் (செக்ட்) உருவாக்கும் நோக்கமில்லை. கடவுளின் விருப்பங்களை நிறைவேற்றும் ஏகபோக உரிமைக் கோரல்களும் என்னிடம் இல்லை. உண்மை என அறிந்தவற்றிற்காக நிற்பது, செயல்படுவது என இருப்பவன். என்னிடம் எந்த அமானுஷ்ய சக்தியும் இல்லை. நான் தவறுகள் இழைப்பவன்தான். எனது சேவைகளுக்கு வரம்பு இருக்கிறது.”


லெனின் படுகொலை செய்யப்பட்டு இறக்கவில்லை என்றாலும் அவர் மீது கொலை முயற்சிகள் நடந்தன. ஆகஸ்ட் 30, 1918 அன்று மாஸ்கோவில் ஆலைத்தொழிலாளர் கூட்டம் ஒன்றில் லெனின் பேசிவிட்டு வரும்போது ‘புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின்’ இளம் பெண் கப்ளான் என்பவர் லெனினை சுட்டார். லெனின் உயிர்பிழைத்தாலும் அவரால் தொடர்ந்து ஆரோக்கியமாக சக்தியுடன் பணியாற்ற முடியாமல் போனது. புரட்சி நடத்திய லெனினை புரட்சிக்கு துரோகம் செய்துவிட்டார் என விதைக்கப்பட்ட எண்ணத்தால் கப்ளான் சுட்டார்.

லெனின் ஜனவரி 21, 1924 மாலை மறைந்தார். அவரின் டாக்டர்கள் அவர் எப்படி தனது *will power* மூலம் இவ்வளவு நாட்கள் தாக்குப்பிடித்து உயிர்வாழ்ந்தார் என ஆச்சரியமடைந்த செய்தியை நாம் அறிகிறோம். லெனின் மறைவை அந்நாட்டு மக்கள் பலராலும் ஏற்கமுடியவில்லை. அவர் ‘*glass case*’ ல் இருந்துகொண்டு கவனித்து வருகிறார் எனக் கூட நம்பினர்.

காந்தி மீது கொலைமுயற்சி அவ்வப்போது நடந்திருந்தாலும் ஜனவரி 30, 1948 அன்று மாலை அவர் படுகொலை செய்யப்பட்டார். எந்த மதத்தின் மீதும் துவேஷமே பாராட்டாத காந்தியை- தன்னை இந்து சனாதனவாதி என அழைத்துக்கொண்ட காந்தியை இந்துத்துவ அரசியல் பின்புலத்திலிருந்து வெறியூட்டப் பட்ட கோட்சே கொன்றார்.

பல்வேறு இணை நிகழ்வுகள் கொண்ட இருவரும் தங்கள் வழிகளில் மானுட மேம்பாட்டை மட்டுமே தாகமாகக் கொண்டு செயல்பட்டனர். தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தனர்.

●



நான் இறந்தால் நீங்கள் அழுவீர்கள்
உங்கள் கதறல் எனக்குக் கேட்காது
என் வலிக்கு இப்போதே வருந்த முடியாதா

நீங்கள் பூமாலை சாத்துவீர்கள்
என்னால் முகர முடியுமா என்ன
அழகான பூவொன்றை இப்போதே
கொடுக்க முடியாதா

என்னைப் புகழ்வீர்கள்
எனக்குக் கேட்குமா சொல்லுங்கள்
ஓரிரு வார்த்தை இப்போதே
புகழ்ந்தால் குறைந்தா போவீர்கள்

என் தவறுகளை மன்னிப்பீர்கள்
நான் உணராமலே போவேன்
ஜீவன் இருக்கும் போதே
மன்னிக்க முடியாதா

நான் இல்லாத குறைக்கு வருந்துவீர்கள்
எனக்குத் தெரியாமலே போகும்
இப்போதே சந்திக்கலாமே

என் மரணச் செய்தி கேட்டவுடன்
வீட்டுக்கு ஓடி வருவீர்கள்
இரங்கல் சொல்வதற்கு பதில்
இப்போதே நலம் விசாரிக்க முடியாதா

பறந்து போகும் முன்னே
பகிர்ந்து வாழ்வது மேலல்லவா...?

***- சித்தலிங்கையா***

தலித் இலக்கிய முன்னோடிகளில் ஒருவரும் கன்னட எழுத்தாளரும் கவிஞருமான சித்தலிங்கையாவின் மறைவுக்கு ‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்‘ அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.

நூல் அறிமுகம்



# பெண்களுக்கான குரல்

## அம்பிகா குமரன்

புத்தகங்களோடு புழங்குவது என்பதும் தேசாந்திரியாக இருப்பதும் வாழ்க்கையை அர்த்தப்படுத்தும் இரண்டு முக்கியமான சூத்திரங்களாக இருக்கின்றன. எழுத்து ஒரு சமுதாயத்தை இந்த அளவுக்குப் பக்குவப்படுத்த முடியுமா? மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா?! என்ற வியப்பு சமீபமாக மேலெழுகிறது. குறிப்பாக, சமகால எழுத்துகளில் சூழலியல் சார்ந்த எழுத்துகள் அதிகம் கவனம் பெறுகின்றன. இயற்கையின் மொழியை,விளிம்பு நிலை மக்களின் மொழிகளைக் கற்றுக் கொண்டவர்கள் ஆசிரியர்களாக இருந்து தங்கள் எழுத்துகளால் சிலவற்றை இந்தச் சமூகத்திற்குக் கற்பிக்கவும் விட்டுச்செல்லவும் நினைக்கிறார்கள். அப்படியான எழுத்துகளில் ஒன்றுதான் தோழர் சுப்ரபாரதிமணியன் அவர்களுடையது. ஒரு கூட்டத்தில் பேசும்போது எழுத்து என்றாலும் எழுத்தாளர்கள் என்றாலும் ஒன்றுதான் என்றார் கவிஞர் சுகிர்தராணி. அப்படி எழுத்தாகவே வாழும் சுப்ரபாரதிமணியன் அவர்களின் சமீபத்திய தொகுப்பான, 'பால் பேத வன்முறையும் பங்களாதேஷ் அனுபவமும்' என்ற கட்டுரைத் தொகுப்பை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளி-யிட்டுள்ளது.

இத்தொகுப்பில் டாக்கா நகர பயணத்தினூடான தனது அனுபவங்களை விளிம்பு நிலை மக்களோடு தொடர்புபடுத்தி கட்டுரைகளாகக் கொடுத்துள்ளார்.

பத்துக் கட்டுரைகள் அடங்கிய இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள சில கட்டுரைகள் நீண்ட காலமாக நிகழ்ந்து கொண்டிருக்கக் கூடிய பெண்களின் மீதான நேரடியான மற்றும் மறைமுகமான வன்முறைகளைப் பேசுகிறது. பாலியல் வன்முறை என்பது நேரடியான பலாத்காரமாக இல்லாமல் எப்படியெல்லாம் பால்பேத வன்முறையாக நிகழ்கிறது என்ற கோணத்தில் இவர் குறிப்பிட்டிருக்கும் தரவுகள் அதிர்ச்சியளிக்கின்றன.

டாக்காவின் ஒரு பத்திரிகை வெளியிட்ட செய்திகளில் வெளியான சில சம்பவங்களான சிலவற்றை முன்வைக்கிறார்.

ஜம்காரா பகுதியின் பின்னலாடைத் தொழிலாளியான 20 வயது இளம்பெண் நான்கு நபர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகிறாள்

அவளது கணவன் ஓட்டுனராகப் பணியாற்றுகிறார். வீட்டு வாடகை செலுத்த முடியாத நிலையில் பணத்திற்காக கணவனின் முன்பே இந்த வன்முறை நடந்திருக்கிறது. இதே போல் ராஜாமணி என்ற பெண்ணின் மருத்துவப் பாலிசியில் தன் கணவர், குழந்தைகள் இடம்பெறவில்லை. கேட்டால் கணவரின் பாலிசியில் உங்களுக்கும் குழந்தைகளுக்கும் இடமளிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. மேலும் மேரி என்பவருக்கு அவர் வேலை பார்க்கும் பின்னலாடை நிறுவனத்தில் சம வேலைக்குச் சம ஊதியம் வழங்கப்படவில்லை.

இன்னும் ஒரு பெண்ணுக்குத் தன் குடும்பச் சூழலுக்காக அதிக நேரம் பணி செய்ய நினைக்கிறாள் பெண் என்பதால் அவருக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்படுகிறது, என்ற இந்தச் செய்திகளை பாலின பேத வன்முறைக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுகிறார்.

வேலையிடத்து பாலியல் வன்முறை என்ற கட்டுரையில் கால்சென்டரில் பணியாற்றும் பெண்கள், களப்பணியில் ஈடுபடும் நீதித்துறை சார்ந்த பெண்கள், கார்பன் தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்கள், சமையல் பணியில் ஈடுபடும் பெண்கள்,இந்தியப் படையில் இருக்கும் பெண்கள், மீடியா துறை சார்ந்த பெண்கள் என்று அந்தந்தத் துறைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் மனித உரிமை சார்ந்த அவலங்களையும், பாலியல் நெருக்கடிகளையும், பட்டியலிட்டு பணியிடங்களில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாத பெண்களின் ஆரோக்யம் சார்ந்த கழிப்பறை வசதி, புகார் மையங்கள் குறித்து வேதனைக் குரல் எழுப்புகிறார்.

டாக்காவின் பெண்கள் வன்முறை எதிர்ப்புக் கமிட்டியின் பயன்களை அறியாதவர்களாக, முறைசாரா தொழிலாளர்களாக இருக்கிறார்கள்

அவர்கள் தங்கள் வாழ்க்கையை டாக்காவில் கழிக்க விரும்பாதவர்களாக இருக்கிறார்கள் என்கிறார். அதை நிறுவும்படியான தஸ்லிமா நஸ்ரீன் என்ற கவிஞரின்

**"டாக்கா**
**இது என் நகரம் இல்லை**
**என்னுடையது என ஒரு போதும்**
**நான் சொல்லிக் கொண்ட மாதிரியான**
**நகரம் இல்லை இது**
**குள்ளத்தனமான அரசியல்வாதிகளுடையது இந்த நகரம்"**

என்று தொடங்கும் கவிதையைக் குறிப்பிடுகிறார்.

வங்கதேசத் தொழிலாளர் ஐக்கிய அமைப்பின் இயக்குனராக உள்ள கல்போனா அக்டர் என்பவரைப்





பால் பேத வன்முறையும்
பங்களாதேஷ் அனுபவமும்
சுப்ரபாரதிமணியன்
வெளியீடு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
விலை ரூ.65/-

பற்றிய கட்டுரையில் பின்னலாடைத் தொழில் சார்ந்த பெண்களுக்காக போராட்டங்களின் தேவை மற்றும் தொடரும் அவலங்களைக் குறித்துப் பேசியுள்ளார்.இத்தொகுப்பில் உரைநடையோடு சில கட்டுரைகளைக் கவிதையாகவும் பதிவு செய்துள்ளார்.

மேலும் கொரோனா காலப் பணி இழப்பு, விபத்திற்குப் பிறகு தொழிலாளியின் நிலை, மதுவிற்கு எதிரான பெண்களின் போராட்டம் என டாக்காவின் பெண்களைப் பற்றிப் பேசும் இந்தத் தொகுப்பில் ஓரிடத்தில் டாக்கா மட்டுமல்ல இந்நிலை இந்தியப் பெண்கள் அனைவருக்கும் பொருந்தும் என்ற வலிமிகுந்த உண்மையைப் பதிவுசெய்வதன் மூலம் பெண்களுக்கான குரலாக இத்தொகுப்பு கவனம் பெறும்.

●

நூல் மதிப்புரை



# நாம் நினைத்துக்கொண்டு இருப்பதை விட இந்தப் பூவுலகு...

**ச.சுபாஷ் சந்திரபோஸ்**

‘நாம் நினைத்துக்கொண்டிருப்பதை விட...’ என்னும் இத்தொடருக்கு அவரவர் சூழல் சார்ந்து பொருள் விரிவடையும். ஆனால் இக்கட்டுரைத் தலைப்பு நாம் வாழும் பூவுலகத்தைப் பற்றியது. பொதுவாகச் சமுதாய நிகழ்வுகளைப் பார்த்து அல்லது கேள்விப்பட்டு, ‘ஓலகம் கெட்டுப் போச்சு’ என்று நீண்ட காலம் வாழ்ந்து, ஆண்டு அனுபவித்தவர்கள் கூறுவார்கள். பெரும்பாலும் சுற்றுச் சூழல் கேட்டைப் பற்றி, ‘ஓலகம் கெட்டுப் போச்சு’ என்று பேசமாட்டார்கள். அப்படிப் பேச வேண்டிய சூழலும் அவர்களுக்கு ஏற்பட்டதில்லை.

உள்ளங்கையில் உலகம் அடக்கப்பட்ட பிறகு, குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் தொழிற்புரட்சி தோன்றி வளர்ந்த பிறகு இந்த உலகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் ஆக்கங்கள் என்னும் பெயரிலான அழிவுகள் நாம் நினைத்துக் கொண்டிருப்பதை விட மிகப் பயங்கரமானவை.

இந்த அண்டத்தில் உலகம் தோன்றிப் பல கோடி ஆண்டுகள் ஆகி இருந்தாலும் உயிரினங்கள் வாழும் தகுதி பெற்றது சில லெட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அண்டத்தில் கணக்கில் அடங்காக் கோள்கள் இருந்தாலும் பூமி மட்டுமே உயிரினங்கள் வாழும் சூழலைப் பெற்றுள்ளது. இதுவும் ஏறக்குறைய உயிரினங்கள் வாழும் சூழலை இழந்து கொண்டிருப்பதால் விஞ்ஞானிகள் இருப்பதை விட்டுப் பறப்பதைப் பிடிக்க வேறு கோள்கள் உயிரினங்கள் வாழத் தகுதி உள்ளவையாக இருக்கின்றனவா என்று பெரும் செலவு செய்து ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

### ஐம்பெரும் பூதங்கள்

உலகில் இயங்கும் - இயங்கா உயிரினங்கள், கணக்கில் அடங்காதவையாகப் படிப்படியாக வளர்ச்சி அடைந்துள்ளன. அவை வளர்வதற்கு இந்த மண்ணும் அதில் உள்ள நீர், நெருப்பு, காற்றும், பாதுகாப்பு அரணாக உள்ள விசும்பும் குறிப்பிடத் தக்கவை. மகத்தான மாண்பைப் பெற்றிருக்கும் இந்த உலகத்தை உலக மதங்கள் அவற்றின் சக்திக்கு ஏற்ப விளக்க முயற்சி செய்துள்ளன. பெரும்பாலும் எல்லா மதங்களும் கடவுள் இந்த உலகத்தைப் படைத்தார் என்றே குறிப்பிடும். ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி இறவாப் புகழுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர், நாம் நெஞ்சம் நிமிர்ந்து நடக்கும் வகையில் - அஃதாவது அறிவின் உச்சம் தொட்டவர் தமிழர் என்னும் கருத்தை உலகறியப் பின்வருமாறு கூறுகின்றார்.

நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்... (தொ.பொ. 639: 1-2)

இன்றைய உலகில் ஐம்பெரும் பூதங்களும் அக்குவேறு, ஆணி வேராகச் சிதைக்கப்பட்டுச் சுக்கு நூறாகச் சிதைந்து அழிந்து கொண்டிருக்கின்றன. இவை எவ்வாறு ஒன்றோடு ஒன்று இயைந்து இயங்கும் என்பதைத் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் எவ்வளவு நுட்பமாக ஆராய்கின்றார்! **உலகமாவது முத்தும் மணியும் கலந்தாற்போல நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என விரவி நிற்கும். உலகினுள் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றானாற் போல வேற்றுமைப் படாது நிற்கும். அவ்விரண்டனையும் உலகம் உடைத்தாகலின் கலந்த மயக்கம் என்றார்.**

ஐம்பூதங்களும் ஒன்றோடு ஒன்று விரவி உலகிலுள்ள உயர்திணை, அஃறிணை உயிரினங்கள் இயங்க ஆற்றலைக் கொடுக்கின்றன. இயங்கும் இயங்காத உயிரினங்களும் உயிரற்ற பொருள்களும் மண்ணில் இவை உருக்கி விட்டவை போல நகமும் சதையும் போலப் பொருந்தி உள்ளன.

ஐம்பெரும் ஆற்றலும் பொருள்களும் இணைந்து இயக்கி - இயங்கினால் தான் சமச்சீரான சுற்றுச் சூழல் அமையும். காலங்காலமாக இப்படித்தான் இயக்கம் இருந்துள்ளது. தாவரங்கள் காய்கனி, கிழங்கு, கொட்டை, தழைகளைக் கொடுத்தன. இயங்கும் உயிரினங்கள் அவற்றைத் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொண்டன.

**சுற்றுச்சூழல்**

குரங்குகள் தோட்டம், துறவுகளில் புகுந்து விட்டால் தாவரங்களில் இருக்கும் துளிர், மொட்டு, பூ, பிஞ்சு, காய் என எல்லாவற்றையும் பிய்த்துச் சிதைத்து விடும் அவை தின்பவற்றை விட அழிப்பவையே ஏராளம். இதே நிலையில்தான் ஆறாவது அறிவு முளைத்த மானுட இனமும் செய்து கொண்டிருக்கின்றது. குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்றது மானுட மூளை. ஆறாவது அறிவின் முதிர்ச்சியால் அறிவியல் என்னும் ஆயுதத்தால் பட்டை தீட்டப் பட்டதால்தான் இவ்வளவு அசுர வேகத்தில் உலகின் சுற்றுச் சூழலைக் கெடுத்து உயிரினங்களை அழித்துக் கொண்டிருக்கிறது.


ஒன்றை அழிக்காமல் எவ்வாறு வளர்ச்சி ஏற்படும் என்று சில வலதுசாரி மூளைகள் இருக்கும். மானுடத் தேவைக்காகச் சில இயங்கும். இயங்கா உயிரினங்கள் பாதிக்கப்படும்; பயன்படுத்த உரிமை உண்டு; அழிக்க நமக்கு உரிமை இல்லை.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பழந்தமிழர்கள் மண்ணையும் அதனில் வளர்ந்த தாவரங்களையும் எவ்வளவு நுட்பமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்!

காடுகொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி (பட். 283-284)

***வான் பொய்ப்பினும் தான் பொய்யா / மலைத் தலைய கடற்காவிரி*** *(பட்.5-6)* என்று போற்றப்பட்ட சோழ நாட்டைப் பாடும் பட்டினப்பாலையில் உள்ளவை மேலுள்ள பாடல் அடிகள். சோழநாட்டில் அழிக்கப்படும் காடு முல்லை நிலமன்று. காவிரி காலங்காலமாகப் பாய்வதால் எங்கும் நீர் பரந்து திட்டுத் திட்டாகக் காணப்படும் மரஞ்செடிகொடிகள் அடர்ந்த பகுதி. குடி இருப்புக்காக நாடு உருவாக்க அந்தக் காட்டைக் கொல்கிறார்கள். காட்டை அழிக்கிறார்கள். குளங்களைத் தொடுகின்றார்கள். செயற்கையாக வெட்டவில்லை; இயற்கையாக நீர்நிறைந்து காணப்படும் பகுதிகளைக் குளங்களாகவும் ஏரிகளாகவும் செப்பம் செய்கின்றார்கள்.

சிறிய அளவில் அழிப்பு இருந்தாலும் பெரிய அளவில் வளர்ச்சி இருக்கவேண்டும். அவற்றைத்தான் நம் முன்னோர்கள் செய்தார்கள். பயன்பாட்டிற்காகவே அழிவும் ஆக்கமும் இருக்கவேண்டும். நம் முன்னோர்கள் மட்டுமல்லாமல் உலகிலுள்ள தொன்மைக் குடியாகிய பழங்குடி மக்கள் இவ்வாறே தாய்மண்ணையும் அதன் வளங்களையும் பயன்படுத்தி இருப்பார்கள். நுகர்வுக் கலாச்சாரமும் எலி, எறும்பு ஆகியவை போலச் சேமிப்பு ஆசையும் மக்களிடம் மூர்க்கத்தனமாக வளர்ந்த பிறகே அழிவு உச்சம் தொடத்தொடங்கியது.




ஒரு வண்ணத்துப்பூச்சியின் மரண சாசனம்
சி.மகேந்திரன்
டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை.
விலை - ரூ.500/-

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்ததே மலர்தலை உலகம்
(புறம். 186: 1-2)

எவ்வளவு ஆழமான பொருளை உடையவை இந்தப் புறநானூற்றுப் பாடல் அடிகள்! சங்கப் புலவர் மோசிகீரனார் முடியாட்சிக் காலத்தில் ஆண்ட மன்னர்பால் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளார். மக்கள் மண்ணின் உயிர்த் துடிப்பாக மன்னர்களைப் பார்த்துள்ளார்கள். அவர்களிலும் பலர் மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்துள்ளமைக்குப் பழந்தமிழில் நிறையச் சான்றுகள் உள்ளன.

அன்பே உருவான தாய்வழிச் சமுதாய வீழ்ச்சிக்குப் பிறகு குரங்கு கையில் அகப்பட்ட பூமியைப் போலப் பூவுலகின் அமைதி மூச்சு விட இன்றுவரை திணறிக் கொண்டுதான் இருக்கின்றது.

தாய்வழிச் சமுதாயம் - ஆணாதிக்கச் சமுதாயம் எனப் பயன்படுத்தப்படும் தொடர்கள் வழியாகவே உலகில் ஏற்பட்டுள்ள ஆதிக்க வளர்ச்சியையும் சமன் இல்லாத மாற்றத்தையும் அறிந்துகொள்ளலாம். இனக்குழு வாழ்க்கையில் முரண் அதிகமில்லை. முடியாட்சி வளர்ச்சி அடைந்தபோதே பெரிய மீன்கள் சின்ன மீன்களை விழுங்கத் தொடங்கின.

நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் எனச் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் மக்களாட்சி என்னும் நிலை வளர்ந்திருந்தாலும் மன்னராட்சிக் காலத்தில் ஏற்பட்ட சுரண்டலும் ஊழலும் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

காலனிய ஆட்சிக்கு முன்னர் தொழில்களில் அடிப்படையானதும் முதன்மையானதுமாக இருந்தது வேளாண் தொழிலே. காலனிய ஆதிக்கத்திற்கு முன்பும் முடியாட்சிக் காலத்தில் சாகுபடி செய்யப்படும் நிலங்கள் மண்ணில் இறங்கி உழைக்காதவர்களுக்கு கோயில், மடம், பிரமதேயம் என்னும் பெயரில் மடைமாற்றம் செய்யப்பட்டன. சாகுபடி செய்த மக்கள் வறுமைக்கும் சுரண்டலுக்கும் ஆட்பட்டார்கள்.

தனிமனிதனும் காடுகளும் தேவைக்குமேல் பொருளாதார வளர்ச்சிக்கு ஆசைப்படுவதால்தான் உலகம் முழுவதிலும் இருந்த நிலக்கட்டமைப்பு உழைக்கும் மக்களிடமிருந்து கைமாறிப் பெரும் பரப்புகளாகத் தனியாரிடம் மாட்டிக்கொள்கின்றது. மரபு சார்ந்த வேளாண் முறை, இயற்கை வளங்கள் எல்லாம் ஏறக்குறைய அழிக்கப்பட்டு விட்டன. கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு உலக வளங்கள் அழிக்கப்பட்டு விட்டன. பசுமைப் புரட்சியால் மண்ணும் மக்கள் உடல் நலமும் கெட்டன.

அமேசான் காடு பற்றி எரிகின்றது; ஆஸ்திரேலியாவில் காடு பற்றி எரிகின்றது என உலக நாடுகளைப் பற்றிய கவலையில் தோய்ந்திருந்த நேரத்தில் **நீ வாழும் மண் மட்டும் என்ன கிழிக்கிறதாம்** எனப் பொட்டில் தட்டுவது போல ஒரு நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த நூலின் பெயர் **ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்.** பின்னட்டையில் குறிக்கப்பட்டது போல வண்ணத்துப் பூச்சிகளின் மரண சாசனம் **நதிகளின் மரண சாசனம்தான்.**

நதியில் தண்ணீர் வெள்ளமாக வந்த காலத்தில் வேளாண் தொழில் சார்ந்த மக்களின் வாழ்க்கையில் வறுமைதான் பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளிக்குதிப்பது போல விளையாடும். கார்பரேட் நிறுவனங்கள் இராஜா வீட்டுக் கன்றுக் குட்டிகள்; ஆளும் வர்க்கங்களுக்கு அவை கற்பகத் தரு - காமதேனுகள். பணமதிப்பு இழப்பு, ஜிஎஸ்டி வரிவிதிப்பு போன்றவற்றால் சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அந்தரத்தில் நிற்கின்றன. குளிர்சாதன அறையில் இருக்கும் பொருளாதார மேதைகள் நினைத்துக் கொண்டிருப்பது போல நாடு இல்லை; கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து பார்க்கவேண்டும். கொரோனாத் தொற்று வேறு புரட்டிப் போட்டுக் கோடிக்கணக்கானோர் வேலை இல்லாமல் திண்டாடித் தெருவில் நிற்க வைத்துள்ளது. எதிர்காலத்தில் விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பு ஆக்குவோம் என்கிறார்கள்; நிகழ்காலத்தின் நிலையை அறியமாட்டார்கள். ஆளும் வர்க்கத்தினர், பொருளாதார நிபுணர்கள் பொதுமக்களுக்கு ஊட்டும் நம்பிக்கை ஆன்மீகவாதிகள் சொர்க்கத்திற்கு வழி காட்டுவது போல உள்ளது.

இந்த நூலை ஆழ்ந்து படித்த பிறகுதான் சுற்றுச் சூழல் கெட்டுவிட்டது என்னும் பொதுவான நினைப்பு, நாம் நினைத்துக் கொண்டிருப்பதை விட இந்தப் பூவுலகு இன்னும் அதிகமாகக் கெட்டுள்ளது; தமிழகம், இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதிலுமே சுற்றுச் சூழல் கெட்டுள்ளது என்பதை அறியமுடிந்தது.

அறிவியல், தொழிற்புரட்சி, தகவல் தொடர்பு வளர்ச்சி அடைந்த பிறகு உள்ளங்கையில் உலகம் என்று பெருமையாகப் பேசுகின்றோம். கோவிட்-19 எனப்படும் கொரோனா தொற்றுக் கிருமிக்கு இந்தப் பூமி உள்ளங்கையில் உலகமாகத் தெரிகின்றது.

**ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்** என்னும் நூலின் ஆசிரியர் சி.மகேந்திரன்; ஒரு பொதுவுடைமைப் போராளி; பொதுவுடைமைச் சிந்தனையாளர்; நூலாசிரியர்; தாமரை இதழாசிரியர் எனப் பன்முகங்களைக் கொண்டவர்.

எங்கெங்கு அதிகார வர்க்கங்களின் கோரமுகங்கள் வெளிப்படுமோ அப்போதெல்லாம் தன் எழுது கோலால் தாக்கத் தயங்க மாட்டார். **ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்** (2019) என்னும் இந்நூல் தற்போதுள்ள தமிழக ஆறுகள் அவற்றின் நீர், மணற்கொள்ளை போன்றவற்றை விளக்குகின்றது. இந்த அறச் சீற்றம் நூலாசிரியர் சி.மகேந்திரனிடம் புதிதாகத் தோன்றிவிடவில்லை. இளைஞர் பெருமன்றத்தில் இணைந்து பணியாற்றிய காலத்திலேயே **தமிழகத்தைப்**

*பாலைவனம் ஆக்காதே (1989)* என்னும் ஒரு சிறுநூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

**அபகரிப்பு**

காடு மலைகளில் வாழும் விலங்கினங்கள் ஒரு எல்லை வகுத்துக்கொண்டு தம் உறவுகளோடு வாழும். எல்லை மீறி வருபவற்றைத் தாக்கும். மானுட இனம் மட்டும் இதற்கு விதி. சிறிய குழுவானது சூழ்ச்சி செய்து பூர்வக்குடிகள் வாழும் இடத்தில் குடியேறும்; போரிட்டு வளைத்துக்கொள்ளும். ஐரோப்பியர்களின் இந்திய நுழைவும் செவ்விந்தியர்களைக் கொன்றொழித்த அமெரிக்க ஆக்கிரமிப்பும் ஆப்பிரிக்க வளைப்பும் எல்லை மீறல்களே.

'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டியதாம்' என்றொரு பழமொழி இருக்கின்றது. இப்படித்தான் இன்று உலகின் பல நாடுகளின் நிலை இருக்கின்றது. வேறு எங்கும் சான்றுக்குச் செல்ல வேண்டியதில்லை. அண்டை ஓரத்தில் உள்ள இலங்கையை எடுத்துக் கொள்ளலாம்.

கடல்கோளால் அழிந்த குமரிக் கண்டத்தில் தப்பிப் பிழைத்த மேட்டுப் பகுதியே இலங்கை. பழந்தமிழருக்கு உரிமையான பகுதி இலங்கை. கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவில் பரவிய ஆரியரின் வழித் தோன்றலே சிங்களவர்கள். இன அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும் சிங்களவர் ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள்.

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று தன்னுடைய முடியைத் துறந்த புத்தரின் புனித மதத்தைப் பின்பற்றுபவர்களே சிங்களவர். பேரின வாதம் பேசி, அங்கு வாழ்ந்த தமிழர்களைக் கொன்று குவித்தவர்கள் புத்த மதத்தைச் சார்ந்த சிங்களவர்கள். இதில் ஒரு பெரிய கொடுமை என்னவென்றால் இந்தியாவைப் போன்று பல நாடுகள் தமிழர்களை அழித்தொழிக்க இலங்கைக்கு உதவின. அவற்றில் சில மாமேதை கார்ல் மார்க்சின் சித்தாந்தத்தை ஆரத் தழுவியவை.

ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகம் எங்கும் பயணம் மேற்கொண்டு கடுமையாகப் போராடியவர் இந்நூலாசிரியர் சி.மகேந்திரன். நிறையக் கட்டுரைகள் எழுதியதோடு ஈழத் தமிழரின் குரலாகச் சில நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

**தீக்குள் விரலை வைத்தேன்** (2002)
**வீழ்வேனென்று நினைத்தாயோ** (2011)

இலங்கை சென்று கண்டவையும் சேட்டவையும் எனத் தமிழரின் துயர் மிகுந்த வாழ்க்கையும் போராளிகளின் வீரமும் இரத்தமும் சதையுமாக இந்நூல்களில் இரண்டறக் கலந்துள்ளன.

தமிழகத்தின் இயற்கை வளச் சுரண்டல், இலங்கையில் தமிழர் அழித்தொழிப்புப் பற்றித் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் சி.மகேந்திரனின் இன்னொரு நூல் **அறிவு பற்றிய தமிழரின் அறிவு** *(2018)*. டிஸ்கவரி புக் பேலஸ் என்னும் பதிப்பகத்தின் வழி வெளிவந்த இந்நூலும் பரவலாகக் கவனம் பெற்று, மறுமதிப்பும் விரைவில் வெளிவர இருக்கின்றது. முதல் பதிப்பு ஜூனியர் விகடனில் தொடராக வந்து நூலாக வந்துள்ளது.

மன்னர் காலத்தில் இருந்தே ஆளும் வர்க்கத்துடன் தொடர்புடைய பார்ப்பனர்கள் நிலங்களை எல்லாம் கோயில், மடங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டு சுகபோகமாக வாழ்ந்தார்கள்; வாழ்ந்து வருகின்றார்கள். அதோடு மட்டுமல்லாமல் தொன்மை மிக்க தமிழர்களின் வரலாற்றை மறைத்து, தமிழ் மற்றுமுள்ள திராவிட மொழிகளுக்கு எல்லாம் வடமொழி எனப்படும் சமஸ்கிருதமே தாய்மொழி என்றார்கள். இந்திய வரலாற்றை எழுதிய மேலை நாட்டினரும் அவர்கள் கொடுத்த தரவுகளைக் கொண்டு தவறாகவே எழுதியுள்ளார்கள்.

இவற்றை எல்லாம் மனதிற்கொண்டு, சினத்தையும் வெளிப்படுத்திய படியே **அறிவு பற்றிய தமிழரின் அறிவு** என்னும் நூலை ஆராய்ந்து எழுதியுள்ளார். தொல்காப்பியம், சங்க நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள் என்னும் செவ்வியல் தமிழ் நூல்களில் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பழந்தமிழரின் அறிவை நூலாசிரியர் சி.மகேந்திரன் விரிவாக ஆராய்கின்றார்.

தமிழரின் அறிவுக் கோட்பாடு தத்துவ நூல்போலத் தனிநூலாக எழுதப்படாவிட்டாலும் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் இரண்டறக் கலந்துள்ளது. இயற்கைக்கு முரண்படாத பழந்தமிழரின் அறிவு எப்போதும் நிலைத்திருக்கும். உலகில் பல மொழிகளில் அறிவு தொடர்பாக எழுதப்பட்டுள்ளவை கடவுளைப் பற்றியவையாகவே உள்ளன. வாழும் மக்களுக்கும் அவர்களின் வாழ்வியலுக்கும் தொடர்பானவற்றை விட்டுவிட்டு, இறைவனுக்கும் உயிர், உலகம் போன்றவற்றுக்கும் இடையே உள்ள தொடர்புகள் விளக்கப்படுகின்றன.

பெரும்பான்மையான உழைக்கும் மக்களாக வாழ்பவர்களிடம் **கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே** என்று கூறும் தத்துவத்தை எப்படி எடுத்துக் கொள்வது? இதன் உள்நோக்கம் எந்த அளவிற்கு மக்களை வறுமையில் ஆழ்த்தும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

***யாதும் ஊரே, யாவரும் கேளிர்*** *(புறம். 192: 1)*, ***பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்*** *(திருக். 972: 1)* என்னும் பாடல் அடிகள் எல்லாம் மக்களில் பேதம் பார்ப்பவர்களுக்குப் பழந்தமிழர் கொடுக்கும் மரண அடிகள். அனைவரும் குறிப்பாக இளைய சமுதாயம், அறிவு பற்றிய தமிழர் அறிவு என்னும் சி.மகேந்திரன் எழுதிய நூலை தவறாமல் படிக்க வேண்டும்.

***தமிழகத்தைப் பாலைவனம் ஆக்காதே*** *(1989)* ***ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்*** *(2019)* என வெளிவந்துள்ள இரண்டு நூல்களுக்கும் இடையிலுள்ள கால இடைவெளி முப்பது ஆண்டுகள்! வளர்ச்சி என்னும் பெயரில் எவ்வளவு மாற்றங்கள்; எல்லாமே ஏமாற்றுதல் தான்.

முன்பு காலனியாக்கிக் கொண்டு மற்ற நாடுகளைச் சுரண்டினார்கள். இப்போது நண்பர்களாகி ஒப்பந்தம் போட்டுக் கொண்டு சுரண்டுகின்றார்கள். அவற்றுக்குப் பெயர்கள் தாராளமயம், தனியார்மயம், உலக மயம்.

நீ அவலைக் கொண்டுவா; நான் உமியைக் கொண்டு வருகிறேன்; இரண்டையும் சேர்த்து ஊதி ஊதித் தின்போம் என்னும் நிலைதான் ஆளும் வர்க்கங்களின் ஆசியுடன் இன்றும் நீடித்துக் கொண்டிருக்கின்றது.

சீமைக் கருவேல மரத்தின் தீங்கைப் பேசுகின்றோம். மேலை நாட்டினர் மானியம் கொடுக்கிறார்கள்; மரத்தை வாங்கிக் கொள்கிறார்கள் என்பதற்காக இங்கு வளர்க்கப்படும் யூகலிப்டஸ் என்னும் தைல மரம் சுற்றுச் சூழலைக் கெடுக்கும் முதல் எதிரி. எவ்வளவு வறண்ட காலமாக இருந்தாலும் காற்றிலுள்ள ஈரப்பதத்தை இழுத்துக் கொண்டு தளிர்த்துக் கிடக்கும். நம் நாட்டு மரங்கள் இளவேனிற் காலத்தில் தழை கொட்டும் போது தைல மரம் பட்டையை உரித்துக்கொள்ளும். மரத்தின் வழியாகவும் காற்றின் ஈரத்தை உறிஞ்சத்தான் இந்த ஏற்பாடு. அந்நிய நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டது அல்லவா?

திருப்பூரின் பின்னலாடை ஏற்றுமதி, அதன்வழிக் கிடைக்கும் வெளிநாட்டு வருமானம் பற்றிப் பெருமையாகப் பேசுகின்றோம். வெளிநாடுகள் தங்கள் சுற்றுச் சூழலைப் பாதுகாத்துக் கொள்ள இங்கிருந்து ஆடைகளை இறக்குமதி செய்கின்றன. அணைகளில் வண்டல் படிவது இயல்பு. ஆனால் திருப்பூர் பகுதிகளில் பின்னலாடை உற்பத்தியின்போது உருவாகும் கழிவுகள் ஒரத்துப்பாளையம் என்னும் அணையையே கழிவு நீர்த் தொட்டி ஆக்கிவிட்டன. அப்பகுதியிலுள்ள நிலத்தடி நீர் வண்ண மயமாக இருக்கின்றதாம்.

தோல் பதனிடும்போது உண்டாகும் கழிவுநீர், கழிப்பறைக் கழிவு, மருத்துவமனைக் கழிவு என அனைத்து வகைக் கழிவுகளுக்கும் நீர்நிலைகளே குப்பைத் தொட்டிகள்; ஆறுகள் வடிகால்கள்.

**ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்** நூலாசிரியர் கள ஆய்வு செய்தும் பலரிடம் கேட்டறிந்தும் நூற்றுக் கணக்கான நூல்கள் கட்டுரைகளைப் படித்தும் தமிழக ஆறுகளை அமைப்பு அடிப்படையிலும் வரலாற்று நிலையிலும் விரிவாக ஆய்வு செய்துள்ளார்.

நூலாசிரியர் சி. மகேந்திரன் மிகவும் ஆழமாகச் சங்க இலக்கியங்களைக் கற்றுப் பட்டினப்பாலை அடிகள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றார்.

வான் முகந்த நீர் மலைப் பொழியவும்
மழைப் பொழிந்த நீா் கடல் பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல்
நீரினின்றும் நிலத்து ஏற்றவும்
நிலத்தினின்று நீாப் பரப்பவும் (பட். 126-130)

ஆயிரக் கணக்கான ஆண்டுகள் பழந்தமிழகத்தில் நடைமுறையில் இருந்த நீரியல் சூழலை இலக்கண நூற்பாப் போலச் சுருக்கி வைத்துள்ளன. பழந்தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியா, பர்மா, இலங்கை வரைக்குமான மழைச் சூழல் மேலுள்ள பாடல் அடிகளில் உள்ளன.

ஆனி-ஆடியில் மேற்குத் தொடர்ச்சி மலையில் தொடங்கும் தென்மேற்குப் பருவ மழை மெல்ல மெல்லப் பொழிந்து கொண்டே வடக்கு நோக்கி நகரும். தென்மேற்குப் பருவமழை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி அருகிலுள்ள மாநிலங்களிலேயே அதிகம் பெய்யும். இந்தியாவின் நடுப்பகுதியில் உள்ள மாநிலங்களில் மழையின் மணம் மட்டும் தெரியும். **ஆடிக் காற்றுப் பலமாக வீசும்போது இங்கே மேலக் காற்று அடித்தால் மேட்டூர் அணை பெருகும்** என்று பேசிக்கொள்வார்கள்.

ஆனி - ஆடியில் பயணம் தொடங்கிய தென்மேற்குப் பருவ மழை வடக்கே இமயமலை அடிவாரம் சென்று கிழக்கு நோக்கி நகர்ந்து வடகிழக்குப் பருவ மழையாகத் திரும்ப ஐப்பசி மாதம் ஆகிவிடும். ஐப்பசி மாத அடை மழை தொடங்கிவிடும். இந்தச் சமயத்தில் தான் பர்மியர் மழையை வரவழைக்க வழிபாடு செய்வார்களாம்.

இங்கிருந்து பர்மாவுக்குப் பிழைக்கப் போய் முள் இல்லாத மீனும் கல் இல்லாத சோறும் தின்று அகதிகளாக விரட்டப்பட்டவர்கள் பசுமை நிறைந்த நினைவுகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

ஐப்பசியில் தொடங்கும் வடகிழக்குப் பருவமழை ஏறக்குறைய தென் மேற்குப் பருவமழை தொடாத பகுதிகளில் எல்லாம் பொழிந்து வெள்ளக் காடாக மாற்றிவிடும்.

இக்கருத்துகளை உள்ளடக்கியவையாகவே மேலுள்ள பட்டினப்பாலைப் பாடல் அடிகள் காணப்படுகின்றன. மலையில் பொழிவதும் கடலில் சேர்வதும் தென் மேற்குப் பருவமழை; மேகங்கள் இடையறாது பெய்வது வடகிழக்குப் பருவமழை. எழுபது - எண்பது ஆண்டுகளுக்கு முன்புவரை இந்தச் சூழல் தொடர்ச்சியாக இருந்துள்ளது. இவற்றால்தான் நூலாசிரியர் சி.மகேந்திரன் குறிப்பிடும் பட்டினப்பாலைப் பாடல் அடிகளை ஒப்பிட்டுப் பார்க்க முடிகின்றது.

பட்டினப்பாலை குறிப்பிடுவதைப் போலவே நூலாசிரியர் சி.மகேந்திரனும் தென்மேற்கில் தொடங்கி வடக்கே நகர்ந்து பழந்தமிழக ஆறுகள் வாழ்ந்த வாழ்க்கையையும் அவற்றால் ஏற்பட்ட வளர்ச்சியையும் இன்றைய அவலங்களையும் விரிவாக ஆராய்கின்றார்.

### சிற்றுயிர்கள்

சி.மகேந்திரனின் **ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்** மனிதனின் பேராசையால் காடு, மலை, நதி என்னும் அனைத்தையும் அழிக்கின்றான்; கழிவுகளைக் கொட்டி நீர்நிலைகளில் குறிப்பாக ஆறுகளில் கொட்டி நாசப்படுத்துகின்றான் எனச் சுட்டுகிறது. நடப்பவை, பறப்பவை, ஊர்பவை என அனைத்தும் திண்டாடி அழிந்து கொண்டிருக்கின்றன. அவற்றுக்காக, அழுகுரல் ஒன்று எழுத்தினூடாக இழை ஓடிக் கொண்டிருப்பது நூலைப் படிப்பவர்களின் காதில் விழும்.

**இறந்து விட்ட வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளை எறும்புகள் தங்கள் உணவுக்காக இழுத்துச் செல்கின்றன. பூமித்தாய் பெற்றெடுத்த எல்லாக் குழந்தைகளும் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றாக இறந்து கொண்டே இருக்கின்றன.** இப்பதிவைப் படிக்கும்போது சுற்றுச் சூழலை அறியும் ஆவல் கொண்டவர்களும் அவர்கள் பகுதியில் உயிரினங்கள் எப்படி எல்லாம் அழிகின்றன என்கின்ற நிலைமை புரியும்.

மேம்பாலங்களின் மேலே இருசக்கர வாகனத்தில் போகும்போது பல வண்ணத்துப் பூச்சிகள் அடிபட்டுக் கிடப்பதைப் பார்க்கலாம். அடிபட்டவை பாலத்தின் கீழேயும் கிடக்கும். நூலாசிரியர் குறிப்பிடுவது போல எறும்புகள் இழுத்துச் செல்லும். மேலே தெரியும் இறகைப் பார்த்தால் கொடி பிடித்துச் செல்வதைப் போலத் தெரியும்; படகின் பாய்மரம் போலத் தெரியும்.

ஒரு வண்ணத்துப் பூச்சி இறகை விரித்துச் சாணியில் நிலைகொண்டுள்ளது. செத்ததாக இருக்குமோ என்று தொட்டுப் பார்த்தால் திடீரென்று பறக்கின்றது. தேன் உறிஞ்ச மலரில்லாமல் சாணியில் உறிஞ்சிக் கொண்டிருப்பதை அறிந்தபோது மனம் வேதனைப்பட்டது.

சாப்பிட்ட பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிக் கழுவும் இடத்தில் வைத்து விட்டுச் சற்று நேரம் கழித்துப் பார்த்தால் அதில் ஈ, சிறு வண்டுகள் விழுந்து செத்து மிதக்கின்றன. முன்பெல்லாம் அப்படிப் பார்க்க முடியாது. இப்போது எப்படி இப்படி நடக்கின்றது என்றே தெரியவில்லை.

விளை நிலங்களில் இரசாயன உரம், பூச்சி, களைக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் மண்புழு, மீன், நண்டு, நத்தை, தவளை என எல்லாமே அழிந்துவிட்டன. அவற்றைத் தீனியாகக் கொண்டு வாழ்ந்த பறவை, பாம்பு, நரி, கீரி போன்றவையும் போன இடம் தெரியவில்லை. பிள்ளை இல்லா வீடுபோல ஒரு சுடுகாடு போலவே விளை நிலங்கள் காணப்படுகின்றன.

நூலாசிரியர் மகேந்திரன் தமிழக நதிகளின் மரணத்தை மட்டும் குறிப்பிடவில்லை; தமிழரின் நீர்நிலைப் பாதுகாப்பு, கட்டுமானத் தொழில் நுட்பம், இந்தியா முழுவதும் பரவி இருந்த தமிழர் நாகரிகம், வெளி நாட்டவர் இந்தியாவை அடிமைப் படுத்தினாலும் கல்வி, விழிப்புணர்வு போன்றவற்றுக்கு அவர்கள் ஆற்றிய தொண்டு போன்றவற்றையும் குறிப்பிடுகின்றார்.

வேளாண் மக்களின் உழைப்பால் விளைவதை உண்டு கொண்டு எந்த விதமான கூச்ச நாச்சமும் இல்லாமல் அவர்களுக்கு எதிராகச் சட்டங்களை வகுப்பார்கள். அவர்கள் விளைச்சலைக் கையாளும்போது இறக்குமதி செய்வார்கள்; விலையைக் குறைப்பார்கள்.

இப்படித்தான் மலம் அள்ளவும் சாக்கடை அடைப்புகளைச் சீர் செய்யவும் மனிதர்களைப் பயன்படுத்துவார்கள். அறிவியல், ஆன்மீகத்தில் உச்சம் தொட்டு விட்டோம் என்பார்கள். நுகர்வுக் கலாச்சாரத்தால் நீர்நிலைகள் குப்பைத் தொட்டிகளாக மாறுவதைக் குறிக்கும்போது நூலாசிரியர் மகேந்திரன் இன்னொன்றையும் குறிப்பிடுகின்றார்: **நாற்றமெடுத்த மனிதக் கழிவுகளை மனிதனின் தலையில் சுமக்க செத்த கழிவைப் போன்று, நுகர்வு வெறியில் கொண்டாடி முடித்த கழிவுகள் அனைத்தையும் மனிதன் நதியின் தலையில் சுமத்துகிறான்** (ப. 27)

மலத்தைத் தலையில் சுமக்க வைப்பதும் இல்லாமல் அதற்கு விளக்கமும் கொடுக்கின்றார்கள். மலம் அள்ளுபவர்கள் நேராகச் சொர்க்கத்திற்குப் போவார்களாம்.

இருக்கும் கோயில், குளத்தைச் சுற்ற வேண்டியதில்லை; புதிதாகக் கோடிக் கணக்கில் செலவு செய்து கோயில் கட்ட வேண்டியதில்லை. இந்திரலோகம், சொர்க்க லோகம் செல்ல விரும்புகின்றவர்கள் அதைச் சுமந்து விட்டு அங்குப் போய் எல்லாச் சுகத்தையும் அனுபவிக்கலாமே?

### சுரண்டலின் சொத்து

நூலாசிரியர் சி.மகேந்திரன் இந்தியாவின் தென்பகுதியாகிய தமிழகத்தின் தென்பகுதி தொடங்கி ஆறுகளுக்கு ஏற்பட்டுள்ள அவலங்கள் கண்ணீர் மல்க வைக்கும் என்று எழுதுகின்றார். நாம் நினைத்துக் கொண்டிருப்பதை விட இன்னும் அதிக அளவிலேயே அவை சீர்கெட்டுள்ளன என்பதைச் சான்றுகளுடன் எழுதுகின்றார்.

காலங் காலமாகவே வேளாண்மை செய்வோரும் அதை நம்பி வாழும் பெரும்பான்மையான மக்களும் பிற தொழில்கள் செய்வோரும் சுரண்டப்படுவதைப் போன்று நதிகளும் சுரண்டப்படுகின்றன. எத்தனை பேரின் தாக்குதலை அவை தாக்குப் பிடிக்கும்?

நதிக்கரைகளில் இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதிலும் நாகரிகங்கள் தோன்றின; ஆய கலைகளும் வளர்ந்தன. ஒரு பக்கம் மட்டும் பேசப்படுகின்றன. அந்த இடங்களைத் தோண்டிப் பார்த்தாலும் தூற்றிப் பார்த்தாலும் அத்தனை அவலங்கள் வெளிப்படும். எல்லா நதிக்கரை நாகரிகங்களிலும் வளமான நிலங்கள் கோயில், மடம், பார்ப்பனர், பண்ணையார்களிடம் இருக்கும் உழைக்கும் மக்கள், **கதிரோன் தோன்றினான்**

*/ கவலை கொண்டு ஏங்கினோம் / உடையோ கோவணம் / உணவோ நீராகாரம்* என்ற நிலையில் காலத்தை ஓட்டினார்கள்.

'ஊரான் வீட்டு நெய்யே என் பொண்டாட்டி கையே' என்னும் சொலவச் சொல்லைப் போலக் காலங்காலமாக மக்கள் உரிமையாக வைத்திருந்த நிலத்தையும் பொது நிலங்களையும் மன்னர்கள் மண்ணில் இறங்கி உழைக்காத மக்களுக்குத் தானமாக வாரி வழங்கினார்கள். நூலாசிரியர் சி.மகேந்திரன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ***ஆற்றங்கரையின் வளம் நிறைந்த பகுதிகளில்தான் சதுர்வேதி மங்கலங்கள் உருவாக்கப்படுகின்றன. இவை மன்னர்களால் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்டவை.*** *(ப. 243)*

நாகரிகத்தை வளர்த்தவர்கள் எல்லோரும் ***அற்ற குளத்து அருநீர்ப் பறவை போல*** அந்தந்த நதிக்கரைகளை விட்டுக் கம்பி நீட்டி விட்டார்கள். கூடாரம் அடித்துக் கொண்டு தங்கள் பிழைப்புக்கான காலம் வந்ததும் இடம் பெயரும் நிலைதான். ஆறுகள் வறண்டு போய் விட்டன. மாடாய் உழைத்த மக்களுக்கும் கல்வியும் விழிப்புணர்வும் வேலை வாய்ப்பும் கிடைத்தன. அடங்க மறுப்பவர்கள் இருக்கும் இடத்தில் அடக்க நினைப்பவர்களுக்கு வேலை இருக்காது; எனவே, கூடாரத்தை மாற்றிக் கொண்டார்கள்.

இப்படி நதியை நீண்ட காலமாகப் பிடித்திருந்த ஏழரை நாட்டுச் சனி விட்டது என்றால் அடுத்து அதை விடப் பெரும் பெரும் சனிகள் பிடித்துக் கொண்டன. அவைதாம் நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் ஆலைகள். தமிழகத்தின் எல்லா நதிக்கரையிலும் அந்தந்தச் சூழலுக்கு ஏற்பத் தொழிற்சாலைகள். நூலாசிரியர் சி.மகேந்திரனின் கடுமையான உழைப்பு நூல் முழுவதும் தெரிகின்றது. முதலில் பொருநை நதி எனப்படும் தாமிரபரணியில் தொடங்குகின்றது.

***இப்பொழுது தாமிரபரணி நதிக்கரையில் பத்துப் பெரிய ஆலைகளும் 250க்கும் மேற்பட்ட சிறிய நடுத்தரத் தொழிற்சாலைகளும் அமைந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை சுற்றுச் சூழல் விதிகள், அரசாங்கத்தின் சட்டங்கள், ஊடகங்களின் எச்சரிக்கை, சமூக ஆர்வலர்களின் போராட்டங்கள் எதையும் மதிக்கவில்லை. தாமிரபரணியில் பெருக்கெடுத்துக் கலப்பது, காகித ஆலை, துணி ஆலை போன்றவற்றின் இந்த ரசாயனக் கழிவுகள்தான் (ப. 43).***

***வையை என்ற பொய்யாக் குலக்கொடி*** *(சிலப்.13: 170)* நிலையும் தாமிரபரணியின் நிலையை விட எந்த விதத்திலும் குறையவில்லை. தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே வேற்றுமையில் ஒற்றுமையை நதிகளை மாசுபடுத்துவதிலும் சுற்றுச் சூழலை அழிப்பதிலும் அறியலாம். வையை முற்றிலுமாகச் சாக்கடை நதி ஆகி விட்டது. ***நீரை அழித்த நகர் இன்று நீருக்காக அனலில் தகித்துக் கொண்டிருக்கிறது. மதுரையின் காலைப்பொழுது குழாயடிச் சண்டையுடனே புலர்கிறது*** *(ப.117).* தூங்கா நகரத்தின் பெருமைகளுள் ஒன்றான வைகை வழி எங்கும் சுருங்கி விட்டது. அதைக் கடக்கும்போது மூக்குக்குப் போகும் கை ஆக்டோபஸ் போல விடுபட மறுக்கின்றது. இருப்பினும், வைகை நதி பழந்தமிழரின் இலக்கிய வருணனைகளுக்குப் புத்துயிர் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வகையான பழமை போற்றும் எச்சங்கள் கழிமுகப் பகுதியாகிய பூம்புகார்ப் பகுதியிலேயே கிடைக்கின்றன. காவிரிக் கரையில் கம்பீரமாகப் பேசப்படுபவை சுரண்டல் நாகரிகம்தான். ***வான்பொய்ப்பினும் தான் பொய்யா / மலைத் தலைய கடற்காவிரி*** *(பட். 5-6).* வளம் அனைத்தும் குறிப்பாக இடைக்காலச் சோழர் காலத்தில் மடைமாற்றி விடப்பட்டன. அது ஒருவகைச் சுரண்டல் என்றால் விடுதலைக்குப்பின் காவிரி தொழிற்சாலைகளின் கழிவு கலக்கும் நதியாகி விட்டது. அடுத்தகட்டமாக மணற் கொள்ளைக்குக் காமதேனு ஆகிவிட்டது. காவிரி, அதன் கிளை ஆறுகளின் மரணங்களை நூலாசிரியர் சி.மகேந்திரன் கண்ணீரால் வடித்துக் காட்டுகின்றார்.

காவிரி அதன் கிளை நதிகள் என அனைத்துமே தொழிற்சாலையின் கழிவைச் சுமக்கும் கழுதைகள் ஆகிவிட்டன. பவானியின் நிலை பற்றி நூலாசிரியர் சி.மகேந்திரன் விளக்கும்போது எங்கும் இந்த இழவுதானா என மனம் வெறுத்துவிடுகின்றது

***பவானியின் பெரும் துயரம் இதன் மீது கொட்டப்படும் பெரும் ஆலைகளின் கழிவு நீர்தான். நீர் எல்லை கடந்த கழிவுகளை சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டால் அதன் உயிர்த்தன்மை இழந்துபோய்ச் சாக்கடையாக மாற்றம் பெற்று விடுகிறது. நதிக்கரை முழுவதும் துணி ஆலைகளும் சாயப்பட்டறைகளும் தோல்பதனிடும் தொழிற்சாலைகளும் மரக்கூழ் ஆலைகளும் சென்ற நூற்றாண்டில் பெரும் கூட்டமாகப் பெருகிவிட்டன. இவற்றிலிருந்து வெளியேறும் ரசாயனக் கழிவுகளின் அபாயத்தில்தான் பவானி சிக்கித் தவிக்கிறது*** *(ப. 245 - 246).*

நொய்யல், பாலாறு என எல்லாமே எல்லாவற்றையும் ஆளும் வர்க்கமும் ஆலைகளும் சின்னாபின்னமாகச் சிதைத்து வளர்ச்சி என்று பெருமை பேசித் திரிகின்றன.

***பழையன கழிதலும் புதியன புகுதலும் / வழுவல கால வகையினானே*** *(நன். 462)* என இடைக்காலத்தில் நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் குறிப்பிடுகின்றார். மொழிக்குக் கூறிய வரையறையை இலக்கியத்திற்கும் எடுத்துக் கொள்ளலாம். வேளாண்மை, தொழிற் துறைக்கு ஒரேயடியாகப் பழையவற்றைக் கழித்துப் புதியவற்றைப் புகுத்தினால் நோய்களுக்கு உடம்பு புற்றாகவும் கழிவுகளுக்கு ஆறு குப்பைக் கிடங்காகவும் மாறுவதில் வியப்பில்லை.

இப்படி ஒரு **வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்** என்னும் இந்த நூல் மட்டுமல்லாமல், நூலாசிரியர் சி.மகேந்திரன் தன்னுடைய அரசியல் வாழ்க்கை தொடங்கிய காலத்திலிருந்தே தமிழகத்தை பாலைவனம் ஆக்காதே என்று எழுதிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருக்கின்றார். தமிழ்நாடு, இந்தியா, உலகம் எனப் புவி முழுவதும் தொழிற்புரட்சி வழி முன்னேற வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தன. அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால் பிள்ளையார் பிடிக்கக் குரங்கானதுதான் சோகத்தில் சோகம். இந்தியா மட்டுமல்லாமல் உலக வளங்கள் முழுவதும் பகாசுரனைப் போல அபகரிக்கப்பட்டு அழிந்து விளிம்பில் நிற்கின்றன.

### வளர்ச்சியின் உச்சம்

அன்றைய சோவியத்து ஒன்றியம் போல இந்தியாவும் அறிவியல், வேளாண்மை, தொழில் என அனைத்துத் துறைகளிலும் முன்னேற வேண்டும் என்பது பாரதப் பிரதமர் நேரு அவர்களின் கனவாக இருந்தது. அவர் எண்ணத்தை மேனாள் துணைவேந்தர் சே.சாதிக் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

***1950 நடுவிலும் 1960 முற்பகுதியிலும் நேருஜியின் முற்போக்குச் சிந்தனைக்கு மிக வேகமான அரங்கேற்றம் தேவைப்பட்டது. கனரகத் தொழில் - உருக்கு ஆலைகள், கனிம வளம் தோண்டுதல், மின் உற்பத்திக்கு - நீர், அனல், அணு மின்சார நிலையங்கள், பாசன - நீர் மின் தேவைக்கு நீர்த் தேக்கங்கள், பெரிய அணைகள், கப்பல் கட்டும் தொழில், ரயில் போக்குவரத்துக்கான அடிப்படைச் சாதனங்கள் செய்தல், அறிவியல், பொறியியல், வேளாண்மை மேம்பாடு, விமானப் போக்குவரத்து, கலை கலாச்சார மேம்பாடு போன்ற பெரிய மேம்பாட்டுத் திட்டங்களைச் சுதந்திர இந்தியாவின் சாதனையில் வேண்டுமென்ற தணியாத ஆர்வம் நேருஜிக்கு இருந்தது*** *(2016 - 2, ப. 190).*

அறிவியல் கண்டுபிடிப்புகளில் முன்னேற்றம் அடைந்து தொழிற்புரட்சி ஏற்பட்டு, உற்பத்தி பெருகியபோது இந்தியாமட்டும் அல்லாமல் உலகின் இயற்கை வளங்கள் எல்லாம் அழியத் தொடங்கின.

போக்குவரத்திற்காகப் பெரிய சாலைகளும், இரயில்வழித் தடங்களும் அமைக்கப்பட்டபோது பெரும்பெரும் நீர் நிலைகள் துண்டாடப்பட்டன. **ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்** என்றொரு பழமொழி இருக்கிறது. சாதாரணமாக, பெரிய பெரிய ஆறுகளின் கரையை ஒட்டி நிலம் வைத்திருப்பவர்கள் கரையின் உள்பக்கமாக நாணலை வளர்ப்பார்கள். வெள்ளம் வரும்போது நாணல் உள்ள இடத்தில் மணல் சேர்ந்து மேடாகும். **ஆறு கெட நாணல் விடு** என்றொரு பழமொழியே இருக்கின்றது. அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக நிலமாக்கி விடுவார்கள்.

விடுதலைக்கு முன்னும் பின்னுமாக அதிகார வர்க்கத்தோடு தொடர்புடையவர்கள் பெரும்பான்மையான நீர்நிலைகளைப் பட்டா போட்டுக் கொண்டார்கள். காலங்காலமாகவே நீர்நிலை, காடு போன்றவை அழிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தொழிற்புரட்சிக்குப் பின்புதான் இவை படுவேகமாக வளர்ச்சி என்னும் போர்வைக்குள் அழிக்கப்பட்டன.

நம்மை ஆண்ட அந்நியர்கள் காபி, தேயிலைத் தோட்டங்கள் அமைக்கவும் இரயில்வே தண்டவாளக் கட்டைகள் தேவைக்காகவும் தெற்கு, வடக்கு என்னும் வேறுபாடு இல்லாமல் காடு, மலைகளிலுள்ள மரங்களை எல்லாம் வெட்டிச் சாய்த்தார்கள். இங்கு மட்டுமில்லை, உலகெங்கிலும் இயற்கை வளங்களை அரசுகள் அல்லது அவற்றின் ஆசி பெற்ற நிறுவனங்கள் அழிக்கத் தொடங்கின. சிங்கம், புலி போன்றவை அடித்து வீழ்த்தி அவை தின்றவை போக எஞ்சியவற்றை ஓநாய், நரி, கழுகு, காகம் போன்றவை தின்பது போல மற்றவர்களும் இயற்கை வளங்களை அழித்தார்கள். அரசு அழித்தால் அது நாட்டின் வளர்ச்சி; மற்றவர்கள் அழித்தால் அவர்கள் விரோதிகள்.

பொதுவாக, காடுகளை அவை இருக்கும் இடத்தின் நுரையீரல் என்பார்கள். ஓர் ஊருக்குள் ஒரு காடு இருந்தால் அது அந்த ஊரின் நுரையீரல்; இப்படி மாநிலம், நாடு என விரியும். அமேசான் காடு உலகத்தின் நுரையீரல் என்பார்கள். அதுவே திடீர் திடீரென்று பற்றி எரிகின்றது. அதுவாகவும் எரியும்; எரிக்கவும்படும். மாமேதைகள் கார்ல்மார்க்ஸ் - பிரடெரிக் எங்கல்ஸ் வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் - தொழிற்சாலைகள் அசுரவேகத்தில் வளர்ச்சி அடைந்த காலத்திலேயே காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

காடு போன்ற இயற்கை வளங்களை அழிப்பது எதிர்காலச் சந்ததியினருக்குச் செய்யும் துரோகம் மட்டுமன்று. நாம் செய்யும் சீரழிப்புகளின் பலனைப் பனையைப்போல நாம் காண முடியாவிட்டாலும் எதிர்காலத்தினர் நிச்சயம் பாதிக்கப்படுவர்; நம்மைத் தூற்றுவர். நம் காலத்தில் செய்யும் கேடுகள் நம்மையே தாக்குவதை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

தென்னை வைத்தவன் தென்னையின் பலனைத் தன் காலத்திலேயே பெறுவதைப்போன்று அண்மைக் காலத்தில் இயற்கை வளங்களை அழித்ததன் பலனை இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். பயங்கரமான வெப்பம், கடுமையான வறட்சி அல்லது வெள்ளம். காய வேண்டிய நேரத்தில் காய்ந்து பெய்ய வேண்டிய நேரத்தில் மழை பெய்தால்தான் தாவரங்கள், பிற உயிரினங்கள் தழைத்தும் பெருகியும் வளரும். அண்மைக் காலத்தில் தேவைப்படாத நேரத்தில் மழைபெய்து எல்லாவற்றையும் - குறிப்பாக, பயிரிட்டுள்ளவற்றை அழித்து விடுகின்றது. கெடுதி மழை என்பார்கள். இங்கு மட்டுமில்லை; இயற்கை வள அழிப்பு காலங்காலமாக உலகம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

*தொழிற்சாலைகள் வளர்ச்சியும் உற்பத்தியும் வலது சாரிக் கோட்பாடு கொண்டவர்கள் பெருமையாகப் பேசிய காலத்தில் இயற்கை வளங்களை உலக நாடுகள் அழிப்பதால் ஏற்பட்ட விளைவுகளைப் பிரடெரிக் எங்கல்ஸ் விளக்கி இருப்பதை அறியலாம்.*

***மெஸொபொடோமியா, கிரீஸ், ஆசியா மைனர் ஆகியவற்றிலும் இன்னும் பிற இடங்களிலும் சாகுபடி நிலங்களைப் பெறுவதற்காகக் காடுகளை அழித்த மக்கள், காடுகளை அழித்ததன் கூடவே ஒருங்குசேரும் இடங்களையும் நீர்த்தேக்கங்களையும் அழித்ததன் மூலம் தாங்கள் அந்த நாடுகளின் தற்போதைய அவல நிலைக்கு அடிகோலியதாகக் கனவில் கூடக் காணவில்லை. இத்தாலியர் ஆல்ப்ஸ் மலைத்தொடரின் வடபகுதிச் சரிவுகளில் அத்தனை பரிவுடன் பேணிக் காக்கப்பட்ட ஊசியிலை மரக்காடுகளைத் தென்பகுதிச் சரிவுகளில் முழுமையாக வெட்டிப் பயன்படுத்தியதன் மூலம் அப்பகுதிப் பால் பண்ணையின் அடி வேரையே வெட்டி விட்டனர் என்பதையும், அம்மரங்களை வெட்டியதன் மூலம் ஆண்டின் பெரும் பகுதி, மலையிலுள்ள ஓடைகளுக்குத் தண்ணீர் இல்லாமல் போய்விட்டதையும் அதன் காரணமாக மழைக்காலங்களில் அவை கூடுதலான வெள்ளத்தைச் சமவெளியில் பாய்ச்ச வகை செய்தனர் என்பதையும் நினைத்துப் பார்க்கவில்லை (கார்ல் மார்க்ஸ் 200, பக். 126-127).***

*சமூக ஆர்வலர்கள் காலங்காலமாகவே இயற்கை வளங்களை அழிப்பதால் ஏற்பட்ட - ஏற்படும் - ஏற்படப்போகும் கேடுகளைக் கூறிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அதிகார வர்க்கங்களின் இரும்புக் காதுக்குள் நுழைய வேண்டுமே! ந.வினோத்குமார் (2018: 12) கூறும் கருத்தையும் இங்குப் பதிவு செய்யலாம்.*

***மனிதச் செயல்களால் மரங்களும் நதிகளும் மலர்களும் மலைகளும் மண்ணும் மனங்களும் மாசடைந்து, மரத்துப் போய்விட்டன. சின்ன புழுவுக்கும் கூட இடம் தராத அளவுக்கு மனிதர்களின் பேராசை உலகைக் குறுக்கிக் கொண்டே வருகின்றது.***

*கழுதை தின்று அழிப்பதை விடப் புரண்டு அழிப்பதுதான் அதிகம் என்பார்கள். ஆளும் வர்க்கங்களின் அனுசரணையுடன் பெரும் வணிக நிறுவனங்கள் அடிக்கும் கொள்ளையால்தான் இயற்கை வளங்கள் அழிகின்றன.*

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட்டு ஆகும்
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
(புறம். 184: 1–4)

*அண்மைக் காலத்தில் கணினி யுகம் சார்ந்து உலகப் பணக்காரர்களாகப் பலர் ஆனாலும் பெரும்பாலானவர்கள் இயற்கை வளங்களை அழித்தே ஆனவர்கள் என்பது அப்பட்டமான உண்மை. இப்படிப்பட்டவர்களிடம் குவியும் பல்லாயிரக் கணக்கான கோடிச் சொத்துகளும் காலங்காலமாக நிலைத்திருக்க வேண்டிய - எதிர்காலத் தலைமுறையினருக்கு உரிமையான இயற்கை வள அழிப்பால் குவிந்தவையே என்பதில் ஐயமில்லை.*

*காடுகள், ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளை அழித்த பிறகு மலைகளையே சுக்கு நூறாகவும் பாளம்பாளமாகவும் சிதைத்துப் பெயர்த்து விட்டார்கள். பிறகு எப்படி மழை பொழியும்; பொழியக் கூட வேண்டாம். வாசலில் சாணி கரைத்துப் போடுவதைப்போல பனி பறப்பதைப் போலத் தூறக்கூட வானம் விரும்பவில்லை. சிறிய அளவில் உருவாகும் மேகமும் பூமியைச் சக்களத்தியாள் பிள்ளையைப் பார்ப்பதைப்போல வெறுத்து வேகமாகச் செல்கிறது. ஓசோன் படலத்தில் ஓட்டை போடும் அளவிற்கு நம்முடைய பகுத்தறிவால் வளர்ந்த அறிவியலும் தொழிற்புரட்சியும் உச்சம் தொட்டுள்ளன.*

*இவ்வளவு தூரம் இயற்கை வளச் சுரண்டலும் சுற்றுச்சூழல் கேடும் உள்ளங்கை நெல்லிக்கனி போலக் கண்ணுக்குத் தெரிந்தாலும் ஒரு சாரார் வல்லரசு, கார்பரேட் நிறுவனங்களுக்குச் சப்பைக் கட்டுபவர்கள் சூழலியல் ஒன்றும் கெட்டுப் போகவில்லை; கெட்டு விட்டதாக வேண்டுமென்றே மிகைப்படுத்திப் பேசுகின்றார்கள் என்கின்றார்கள்.*

*‘தேனை நக்கிவிட்டு இளிச்சவாயன் தலையில் தடவுவது போல’ என்றொரு உவமை உள்ளது. தொழிற்சாலைக் கழிவுகள், நுகர்வுப் பொருள்களின் கழிவுகள் என எல்லாவற்றுக்கும் நதிகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள், கடைகள், சாலை ஓரங்கள், ஏழைமக்கள் வாழும் பகுதிகள்தான் சங்கமம் ஆகும் இடங்கள். இவற்றில்தான் எல்லாம் அழிகின்றன. அழிவை உண்டாக்குகின்றன.*

*தொழிற்புரட்சியின் வழி மண்ணிலுள்ள இயற்கை வளங்களை அழித்தார்கள்; காடுகள் அழிந்தன; நீர்நிலைகளை அழித்துச் சாலைகளையும் ஆலைகளையும் அழித்தார்கள்; ஆலைப் புகைவழி வான் மண்டலமே புகை மண்டலம் ஆகிவிட்டது. கழிவுகள் வழியாக எங்கும் சாக்கடை. ஆறு, ஏரி, குளம், குட்டை என எல்லாமே கழிவிடங்களாகி ஆண்டு முழுவதும் கொசு, பிற நோய்க் கிருமிகள் உற்பத்திக்குத் தொட்டில் ஆகிவிட்டன.*

*நுகர்வுக் கலாச்சாரத்தால் இப்படி ஒரு சுற்றுச் சூழல் கேடு வந்தது என்றால் எல்லோருக்கும் மூன்று வேளைக்கும் வயிறுமுட்ட உணவு அளிக்கப்போகிறோம் என்று பசுமைப் புரட்சியைக் கொண்டு வந்தார்கள். இதைப் பசுமைப் புரட்சி என்பதை விடப் பசுமைப் புரட்டு என்று பலர் குறிப்பதுதான் சரியாக இருக்கும்.*

*நேரு, சி.சுப்பிரமணியன், எம்.எஸ்.சுவாமிநாதன் போன்றோரின் பெருமுயற்சியால் தான் விடுதலைக்குப் பிறகு பசுமைப் புரட்சி மிகத் தீவிரமாக இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகாது என்பதைப் போகப்போக வேளாண் பெருங்குடி மக்கள் உணர்ந்து கொண்டார்கள். வேளாண்*

விஞ்ஞானிகளும் பட்டதாரிகளும் இரசாயன உரத்தைப் போடச் சொன்னார்கள்; விவசாயிகள் பயிரின் பச்சையைப் பார்த்து அள்ளிக் கொட்டினார்கள். கொழுத்தாடை வீசிய பயிரில் பூச்சித் தொல்லை; பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தி மண்ணிலுள்ள கரையான், மண்புழு, நண்டு, நத்தை, மீன், பாம்பு, தவளை என அனைத்துமே சாகடிக்கப்பட்டன.

ஆண்டாண்டு காலமாக அம்மை, காலரா, பிளேக் போன்ற தொற்று நோய்களே இப்போது உலகை வளைத்துப் போட்டிருக்கும் கொரோனா போல மக்களைக் கொத்துக் கொத்தாகச் சாகடிக்கும். பசுமைப் புரட்சிக்குப் பிறகு பூமியை ஆட்கொண்டுள்ள நோய்களுக்குத் தொற்றா நோய்கள் என்று பெயர் வைத்துள்ளார்கள். மாரடைப்பு, புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு, சர்க்கரை நோய், மூட்டுவலி போன்ற பல நோய்கள் ஒருவருக்கு வருவதால் அவரை மட்டும் தான் பாதிக்கும் என்பதால் தொற்றா நோய்கள். ஆனால் இந்தத் தொற்றா நோய்கள் குடும்பத்தைப் பற்றிக் கொண்டு சீரழிக்கின்றன. மருந்து மாத்திரை உட்கொள்ளாத மக்களைப் பார்ப்பதே அரிது.

உணவு முறை, உடல் உழைப்பின்மை இவ்வகைத் தொற்றா நோய்களுக்குக் காரணம் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை. பலர் இவற்றைக் குறிப்பிடுகின்றார்கள். இரசாயன உரம், பூச்சிக் கொல்லி, களைக் கொல்லி, மரபணு மாற்றம் விதைகள் போன்றவற்றால் விளைந்த தானியம், பருப்பு, காய்கறி, கீரை போன்றவற்றை உண்பதால் தான் இவ்வகை நோய்கள் வருகின்றன என்பதை மெத்தப் படித்த வேளாண் விஞ்ஞானிகள், மருத்துவர்கள் சொல்லத் தயங்குகின்றார்கள். சில சமூக ஆர்வலர்களின் குரல்கள் மட்டும் கிணற்றுக்குள் இருந்து வெளி வருபவை போல ஒலிக்கின்றன.

**ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்** என்னும் நூலாசிரியர் சி.மகேந்திரன் கூறி இருப்பதை வழிமொழிவதைப் போலக் கலாரசிகன் (தினமணி 22.3.2020: 8) கருத்துக் காணப்படுகின்றது.

**கொரோனா வைரஸ் போன்ற நோய்த் தொற்றுகள் அடிக்கடி தோன்றுவதற்கும் பரவுவதற்கும் அடிப்படைக் காரணம் வனவிலங்குகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதுதான் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒட்டுமொத்தப் பூமிப் பரப்பையும் மனித இனம் தனதாக்கிக் கொள்ள நினைப்பதால் ஏற்பட்டிருக்கும் எதிர் விளைவுகள்தான் நோய்த் தொற்றுகளும் இயற்கைச் சீற்றங்களும்.**

இக்கருத்தில் நிறைய உண்மைகள் இருக்கின்றன. இவற்றைத்தான் நூலாசிரியர் சி.மகேந்திரன் நூல்முழுவதும் விளக்குகின்றார். வளர்ந்த நாடுகள் இயற்கை வளங்களை அழித்து, வளிமண்டலம் வரை மாசுபடுத்தினார்கள். இரசாயன, பூச்சிக்கொல்லி மருந்தைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியை அதிகமாக்கினார்கள். பெரும்பான்மை மக்களுக்கு இதயநோய், சர்க்கரை, சிறுநீரகக் கோளாறு, மூச்சுத் திணறல், மூட்டுவலி என ஏகப்பட்ட தொற்று நோய்கள். அவற்றைத் தீர்க்க மருந்து மாத்திரைகள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் மருந்து மாத்திரை, அறுவைச் சிகிச்சை போன்ற நவீன மருத்துவ முறையால் எழுபது - எண்பது வயது என ஐரோப்பிய அமெரிக்கா போன்ற நாடுகளில் நூறுவயது வரை வாழ்கின்றார்கள். முதல் கொரோனா அலை அவர்களைத்தான் நோட்டம் விட்டது. லெட்சக் கணக்கில் பலியானார்கள்.

முதல் அலையில் அந்த அளவு இந்தியாவில் பாதிப்பு இல்லை என்றாலும் நன்றாகக் கையாண்டார்கள் என்றாலும் நோய் தீவிரம் இல்லை. நோயை விரட்ட இங்கு விளக்கேற்றுதல், கைத்தட்டுதல், பசுமூத்திரம் குடித்தல் போன்ற வழிமுறைகளைக் கூறினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு உதவியதாகக் கூறினார்கள். நல்ல செய்திதான். இருந்தாலும் இரண்டாவது அலைக்குப் பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்று விட்டார்கள்.

மக்கள் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறி விட்டுத் தேர்தல் கூட்டம், கும்பமேளா போன்றவற்றில் இலட்சக் கணக்கானோரைக் கூட்டினார்கள். இரண்டாவது அலை அதிகம் பாதிக்கும் என்ற மேலை நாடுகள் எச்சரித்ததோடு எதிர்கொள்ளவும் தயாராக இருந்து கணிசமான அளவு முதல் அலைபோல் இல்லாமல் நோய்பரவல், இறப்பைக் குறைத்து விட்டார்கள்.

இந்தியாவில் இரண்டாவது அலை மோசமாகப் பாதித்துவிட்டது. மருத்துவமனையில் படுக்கை வசதி இல்லை; பிராணவாயு இல்லை; மூச்சு விடமுடியாமல் மக்கள் செத்து மடிகிறார்கள்; இறந்ததை எரிக்க சுடுகாட்டில் இடமில்லை; விறகுமில்லை.

எவ்வளவுதான் அறிவியல் வளர்ந்தாலும் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குள் மக்களைக் கூட்டிக் குப்பையில் தள்ளிவிடும். அம்மை, காலரா, பிளேக் எனப் பல நோய்கள் மானுடத்திற்குப் பாடம் கற்றுக் கொடுத்துள்ளன.

நம்முடைய பழந்தமிழ் இலக்கியங்கள் இயற்கை வளங்களின் பெருக்கத்தையும் எழிலையும் நிறையப் பேசுகின்றன. வணிக நோக்கில் அவை அழிக்கப்படவில்லை. தொழிற்புரட்சி வளர்ச்சி அடைந்த காலத்தில் எண்ணற்றோர் வாழ்ந்தாலும் வளர்ச்சி என்னும் பெயரில் இயற்கை வளங்களின் அழிப்பையும் ஏற்படக் கூடிய விளைவுகளையும் உலக அளவில் பேசியவர்கள் மாமேதைகள் கார்ல் மார்க்ஸ்-பிரெடரிக் எங்கல்ஸ் மட்டுமாகத் தான் இருப்பார்கள்.

இந்திய அளவில் இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டுச் சுற்றுச் சூழல் கெட்டுக்

கொண்டிருப்பதைச் சுபாஷ் பலேக்கர், அருந்ததிராய், மேதாபட்கர், வந்தனா சிவா போன்ற பலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

தமிழக அளவில் நம்மாழ்வார், பாமயன், ஆர்.எஸ். நாராயணன் எனப் பலர் சுற்றுச் சூழல் கேட்டையும் பசுமைப் புரட்சியின் எதிர் விளைவுகளையும் விளக்குகின்றனர்.

அதிகார வர்க்கத்திற்கும் இயற்கை வளங்களுக்கும் எப்போதும் பகைதான்போலும். நம் முன்னர்ப் பரந்து விரிந்து கிடக்கும் சோழ நாட்டையே காடுமலைகளை அழித்ததைப் போல அழிக்க அச்சாரம் போட்டு விட்டார்கள்.

இயற்கையை அழித்துப் பணக்காரர், உலகப் பணக்காரர் ஆகலாம். ஏழை - பணக்காரர் உருவாகலாம்; சாதி - மதம் பாராட்டலாம். ஆனால் அந்த இயற்கை சுனாமியாகவும் நிலநடுக்கமாகவும் வேறு வகையிலும் சீறி எழுந்தால் எல்லோருக்கும் சவக்குழி ஒன்றுதான். 2004இல் நம் கண் முன்னர் எழுந்த சுனாமியும் தற்போதைய கொரோனா அலைகளும் உள்ளங்கை நெல்லிக்கனிகள்.

இப்போது உலகையே சுற்றி வளைத்து ஆட்டிப் படைக்கும் கொரோனா தொற்று நோயும் மொழி, மதம், நாடு உயர்வு - தாழ்வு என்னும் எந்தக் கத்தரிக்காயையும் பார்க்கவில்லை. அனைவருமே அஞ்சி நடுங்குகின்றார்கள். வழிபாட்டுத் தலங்கள், கல்விக்கூடங்கள், போக்குவரத்து என அனைத்துமே மூடப்படுகின்றன; முடக்கப்படுகின்றன. வழிபாட்டுத் தலங்களைத் திறக்கவேண்டும் என ஒரு கூட்டம் குறுக்குச் சால் கட்டுகின்றது. கும்பமேளாக் கூட்டம் அமுத சுரபியாகக் கொரோனாத் தொற்றுக்குத் தாழ்ந்தும் கூக்குரல் இடுகின்றார்கள். பட்டறிவைப் படிப்பினையாகக் கொள்ள வேண்டும்.

சந்திரன், செவ்வாய் போன்ற கோள்களைக் காணும் மானுடத்திற்கு அழிந்த மலையை உருவாக்க முடியாவிட்டாலும் காடுகளை உருவாக்குவது கடினம் அன்று. மனிதன் காலடிபடாமல் இருந்தாலே பத்து - இருபது ஆண்டுகளில் காடுகள் ஆகிவிடும்.

பள்ளியில் படிக்கும் சிறுவர்களும் சமூக ஆர்வலர்களும் விதைப் பந்தைத் தயாரித்துப் பூமியில் இடுவதைப் படிக்கிறோம். அன்றாடப் பிழைப்புக்கு வாகனத்தில் சென்று வியாபாரம் செய்பவர் சாலை ஓரங்களில் விதை நடுவது கூடச் செய்தித்தாளில் வந்தது.

கழுதை விட்டையில் முன்விட்டை என்ன? பின்விட்டை என்ன? எல்லாம் ஒன்றுதான் என்பார்கள். நீ அதிகம் நச்சுக்காற்றை வெளியேற்றுகிறாய்; நான் குறைவாக என்று நாடுகளுக்குள் வீம்பு பேசாமல் அனைத்து நாடுகளும் ஒன்றுபட்டு மறுபடியும் பசுமை உலகத்தை மீட்டுருவாக்கம் செய்யவேண்டும். இல்லை என்றால் உலகம் செய்துள்ள முன்னூட்டத்திற்குப் பின்னூட்டமாக எல்லா அழிவுகளையும் சுமந்துதான் ஆக வேண்டும்.

இப்படி ஒரு **வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்** என்னும் இந்நூலைப் பற்றியும் நூலாசிரியர் சி.மகேந்திரனைப் பற்றியும் எழுதிக் கொண்டே போகலாம். நூல்களைப் படித்ததோடு கள ஆய்வு செய்தும் அவ்வளவு தரவுகளைத் திரட்டி இந்நூலை எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள எல்லா நூல்களையும் படித்துள்ளேன். **ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்** போல் இன்னொரு ஆகச் சிறந்த நூலை எதிர் காலத்தில் அவரால் எழுத முடியுமா? என்று தெரியவில்லை. எழுதினால் பாராட்டுவோம்.

இந்நூலுக்கு உரிய முக்கியமான இன்னொரு சிறப்பு என்னவென்றால் நூல் தொல்காப்பியத்திற்குப் பலர் உரை எழுதுவதைப் போன்று நூலாசிரியர் விளக்கியவை, தொட்டவை என எல்லாவற்றுக்கும் பக்கம் பக்கமாக எழுத வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதே.

கார்ல் மார்க்ஸ் சிந்திக்கவும் எழுதவுமே வறுமையை விலைக்கு வாங்கிக் கொண்டவர். மகாத்மாவும் அவ்வளவு எழுதிக் குவித்துள்ளார். லெனினும் ஆட்சி செய்து கொண்டே தொகுதி தொகுதிகளாகத் தொகுக்கும் அளவிற்கு எழுதியுள்ளார். பெரியாரையும் கார்ல் மார்க்சோடு ஒப்பிடலாம். அம்பேத்கர், அண்ணா, கலைஞர் போன்றவர்களும் தங்கள் ஆட்சி, அரசியல் பணிகளுடன் நிறையவே எழுதி உள்ளனர். இன்னும் பலர் தங்கள் அரசியல், பொதுவாழ்க்கைப் பணிகளுடன் சில, பல நூல்களை எழுதி உள்ளார்கள்.

சீர்திருத்தவாதிகளுக்குத் தங்கள் கருத்தை வெளிப்படுத்த எழுத்துத் தேவைப்பட்டது. பழமை வாதம் பேசுவோருக்கு ஏற்கெனவே உள்ள புராண, இதிகாசம், நீதிநூல், பக்தி இலக்கியங்கள் போதுமானவையாக உள்ளன. அவற்றை நியாயப் படுத்தவும் புதுப்பிக்கவும் எழுதுகின்றார்கள்.

அரசியல் ஈடுபாட்டோடு நூலாசிரியர் சி.மகேந்திரன் பழந்தமிழரின் அறிவுக் கோட்பாடு, ஈழத்தமிழர், சுற்றுச் சூழல் பற்றி நிறையவே எழுதியுள்ளார். இப்படி அரசியல் தொடர்புடையவர்கள் எழுதும் நிலை குறைந்து கொண்டே வருகின்றது. அரசியல் பண்ணுவதிலேயே காலம் ஓடி விடுகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

எச்சங்களில் எழுத்து எச்சங்களே முதன்மை யானவை. ஒல்காப் பெரும் புகழ் தொல்காப் பியமும் சங்க இலக்கியங்களும் உலகப்பொதுமறை திருக்குறளும் இன்னும் பல சான்றோர்களின் படைப்புகளும் இப்போதும் படைத்தவர்களைச் சீரிளமையோடு காட்டிக் கொண்டிருக்கின்றன.

●